PRINTED FOR ACADEMIC PURPOSE ONLY
(Souvenir for those participated in the Virtual Meet)

E-ISSN: 2581-7140

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்

அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் அரையாண்டு பன்னாட்டு ஆய்விதழ்

INTERNATIONAL JOURNAL OF TAMIL LANGUAGE AND LITERARY STUDIES

(IJTLLS) UGC CARE LISTED JOURNAL
A Bi-Yearly Peer-Reviewed International Journal

மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி

(தன்னாட்சி) பசுமலை, மதுரை

MANNAR THIRUMALAI NAICKER COLLEGE,

(Autonomous) PASUMALAI, MADURAI

சிறப்பிதழ்

தமிழ் இலக்கண இலக்கிய உரை மரபுகள்

TEXTUAL TRADITION IN TAMIL GRAMMAR AND LITERATURE

தொகுதி – 3, சிறப்பிதழ் 2, தொகுதி – 2 திசம்பர் 2020

VOLUME– 3, SPECIAL ISSUE 2, VOL – 2, DECEMBER 2020

E-ISSN: 2581-7140

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்

அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் அரையாண்டு பன்னாட்டு ஆய்விதழ்

INTERNATIONAL JOURNAL OF TAMIL LANGUAGE AND LITERARY STUDIES

(IJTLLS) UGC CARE LISTED JOURNAL
A Bi-Yearly Peer-Reviewed International Journal

மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி

(தன்னாட்சி) பசுமலை, மதுரை

MANNAR THIRUMALAI NAICKER COLLEGE,

(Autonomous) PASUMALAI, MADURAI

சிறப்பிதழ்

தமிழ் இலக்கண இலக்கிய உரை மரபுகள்

TEXTUAL TRADITION IN TAMIL GRAMMAR AND LITERATURE

தொகுதி - 3, சிறப்பிதழ் 2, தொகுதி - 2, திசம்பர் 2020

VOLUME– 3, SPECIAL ISSUE 2, VOL – 2, DECEMBER 2020

தமிழ் இலக்கண இலக்கிய உரை மரபுகள்

TEXTUAL TRADITION IN TAMIL GRAMMAR AND LITERATURE

Advisory Editorial Board

PUBLISHER: **Maheswari Publishers**
(The publishing unit of PANDIAN EDUCATIONAL TRUST- TN32D0026797)
3/350, Veterinary Hospital Back side,
Virudhunagar – 626001.
Mobile: 8526769556
Mail: maheswari@ijtlls.com
dmakesh88@gmail.com, ijtllsetamiljournal@gmail.com

PUBLISHER'S MESSAGE

Aim & Objectives

International Journal for Tamil Language and Tamil Studies is an online Peer-Reviewed International Journal published twice in a year on July and January, which is published by **Maheswari Publishers,** patronized by **Pandian Educational Trust, Virudhunagar, Tamil Nadu, India**. It also publishes **Literary Druid, for English Language and Literature (Online)** to foster research in the domain areas**. International Journal for Tamil Language and Tamil Studies** aims to bring down Academic Research to promote research support for the academicians and scholars in the field of Tamil Language and Literature. Research through this medium is motivating in all aspects of main and inter-disciplines by consequent projects and e-publication. Making Internationalization of the research works in the globalized world aid the scholarly community to develop scholarly profile in research through the quality of publications. The audacity and vision of academic research on internet could foster green printing and open access nature in research. All of these motivate best distribution of research that produces positive outcomes for the betterment of the world. In achieving the aim, our journal International Journal of Tamil Language and Tamil Studies has been listed in UGC CARE List from July 2020.

Disclaimer

International Journal for Tamil Language and Tamil Studies is committed to research Ethics and consider plagiarism as a crime. The authors are advised to adhere academic ethics with respect to acknowledgment of quotations from other works. The Publisher & Editors will not be held responsible for any lapse of the provider regarding plagiarism in their manuscripts. The submissions ought to be original, must accompany the declaration form stating your research paper as an original work, and has not been published elsewhere for any research purpose. The contributor will be the sole responsibility for such lapses on any legal issues and publication ethics. **Contact** ijtllsetamiljournal@gmail.com for submission and other information. See www.ijtlls.com for guidelines.

Message from the Editor-in-Chief

International Journal for Tamil Language and Tamil Studies is an online Peer-reviewed International Journal of Tamil Language and Literature which is committed to academic research, welcomes scholars and students all over the world who to advance their status of academic career and society by their scholarly ideas. The journal welcomes publications of quality papers on the domain area. Research ought to be active to create a major frontier in the academic world. It must augment the neo-theoretical frame that facilitates re-evaluation and augmentation of existing practices and thoughts. In due course, this will effect in a prime discovery and lean to the knowledge acquired. Research is to establish, substantiate facts, restate previous works ant to resolve issues. An active venture to endow cogent approach to these types for educational reformations through academic research has become the central intent of the journal. I am glad to say that our journal has been approved in the UGC CARE List. It is an achievement by the clear protocol of academic and ethical policies maintained by the journal and I thank the authors for their original articles with proper ethical writing methods.

Publisher, Director and Editor
D.Maheswari

வாழ்த்துரை



பொறியாளர் திரு.சு.இராஜகோபால்,
தலைவர்,
மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி (தன்னாட்சி),
பசுமலை, மதுரை 625 004.

தமிழ் இலக்கிய இலக்கண நூல்கள் காலந்தோறும் தோன்றுவன. இந்நூல்களுக்கு உரைகள் இல்லாவிட்டால் அவற்றின் முழுமுதற் பொருளை அறிந்து கொள்வது கடினம். அவ்வரிய பணியைச் செய்தவர்கள் உரையாசிரியர்கள். தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு ஆக்கந்தரும் முறையில் அமைந்த இவ்வுரைகளை இயற்றிய புலமைச் செல்வர்களாகிய உரையாசிரியர்களின் வரலாறு, மதிநுட்பம், உலகியல் அறிவு, அக்காலச் சமூகச்சூழல் ஆகியவற்றை அவர்கள் இயற்றிய இலக்கிய இலக்கண உரைகளால் தெரிந்துகொள்ள முடிகிறது. தமிழ்மொழியில் உரைநூல்கள் தோன்றி வளர்ந்த வரலாற்றினையும் இறையனார் அகப்பொருளுரை, இளம்பூரணர் உரை எனத்தொடங்கி சிவஞான முனிவர் வரையுள்ள உரையாசிரியர்களின் தமிழ்த்தொண்டினையும் ஆய்வாளர்கள் தங்கள் கட்டுரைகளில் வெளிப்படுத்தி இருப்பது உரையாசிரியர்களின் தேவையைப் புலப்படுத்துகிறது.


தமிழ் இலக்கண இலக்கிய உரை மரபுகள் எனும் பொருண்மையில் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், கல்லூரிப் பேராசிரியர்கள், முனைவர்பட்ட ஆய்வாளர்கள், தமிழ் ஆர்வலர்கள் எனக் கட்டுரை வழங்கிய அனைவரையும் பாராட்டுகிறேன்.

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ் (IJTLLS) ஆய்வுக்கட்டுரைகளைச் செப்பம் செய்து ஆய்விதழாகப் பன்னாட்டுத் தரக்குறியீட்டு எண்ணுடன் (ISSN) வெளியிட்டு சிறப்பிதழ் காணொளி இருக்கை நடத்தியது சிறப்பு. ஆய்வுக்கட்டுரைகள் இதழ் ஆக்கம் பெறுவதற்கு அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு பன்னாட்டுக் காணொளி இருக்கை நடைபெறுவதற்கு பல்லாற்றானும் உழைத்த சிறப்பிதழ் ஆசிரியர்களான தமிழ்த்துறைத் தலைவர் (சுயநிதிப்பிரிவு) முனைவர் தி.பரிமளா, முனைவர் க.குமரகுருபரன் அவர்களையும் மற்றும் பன்னாட்டு ஆய்விதழின் ஆசிரியர் முனைவர் திருமதி த.மகேஸ்வரி அவர்களையும் மனதாரப் பாராட்டுகிறேன். எம் கல்லூரித் தமிழ்த்துறைத் தலைவர் மற்றும் பேராசிரியப் பெருமக்களையும் மனமுவந்து வாழ்த்துகிறேன்.

இடம் : மதுரை தலைவர்

நாள் : 31.12.2020 பொறியாளர் திரு.சு.இராஜகோபால்

வாழ்த்துரை



உயர்திரு மூ.விஜயராகவன்,

செயலர்,

மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி (தன்னாட்சி),

பசுமலை, மதுரை 625 004.

தமிழ் இலக்கியங்களின் வளர்ச்சியில் உரையாசிரியர்களின் பங்கு மகத்தானது. உரைகளின் பின்புலத்தில் இருந்த உரையாசிரியர்கள் பெரிதும் போற்றப்படாது இருந்தனர். உரையாசிரியர்களின் சிறப்பு வெளிப்படாது போகுமோ என்ற நிலையை மாற்றி இன்று உரையாசிரியர்களின் பெருமையை உணர்த்த 'தமிழ் இலக்கண இலக்கிய உரைமரபுகள்' என்னும் பொருண்மையில் ஆய்வுக்கட்டுரைகள் இதழ் ஆக்கம் செய்யப்பட்டுள்ளது. உரையாசிரியர்களின் நுண்மான் நுழைபுலம் இனிவரும் காலங்களில் சிறப்பிக்கப்படும்.

தமிழ் இலக்கண இலக்கிய உரை மரபுகள் எனும் பொருண்மையில் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், கல்லூரிப் பேராசிரியர்கள், முனைவர் பட்ட ஆய்வாளர்கள், தமிழ் ஆர்வலர்கள் எனக் கட்டுரை வழங்கிய அனைவரையும் பாராட்டுகிறேன்.

கட்டுரைகளைச் செப்பம் செய்து ஆய்வுக்கோவை பன்னாட்டுத் தரக்குறியீட்டு எண்ணுடன் (ISSN) வெளியிடப்படுவது சிறப்பு. ஆய்வுக் கட்டுரைகள் இதழ் ஆக்கம் பெறுவதற்கு அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு பல்லாற்றானும் உழைத்த சிறப்பிதழ் ஆசிரியர்கள் முனைவர் தி.பரிமளா, முனைவர் க.குமரகுருபரன், அவர்களுக்கும் பன்னாட்டு ஆய்விதழின் ஆசிரியர் திருமதி த.மகேஸ்வரி அவர்களுக்கும் தமிழ்ப்பணியைச் சிறப்பாகச் செய்திட வாழ்த்துக்கள். தமிழ்மொழியின் பல்வேறு பரிமாணங்களை வெளிப்படுத்தும் வகைகளில் நூல்கள் வெளிவரவேண்டும் என்றும் இவர்களின் பணி மேன்மேலும் சிறக்கவேண்டும் எனவும் வாழ்த்துகிறேன்.

இடம்: மதுரை — செயலர்

நாள்: 31.1.2020 — உயர்திரு மூ.விஜயராகவன்

வாழ்த்துரை



லெ.கோவிந்தராஜன்,
பொருளாளர்,
மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி(தன்னாட்சி),
பசுமலை, மதுரை 625 004.

மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரித் தமிழ்த்துறையில் (சுயநிதிப்பிரிவு) இருந்து இலக்கிய இலக்கண உரைகளால் அமைந்த சிறப்பிதழ் ஆய்வுக்கட்டுரைகளை ஆய்வுக்கோவையாக பன்னாட்டுத் தரக்குறியீட்டு எண்ணுடன் (ISSN) வெளியிடுவதில் மகிழ்கிறேன். மொழிக்காகச் சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த பாண்டிய மன்னர்கள் பற்றியும் முச்சங்க வரலாறு பற்றியும் இறையனார் அகப்பொருளுக்கு நக்கீரர் எழுதிய உரையின் வாயிலாகவே அறிய முடிகின்றது. ஒரு நூலுக்கு எழுதப்பட்ட பல்வேறு உரையாசிரியர்களின் உரைகளைத் தொகுத்துக் காணவும், உரைவேற்றுமைகளைக் கண்டு சீர்தூக்கிப் பார்க்கவும் இச்சிறப்பிதழ் பயன்பாடு உடையதாக அமைந்துள்ளது. உரையாசிரியர்கள் பற்றியும் உரைகளின் தனித்தன்மைகள் பற்றியும் ஆராய்ச்சியாளர்கள் தங்கள் கட்டுரைகளின் வாயிலாக எடுத்துரைத்துள்ளனர். அது மட்டுமன்றி தமிழ் இலக்கண இலக்கிய நுட்பங்களையும் நயங்களையும் அதனை உரையாசிரியர்கள் எடுத்துரைத்துள்ளமையையும் அறிய முடிகின்றது. உரையாசிரியர்கள் இல்லையென்றால் மூல நூல்களின் உயர்ந்த கருத்துக்கள் அறியப்படாமலேயே இருந்திருக்கும். மூலநூல்கள் எனும் தங்கச் சுரங்கத்தை உரையாசிரியர்களின் உரை என்னும் வெளிச்சத்தில் காண முடிகின்றது. ஆராய்ச்சியாளர்கள் ஆய்வு செய்த கட்டுரைகள் தமிழ் மொழிக்கு மேலும் ஓர் அணிகலனாக அமையட்டும் என வாழ்த்துகிறேன்.

இடம் : மதுரை — பொருளாளர்

நாள் : 31.12.2020 — உயர்திரு லெ.கோவிந்தராஜன்

அணிந்துரை

முனைவர் பா.மனோகரன்,

முதல்வர்,

மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி (தன்னாட்சி)

பசுமலை, மதுரை – 625 004.



பண்டைக்காலம் தொட்டே தனித்த பாரம்பரியத்தோடு விளங்குவது மதுரை மாநகர். இம்மாநகரைத் தன்னுடைய ஆட்சியில் சீர்மிகு நகராக மாற்றியவர் மாட்சிமை தங்கிய மன்னர் திருமலை நாயக்கர் அவர்களாவர். அவர்தம் பெயர் கொண்டு 1974-ஆம் ஆண்டு தமிழ்நாடு நாயுடு மகாஜன சங்கத்தாரால் தொடங்கப்பட்டது எங்கள் 'மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி'. கடந்த 46 ஆண்டு காலமாக கல்விப்பணியாற்றி வரும் எங்கள் கல்லூரியில் 1998 ஆம் ஆண்டு பகுதி-1 தமிழை மட்டும் பாடமாகக் கொண்டு தமிழ்த்துறை சுயநிதிப்பிரிவு தொடங்கப்பட்டது. பின்பு 2011 மற்றும் 2014 ஆம் ஆண்டு முறையே இளங்கலை மற்றும் முதுகலைத் தமிழ் தொடங்கப்பட்டது. கிராமப்புற மற்றும் பொருளாதாரத்தில் பின்தங்கிய மாணவர்கள் பெரிதும் பயிலும் எங்கள் கல்லூரி சுயநிதிப்பிரிவில் உள்ள தமிழ்த்துறை 17 ஆசிரியர்களைக் கொண்டு இயங்கும் பெரிய துறை ஆகும். வருடந்தோறும் பல்வேறு சிறப்புச் சொற்பொழிவுகள், கருத்தரங்குகள், பயிலரங்குகள், போன்ற நிகழ்வுகளைக் கொரோனா காலகட்டத்திலும் வெபினார் மூலமாக தமிழ்த்துறை சிறப்பாக நடத்தி வருகிறது. தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ் (IJTLLS) மற்றும் எம் கல்லூரி சுயநிதிப்பிரிவு தமிழ்த்துறையும் இணைந்து 'தமிழ் இலக்கண இலக்கிய உரைமரபுகள்' எனும் பொருண்மையில் சிறப்பிதழ் காணொளி இருக்கை நடத்தி, ஆய்வுக்கட்டுரைகளைச் சிறப்பிதழாக வெளியிடுவதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன். உரையின்றி பழைய செய்யுள்களின் கருத்துக்களை முழுமையாக உள்வாங்க முடியாது என்பது அனைவரும் அறிந்ததே. உரையாசிரியர்கள் சிறந்த ஊடகமாக இருந்து பழைய கருத்துக்களை நம்மிடம் கொண்டு வந்து சேர்த்தவர்கள் என்பதால் அவர்களுக்கு சிறப்பு செய்யும் விதமாகவும், அவ்வுரையாசிரியர்களை இன்றைய தலைமுறையினரும் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற எண்ணத்திலும் வெளியிடப்பட்ட இவ்விதழ் ஆய்வுலகில் சிறப்பிடம் பெறும் என்பதில் ஐயமில்லை. சுயநிதிப்பிரிவின் தமிழ்த்துறை இன்னும் இது போன்ற பல நிகழ்வுகளை நடத்தி துறைக்கும் கல்லூரிக்கும் பெருமை சேர்க்க மனதார வாழ்த்துகின்றேன்.

இடம் : மதுரை — முதல்வர்

நாள் : 31.12.2020 — முனைவர் பா.மனோகரன்

வாழ்த்துரை

முனைவர் க.அழகுசுந்தரம்,
இயக்குநர்,
மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி (தன்னாட்சி),
பசுமலை, மதுரை 625 004.



பார்புகழும் மதுரை மாநகரில் சீர்மிகு கல்விப் பணியாற்றும் மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரியின் சுயநிதிப்பிரிவு தமிழ்த்துறையும் தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழும் (IJTLLS) இணைந்து நடத்திய 'தமிழ் இலக்கண இலக்கிய உரைமரபுகள்' என்னும் பொருண்மையில் ஆய்வாளர்களிடமிருந்து பெறப்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரைகள் இதழ் ஆக்கம் பெறுவது கண்டு மகிழ்வடைகின்றேன்.

தமிழின் தொன்மையான இலக்கண இலக்கியங்களை இன்றைய தலைமுறையினர் படித்து இன்புறவும் அதனை வாழ்வில் பின்பற்றவும் வழிகாட்டியவர்கள் உரையாசிரியர்களே. தொல்காப்பியம் போன்ற இலக்கணச் சூத்திரங்களுக்கான பொருளையும், சங்க இலக்கியப் பாடல்களுக்கான பொருளையும் எடுத்துக் கூறினர். அது மட்டுமன்றி இலக்கணக் குறிப்பு தருதல், பாடபேதங்களை எடுத்துரைத்தல், பழமொழிகளை தக்க இடத்தில் பயன்படுத்திக் காட்டுதல், மரபுவழித் தொடரைப் பதிவு செய்தல், வரலாற்றுக் குறிப்புரைத்தல், பண்பாட்டு மேன்மைகளைக் கூறுதல், பழக்கவழக்கங்கள் போன்ற தகவல்களையெல்லாம் உரையாசிரியர்களின் உரைகளின் வழியாக அறிய முடிகின்றது. தமிழ்த்துறை சுயநிதிப்பிரிவு பேராசிரியர்கள் இக்கட்டான இந்தக் காலத்திலும் அறிவுத்தாகமுடையோர்களுக்கு செறிவான கருத்தளித்தது மட்டுமன்றி இந்த வாய்ப்பினை தவறவிட்டவர்களுக்கும் உரையாசிரியர்கள் பற்றிய கருத்தானது இதழ் வடிவில் சென்று பயனளிக்க வேண்டும் என்ற உயரிய சிந்தனையில் வெளியிடுவது ஆராய்ச்சி உலகில் பெரும் பயன் நல்கும். இலக்கண இலக்கிய உரைமரபுகள் எனும் பொருண்மையிலான ஆய்விதழ் சிறப்புடன் வெளிவருவதற்கு காரணமாக இருந்த ஆய்விதழின் ஆசிரியர் திருமதி த.மகேஸ்வரி அவர்களையும் எம் கல்லூரித் தமிழ்த்துறைத் தலைவர் மற்றும் பேராசிரியப் பெருமக்களையும் மனமுவந்து வாழ்த்துகிறேன். மேலும் இது போன்ற ஆக்கப்பூர்வமான நிகழ்வுகளைத் தொடர்ந்து நடத்தவேண்டும் என அன்புடன் வேண்டுகிறேன்.

இடம் : மதுரை — இயக்குநர்

நாள் : 31.12.2020 — முனைவர் க.அழகுசுந்தரம்

வாழ்த்துரை



முனைவர் சீ.காயத்ரிதேவி,

தமிழ்த்துறைத் தலைவர்,

மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி (தன்னாட்சி),

பசுமலை, மதுரை 625 004.

தமிழ் இலக்கிய வரலாற்றில் பல இலக்கண நூல்களும் இலக்கிய நூல்களும் நிரம்பி இருத்தல் போல அவற்றை விளக்கம் செய்யும் உரைநூல்களும் நிரம்பியுள்ளன. மூலநூல்களைப் போலவே உரைநூல்களும் சிறப்பு வாய்ந்தவை. மூல நூல்களை மக்களிடையே மதிப்புடன் வாழச்செய்கின்ற பெருமை உரை நூல்களுக்கே உண்டு. இங்ஙனம் வளர்ச்சி பெற்று வரும் உரை நூல்களை இயற்றிய உரையாசிரியர்கள் பலராவர். இவ்வாறு தமிழ் இலக்கண இலக்கிய உரைகளின் சிறப்பை வெளிக்கொணரும் வண்ணம் தமிழ் இலக்கண இலக்கிய உரைமரபுகள் என்ற பொருண்மையிலான ஆய்வுக்கட்டுரைகள் தொகுக்கப்பட்டு இதழ் ஆக்கம் செய்யப்பட்டுள்ளது.

பல கல்லூரி மற்றும் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், ஆய்வு மாணவர்கள், தமிழ் ஆர்வலர்கள் ஆகியோரிடமிருந்து சிறப்பான கட்டுரைகள் பெற்றுத் தொகுத்து வடிவமைக்கப் பட்டுள்ளது. இப்பணியைச் செவ்வனே செய்த சுயநிதிப்பிரிவு தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் தி.பரிமளா, தமிழ்துறைப் பேராசிரியர் முனைவர் க.குமரகுருபரன் மற்றும் பன்னாட்டு ஆய்விதழின் ஆசிரியர் திருமதி த.மகேஸ்வரி அவர்களையும் மனதார வாழ்த்துகிறேன்.

இடம் : மதுரை — தமிழ்த்துறைத் தலைவர்

நாள் : 31.12.2020 — முனைவர் சீ.காயத்ரிதேவி

என்னுரை



முனைவர் தி.பரிமளா,
தமிழ்த்துறைத் தலைவர் (சுயநிதிப்பிரிவு),
மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி (தன்னாட்சி),
பசுமலை, மதுரை 625 004.

தமிழ்நாடு நாயுடு மகாஜன சங்கத்தினரால் 1974 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 18 ஆம் நாள் தொடங்கப்பட்ட கல்லூரி, கல்விநிலையிலும் பொருளாதார நிலையிலும் பின்தங்கிய கிராப்புற மாணவர் வாழ்விற்கு வழிகாட்டும் கலங்கரை விளக்கமாகத் திகழ்ந்து வருகின்றது. அறிவுத் திருக்கோயிலாக விளங்கிவரும் இக்கல்லூரியில் சுயநிதிப்பிரிவு தமிழ்த்துறையானது பல்வேறு கருத்தரங்குகளை பல்வேறு பொருண்மைகளில் நடத்தியுள்ளது. அதன் தொடர்ச்சியாக உரை என்றால் என்ன? உரை ஏன் தேவைப்படுகிறது? உரையின் தோற்றம் வளர்ச்சி! ஒரு நூலுக்கு ஏன் பல்வேறு உரையாசிரியர்கள் உரை எழுதியுள்ளனர்? ஒருவர் எழுதிய மூல நூலுக்கு மற்றவர் உரை எழுதிய நிலையில் நூலாசிரியரே உரை எழுதிய சூழல் போன்றவற்றை இன்றைய மாணவர்களுக்கு எடுத்துரைக்கும் வகையில் இச்சிறப்பிதழ் ஆய்வுக்கோவை அமைகின்றது. கற்றுத் துறை போகிய ஆசிரியப் பெருமக்கள் உரை செய்யும் உதவி, உரையின் வகைகள், மொழிநடை, உரைச்சிறப்புகள், உரை வேற்றுமை, உரை நுட்பம் போன்றவற்றை இலக்கண உரையாசிரியர்கள், இலக்கிய உரையாசிரியர்கள், காப்பிய உரையாசிரியர்கள், சமயநூல் உரையாசிரியர்கள் என பல்வேறு தலைப்புகளில் கட்டுரையாளர்கள் தங்கள் ஆய்வுச் சிந்தனைகளை பதிவு செய்துள்ளனர். இச்சிறிய முயற்சியினால் நாங்கள் முன்னெடுக்க அதன் பயனறிந்து பன்னாட்டு ஆய்விதழின் நிறுவனர் திருமதி த.மகேஸ்வரி அவர்கள் இதழ் ஆக்கம் செய்து வெளியிட முன்வந்த நிலை,

> தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
> கொள்வர் பயன்தெரி வார்.

என்ற வள்ளுவரின் வாய்மொழிக்குச் சான்றாக விளங்கும் அவரையும் பாராட்டுகின்றேன். தமிழ்த்துறை முன்னெடுக்கும் அனைத்துக் கருத்தரங்குகளுக்கும் ஊக்கம் தந்து உதவி செய்து வருகின்ற மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி நிருவாகத்தினர் அனைவருக்கும் நன்றி. எனது இந்த முயற்சிக்கு உறுதுணையாக இருந்து உதவி செய்த முனைவர் க.குமரகுருபரன் அவர்களின் உதவி பெரிதும் நினைவு கூறத்தக்கது. மேலும் எம்துறை அனைத்துப் பேராசிரியப் பெருமக்களுக்கும் நன்றி கூற கடமைப்பட்டுளேன். எங்களின் சிறிய முயற்சியில் உருவாகியுள்ள சிறப்பிதழ் ஆய்வுக்கட்டுரைகளை தமிழ் அறிஞர்களும் ஆசிரியர்களும் மாணவச் செல்வங்களும் படித்துப் பயன்பெற வேண்டுகிறேன்.

இடம் : மதுரை — தமிழ்த்துறைத் தலைவர் (சுயநிதிப்பிரிவு)

நாள் : 31.12.2020 — முனைவர் தி.பரிமளா

பதிப்புரை



திருமதி. த.மகேஸ்வரி,
இயக்குநர் மற்றும் பதிப்பாசிரியர் - IJTLLS,
தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்,
விருதுநகர் - 626 001.

தமிழ்மொழி மற்றும் இலக்கியத்திற்காக எமது "தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்" (Ijtlls) தம் இலக்கிய மற்றும் ஆராய்ச்சி அரும்பணியைச் செம்மையாக செய்து வருகின்றது. தமிழ்மொழியின் வளர்ச்சியினை எண்ணி செயல்பட்டு "தமிழ் இலக்கண இலக்கிய உரை மரபுகள்" *(TEXTUAL TRADITION IN TAMIL GRAMMAR AND LITERATURE)* என்ற பொருண்மையில் சிறப்பிதழ் கௌரவ ஆசிரியராக திறம்பட செயல்பட்ட முனைவர் தி.பரிமளா மற்றும் க.குமரகுருபரன் ஆகியோருக்கும் அவர்களுக்கு ஒப்புதல் அளித்து ஊக்குவித்த மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி நிர்வாகத்தினருக்கும் எமது இதழ் சார்பாக நன்றியினை உரித்தாக்குகின்றோம். தமிழ்த்துறைத் தலைவர் மற்றும் தமிழ்த்துறைப் பேராசிரியார்கள் அனைவருக்கும் எமது நன்றியினை உரித்தாக்குகிறோம். தமிழின் பல தொன்மை நூல்களுக்கு உரை வகுத்த உரையாசிரியர்கள், உரைத்தன்மை, உரை வளர்ச்சி, தற்கால உரைகள், உரை வகுக்கும் விதம் என பல்வேறு பொருண்மைகளில் கிடைத்த ஆய்வுக் கட்டுரைகளை கருத்துத் திருட்டு மற்றும் ஒப்பீடு சரிசெய்து மதிப்பீடு செய்யப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது. ஆய்வுக் கட்டுரைகளை வழங்கி சிறப்பித்த தமிழ் பேராசிரியர்கள், ஏனைய அனைத்து துறைப் பேராசிரியர்கள், எழுத்தாளர்கள், தமிழ் ஆர்வலர்கள் மற்றும் ஆராய்ச்சி மாணவர்களை மனதார பாராட்டுகிறோம். தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ் (IJTLLS) செம்மையாய் செயல்பட்டு ஆய்வுக் கட்டுரைகளை இணையத்தில் பதிப்பு செய்து வருகின்றது. எதிர்காலத்தில் தமிழ் ஆராய்ச்சிகளை உலக அரங்கத்திற்கு எடுத்துச் செல்ல ஓர் ஆய்வுக்களமாக எமது இதழ் முன்மாதிரியாகச் செயல்பட்டு வருகிறது. அதற்கு உறுதுணை அளித்த அனைவருக்கும் நன்றி

த.மகேஸ்வரி

பொருளடக்கம்

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் அரையாண்டு பன்னாட்டு ஆய்விதழ்

International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

நற்றிணை யாப்பு: உரைகாரர் நோக்கு

Prosody of "Natrinai": Commentators' View

முதுமுனைவர் ப.திருஞானசம்பந்தம், உதவிப் பேராசிரியர், தமிழ் உயராய்வு மையம், மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி, மதுரை. .
Dr.P.Thirugnanasammandam, Assistant Professor, Research Centre of Tamil, Mannar Thirumalai Naicker College, Madurai.
ORCiD: https://orcid.org/0000-0002-5593-2900
DOI: 10.38067/ijtlls.2020.spl.v03i02v2.031

Abstract

The Pioneers of Tamil Prosody were Ilampooranar, Peraciriar and Nachinarkiniar. They were the first to do "Tholkappiam" commentaries in regard to the prosody of Sangam Literature. The commentaries for the Tamil traditional grammar Tholkappiam have been attested to the various elements of prosody in thirteen hymns of "Natrianai". They clarify the relationship between "Tholkappiam" and Sangam Literary Texts through authentic evidences. The present article highlights on the thoughts and ideas of the commentators, Ilampooranar, Peraciriar and Nachinarkiniar about "Natrinai".

Keywords: Prosody of "Natrinai", Commentators' View

முறையான தமிழ் இலக்கிய வரலாறு எழுதினால் அதில் தமிழ் யாப்பின் வரலாறும் ஓர் அங்கமாக அமைதல் வேண்டும். தமிழ் யாப்பின் வரலாற்றுக்குத் தொடக்கமாக அமைவது சங்க யாப்பாகும். சங்க யாப்பினைப் பற்றித் தெளிவான நுட்பமான அறிவு இருந்தால்தான் பிற்கால யாப்பு வளர்ச்சியைச் சிறப்பாக விளக்க முடியும்.

- அ.பிச்சை (1983), சங்க கால ஆசிரியப்பா வகைகள், ப.227

சங்க இலக்கியங்களின் யாப்பியல் குறித்து ஆராயும் முயற்சிகள் விரிவாக நிகழ்ந்துள்ளன. அவற்றைத் தனித்த நிலையில் ஒரு சங்கப் பனுவலைக் குறித்த ஆய்வுகள், ஒட்டுமொத்த சங்கப் பனுவலைக் குறித்த ஆய்வுகள் எனப் பகுக்கலாம். இப்பின்புலத்தில் தி.வீரபத்திர முதலியார், அ.சிதம்பரநாதனார், இரா.சாரங்கபாணி, தமிழண்ணல், சோ.ந.கந்தசாமி, அன்னிதாமசு, அ.பிச்சை, ஜெ.ஆர்.மார், கா.சிவத்தம்பி உள்ளிட்ட ஆய்வாளர்களின் ஆய்வுகள் குறிப்பிடத்தக்கன. சங்க இலக்கியங்களின் யாப்பியல் குறித்த ஆய்வுகளை முதன்முதலில் முன்னெடுத்தவர்கள் உரையாசிரியர்கள். தமிழின் பெரும்பான்மை இலக்கியங்களை மேற்கோள்களின் மூலம் எடுத்துக்காட்டி பன்முகப்பட்ட ஆய்விற்கு வழியமைத்துள்ளனர். இவர்களின் மேற்கோள்கள் மூல நூலாசிரியரின் யாப்பியற் கொள்கைகளை விளக்கி, பிரதிபேத ஆய்வுக்கும் வழி காட்டுகின்றன; இவர்களின் புலமைத்துவத்தையும் அடையாளப்படுத்துகின்றன.

தொல்காப்பியச் செய்யுளியல் இளம்பூரணர், பேராசிரியர், நச்சினார்க்கினியர் ஆகியோர் உரைகளில் நற்றிணையின் பாடல்கள் மேற்கோள்களாகக் காட்டப் பட்டுள்ளன.

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

நற்றிணைப் பாடல்களின் இடம், உரைகாரர்களின் விளக்கமுறை, மூல நூலாசிரியரின் யாப்பியற் கோட்பாட்டிற்கு நற்றிணைப் பாடல்கள் பொருந்தியமையும் நிலை, நற்றிணையின் பாடல்களை மேற்கோள் காட்டுவதில் உரையாசிரியர்களுக்கு இடையிலான ஒற்றுமைகள் / வேற்றுமைகள், உரைக் குறிப்பில் உள்ள கருத்து வேறுபாடுகள் எனப் பன்முகப்பட்ட நிலையில் நற்றிணையின் பாடல்கள் மேற்கோள்களாக இடம்பெற்றிருக்கின்றன. இவற்றை ஆராய்ந்து மதிப்பிடுவதாக இக்கட்டுரை அமைகிறது.

சங்க இலக்கியத்தில் முதலில் தொகுக்கப்பட்ட நூல் குறுந்தொகை. இந்நூல் தொகுக்கப்பட்ட சமகாலத்தில் நற்றிணையும் தொகுக்கப்பட்டுள்ளது (ச.வையாபுரிப் பிள்ளை, இலக்கியச் சிந்தனைகள், பக்.187, 188.). கடவுள் வாழ்த்து நீங்கலாக உள்ள 400 பாடல்களை 248 புலவர்கள் பாடியுள்ளனர். இவர்களில் 192 புலவர்களின் பெயர்கள் அறிய வருகின்றன. 56 புலவர்களின் பெயர்கள் தெரியவில்லை. நற்றிணையின் 401 பாடல்களில் 13 பாடல்களைத் தொல்காப்பியச் செய்யுளியலின் உரையாசிரியர்கள் மூவரும் யாப்பின் பல்வேறு கூறுகளுக்கு மேற்கோளாகப் பயன்படுத்தியுள்ளனர். இவர்கள் பேராலவாயர், சிறுமோலிகனார், பாரதம் பாடிய பெருந்தேவனார், மருதன் இளநாகனார், ஔவையார், ஒரு சிறைப் பெயரினார், பாலை பாடிய பெருங்கடுங்கோன், மதுரை மருதன் இளநாகனார், தேய்புரிப் பழங்கயிற்றனார், பெயர் தெரியாத புலவர் இருவர் ஆகியோரின் பாடல்களை எடுத்தாண்டுள்ளனர்.

தொல்காப்பியர் 34 செய்யுள் உறுப்புகளைச் செய்யுளுக்குரியாகக் கட்டமைத்துள்ளார். எழுத்து முதல் வண்ணம் ஈறாக உள்ள 26 உறுப்புகளை முதலிலும், அம்மை முதல் இழைபு வரை உள்ள 8 வனப்புகளை அடுத்தும் குறிப்பிட்டுள்ளார். இச்செய்யுள் உறுப்புகளை வடிவம் சார்ந்த உறுப்புகள், பொருள் பற்றிய உறுப்புகள், நாடகப் பண்பு சார்ந்த இலக்கிய உறுப்புகள், பெரும்பாலும் பொருளும் ஒருங்கிணைந்து கூடியமையும் திறத்தால் உருவான உறுப்புகள் எனத் தமிழண்ணல் ஐந்தாகப் பகுத்துக்காட்டுகிறார் (தமிழண்ணல், சங்க இலக்கிய ஒப்பீடு - இலக்கியக் கொள்கைகள், பக்.14, 15). சோ.ந.கந்தசாமி அவர்கள் அடிப்படை உறுப்புகள், பொருள் புலப்பாட்டு உறுப்புகள், வனப்புகள் என மூன்றாகப் பிரிக்கிறார் (சோ.ந.கந்தசாமி, தமிழ் யாப்பியலின் தோற்றமும் வளர்ச்சியும் - முதற்பாகம், முதல் பகுதி, ப.81).

செய்யுளைக் கட்டமைக்கவும், செய்யுளின் பொருளைப் புலப்படுத்தவும் உதவும் உறுப்புகளை விளக்குவதற்குரிய சான்றுகளாக நற்றிணையின் பாடல்கள் உரையாசிரியர்களுக்கு உதவுகின்றன. அசை, தொடை, பா, கைகோள், பொருள் வகை அல்லது கூற்று வகை, கேட்போர், கால வகை ஆகிய உறுப்புகளுக்கு நற்றிணையின் பாடல்களைத் தொல்காப்பிய உரையாசிரியர்கள் சான்றுக் காட்டியுள்ளனர். இவற்றை வசதி கருதி பின்வருமாறு தொகுத்துக் கொள்ளலாம்.

1. அசை : குற்றியலுகரம், முற்றியலுகரம் அசையாகா இடம், அசையாகுமிடம்
2. தொடை : முரண்தொடை

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

3. பா : வாழ்த்தியல் வகை, ஆசிரியப்பாவின் எல்லை
4. கைக்கோள் : களவு
5. கூற்று : கற்பிற் கூற்றிற்குரியோர், தலைவற்குரிய மரபு
6. கேட்போர் : கேட்டற் பெருமைக்கண் வருவதோர் மரபு
7. காலம்

1. அசை : குற்றியலுகரம், முற்றியலுகரம் அசையாகா இடம், அசையாகுமிடம்

தொல்காப்பியர் அசைகளை நேர், நிரை, நேர்பு, நிரைபு என நான்காகப் பிரித்து விளக்குகிறார். முதலிரு அசைகளை இயலசை என்றும் பின்னிரு அசைகளை உரியசை என்றும் சுட்டுகிறார். தொல்காப்பியர் குறில், நெடில், குற்றொற்று, நெடில் ஒற்று ஆகிய நான்கு சேரசைகளின் பின் உகரம் வந்தால் நேர்வு அசை என்றும், குறிலிணை, குறில்நெடில், குறிலிணை ஒற்று, குறில்நெடில் ஒன்று ஆகிய நான்கு நிரையசைகளின் பின் உகரம் வந்தால் நிரைபு அசை என்றும் இலக்கணம் வகுத்துள்ளார். தொல்காப்பியர் அசைகளை நான்காகப் பிரித்தற்கான காரணத்தைச் சோ.ந.கந்தசாமி, "ஒற்றினைப் போன்று குற்றியலுகரமும் புள்ளிபெறும் என்றார் தொல்காப்பியர். குற்றியலுகரம் தான் ஊர்ந்து வரும் மெய்யும் தானும் அரைமாத்திரை அளவாய் நிற்பினும், ஒற்றினைப்போல் ஒடுங்கியிசையாது அதன்றிசைக்கும் இயல்பினது.

எனவே, அதனை ஒற்றெனக் கொண்டு அலகு பெறாது என்று ஒதுக்கவும் இயலாது. எனினும், ஏனைய குறிலைப் போல அக்குற்றியலுகரம் ஒரு மாத்திரை அளவில் அகன்றிசையாத காரணத்தினால் அதனைக் குறில் எனக் கொண்டு அலகு கொள்ளவும் இயலாது. ஆதலின், இதனை வேறொரு அசையாக அமைத்தலே தக்கதெனக் கருதிய தமிழ் யாப்பியலார், இதனை ஈறாகக் கொண்டு நேர்பு, நிரைபு என்னும் அசைகளை அமைத்துக் கொண்டனர்" (மேலது, ப.10) என்று எடுத்துரைக்கின்றார்.

அசை கொள்ளும்போது செய்யுளில் இடம்பெறும் குற்றியலுகரம், முற்றியலுகரம் அலகு பெறாது. இதில் குற்றியலுகரம் ஒற்றெழுத்தின் இயல்பைப் பெறும் என்கிறார் தொல்காப்பியர் (செய்.நூ.8, 9). செய்யுளில் இரு வகை உகரங்களும் மொழி சிதைந்து நேர்பசை, நிரைபசை என்று அலகிடப்படுவதில்லை; செய்யுளின் இறுதி அடியிலும் தனியசையாகி நிற்றலும் இல்லை. ஆனால் மொழிசிதையாமல் செய்யுளின் இடையில் இரு வகை உகரமும் வரும்போது நேர்பு, நிரைபு அசைகளாகக் கொள்ளப்படும். பேராசிரியர், '***முழவு*** *முகம் புலரா' (நற்.220:6)* என்ற அடியினையும், நச்சினார்க்கினியர் '***மின்னு*** *நிமிர்ந்தன்ன' (நற்.51:6)* என்ற அடியினையும் நற்றிணையிலிருந்து சான்று காட்டியுள்ளனர். இவற்றில் '**முழவு**', '**மின்னு**' என்னும் சொற்கள் மொழி சிதையாமையால் நிரைபு, நேர்பு அசைகளாகின்றன.

செய்யுளில் ஒற்றெழுத்தோடு சேர்ந்து இருவகை உகரங்களும் வரும்போது நேரசையாகக் கொள்ளப்படும். இளம்பூரணர், '***கண்ணும்*** *படுமோ என்றிசின் யானே' (நற்.*

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

61:10) என்ற நற்றிணையின் அடியைச் சான்றுகாட்டுகிறார். இதில் **'கண்ணும்'** என்ற சொல்லில் உள்ள முற்றியலுகரம் ஒற்றொழுத்தோடு சேர்ந்து வருதலால் நேரசையாயிற்று.

2. தொடை முரண்தொடை

தொல்காப்பியர் மோனை, எதுகை, முரண், இயைபு என்ற இந்நான்கு நெறிப்பட்ட மரபினை உடையது தொடை என்பார். இந்நான்கு தொடைகளே பழமையானவை. இத்தொடைகள் செய்யுளுக்குப் பொலிவையும் இனிமையையும் வழங்க வல்லன. இவற்றுள் அடிதோறும் சொல்லையும் பொருளையும் மாறுபடத் தொடுப்பது அடிமுரண் என்பார் இளம்பூரணர் (தொல்.செய்.நூ.91 இளம்.) பேராசிரியர் சொல்லும் பொருளும் பகைத்தல் காரணமாக வருவது முரண்தொடை. இதை விரிவுப்படுத்திச் சொல்லும் சொல்லும் முரணுதல், பொருளும் பொருளும் முரணுதல், சொல்லும் பொருளும் சொல்லோடு முரணுதல், சொல்லும் பொருளும் பொருளோடு முரணுதல், சொல்லும் பொருளும் சொல்லோடும் பொருளோடும் முரணுதல் என ஐந்தாகக் காட்டுகிறார்.

மேலும் "இவை ஐந்தொடையுள் தளை வகை அடிக்கண் வருங்கால் இன்னவாறு வருமென்பது மேற்கூறிவாற்றானே கொள்ளப்படும். இவை விரித்து நோக்கப் பலவாமாறும் விரித்துறழ்ந்து கண்டுகொள்க" என்று வாசகனின் பார்வைக்கே பேராசிரியர் விட்டு விடுகின்றார் (தொல்.செய்.நூ. 95 பேரா.). நச்சினார்க்கினியர் அடிகளிலும், சீர்களிலும் முரண் தொடையை விரித்து நோக்குகின்றார். இணை, பொழிப்பு, கூழை, ஒரூஉ, மேற்கதுவாய், கீழ்க்கதுவாய், முற்று ஆகிய சீர்வகைத் தொடைகளைக் கட்டளை, சீர் என இரு வகைகளில் பகுத்துச் சான்று களைத் தருகின்றார் நச்சினார்க்கினியர். *"கண்ணுந் தோளுந் தண்ணறுங் கதுப்பும்' (நற். 84:1). இது கட்டளைக் கீழ்க்கதுவாய் முரண்"* (தொல். செய்.நூ.95 நச்சர்.). இவ்வடியின் முதல், இரண்டாம், நான்காம் சீர்கள் முரணி அமைந்ததால் இது கட்டளைக் கீழ்க்கதுவாய் முரண்.

பா: வாழ்த்தியல் வகை

வாழ்த்து ஆசிரியம், வஞ்சி, வெண்பா, கலி எனும் நான்கு பாவுக்கும் உரியது. இதை 'வாழ்த்தியல் வகையே நாற்பாக்கும் உரித்தே' (தொல்.செய்.நூ.105) எனும் நூற்பாவின் மூலம் தொல்காப்பியர் சுட்டுகிறார். இந்நூற்பாவுக்கு உரையெழுதிய இளம்பூரணர் "வகை யென்றது தேவரை வாழ்த்துதல், முனிவரை வாழ்த்துதல் ஏனையோரை வாழ்த்துதல். செய்யுள் வந்தவழிக் கண்டு கொள்க" என்கிறார் (தொல்.செய்.நூ.105 இளம்.). பேராசிரியரும் நச்சரும் இளம்பூரணரினும் மேல் அதிக விளக்கத்தையும் சான்றினையும் தருகின்றனர்.

பேராசிரியர் மும்முதற்பொருளின் அறுவகையும் பெரும்பான்மை எனப்படும் என்று கூறி, வாழ்த்தும் முறையில் தனக்கு பயன்பட வாழ்த்துதல், பிறருக்குப் பயன்பட வாழ்த்துதல் என இரண்டு வகைப்படும். மேலும் வாழ்த்து முன்னிலையாகவும் படர்க்கையாகவும் வரும். ஆக மொத்தம் வாழ்த்து நான்கு வகைப்படும். வாழ்த்தப்படும் பொருளைப் பேராசிரியர்

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

கடவுள், முனிவர், பசு, பார்ப்பார், அரசர், மழை, நாடு என ஏழாகப் பகுக்கிறார். இதில் கடவுளை வாழ்த்தும் செய்யுள் 'கடவுள் வாழ்த்து' எனப்படும். ஒழிந்த பொருள்களை வாழ்த்திடும் செய்யுளை அறுவகை வாழ்த்து எனும் பெயரில் குறிப்பிடுகின்றார். கடவுள் வாழ்த்தைத் தனக்கு பயன்பட வாழ்த்தியது, உலகிற்குப் பயன் பட வாழ்த்தியது என இரண்டாகப் பிரிக்கிறார் பேராசிரியர் (தொல்.செய்.நூ. 109 பேரா.). தனக்குப் பயன்பட வாழ்த்திய தெய்வ வாழ்த்திற்கு நற்றிணையின் கடவுள் வாழ்த்து முழுவதையும் பேராசிரியரும் நச்சரும் சான்றுகாட்டுகிறார். *'மாநிலஞ் சேவடி யாகத் தூநீர் / வளைஞரல் பௌவ முடுக்கை யாக...' (நற்.கடவுள்.)* பேராசிரியர் காட்டும் இப்பாடலின் இரண்டாம் அடியின் முதற்சீர் 'வளைஞரல்' என்றுளது. நச்சர் உரையிலும் நற்றிணையின் அச்சுநூற் பதிப்புகளில் இல்லாத பாடமிது.

பேராசிரியர் கொள்ளும் இப்பாடம் பிரதிபேத ஆய்விற்கு வழியமைக்கின்றது. நச்சர் ஆசிரியத்தில் மட்டுமல்லாது வெண்பா, கலிப்பா யாப்பிலான கடவுள் வாழ்த்துப் பாடல்களை அறுவகை வாழ்த்துகளுக்குச் சான்று காட்டுகிறார். இச்சான்றுகள் முனிவர், அரசர், மழை ஆகிய மூன்று வாழ்த்துகளுக்குரியன. 'வஞ்சிப்பாவிற்கு வந்தவழிக் கண்டு கொள்க' என்கிறார். இதற்குரிய காரணத்தைக் க.வெள்ளைவாரணர் கூறும்போது, "வாழ்த்தியல் பொருளில் வஞ்சிப்பா வந்தமைக்குப் பண்டை இலக்கியங்களில் உதாரணம் கிடைக்காமையால் வஞ்சிக்கு உதாரணம் வந்த வழிக் காண்க" என்றார் நச்சர் என விளக்கமளிக்கிறார் (க.வெள்ளைவாரணன், தொல்காப்பியம் செய்யுளியல் உரைவளம், அடிக்குறிப்பு, ப.540).

பா: ஆசிரியப்பாவின் எல்லை

தொல்காப்பியர் நால்வகைப் பாக்களுள் ஆசிரியப்பாவையே முதலில் கூறி, இது மூன்றடி முதல் ஆயிரமடி வரை எல்லையாக உடையது என்கிறார் (தொல்.செய்.நூ.150). தொல்காப்பியரின் கருத்தை விளக்கும் இளம்பூரணர், "சுருங்கினது மூன்றடி; பெருமை ஆயிரமடியாக இடைப்பட்டன எல்லாவடியானும் வரப்பெறும்" எனச் சுட்டி ஆசிரியத்துள் நாற்சீரடி தவிர பிற அடிகளும் கலந்து வருதலை எடுத்துரைக்கிறார் (தொல்.செய்.நூ.150 இளம்.). தொல்காப்பியர் *'ஆசிரிய நடைத்தே வஞ்சி' (தொல்.செய்.நூ.104)* என்றதனால் வஞ்சிப்பாவுக்கும் ஆயிரமடிப் பெருமை என்கிறார் இளம்பூரணர். இவரின் கருத்துகளோடு ஒத்துச் செல்லும் பேராசிரியரும் நச்சரும் நுட்பமான விளக்கத்தையும் சான்றினையும் தருகின்றனர். இருவரும் மூல நூலாசிரியரான தொல்காப்பியர் முன்வைத்த நூற்பாவின் முறை வழித் தங்களது விளக்கத்தை முன்வைக்கின்றனர். ஆசிரியப்பாவின் "பெருக்கத்திற் கெல்லை ஆயிரமடி; சுருக்கத்திற்கெல்லை மூன்றடி" (தொல்.செய்.நூ.157 பேரா., நச்சர்.).

பேராசிரியர் மூன்றடி முதல் ஏழடி வரை ஆசிரியம் வந்ததற்குச் சான்றுகாட்டுகையில், ஏழடி ஆசிரியத்திற்கு நற்றிணையின் கடவுள் வாழ்த்தைக் காட்டுகிறார். சான்றுகளின்கீழ் 'ஆசிரியப்பா மூன்றடியால் வந்தது', 'ஐந்தடியான் வந்தது' (குறுந்.18), 'ஆறடியான் வந்தது'

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

(குறுந்.கடவுள்.), 'ஏழடியான் வந்தது' (நற்.கடவுள்.) என்னும் குறிப்புகளைக் கொடுகிறார். நற்றிணையுள் ஒன்பதடி முதல் பன்னிரண்டடி வரையிலான பாடல்கள் தொகுக்கப் பட்டுள்ளன என நூலின் தொகுப்பு முறையில் சுட்டப்பட்டிருக்கிறது. நற்றிணையில் ஒன்பது அடிக்கும் குறைவான பாடல் உள்ளது என்பதற்கு இக்கடவுள் வாழ்த்துச் சான்று. பேராசிரியர் 'ஏழடிக்கு மேற்பட்ட ஆசிரியப்பாவைப் பிறவும் அன்ன' என்றுரைக்கிறார். 'ஆயிரமடியான் வருவன உளவேற் கண்டு கொள்க' என்ற குறிப்பை மட்டும் தந்து சான்றினைக் கூறவில்லை. மேலும் 'வஞ்சிப்பாவிற்கும் இவ்வாறே கொள்ளப்படும்' என்கிறார் (தொல்.செய்.நூ.157 பேரா.). ஆசிரியப்பாவின் சுருக்கத்திற்குப் பேராசிரியர் காட்டும் சான்றையே தரும் நச்சர், ஆசிரியப்பாவின் எல்லையை தலையளவு இடையளவு எனப் பகுத்து எட்டுத்தொகை, பத்துப்பாட்டைச் சான்றுகளாக்குகின்றார். இதுபோல் வஞ்சிக்கும் என்கிறார்.

கைகோள் வகை: களவு

கைகோள் என்பதற்கு ஒழுக்கம் என்று பொருள். இது களவு, கற்பு என இரண்டு வகைப்படும். களவு என்பதற்கு மறைநெறி உணர்ந்த மறையோர்களால் விளக்கந் தரப்படும் என்று தொல்காப்பியர் கூறுகின்றார். இயற்கைப் புணர்ச்சி, இடந்தலைப்படல், பாங்கற் கூட்டம், தோழியற் கூட்டம் என்ற இந்நான்கு வகையால் களவொழுக்கம் அமையும் என்பார் இளம்பூரணர் (தொல்.செய்.நூ. 178 இளம்.). இக்களவு தீமை பயக்கும் களவு அல்ல எனவும் தெளிவுபடுத்துகிறார். பேராசிரியர் "காமப்புணர்ச்சியும் அதன் இடந்தலைப்பாடும் அதன் பின் பாங்கற் கூட்டமும் அதன்பின்னர் தோழியற் கூட்டமும் நிகழும் என்று முறைபடக் கூறி இந்நான்கன் சார்பினால் களவொழுக்கம் இதுவென்று கருதுமாற்றாற் செய்யுள் செய்தல் கந்திருவ வழக்கம்" என்று விளக்கம் தருகிறார் (தொல். செய்.நூ.186 பேரா.).

இடந்தலைப்பாடு என்னும் களவு ஒழுக்கத்திற்குப் பேராசிரியர் நற்றிணையின் 39ஆவது பாடலைச் சான்றுகாட்டுகிறார். பேராசிரியர் போல் நச்சர் இங்கு விரிவான விளக்கத்தைத் தரவில்லை. நற்றிணை 39ஆவது பாடலின் 'சொல்லிற் சொல்லெதிர் கொள்ளாய்' என்ற முதலடியை மட்டும் காட்டுகிறார். மேலும் 'களவியலிற் கண்டு கொள்க' என்ற குறிப்பைத் தருகிறார். இக்குறிப்பிற்குக் காரணம் தொல்காப்பியக் களவியலுக்கு உரை எழுதியதேயாகும்.

கற்பிற் கூற்றுக்குரியோர்

பாணன், கூத்தன், விறிலி, பரத்தை, அறிவர், கண்டோர் ஆகிய அறுவரும் கற்பு காலத்தில் கூற்று நிகழ்த்துவார்கள். இவர்களோடு களவில் கூற்று நிகழ்த்திய தலைவன், தலைவி, பார்ப்பான், பாங்கன், தோழி, செவிலி ஆகிய அறுவரும் கூற்று நிகழ்த்து வதற்குரியவர்கள். 'தொன்னெறி மரபு' என்றதனால் பாகனும், தூதனுங் கூறவும் கூற்று அமையும். இவை அகப்பொருளில் மட்டுமல்லாமல் புறப்பொருளிலும் சிறந்து வரும். கற்பில் கண்டோர், பாகன் கூற்றுகளுக்கு நற்றிணையின் 394, 121 ஆகிய இரு பாடல்களை

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

மேற்கோள் காட்டுகிறார் பேராசிரியர். இவை முதலடி - இறுதியடி என மட்டுமே உள்ளன. இதன்கீழ் நூற்பெயரைச் சுட்டும் பேராசிரியர் ‘நற்றிணைப் பாட்டு’ என்கிறார்.

இப்பெயரைப் பேராசிரியர் மட்டுமே பயன்படுத்தியுள்ளார் (தொல்.செய்.நூ. 190 பேரா.). மேலும் கற்பில் கூற்று நிகழ்த்தும் பாணன், கூத்தன், கண்டோர், பாகன் ஆகிய நால்வருக்கு மட்டும் சங்க இலக்கியத்திலிருந்தும் உரைமேற்கோள் பாடலையும் சான்றுகளாகத் தருகிறார். பிறருக்குரிய சான்றினைக் காட்டாமல் ‘ஒழிந்தனவுங் கற்பியலுட் கூறிவாற்றான் அறிக’ என்கிறார். இதன்மூலம் பேராசிரியரும் கற்பியலுக்கு உரை இயற்றியிருக்கிறார் என்று அறிய முடிகிறது. ஆனால் அவ்வுரை இன்றுவரை கிடைக்கவில்லை.

கற்பிற் கூற்று நிகழ்த்துபவர்கள் குறித்த நச்சரின் உரையும் மேற்கோளும் பேராசிரியருரையே தழுவி அமைகின்றன. நச்சர் காட்டும் நற்றிணையின் மேற்கோள்கள் பிரதிபேத ஆய்விற்கு வழியமைக்கின்றன. நற்றிணையின் 394 பாடலில் ‘ஞெமயத்’, ‘உறைத்தென’, ‘நறுந்தண் ணியளா’ (நற்.394:2,7,9) என்னும் பாடங்களையும், 121ஆவது பாடலில் ‘நிரம்பிய’, ‘வேறித் (நற்.121:2,9) என்னும் பாடங்களையும் நச்சர் காட்டுகிறார்.

இவை நற்றிணைப் பதிப்புகளிலும், கழகப் பதிப்பிலும், ஆ.சிவலிங்கனாரின் உரைவளப் பதிப்பிலும் ‘ஞெமையத்’, ‘உரைத்தென’, ‘நறுந்தண் ணியன்கொல்’ (நற்.394:2,7,9) என்றும் ‘நிரப்பிய’, ‘எழீஇத்’ (நற்.121:2,9) என்றும் சிறு மாறுபாடுகளுடன் காணப்படுகின்றன (நற்றிணை, பாடல்கள் 121, 394.). இப்பாடங்கள் பிரதி பேத ஆய்வுக்குரியன. அச்சு நூற் பதிப்புகளில் 394ஆவது பாடலின் கீழுள்ள குறிப்பில் கண்டோர் கூற்றோடு தோழி கூற்றிற்குமுரியது என்றுளது (ஆ.சிவலிங்கனார் (தொ.ஆ.), தொல்காப்பியம் செய்யுளியல் உரைவளம், பகுதி - 4, பக்.67,68)

தலைவனுக்குரிய மரபு

தலைவியை உடன்போக்கு அழைத்து செல்லும் தலைவன் இடைச்சுரத்தின் தன்மைகளைக் கூறி, தலைவியைத் தேற்றுதலும் உண்டு. இது தலைவனுக்குரிய மரபு. இம்மரபிற்கு இளம்பூரணர் நற்றிணையின் 362ஆவது பாடலைச் சான்றுக்காட்டுகிறார். இச்சான்று தலைவியிடம் தலைவன் இன்னுரை கூறி அவளை அழைத்துச் செல்வதாக உள்ளது. ஆறலைக் கள்வர் வழியில் எதிர்ப்பட்டால் அவர்களைக் கண்டு அஞ்சாமல் எதிர்த்துப் போரிட்டு ஓடச் செய்வேன். ஆனால் உன்னுடைய சுற்றத்தார் நம்மைப் பின் தொடர்ந்தால் மறைந்து கொள்வேன். நீ கவலைப் படாதே என்று தலைவியுடன் தலைவன் பேசுவதாக இப்பாடலின் அமைகிறது. இளம்பூரணரது உரை, மேற்கோள் இரண்டையும் உற்றுநோக்கிய பேராசிரியரும் நச்சரும் தமது உரை விளக்கத்தையும் சான்றினையும் கட்டமைத்துள்ளனர்.

தலைவியைத் உடன் கொண்டு இடைச்சுரத்தின்கண் போகும் தலைவன் சுற்றத்தார் கண்ணுறின் அவர்கள் கேட்கத் தலைவிக்கு நல்லுரைகளை நீதி நூல் முறைப்படி கூறுவான். இவ்வாறில்லாமல் மருட்டிக் கூறுதலும் உண்டு. இதற்குப் பேராசிரியர் நற்றிணையின் 9ஆவது

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

பாடல் முழுவதையும் சான்றாகத் தருகிறார். இதன்கீழ் "வருந்தா தேகுமது' எனவே 'வழிபடு தெய்வங்கட் கண்டால் விடுவார் இல்லாதது போல் நின்னை விடுதல் எனக்கு அறனன்றெனக் கூறி மெல்லெனச் செல்கவென் மருட்டிக் கூறியது காண்க' என விளக்கந் தருகிறார்.

நச்சர் இளம்பூரணர் காட்டும் மேற்கோளின் பொருளை ஒத்த பாடலையும் பேராசிரியர் காட்டும் நற்றிணையின் 9ஆவது பாடலையும் சான்றாகக் காட்டுகிறார். நச்சர் காட்டும் நற்றிணை 9ஆவது பாடலில் முதல்மூன்றடிகளுடன் இறுதியடியின் இறுதிசீர் மட்டும் இடம்பெறுகிறது.

நற்றிணையின் 9ஆவது பாடலின் 9ஆவது அடியினை மட்டும் போரசிரியரும் நச்சரும் எடுத்துக்கொண்டு தலைவன் கூறத் தலைவிக் கேட்பதற்குச் சான்றாக்குகின்றனர் (தொல்.செய்.நூ.191). *'வருந்தாது ஏகுமதி - வாலெயிற் றோயே' (நற்.9:9)* என்ற இப்பாடலடி தலைமகன் கூறத் தலைமகள் கேட்பதாக அமைகிறது. பேராசிரியரும் நச்சரும் ஒரு பாடலையே ஒன்றிற்கும் மேற்பட்ட யாப்பின் கூறிற்குச் சான்றுகாட்டும் உரை நுட்பம் இங்குப் புலப்படுகின்றது.

கேட்டற் பெருமைக்கண் வருவதோர் மரபு

இம்மரபு குறித்துப் பேசும் இளம்பூரணர் ஞாயிறு, திங்கள், அறிவு, நாண், கடல், கானல், விலங்கு, மான், பொழுது, புள், நெஞ்சு எனச் சொல்லப்பட்ட இப்பதினொன் றுடன் மக்கள் அல்லாத பொருள்கள் தாம் கருதிய நெறியாளே செல்வன போலவும் கேட்குந போலவும் சொல்லியமைப் பெறும் என்று கூறுகிறார் (தொல்.செய்.நூ.192 இளம்.) இவற்றுள் அறிவு விரைந்து செல்லுமாறு கூறுதற்கு நற்றிணையின் 284 (7-8) ஆவது பாடலை இளம்பூரணர் சான்றுகாட்டுகிறார். இதே நற்றிணை பாடலின் 7ஆவது அடியினை மட்டும் எடுத்துக் கொண்டு நச்சர் சான்றுகாட்டுகிறார்.

கால வகை

காலமும் இடமும் எல்லாச் செய்யுளின் கண்ணும் வரும். மூன்று காலத்தினும் நிகழும் நிகழ்ச்சியைச் செய்யுளுள் தோன்றச் செய்தல் காலம் என்னும் உறுப்பு. இக்கருத்தை வலியுறுத்த வரும் இளம்பூரணர் புணர்ச்சி இறந்த காலம், நிகழ் காலம், எதிர் காலம் என்ற மூன்று காலத்தினும் நிகழ்வதாகக் கூறிப்பதற்குச் செய்யுள் உண்டு என்கிறார். இதில் நிகழ்காலம், எதிர்காலம் குறிப்பதற்கு நற்றிணையின் 10ஆவது பாடலைச் சான்று காட்டுகிறார்.

அண்ணாந் தேந்திய வனமுலை தளரினும்
பொன்னேர் மேனி மணியில் தாழ்ந்த
நன்னெடுங் கூந்தல் நரையொடு முடிப்பினும்
நீத்த லோம்புமதி பூக்கேழ் ஊர (நற்.10)

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

என்ற வழி நிகழ்காலம் இளமைப் பருவமென்பது தோன்ற வந்தது. இதனுள், நீத்தலோம்புமதி யென்பது எதிர்காலங் குறித்து நின்றது. இவ்வகையினாற் காலமுமிடமும் எல்லாச் செய்யுளின் கண்ணும் வருமென்று கொள்க" (தொல்.செய்.நூ.194 இளம்.) என்று நிகழ், எதிர்காலம் குறித்து வந்த நற்றிணையின் செய்யுளை எடுத்துக்காட்டிக் கால வகையை விளக்குகிறார் இளம்பூரணர்.

தொகுப்புரை

தொல்காப்பியம் சங்க இலக்கியத்திற்கான இலக்கண நூல். இதற்கேற்றாற் போல் தொல்காப்பியச் செய்யுளியல் உரையாசிரியர்களின் மேற்கோள் ஆட்சிகள் அமைகின்றன. தொல்காப்பியரின் கருத்தை விளக்கும் இளம்பூரணர், பேராசிரியர், நச்சினார்க்கினியர் ஆகிய மூவரும் பெரும்பாலும் சங்க நூற் பாடல்களையே கையாளுகின்றனர். மிகுதியாகப் பேராசிரியர் சங்கப் பாடல்களை மட்டுமே எடுத்தாள்கிறார்.

சங்க இலக்கியத்துள் காலத்தால் முந்தைய நற்றிணையின் 13 பாடல்களைத் தொல்காப்பியர் சுட்டும் செய்யுள் உறுப்புகளுக்குச் சான்றுகளாக்குகின்றனர் உரையாசிரியர்கள். 34 செய்யுள் உறுப்புகளுள் 7 உறுப்புகளுக்கு நற்றிணையின் பாடல்களைச் சான்றுகாட்டி, தொல்காப்பியரின் யாப்பியற் கொள்கைகளை விளக்குகின்றனர். பேராசிரியரும் நச்சரும் நற்றிணையின் பாடல்களைச் சான்று காட்டுகையில் ஒரு சில பாடல்களை ஒன்றுக்கும் மேற்பட்ட யாப்பின் கூறுகளுக்குச் சான்றுகாட்டுகின்றனர். இவை இவர்களது உரை நுட்பத்தைக் காட்டுவனவாக அமைகின்றன.

யாப்பிலக்கண உரைகளில் காலத்தினால் முந்தைய உரையான யாப்பருங்கல விருத்தியுரை, யாப்பருங்கலக் காரிகையின் குணசாகரர் உரை ஆகியவற்றில் நற்றிணையின் பாடல்கள் மேற்கோளாகச் சுட்டப்படவில்லை. இது கட்டுரையின் வழி கண்டடைந்த முடிபாகும்.

துணைநூற் பட்டியல்

[1] அகத்தியலிங்கம், ச., ஞானமூர்த்தி, தா.ஏ., சண்முகம், செ.வை., கருணாகரன், கி. (ப-ர்), ***பதினைந்தாவது கருத்தரங்கு ஆய்வுக்கோவை, தொகுதி - 2,*** இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம், அண்ணாமலை நகர், சிதம்பரம், 1983.

[2] கந்தசாமி, சோ.ந., ***தமிழ் யாப்பியலின் தோற்றமும் வளர்ச்சியும், முதற்பாகம் – முதற்தொகுதி,*** தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1989.

[3] தமிழண்ணல், ***சங்க இலக்கிய ஒப்பீடு - சங்க இலக்கியக் கொள்கைகள்,*** மீனாட்சி புத்தக நிலையம், மதுரை, 1975.

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

[4] தொல்காப்பியர், ***தொல்காப்பியம், செய்யுளியல் உரைவளம்,*** ஆ.சிவலிங்கனார் (தொகுப்பாசிரியர்), உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, முதற்பதிப்பு 1998.

[5] நாராயணசாமி ஐயர், பின்னத்தூர் அ. (உரையாசிரியர்), ***எட்டுத்தொகையில் ஒன்றாகிய நற்றிணை***, சைவவித்தியா நுபாலனயந்திரசாலையில் அச்சிற் பதிப்பிக்கப்பட்டது, சென்னபட்டணம், 1915.

[6] நாராயணசாமி ஐயர், பின்னத்தூர் அ. (உரையாசிரியர்), ***எட்டுத்தொகையில் ஒன்றாகிய நற்றிணை நானூறு மூலமும் - உரையும்***, முதற்பதிப்பு (கழகவழி), சைவ சிந்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1952.

[7] வெள்ளைவாரணன்,க., தொல்காப்பியம் செய்யுளியல் உரைவளம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், முதல் பதிப்பு, 1989.

[8] வேங்கடராமன் வித்துவான் H. (ப.ஆ), ***நற்றிணை மூலமும் உரையும்***, மகாமகோபாத்தியாய டாக்டர் உ.வே.சாமிநாதையர் நூல்நிலையம், சென்னை, 1997.

[9] வையாபுரிப்பிள்ளை, எஸ்., ***இலக்கியச் சிந்தனைகள்***, இன்ஸ்டிடியூட் ஆப் சவுத் இண்டியன் ஸ்டடீஸ், இரண்டாம் பதிப்பு, சென்னை, 1992 .

[10] வையாபுரிப்பிள்ளை, எஸ். (தொகுப்பும் பதிப்பும்), ***சங்க இலக்கியம் (பாட்டும் தொகையும்),*** பாரி நிலையம், சென்னை, 1967.

தமிழில் இக்கட்டுரையை இவ்வாறு மேற்கோளிடுங்கள்:

திருஞானசம்பந்தம். "நற்றிணை யாப்பு: உரைகாரர் நோக்கு." *தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்,* தொகுதி 3, *சிற.இதழ்* 2, தொகுதி 2, *திசம்பர்* 2020, பக். 201-211. டிஒஐ: **10.38067/ijtlls.2020.spl.v03i02v2.031**

Cite this Article in English (*MLA 8 Style*) as:

Thirugnanasammandam. "Prosody of "Natrinai": Commentators' View." *International Journal of Tamil Language and Literary Studies*, Vol. 3: Special Issue - 2, Vol. 2, December 2020, pp. 201-211. DOI: **10.38067/ijtlls.2020.spl.v03i02v2.031**

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி /Author Contribution Statement: இல்லை /NIL

கட்டுரையாளர் நன்றியுரை /Author Acknowledgement: இல்லை /NIL

கட்டுரையாளர் உறுதிமொழி/Author Declaration: இல்லை /NIL

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் அரையாண்டு பன்னாட்டு ஆய்விதழ்

International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

ஒப்பீட்டு நோக்கில் தொல்காப்பிய உரையாசிரியர்களின் அகத்திணைக் கோட்பாடு

A Comparative Perspective of External Life Theorization of the Derivative Writers of "Tholkappiam"

சி. திலகவதி, முனைவர்ப் பட்ட ஆய்வாளர், இலக்கியத்துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்-10
C. Thilagavathy, Research Scholar, Department of Literature, Tamil University, Thanjavur-10
https://orcid.org/0000-0002-3689-4582

முனைவர் ஜெ.தேவி, பேராசிரியர், இலக்கியத்துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்-10
Dr. J. Devi, Professor, Department of Literature, Tamil University, Thanjavur-10
https://orcid.org/0000-0003-1354-6718

DOI: 10.38067/ijtlls.2020.spl.v03i02v2.032

Abstract

"Tolkappiyam" is the oldest available Tamil Grammar treatise in the world. In its third chapter, it explains minute details about the theory of Akam and Puram Poetry. The first section of 'Porulathikaram' is called 'Agathinaiyiyal'. It deals with various features of Akam Poetry. Ilampooranar and Naccinarkkiniyar differ in perspectives in their respective commentaries regarding the theory of Akam Poetry. This Article explains in detail about the differences in the selected ideology.

Keywords: "Tolkappiyam", Agathinaiyiyal, Commentators, Theory of Akam Poetry

முன்னுரை

சங்க இலக்கியம் தமிழின் தொன்மையான இலக்கியமாகக் கருதப்படுகிறது. இதில் உள்ள எட்டுத்தொகையையும் பத்துப்பாட்டையும் அகம், புறம் என்ற இருவகைத் திணைகளாகப் பிரிப்பர். தொல்காப்பியர் பொருளதிகாரத்தில் அகத்திணையியல் என்னும் இயலையே முதலில் விளக்கியுள்ளார். அவ்வகத்திணையியல் அகத்திணைக் கோட்பாட்டைக் கூறுகிறது. அக இலக்கியங்களில் நிலம், பொழுது ஆகிய முதற்பொருள் பற்றியும் கருப்பொருள் பற்றியும் உரிப்பொருள் பற்றியும் திணைக்கோட்பாட்டு முறைகளாகத் தொல்காப்பியர் விளக்கியுள்ளார்.

திணை என்பது ஒழுக்கம். தொல்காப்பியம் அகத்திணை ஏழு என்றும் புறத்திணை ஏழு என்றும் வகுத்துள்ளது. அகத்திணை உரையில் உரையாசிரியர்களான இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் அகத்திணைக் கோட்பாடு பற்றி வேறுவேறு கருத்துகளைக் கொண்டிருந்தனர் என்பது புலனாகிறது. இக்கட்டுரை அவ்விரு உரையாசிரியர்களிடையே காணப்படும் அகத்திணைக் கோட்பாடுகளை ஒப்பீடு செய்கிறது.

முப்பொருள் கோட்பாட்டு வேற்றுமை

முதல்கரு உரிப்பொருள் என்ற மூன்றே
நுவலுங் காலை முறைசிறந்தனவே
பாடலுள் பயின்றவை நாடுங்காலை (தொல்.அகத்.3)

முதல் கரு உரிபொருள்கள் மூன்றும் ஐந்து திணைகளிலும் அடங்கும் என்று குறிப்பிட்டுள்ளார். இந்நூற்பாவிர்கான உரையில் உரையாசிரியர்களான இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் எவ்வாறு வேறுபடுகின்றனர் என்பதைப் பின்வருமாறு காணலாம்.

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

ஒரு செய்யுளில் முதற்பொருளும் கருப்பொருளும் வந்தால் முதற்பொருளால் திணையாகும் என்றும் கருப்பொருளும் உரிப்பொருளும் வந்தால் கருப்பொருளால் திணையாகும் என்றும் உரிப்பொருள் மட்டும் தானேவரின் உரிப்பொருளால் திணையாகும் என்றும் இளம்பூரணர் குறிப்பிடுகின்றார் .

முதற்பொருளும் கருப்பொருளும் வந்தால் அவை கருப்பொருளால் திணையாகும் என்றும் கருப்பொருளும் உரிப்பொருளும் வந்தால் கருப்பொருளால் திணையாகும் என்றும் உரிப்பொருள் வந்தால் உரிப்பொருளால் திணையாகும் என்றும் நச்சினார்க்கினியர் குறிப்பிடுகின்றார்.

ஒரு செய்யுளில் முதற்பொருளும் கருப்பொருளும் வந்தால் முதற்பொருளைத் திணையாக இளம்பூரணரும் முதற்பொருளும் கருப்பொருளும் வந்தால் கருப்பொருளைத் திணையாக நச்சினார்க்கினியரும் கருப்பொருளும் உரிப்பொருளும் வந்தால் கருப்பொருளைத் திணையாக இளம்பூரணரும் கருப்பொருளும் உரிப்பொருளும் வந்தால் உரிப்பொருளைத் திணையாக இரு உரையாசிரியர்களும் குறிப்பிடுவதினை நாம் அறியமுடிகிறது. இந்நிலையில் முப்பொருள் பாகுபாட்டின் செய்யுளின் திணையை வரையறுப்பதில் இவர்களிடையே கோட்பாட்டு நிலையில் வேறுபாடு உள்ளமையை அறியமுடிகிறது.

மருதத்திற்குரிய சிறுபொழுது

வைகறை விடியல் மருதம் (தொல்.அகத்.9)

மருதத்திற்குரிய சிறுபொழுதினைப் பற்றி ஒரு நூற்பாவில் மேற்கண்டவாறு தொல்காப்பியம் விளக்குகிறது. அந் நூற்பாவினை இளம்பூரணர் ஒரு விதமாகவும் நச்சினார்க்கினியர் வேறொரு விதமாகவும் பொருள் கொண்டுள்ளனர்.

உரையாசிரியர்களான இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் மருதத்திற்குரிய சிறுபொழுதாக வைகறைப் பொழுதையும் விடியலையும் குறிப்பிட்டுள்ளார்கள். ஆனால், நூற்பாவில் கூறும்பொழுது இளம்பூரணர் வைகறை விடியல் என்றும் நச்சினார்க்கினியர் வைகுறு விடியல் என்றும் வேறுபடுத்திக் காட்டியுள்ளார். இங்கு உரையாசிரியர்களிடையே மூலபாட வேற்றுமை காணப்படுகிறது.

இருவகைப் பிரிவு

இருவகைப் பிரிவும் நிலைபெற தோன்றலும்

உரியதாகும் என்மனார் புலவர் (தொல்.அகத்.13)

இருவகைப் பிரிவைத் தொல்காப்பியர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். இருவேறு பிரிவைப் பற்றி இரு உரையாசிரியர்களின் கருத்துக்கள் பின்வருமாறு,

இருவகைப் பிரிவான தலைமகளைப் பிரிதலும் தலைமகளை உடன் கொண்டு தமர்வரை பிரிதலும் நிலைபெறத் தோன்றலும் உரியதாகும் என்று இளம்பூரணர் குறிப்பிடுகின்றார்.

இருவகைப் பிரிவான காலினாற் பிரிதல் நான்கு வருணத்தார்க்கும் உரியது என்றும்,கலத்தில் பிரிதல் வேளாளர்க்கு மட்டும் உரியது என்றும் நச்சினார்க்கினியர் குறிப்பிடுகிறார்.

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

இருவகைப் பிரிவாகத் தலைமகளை விட்டுவிட்டுத் தனியே செல்லுதல் தலைமகளைத் தன்னுடன் அழைத்துக்கொண்டு செல்லுதல் என்று இளம்பூரணரும் காலினால் நடந்து செல்லுதல் அரசர், அந்தணர்,வணிகர்,வேளாளர் ஆகிய நான்கு வருணத்தார்க்கும் உரியது என்றும் கலத்தில் செல்லுதல் வேளாளர்க்கு மட்டும் உரியது என்றும் நச்சினார்க்கினியர் குறிப்பிடுவதை அறியமுடிகிறது. நச்சினார்க்கினியர் இருவகைப் பிரிவு என்பதற்குக் காலில் பிரிதல்,கலத்திற் பிரிதல் என்று பொருள் கொள்கிறார்.

உரிப்பொருள் இல்லாதவை பற்றிய வேறுபாடு

உரிப்பொருள் அல்லன மயங்கவும் பெறுமே (தொல்.அகத்.15)

என்பது தொல்காப்பிய நூற்பா. உரிப்பொருள் அல்லாத பிற அனைத்தும் மயங்கும் எனத் தொல்காப்பியர் குறிப்பிடுகிறார். உரையாசிரியர்களான இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் எவ்வாறு வேறுபடுகின்றனர் என்பதை நாம் பின்வருமாறு காணலாம்.

உரிப்பொருள் அல்லாத முதற்பொருளும் கருப்பொருளும் மற்றொரு திணையோடு மயங்கி வரும் என்று இளம்பூரணரும்

உரிப்பொருளென்று சொல்லபடுகின்ற ஐந்திணையும் அல்லாத கைக்கிளையும், பெருந்திணையும் நால்வகை நிலத்தும் மயங்கி வரும் என்று நச்சினார்க்கினியரும் குறிப்பிடுகின்றனர்.

உரிப்பொருள் அல்லாத முதற்பொருளும்,கருப்பொருளும் மற்ற திணைகளோடு மயங்கி வரும் என்று இளம்பூரணரும், உரிப்பொருள் என்று சொல்லப்படுகின்ற குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்ற திணைகள் அல்லாத கைக்கிளையும் பெருந்திணையும் நால்வகை நிலத்தும் மயங்கப் பெறும் என்று நச்சினார்க்கினியரும் குறிப்பிட்டுள்ளார்கள்.

கருப்பொருள் வேறுபாடு

தெய்வம் உணவே மாமரம் புள்பறை
செய்தி யாழின் பகுதியோடு தொகைஇ
அன்னவை பிறவும் கருவென மொழிப (தொல்.அகத்.-10)

தொல்காப்பியர் உணவு, விலங்கு, மரம், பறவை, பறை, தொழில், பண் என்ற ஏழினையும் கருப்பொருளாகக் குறிப்பிடுகிறார். இவை போன்று பிறவும் கருப்பொருளாக வரும் என்று சுட்டியுள்ளார். பிறவற்றைப் பற்றிக் குறிப்பிடும் உரையாசிரியர்களிடம் வேறுபாடு காணப்படுகிறது.

இளம்பூரணர் உணவு, விலங்கு, மரம், பறவை, பறை, தொழில், பண் என்ற ஏழோடு சேர்த்து பூவான முல்லையும், பிடவும், தளவும் நீரினைக் கான்யாறு என்றும் குறிப்பிடுகின்றார். இவற்றை ஒவ்வொரு திணைக்கும் குறிப்பிட்டுள்ளார். இளம்பூரணர் பூ மற்றும் நீர் ஆகியவற்றைப் பிறவற்றில் குறிப்பிட்டுள்ளார்.

நச்சினார்க்கினியர் உணவு, விலங்கு, மரம், பறவை, பறை, தொழில், பண் என்ற ஏழோடும் சேர்த்து பூ, நீர், ஊர் என்ற பத்தினையும் குறிப்பிடுகின்றார். பிறவுமென்றதனால் பூ முல்லையும் பிடவும் தளவும் தோன்றியும் நீர் கான்யாறு ஊர் பாடியும் சேரியும் பள்ளியும் என்பது அவர் உரையாகும்.

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

கருப்பொருள்களைத் தொல்காப்பியர் ஏழாகவும் இளம்பூரணர் பூ, நீர் ஆகிய இரண்டையும் சேர்த்து ஒன்பது கருப்பொருளாகவும் நச்சினார்க்கினியர் பூ, நீர், ஊர் ஆகிய மூன்றையும் சேர்த்து பத்தாகவும் குறிப்பிடுகின்றார்கள். இவ்வாறு உரையாசிரியர்கள் கருப்பொருள்களை வேறுபடுத்திக் காட்டியுள்ளதை அறியமுடிகிறது.

பொருள்வயிற்பிரிதல்

பொருள் வயிற் பிரிதலும் அவர்வயின் உரித்தே (தொல். அகத். 35)

மேற்கண்ட பொருள் வயிற்பிரிதல் என்னும் நூற்பாவில் உரையாசிரியர்களின் கருத்துக்களையும் காணலாம். பொருள் வயின் பிரிதல் வணிகர் வேளாளர் ஆகிய இருவருக்கும் உரியது என்றும், *“உயர்ந்தோர் பொருள்வயின் ஒழுக்கத்தான“* (தொல். அகத்- 36) உயர்ந்தோராகிய அந்தணர்க்கு மட்டும் உரியதாகும் என்றும் இளம்பூரணர் குறிப்பிடுகின்றார். இவர் இந்த இரண்டு அடிகளையும் இளம்பூரணர் இரண்டு நூற்பாக்களாகக் கொண்டார். ஆனால், நச்சினார்க்கினியர் இரண்டையும் சேர்த்து ஒரு நூற்பாவாகவே கொண்டு அது குறுநில மன்னர்களைக் குறிப்பதாக உரை கண்டுள்ளார்.

இளம்பூரணர் பொருள்வயின் பிரிதலை வணிகர், வேளாளர் ஆகிய இருவருக்கும் உரியது என்றும் நச்சினார்க்கினியர் குறுநில மன்னர்களுக்கு மட்டும் உரியது என்றும் குறிப்பிடுகின்றார். மேலும், இளம்பூரணர் மற்றொரு நூற்பாவான உயர்ந்தோர் பொருள்வயின் ஒழுக்கத்தான என்ற நூற்பாவில் உயர்ந்தோராகிய அந்தணர்க்கு மட்டும் உரியது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

முன்னைய நான்கு

முன்னைய நான்கும் முன்னதற்கு என்ப (தொல்.அகத்.55)

மேற்கண்ட நூற்பாவிற்கு இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் நான்கு என்பதை எவ்வாறு வேறுபடுத்திள்ளனர் என்பதைக் காணலாம். இளம்பூரணர் ஏறாமடற்றிறம், இளமை தீராத்திறம், தேறுதல் ஒழிந்த காமத்து மிகாத்திறம், மிக்ககாமத்தின் மாறாகாத்திறம் என்று நான்கினைக் குறிப்பிடுகின்றார். இயற்கைப் புணர்ச்சிக்கு முன்னிகழ்ந்த காட்சியும் ஐயமும், தெரிதலும், தேறலும் என்ற குறிப்பு நான்கும் நற்காமத்துக்கு இன்றியமையாதது என்று நச்சினார்க்கினியர் நான்கிற்கு விளக்கம் தருகிறார். ஏறா மடற்றிறம், இளமை தீராத்திறம், தேறுதல் ஒழிந்த காமத்து மிகாத்திறம், மிக்க காமத்தின் மறாகாத்திறம் என்று இளம்பூரணரும் காட்சி, ஐயம், தெரிதல், தேறுதல் என்று நச்சினார்க்கினியரும் வேறுபடுத்தி ஆராய்ந்துள்ளதை அறியமுடிகிறது.

முடிவுரை

தொல்காப்பியத்தின் அகத்திணையியலில் முதல், கரு, உரிப்பொருள்கள் மருதத்திற்குரிய சிறுபொழுதுகள், இருவகைப் பிரிவுகள், திணைமயக்கம், கருப்பொருள்கள், பொருள்வயிற் பிரிதல் ஆகியவற்றில் இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் கோட்பாட்டுநிலையில் எவ்வாறு வேறுபட்டுள்ளனர் என்பதை இக்கட்டுரை விளக்கியுள்ளது.

E-ISSN: 2581-7140 **UGC CARE Listed Journal**
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 **Available at:** www.ijtlls.com

பார்வை நூல்கள்

[1] தொல்காப்பியம் பொருளதிகாரம் [உரைவளம்] அகத்திணையியல், உலகத் தமிழராய்ச்சி நிறுவனம் , சென்னை -13, 2015

[2] தொல்காப்பியம் பொருளதிகாரம்,இளம்பூரணர் [உ] சாரதா பதிப்பகம்,சென்னை -14, 2018

வாழ்வியல் களஞ்சியம், தமிழ்ப்பல்கலைக்கழக வெளியீடு, தஞ்சாவூர்

தமிழில் இக்கட்டுரையை இவ்வாறு மேற்கோளிடுங்கள்:

திலகவதி & தேவி**. "ஒப்பீட்டு நோக்கில் தொல்காப்பிய உரையாசிரியர்களின் அகத்திணைக் கோட்பாடு."** *தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்,* தொகுதி 3, சிற.இதழ் 2, தொகுதி 2, *திசம்பர்* 2020, பக். 212-216. டிஒஐ: **10.38067/ijtlls.2020.spl.v03i02v2.032**

Cite this Article in English (*MLA 8 Style*) as:

Thilagavathy & Devi**. "A Comparative Perspective of External Life Theorization of the Derivative Writers of "Tholkappiam"."** *International Journal of Tamil Language and Literary Studies,* Vol. 3: Special Issue - 2, Vol. 2, December 2020, pp. 212-216. DOI: **10.38067/ijtlls.2020.spl.v03i02v2.032**

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி /Author Contribution Statement: இல்லை /NIL

கட்டுரையாளர் நன்றியுரை /Author Acknowledgement: இல்லை /NIL

கட்டுரையாளர் உறுதிமொழி/Author Declaration: இல்லை /NIL

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் அரையாண்டு பன்னாட்டு ஆய்விதழ்

International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

தமிழ் பொருளிலக்கண உரைகள் குறிப்பிடும் உடன்போக்கு
Lovers Leaving Home Tamil Semantic Texts

முனைவர் கோ.தேவிபூமா, உதவிப்பேராசிரியர், தமிழ்உயராய்வு மையம், மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி, மதுரை.
Dr.K.Devibooma, Assistant Professor, Department in Tamil, Tamil Research Center, Mannar Thirumalai Naicker College, Madurai.
ORCiD: https://orcid.org/0000-0001-5708-1890
DOI: 10.38067/ijtlls.2020.spl.v03i02v2.033

Abstract

"Tolkappiyam" is a unique grammar and social book that teaches human life in an ethical manner. The sweetest journey of love is human life. The leader agrees to leave the house with love and start their life together. Leaving the house is a pleasant act evinced in "Tolkappiyam". Tamil people lived a meaningful life in the Sangam Age. Love is the considered an important part in the life of the youth. So, there are lots af evidences in the classical texts, especially in "Tholkappiam". Hence, this article decodes the relevant theme.

Keyword: Tolkappiyam, Unique Grammar, Ethical Life, Leaving the house

தமிழ்ச் சமூகத்தின் ஒப்பற்ற வாழ்வியலுக்கான இலக்கணத்தை எடுத்தியம்புகிறது பொருளதிகாரம். அற்றைநாட் காதல் வாழ்வு கைகூடிய விதத்தை சற்றும் கொச்சைப்படுத்தாமல் இனிமையாகச் செவிக்கு இனிமைப்பயக்கும் தன்மையில் பதிவு செய்துள்ளன இலக்கண நூல்கள். அத்தன்மையில் தலைவியின் பெற்றோர் சம்மதத்துடன் தலைவியை மணந்துகொள்ள முடியாதபோது, தலைவன் அவளைப் பெற்றோரிடமிருந்து பிரித்துத் தன்னுடன் அழைத்துச் செல்லுதல் உடன்போக்கு எனப்படும். உடன்போக்கில் தமிழ்நெறிவிளக்கத்தில் 16 துறைகளும், நம்பியகப்பொருள், மாறனகப்பொருள், இலக்கணவிளக்கத்;தில் 18 துறைகளும், களவியல்காரிகையில் 27 துறைகளும், முத்துவீரியத்தில் 57 துறைகளும், சுவாமிநாதத்தில் 19 துறைகளும் அமைந்துள்ளன இவற்றில், ஏழு நூல்களில் 3 துறைகளும், ஐந்து நூல்களில் 10 துறைகளும், நான்கு நூல்களில் 5 துறைகளும், மூன்று நூல்களில் 3 துறைகளும், இரண்டு நூல்களில் 17 துறைகளும், ஒரு நூலில் 36 துறைகளும் பொருத்தமுற வருகின்றன. தலைவன் தலைவி முதற்சந்திப்பு நிகழ்ந்தபின்பு பல்வேறு படிநிலைகள் நிகழ்கின்றது. அவற்றில் வரைதல் வேட்கைத் துறைகள், வரைவு முடுக்கம், வரைவுகடாதல், வரைவு கடாதரல், ஒருவழித் தணத்தல், வரைவு மலிதல், அறத்தொடு நிற்றல் ஆகியவற்றில் களவியல் வாழ்வு கற்பு வாழ்வாக நிறைவு பெறாத சூழலில் உடன்போக்கு நிகழ்கின்றது.

உடன்போக்கு

செவிலி முதலியோர், „தங்குல மகள் தனக்குரிய காதற்றலைவனைக் கூடிக் கற்புக்கடம்பூண்டாள்... என்று அறத்தொடு நிற்குமுறையில், பெற்றோர் அதனை உற்றுணர்ந்து, உரியவனுக்கே அவளை மணம்புரிய முயல்வராயின், அது பெரிதுஞ்சிறந்து

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

காட்டும், அங்஫னமன்றி வேறோர் அயலானுக்குத் தம்மகளை மணம் பேசினம், தலைவனைக் காணப்பெறாவண்ணம் அவளைக் கடுங்காவற்படுத்தினும் த்விக்கு ஆற்றாமை கைம்மிக்குத் துயரம் பெருகுதலால், „இனி இவள் இறந்துபடவுங் கூடும்… என்ற தோழி உணர்ந்து கவன்று, வேறு பாயமொன்றுத் தோன்றா நிலையில், பின்வருமாறு செய்வள். பண்டு தலைவன் பயின்ற குறியிடத்துக்கு அவள்சென்ற தலைவனை எதிர்ப்பட்டு அவனைத் தொழுது வலஞ்செய்து 'நும்மாற் றலைவிமாட்டுச் செய்யப்பட்டதலையளி (பேரன்பு), உண்மையாகவே பலரான் அறியப்பட்டதோடு, சுற்றத்தாரது சீற்றத்திற்கும் ஏதுவாயிற்று.

இவ்வாறு ஆகியது நீவிர் முன்னரே மணங்கொள் முயலாது களவொழுக்கத்தே கருத்துக் கொண்டொழுகியதாலன்றொ? அல்லதூஉம், ஏதிலமும் வரைந்தெய்தற்குப் பரிசமொடு புகுந்து பொன்னணிய முந்துற்றார்@ இனி என்செய்வோம்" என்று கூற, அதுகேட்ட தலைவன், „இந்நிழலையில் என்னாற் செயற்பாலது யாது?… என்று உசாவ, „நீரே சூழ்ந்து சொல்லுதிர்… என்றாள். என, தலைவனுஞ் சூழ்ந்து „ஆயின், காதலியை என் ஊர்க்கே உடன்கொண்டுபோக வலித்தேன்ரீ இச்செய்தியை அவட்கு உணர்த்தி உரியவற்றை விரைந்துசெய்க… என்றான். அது கேட்ட தோழி மகிழ்வுற்று, „நன்று எம்பெருமான் அருளிச்செய்த, அவட்கு இச்செய்தியுணர்த்தி விரைந்து கொணர்வேன்… என்று கூறிப்போந்து, தலைமகள்பாற்சென்று, 'எம் பெருமாட்டி தலைவர் நின்னைத் தம்மூர்க்கு உடன் கொண்ட செல்லக் கருதுகின்றார். இஃதறிந்தேன் நின்குறிப்பென்னையோ" என்று உசாவினள். அதுகேட்ட தலைவி,

உயிரினுஞ் சிறந்தன்று நாணே நாணினுஞ் -
செயிர்தீர் கட்சிக் கற்புச் சிறந்தன்று"

என்றவாறு. நாணழியவரினுந் தன்கற்பைக் கைவிடாமை துணிந்து தலைவனது உடன் போக்கிற்குத்தானும் மனநேர்ந்த குறிப்பை வெளிப்படுத்தினாள். இங்஫னந் தலைவி உடன்பட்டதும், அவள் வெளியேறுதற்கு வேண்டுவன புரிந்து முன்பு இரவுக்குறியிற் போல ஒருவரும் அறியாவகை தோழி அவளைக் குறியிடத்தும் கொண்டுசென்று தலைமகன்பாற் சேர்த்து, அவனை நோக்கி, 'கொங்கை தளரினுங் கூந்தல் நரைப்பினும், ஏந்தல்“கொங்கை தளரினுங் கூந்தல் ந்ரைப்பினும், ஏந்தல், மற்றிவ் - வங்கை அடைக்கலம் என்றே கருதி 'அருளக் கண்டாய்" என்று தன் ஆற்றாமையும் இரக்கமுந் தோன்ற 'ஓம்படை" (அடைக்கலம்) கூறி (தொல்.களவு.24). அவர்களை வாழ்விடுத்துப் பிரிவாளாயினள். இஃது உடன்போக்கு வரலாறாமென்று உணர்க. இங்஫னம் தலைவி உடன்செல்லத் துணிந்ததற்கு ஏது, தான் இல்லறத்தினின்று நல்லறஞ் செய்ய முடியாமையால், அடுத்தடுத்துத் தலைவன் பிரிதலால் வருத்தமிகுதி நிகழ்தலாலும்ரீ அம்பலும் அலரும் பரந்து துன்பம் விளைத்தலாறும், தாய் முதலியோர் அயிர்த்தலால் தலைவனைக் குறியிடத்துக் கூடுதல் தடைப்படலாலும், இவையெல்லாம் நீங்கித் தலைவனுடன் இணைபிரியாச் சேர்க்கையைத் தலைவி விரும்புதலே எனக் கூறுவர்.

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

இவ்வாறு ஒருவரும் அறியாவண்ணம் காதற்றலைவனுடன் தலைவி செல்லாநிற்கப் பிற்றைஞான்று வெளிப்பட்ட மகள் செய்தி கேட்டறிந்த சுற்றத்தார் தலைவன் செயற்கு மிக வெகுண்டு அவ்விருவர் செலவையுந் தடுத்தற்பொருட்டுத் திரண்டு விரைந்தெழுவர், இவரறிந்தெழுவதற்கு முன்பே திரண்டு விரைந்தெழுவர். இவரறிந்தெழுவதற் முன்பே, செவிலி கேட்டு மயங்கிக் கவலைமேற்கொண்டு, தலைவன் தலைவியர் சென்ற இடைச்சுரத்தை நோக்கித் தேடிப்போந்து வழயில் எதிர்ப்பட்ட முக்கோலந்தணரையும் மற்றவரையும் உசாவி அவரால் அவ்விருவரும் அகமகிழ்ந்து வழிச்சேறலையும் அவ்விருவரும் அறநெறி யினிற்றலையும் அறிந்து ஆற்றாமையால் மேற்சொல்லவியலாது மீண்டு வருவள். ஆனால், தலைவியைப் பெற்ற நற்றாய், இவள்போல நெடுந்தூரஞ் செல்லாளாயினும், தம்மூர்த் தெருவரையுந் தேடுதற்குரியள் எனப்படுகின்றது. இங்கிவ்வாறாக, தலைவன் தலைவியை உடன்கொண்டு செல்லும்போது, இடைவழியிற் சுற்றத்தார் திரண்டுவந்து தலைவனை மேற்செல்லாவண்ணந் தடுத்;துநிற்க. அப்போது தலைவி, அவர் செயற்கு மனமொவ்வாது தன் காதலனைச் சார்ந்து கற்பொடு புணர்ந்து நிற்பது கண்டு. இவள் செய்கை அறநெறிப்பட்டதாதலால் நாம் இதற்கு இடையூறுவிளைத்தல் கூடாதென்றம், விளைப்பினுந் தலைமகன் எடுத்துக் கொண்ட வினைமுடித்தல் ஒருதலையென்றும் கருதி, அவருடன் போக்கிற்கு உடன்பட்டுத் தம்மூர் நோக்கி மீள்வர், இதனை

இடைச்சுர மருங்கினவள் தமரெய்திக்
கடைக்கொண்டு பெயர்த்தலிற் கலங்கஞ் ரெய்திக்
கற்பொடு புணர்ந்த கௌவை

என்பர் ஆசிரியர். (தொல்.அகம் 41). அங்ஙனம் அவர் மீண்டதும், தலைவின் தலைவன் „நாம்இவ்வாறு உடன்போவது, நம்மிருவர் மட்டுமன்றிப் பழமையாக வழங்கும் உலகியலாம்... என்று தலைவன் அவளைத் தெருட்டியம் வழியிளைப்புத்தீர மருட்டியும் உடனழைத்துச ;சென்று தன் பதி சேர்வதெனை உணர்க. இவ்வாறு களவுப்புணர்ச்சிக்குரிய த்வியைத் தலைவன் உடன் கொண்டுசேறல் பண்டைத் தமிழ்வழக்காதலோடு, அது அறநெறியாவும் கருதப்பட்டுவந்த தென்பது,

சுரநனி இனிய வாகுக தில்ல
அறநெறி யிதுவெனத்தெளிந்தவென்
பிறைநுதற் குறுமகள் போகிய சுரனே

என்றும்

இறந்த கற்பினாட் கெவ்வம் படரன்மின்
சிறந்தானை வழிபடீஇச் சென்றனள்
அறந்தலைப் பிரிய ஆறுமற் றதுவே

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

என்னுங் சான்றோர் கூற்றுக்கள் உணர்க. இவ்வுடன் போக்கைக் 'கொண்டு தலைக்கழிதல்" எனவங் கூறுவர் (தொல்.அகம்.14). இதுகாறுங் கூறியவற்றால், தோழியிற் கூட்டம் என்ற பகுதி ஏனையவற்றினும் பல பிரிவுடையதாக முன்னோரால் மொழியப்பட்டுள்ளமை வெளியாகும். மேற்குறித்த பாங்கில் மதியுடம்பாடு முதல் உடன்போக்கு ஈறாக உள்ளவற்றையே. நம்பியகப்பொருள் முதலிய இலக்கணங்களும், சிற்சில பகுப்புகளைக் கொண்டும் தம் காலச்சூழலில் வழங்கப்பட்ட வேறு வேறு கிளவிகள் அமைத்து விரித்துக் கூறுவன. அன்றியும் அவை ஆசிரியர் கூறியவற்றினுங் சில கூட்டியுங் குறைத்தும் மாறறியும் மொhழிவனவாம். ஆயினம், தொல்காப்பியனார் கூறிய முறையை நாம் நுணுகி ஆராயுமிடத்துத் தோழியின் கூட்டமென்பது மேற்கூறிய வரலாறுகளைக் குறிப்பிடுவதே என்பது புலப்படுகின்றது. இனி, இவ்வுடன்போக்கோடு களவொழுக்கம் முடிவுறுவதென்றும், மேல்வருஞ்செய்திகள் கற்பொழுக்கத்தின்பாற் படுமெனவும் உணர்க. என்னை? செய்யுளியலிற் கற்பென்னுங்கைகோளின் இலக்கணங் கூறப்புக்கவிடத்தே 'மறைவெளிப்படுதலும்" என உடன்போக்pற்குப் பின்னிகழும்மறை வெளிப்பாட்டைக் கற்புமுறையின் தொடக்கமாக ஆசிரியர் கூறுதலால் களவின் முடிவு என்பதை உணரமுடிகின்றது.

இக்களவுக் கூட்டம் இரண்டு மாதங்களுள்ளே முடிதற்குரியதென்று இறையனார் களவியல் கூறிய செய்திமுன்னரே குறிக்கப்பட்டு (இறை.களவு.32). அதுகூறிய சூத்திரத்தில் 'திங்களிரண்டினமகம்" என, இரண்டுமாத மாவதற்குச் சிலநாள் நிற்க, தலைவன் வருந்துகொள்வது நலமென்று கருதி யெழுதிய உரையாசிரியர் கொள்கைப்படி, இக்களவொழுக்க முடிந்து ஐம்பத்தாறாம்தாள் மணம் நிகழுமென்றும், இன்ன வின்ன செய்திகள் இன்னவின்ன நாட்காயினவென்றும், தஞ்சைவாணன் கோவை உரையாசிரியர் முதலியோர் வரையறை கூறுவர் (நூா:366 உரை). இப்பாகுபாடு காட்டுங் குறிப்பொன்றுந் தொல்காப்பியத்துக் காணப்பட்டிலது. இனிக் களவுக்கூடட்ங் கூடிவந்த தலைமகன் தான் காதலித்ததலைவியை மணந்துகொள்வதில் இரண்டு முறையுண்டுf அவை களவு „வெளிப்படுதற்குமுன் வரைதல் - களவு வெளிப்பட்டபின் வரைதல்… என்பன. (நூா:140). பிற்கூறிய பகுதியைச் சேர்ந்தனவே, முன்பு எழுதப்பட்டவை, களவு வெளியாவதற்குமுன் வரைதல் என்பது. பகற்குறி இரவுக்குறிகட்குப்பின், தோழியால் வரைவு கடாவப்பட்டு நிகழ்வதாம். இங்ஙனம் வரைதற்கண் தலைவிக்கு உடன் போக்கில்லை என்பது உணரத்தக்கது.

இந்நிகழ்ச்சியில், தலைவியை மணம்பேசி அவள் சுற்றத்தாரைத்தலைவன் வேண்ட, அவர் மிகுந்த பரிசங் கேட்குமிடத்து அப்பரிசத்தின்பொருட்டு அவன் வரைவிடைவைத்துப் பொருள் வயிற்பிரிந்தும், வேறு வினைமேற்கொண்டு (வேந்தர்க் குற்றுழி முதலியவைபற்றி) ஒருவழித் தணந்தும் சிலகாலம் நீங்கி உறைதலும் நிகழுமென்றும், ஆனால், இக்

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

களவொழுக்கத்திடையே ஓதல் தூது பகைகள் காரணமாகத் தலைவியைப் பிரிதல் கூடாதென்றும் கூறுவர் (நூ:141). மேற்கூறியவாறு ‘வரைவிடை வைத்துப் பொருள்வயிற்” பிரியும் பிரிவொன்று கூறப்படுதலின், விவாகத்தில் மகள் பொருட்டுப் பரிசம் வாங்கும் வழக்கம் தமிழ்நாட்டார்க்குள் முன்னாளில் பரிசம் வாங்கும் வழக்கம் தமிழ்நட்டார்க்குள் முன்னாளில் இருந்தமை புலப்படும், ‘பொருளென மொழியினம்” என்ற கூத்தரமுங் காண் (நூ:214). இவ்வழக்கம் வைச்சாதியார் பலரிடத்து இன்றும ;உள்ளதேயாம். ஆசிரியர்க்குள் கன்னியாகற்கம் பெறுதல் பண்டைக்காலத் தில்ல என்றும், சூத்திரரும் பெண்ணுக்கு அது வாங்குதல் தகாதென்றும மனுகூறுவர் (த.அகம்.9f 98, 100). இவ் வரைவின் பொருட்டுப் பிரிதலை முன்னூல்களும் பின்னூல்களும் விரித்துக் கூறுகின்றன. இங்ஙனமாக இயற்கைப் புணர்ச்சிமுதல் தோழியாலாய கூட்டம் முடியவுள்ள பொருட்பகுதியே அகத்திணையுட் பெரிதுஞ் சிறந்ததாம் எனபதை உணரமுடிகினறது. மேலும் பிற இலக்கணநூல்கள் குறிப்பிடும் துறைகளைப் பார்ப்போம்;

‘கையடை”, ‘பாங்கி கையடை கொடுத்தல்”, ‘கையடை கொடுத்தல்”, ‘ஓம்படுத்துரைத்தல்” ஆகிய துறைகள், தலைவனிடம் தோழி தலைவியை அடைக்கலப்படுத்திக் கூறல் என்னும் பொருளிலும், ‘மகிழ்ச்சி”, ‘சுரத்துய்த்தல்”, ‘அவன் சுரந்து உய்த்தல்”, ‘அரஞ்சுரத்து உய்த்தல்”, ‘பையக் கொண்டேகல்”, ‘அவன் சுரத்தின் உய்த்தல்” ஆகிய துறைகள், தலைவன் தலைவியைப் பாலை நிலத்தில் மெல்லக் கொண்டு செல்லுதல் என்னும் பொருளிலும், ‘கண்டோர் கூற்று”, ‘கண்டோர் அயிர்த்தல்”, ‘விருந்து விலக்கல்”, ‘நெறி நனி விலக்கல்”, ‘அதைக் கண்டோர் அயிர்த்தல்” ஆகிய துறைகள், சுரத்திடைத் தலைவனையும் தலைவியையும் கண்டோர் இவர் தேவரோ? மானிடரோ? என ஐயுறுதல் என்னும் பொருளிலும் எல்லா நூல்களிலும் ஒன்றிவருகின்றன.

முடிவுரை

உடன்போக்கு தலைவன் தலைவியின் இசைவின் அடிப்படையில் நிகழ்கின்றது. களவின் பல்வேறு படிநிலையில் கற்பு வாழ்வின் உச்சத்தை எட்டிப்பிடிக்க முயன்று தோற்ற நிலையில் தலைவன் தலைவிக்கு இருக்கும் ஒரே சாத்தியப்பாடு உடன்போக்கு ஆகும். உடன்போக்கு அறநிலைவழுவாமல் நிகழ்ந்து கற்பு வாழ்வினை அக்கால மக்கள் பண்பாட்டின் வழியாக கட்டமைத்துக்கொண்டனர் என்பது இவற்றின் வழி தெளிவுபெறமுடிகின்றது.

துணைநூற்பட்டியல்

[1] தொல்காப்பியம் -பொருளதிகாரம், இளம்பூரணர் உரை, திருநெல்வேலி தென்னிந்திய சைவ சிந்தாந்த நூற்பதிப்புக் கழகம், திருநெல்வேலி - 1972.

[2] தொல்காப்பியம் - பொருளதிகாரம், நச்சினார்க்கினியர் உரை, திருநெல்வேலி தென்னிந்திய சைவ சிந்தாந்த நூற்பதிப்புக் கழகம், திருநெல்வேலி -1972.

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

[3] சுப்பிரமணியன், ச.வே. தமிழ் இலக்கண நூல்கள், மெய்யப்பன் பதிப்பகம்,சென்னை – 2009.

[4] இறையனார் (நக்கீரர், உரை) இறையனாரகப்பொருள், திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற் பதிப்புக் கழகம், சென்னை – 1964.

தமிழில் இக்கட்டுரையை இவ்வாறு மேற்கோளிடுங்கள்:

தேவிபூமா. "தமிழ் பொருளிலக்கண உரைகள் குறிப்பிடும் உடன்போக்கு." *தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்,* தொகுதி 3, சிற.இதழ் 2, தொகுதி 2, *திசம்பர்* 2020, பக்.217-222. டிஓஐ: **10.38067/ijtlls.2020.spl.v03i02v2.033**

Cite this Article in English (*MLA 8 Style*) as:
Devibooma. "**Lovers Leaving Home Tamil Semantic Texts**." *International Journal of Tamil Language and Literary Studies,* Vol. 3: Special Issue - 2, Vol. 2, December 2020, pp.217-222. DOI: **10.38067/ijtlls.2020.spl.v03i02v2.033**

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி /Author Contribution Statement: இல்லை /NIL

கட்டுரையாளர் நன்றியுரை /Author Acknowledgement: இல்லை /Nil

கட்டுரையாளர் உறுதிமொழி/Author Declaration: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்./I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் அரையாண்டு பன்னாட்டு ஆய்விதழ்

International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

நன்னூலில் மயிலைநாதரின் உரை சிறப்பு

The Textual Excellence of Mayilainathar's "Nannool"

முனைவர். ய.நதியா, உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை (சுயநிதிப்பிரிவு), உருமு தனலெட்சுமி கல்லூரி. திருச்சி
Dr.P,Nathiya, Assistant Professor of Tamil, Department of Tamil, Urumu Dhanalashmi College, Trichy
ORCiD: https://orcid.org/0000-0001-5836-0365
DOI: 10.38067/ijtlls.2020.spl.v03i02v2.034

Abstract

This article contains the distinguished features of the classical Tamil work "Nannool". It is a book full of valuable insights on life and its noble ways to lead a good life. The secondary work delineated by Mayilainathar is exclusive for a novice to understand the original meaning of the original work "Nannool". The article highlights the prose written on the justification of the secondary source written by Mayilainathar. There are also so many references of other authors based on the prose written by Mayilainathar. The scope enlightens the specialization and value of the secondary source for today's students of Tamil Literature.

Keywords: Textual Excellence, Mayilainathar, "Nannool"

முன்னுரை

இடைக்காலத்தில் எழுந்த இலக்கண நூல்களில் மிகவும்சிறப்பு வாய்ந்தது. நன்னூல் ஆகும். பவணந்தி முனிவர் அருளிய நூல் இலக்கணம் கற்க விரும்புவோர் பவணிந்தியாரின் நன்னூலாகிய இந்நூலையே கற்கிறார்கள். தொல்காப்பியர் காலத்திற்கு பின் ஏறத்தாழ 4000 ஆண்டுகளில் தோன்றிய இலக்கியங்களை நுணுக்கமாக ஆராய்ந்து தமிழ் வளர்ச்சிக்கு பொருந்துமாறு இலக்கணம் அமைத்த பெருமை பவணந்தி முனிவரையே சாரும்.

இவ்வளவு காலத்திற்கு பிறகு தோன்றிய போதிலும் இதன் மேன்மையை சொற்களால் அளவிட்டு கூற இயலாது. தெளிவு, எளிமை, வரையறை நுட்பம், பாகுபாட்டின் சிறப்பு, ஆகிய அனைத்து அழகுகளையும் உடையது. இந்நூல் இவரது காலம் 13ம் நூற்றாண்டு, இவருக்கு 400 ஆண்டுகளுக்கு பின் தோன்றிய "வைத்திய நாத தேசிகர்" இதன் சிறப்பினைப் புகழ்ந்துள்ளார். தாம் இயற்றிய "இலக்கண விளக்கம்" என்னும் நூலில், நன்னூலிருந்து 250 சூத்திரங்களை எடுத்தமைத்துள்ளார். இது நன்னூலின் சிறப்பினை மட்டும் கூறாது, சூத்திர நயத்தினையும் உணர்த்துகின்றது.

உரைகளை எல்லாம் ஒதுக்கி வைத்து விட்டு, சூத்திரங்களை மட்டுமே படித்து கொண்டு போகும் போது, ஒப்பற்ற ஒரு காப்பியத்தில் நுழைந்து விட்டது போல் உணர்ச்சி தோன்றுகிறது. நன்னூல் தோன்றிய காலத்தில் மட்டுமின்றி இன்றுவரை இதற்கு இணையான இலக்கண நூல் இன்னும் தோன்றவில்லை என்றே கூறவேண்டும். இந்நூல் போன்று,மற்றொரு நூல் தோன்றுவதற்கு இன்னும் எத்தனை ஆண்டுகள் ஆகும், என்பது

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் அரையாண்டு பன்னாட்டு ஆய்விதழ்

International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

நமக்கு தெரியவில்லை. "இலக்கண கொத்து" பாடிய 'சுவாமிந்த தேசிகர்', அத்தகைய பெருமை மிகு நூலின் சிறப்பினை இக்கட்டுரையின் காணலாம்."

நன்னூலின் சிறப்புகள்

"முன்னோர்கள் ஒழியப்பின்னோர் பலரினுள் நன்னூலார் தமக்கு எந்நூலாரும் இணையோ என்னும் துணிவே மன்னுக" நன்னூலின் ஈடு இணையற்ற சிறப்பினை வியந்து போற்றுகிறார்.

"பல்கலைக்குரிசில் பவணந்தி" என நன்னூலுக்கு உரை செய்த "சங்கர நமச்சிவாயர்" இதன் சிறப்பினை எடுத்து உரைக்கிறார். பண்டைக்காலத்தில், சமண சமய துறவிகளில் "நந்தி" என அழைக்கப்பட்டவர். திருஞானசம்பந்தர், தேவாரத்தில், கனக நந்தியும், முக்கண் நந்தியும், பவண நந்தியும், குணக நந்தியும், திவண நந்தியும் எனக் குறிப்பிட்டு உள்ளார். பவணநந்தி எழுத்ததிகார நன்னூல் ஆசிரியர்,தொடக்கத்தில்,

பூமலி அசோகின் புணைநிழல் அமர்ந்த,
நான்கென் தொழுது நன்கு இயம்புவன் எழுத்தே

என்றும்,

சொல்லதிகார தொடக்கத்தில்,

முச்சகம் நிழற்றும் முழுமதி முக்குடை
அச்சுதன் அடிதொழுது அறைகுவன் சொல்லே

என்றும் 'அருகப் பெருமானை' வணங்குகிறார்.

அசோகு, முக்குடை ஆகியவை அருகப்பெருமானோடு தொடர்புடையவை. நான்முகன், அச்சுதன் என்பதும், அருகப் பெருமானைக் குறிப்பதாகும். ஆதலால், "பவணந்தி முனிவர்" சமண சமயத்தைச் சார்ந்தவர் ஆவார்.

"அமராபரணன்" என்னும் சிறப்புப் பெயர் பெற்ற "சீயகங்கன்" என்னும் சீயங்கன் மிகவும் விரிவாக இருக்கும் தொல்காப்பியத்தைச் சுருக்கி தருமாறு பவணந்தி முனிவரை வேண்டிக் கொண்டான். அவ்வாறு பவணந்தியாரும் இயற்றினார் என்பர்.

நன்னூலின் பதிப்புகள்

எழுத்ததிகாரம்,சொல்லதிகாரம்,ஐந்து, ஐந்து இயல்களை உடையன. சூத்திரங்களின் மொத்த எண்ணிக்கை 407 ஆகும்.

எழுத்ததிகாரம்

எழுத்தியல்	-	72
பதவியல்	-	23
உயிரீற்றுப்புணரியல்	-	53
மெய்யற்றுப்புணரியல	-	36
உருபுபுணரியல்	-	18

E-ISSN: 2581-7140
UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020
Available at: www.ijtlls.com

சொல்லதிகாரம்:

பெயரியல்	-	62
வினையியல்	-	32
பொதுவியல்	-	68
இடையியல்	-	22
உரியியல்	-	21
ஆக மொத்தம்	-	407

சூத்திரங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளளது.

பவணந்தி முனிவரின் வரலாற்று பின்புலக் கருத்துக்கள்:

"கங்க குரிசில் உவக்க நன்னூலை
கணிந்து புகல் துங்க புலமை பவணந்தி
மாமுனிவர் தோன்றி வளர்
கொங்கு குருமுதணில் ஆதிநாதர் குரு விளங்கும்
வங்கிற் பொழில் சணகாபுரம் எங்கும் கொங்குமண்டலமே"

பவணந்தியின் ஊர் கொங்கு நாட்டினை சார்ந்தது எனக் குறிப்பிடுகிறது.

இக்கருத்திற்கு மாறாக தொண்டை மண்டலசதகத்தில்,

தண்னூர் சனகையிர் சன்மதி மாமுணி தந்த மைந்தன்
நன்னூல் உரைத்த பவணந்தி நாற்பதியும்
சின்னு}ல் உரைத்த குணவீர பாண்டியன் சேர்பதியும்2
மண்ணு புரத்தில் அன்னமில் நேர் தொண்டை மண்டலமே"

-தொண்டை மண்டல சதகம் – 65வது பாடல்

நேமிநாதம் என்னும் நூலை இயற்றிய குணவீர பண்டிதரும் தொண்டை மண்டலத்தை சார்ந்தவர் ஆவார் என்கிறது. இச்சதகம்.

எனவே, இரு முரண்பட்ட கருத்துக்கள் உள்ளனவே, பவணந்தியார் எந்த ஊரினைச் சார்ந்தவர் என்பதனை தெளிவு படுத்த, பவணந்தியார் பிறந்து வளர்ந்தது கொங்கு மண்டலத்தில் என்றும், அவர் 'சன்மதி' முனிவரிடம் உபதேசம் பெற்று, துறவு பூண்டிருந்து தொண்டை மண்டலத்தில் என்றும் கொள்ள வேண்டும். பவணந்தி முனிவர் பிறந்த வளர்ந்த "சனகாபுரம்" ஈரோடு மாவட்டம் பெருந்துறை இரயில் நிலையத்திற்க அருகில் உள்ளது. இவ்விடத்தில் ஆதி தீர்த்தங்கரர் கோவில் ஒன்றும் உள்ளது.

உரையாசிரியரின் பார்வையில் நன்னூல்

நன்னூல் உரைகளில் காலத்தால் முந்தியது 'மயிலைநாதர்' விருத்தி உரை ஆகும். மயிலைநாதர் 14ம் நூற்றாண்டில் வாழ்ந்தவர், பவணந்தி முனிவரைப் போன்றே இவரும் சமண சமயத்தைச் சார்ந்தவர்.

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

மயிலைநாதர்

இளம்பூரணருக்குரிய சிறப்புகள் யாவும் இவருக்கும் உரியவையே ஆகும். ஏனெனில், தொல்காப்பியத்திற்குப் பின் தோன்றிய இலக்கண நூல்களில், நன்னூல் தமிழ்மொழி மரபை காத்தது எனில்,அந்நூலினை நன்கு தெளிந்து, நூலாசிரியர் கருத்தை அறிந்து, காலத்திற்கு ஏற்ற புதுக்கருத்துக்கள் கூறிய பெருமை மயிலைநாதரையேச் சாரும்.

தொல்காப்பியர் கொள்கையிலிருந்து நன்னூலார்,தம் காலத்திற்கு ஏற்ற திருத்தங்களைச் செய்து பழையன நீக்கிப் புதியன ஏற்றார் எனில்,

நன்னூலாரின் ஆக்கத் திறனை உலகறியச் செய்தவர் மயிலை நாதர் எனலாம், ஏனெனின், புதியநூலின் போக்கை அறிந்து, முதன்முதலில் உரை வகுப்பது, பழமைக்கும், புதுமைக்கும் பாலம் அமைக்கும் திருப்பணியைச் செய்தவர் ஆவார்.

பழையன நினைந்து, புதியன பேணி இலக்கண நெறியினைக் காக்கும் உரையாசிரியாரின் பணிமிகப் பெரியதாகும். இவற்றினும் குறிப்பாக, சிற்சில இடங்களில், உரைப்பாரும் ஊர், கூறுவாரும், என்று குறிப்பிடுவதால் இவருக்கு முன்னும் வேறு ஏதேனும் உரை நன்னூலுக்கு இருந்ததோ, என்ற ஐயமும் எழுத் தொடங்குகின்றது. மேலும், இவரது சமயம் சமண சமயம் தான் என்றும், இவரை ஆதரித்தவர் என, சிறப்புப் பாயிரத்தில்,

கருங்கழல் வெண்குடைக் கார்நிகர் வண்கைத்
திருந்திய செங்கோற் சய கங்கன் (15.16)

என்ற வரிகளில், உரை எழுதும் போது, சீயங்களை மிகவும் பாராட்டி உள்ளார். “பல்வகைத் தாதுவின்” என்னும் சூத்திரத்தின் உரைக் கீழ், கங்கனைப் புகழும் இனிய வெண்பா ஒன்றி யனைக் காட்டுகின்றார். கங்கன் என்ற பெயரை இரண்டு இடங்களில்(110,275) உதாரணம் காட்டுகிறார். இவற்றை எல்லாம் நோக்கும் போது, நன்னூலை ஊக்குவித்த சீயகங்கன் அவன் வழித்தோன்றல்களில் ஒருவனால் மயிலைநாதர் ஆதிரிக்கப் பெற்றிருக்கலாம் எனில் இவர் வாழ்ந்த இடம் “கொங்கு நாடு” என்பதனை இதன் மூலமும் அறிய முடிகிறது.

உரைச்சிறப்பு

இவரது உரைத்திறம் சுருக்கமும், தெளிவும், வாய்ந்தது. சில ஏட்டுப் பிரதிகளின் இறுதியில், “காண்டிகையுரை முற்றிற்று” என்று எழுதப்பட்டிருந்ததாய், இதனைப் பதிப்பித்த, டாக்டர் உ.வே சாமிநாத ஐயர் குறிப்பிடுகின்றர். “ஆழமான நீர் நிலையில் அமைதியாகச் செல்லும் படகு போன்று இவருடைய உரை, நூல் முழுவதும் அமைந்துள்ளது.

பாயிரவுரை

இறையனார் அகப்பொருள் பாயிர உரையின் எதிரொலியாக உள்ளது. ஏனைய பகுதிகள் இளம்பூரணர் உரையையும், அவிநய உரையையும் பின்பற்றிச் செல்லுகின்றன. பிறர் கருத்தைச் சுட்டுவதோடு நிற்கும் உரையாசிரியர், தம் கருத்தை வலியுறித்தத் தயங்குவதும்

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

இல்லை. மாறுபட்ட கருத்துக்களை மதித்துப் போற்றுவதும் உண்டு. பழைய இலக்கியங்களிலிருந்து சில பாடற்பகுதிகளை உடைநடையாக்கி மேற்கோளாகத் தருகின்றார். நயமான எதுகை, மோனைகள் அமைந்த தொடர்களைக் கற்கவும், நினைவில் கொள்ளவும் ஏற்றவாறு அமைத்து உள்ளார். வடமொழி கருத்துக்களை மிகக் குறைவாகவே சுட்டுகின்றார்.

- வடமொழிக்கு இரண்டல்லாத எல்லாம் பல என்றும் தமிழுக்கு ஒன்றல்லாத பல என்றும் அறிக"(396)
- வடமொழி முதலான பிற கலைக் கடல்களுள்ளும்' என்பவை குறிப்பிடத்தக்க இடங்களாகும்.

உரைத்திறன்

மயிலை நாதரின் உரைத்திறனால் நன்னூலார், சுருக்கமாகச் சொல்லியுள்ள சூத்திரக்கருத்து விளக்கம் பெற்றுச் சிறக்கின்றது.

இயற்கைப் பொருளை இற்றெனக் கிளத்தல்? (493) என்பதற்கு மயிலைநாதர்,

"உலகத்துப் பொருள்கள் எல்லாம் இயற்கைப் பொருளும், செயற்கைப் பொருளும் என இரு வகையவாம். அவற்றுள், இயல்பாக வராநின்ற பொருளைச் சொல்லும் இடத்து இத்தன்மையது என்று சொல்ல வேண்டும் என்று உரை கூறுகின்றார்.

துய்த்தல்,துஞ்சல் தொழுதல் அணிதல்

உய்த்தல் ஆதி உடல்உயிர்த் தொழிற்குணம் (452)

என்னும் சூத்திரத்திற்க விரிவாக உரை எழுதியுள்ளார்.

'மெய், வாய், மூக்கு,கண், செவி என்று ஐம்பொறிகளானும், ஊறு சுவை, நாற்றம், ஒளி, ஒலி என்னும் ஐம்புலன்களையும் நுகர்தலும், உறங்குதலும் பிறரைத் தொழுதலும் வேண்டினவற்றை அறிதலும், மடைத்தொழில், உழவு வாணிகம், கல்வி, எழுத்து, சிற்பம் என்றும் ஆறு தொழில்களையும் முயல்தலும் இவை போல்வன பிறவும் உடம்போடு கூடிய உயிர்த் தொழிற் பண்பாடு.

- "பல்வகை வடிவுஇரு நாற்றம் வண்ணம்
- அறுசுவை உளறுஎட்டு உயிரல்பொருட்குணம்"
- என்ற சூத்திரத்திற்கு நல்ல விளக்கமாய்,

பின்வரும் மயிலை நாதர் உரைப்பகுதி அமைகின்றது. மேலும்,

- சதுரம், ஆய்தம், வட்டம், முக்கோணம், சிலை, துடி,தோரை, முழா, எறும்பு, கூன், குறள் முதலான வடிவுகளும்,
- நன்றும், தீதும் என இருவகை நாற்றமும்,
- வெண்மை, செம்மை, கருமை, உவர்ப்பு, காழ்ப்பு, தித்திப்பு என்னும் ஆறு சுவைகளும்,
- வெம்மை, தண்மை, மென்மை, வன்மை, திண்மை,நொய்மை,இழும் எனல், சருச்சரை என்னும் எட்டு ஊறும் உயிரில்லாத பெருட்பண்பு என்பதனை விளக்கிக் கூறியுள்ளார்.

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

இலக்கணக் குறிப்பும் ஆராய்ச்சியும்

முற்காலத்தில் கண்ட இலக்கியங்கட்கே இலக்கணம் இயம்பலின் (140) என்று குறிப்பிடுவதால், இலக்கணம் பற்றி இவர் கொண்ட கருத்தைத் தெளிவாகின்றது.

இலக்கணச் சூத்திரங்கள் நிற்கும் நால்வகையினைக் குறித்து கூறும் விளக்கம்

- ஆற்று ஒழுக்கு என்பது ஆற்றுநீர் தொடர்பறாது ஒழுகுமாறு போலச் சூத்திரங்களும் தம்முள் இசைபுட் டொழுகுவது "அரிமா நோக்கம் என்பது, சிங்கம் நோக்குமிடத்து, முன்னை யாரையும், பின்னை யாரையும் நோக்குவது போல இறந்த சூத்திரத்தினோடும் எதிர்ந்த சூத்திரத்தினோடும் இயைபுபடக் கிடப்பது.
- தவளைப் பாய்த்தென்பது – தவளை பாய்க்கின்றவிடத்து, இடையிடை நிலம் கிடப்பப் பாய்வது போலச் சூத்திரம் இடையிட்டுப் போய் இயைபு கொள்ளுவது
- பருந்தின் விழுக்காடு என்பது, பருந்து நடுவே விழுந்து தான் கருதும் பொருளை எடுத்துக் கொண்டு போவது போல இதுவும் முடிக்கப்படும் பொருளை முடித்துப்போம் இடையினது என்பதாம். (18)

அகரம் முதலில் வைக்கப்பட்டதற்கு இவர் கூறும் காரணம் அவையானது

அகரம் தானே நடந்தும், நடவா உடம்பை நண்ணியும் நடத்தலானும், அரண், அரி, அயன், அருகன் என்னும் பரமர் திருநாமத்திற்கு ஒரு முதலாயும் அறம், பொருள், இன்பம் என்றும் முப்பொருளின் முதற்பொருட்கும், அன்பு, அருள், அணி, அழகு, முதலாயின நற்பொருட்கு முதலாயும் வருதலானும், முன் வைக்கப்பட்டது. (72)

மக்கள், தேவர், நரகர், உயர்திணை என்னும் சூத்திரத்தின் கீழ், மயிலைநாதர், "தேவரை முன் வையாது, இவ்வாறு வைத்த காரணம் என்னையோ எனின், மக்களுள் பிறந்ததேனமும், தவமும் இயற்றி வானமும், வீடும், எய்தற் சிறப்பினான் முன்னே மக்களையும் அவ்வாறல்லது எய்தற்கு அருமைச் சிறப்பினான். அவர், பின்னே தேவரையும், தீவினையால் வருதல், இழிபினான் அவர் பின்னே நரகரையும் வைத்தார் என்று எழுதுகின்றார்.

அவன்,அவள், அவர் என்பவை பகாப்பதம் என்பது இவர் கருத்து, 'அவன், அவள், அவர் என்னற்றொடக்கத்தக்கன ஈறு பகுக்க வேறு பால் காட்டலின் பகுபதமாம் பிற எனின், அவ ஒன்றாய் நின்று ஒரு பொருள் ஆவதல்லது ஈறுபிரித்தாற் பகுதிவேறு பொருள் படாமையின், அவற்றிற்குப் பகுதி விகுதித்தன்மை இன்மையின் ஆகா என்று எடுத்துயம்பினார். (130)

மேலும், இவரின் புலமை விளக்கத்திற்கு சான்றாய், 'ந' என்பது சிறப்புப்பொருட்டு, பெயர் முன் அடுத்து வரும், நக்கீரர் நச்செள்ளையார், நப்பாலத்தனார், நப்பின்னை, நந்நாகனார், நக்கடகம் எனக்காண்க, என்ற விளக்கம் நினைத்து மகிழ்தற்குரியது. (420)

உரிச்சொல்லை விளக்கம்போது, உரியசொல் யாது? அஃது உரிச்சொல் என்று கூறுகின்றார்.

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

புலவரைப் போற்றுதல்

புலவர் பெருமக்களின் பெயர்களைச் சிறப்பான ஆடை மொழிகள் தந்து, பெருமையுடன் குறிப்பிடுவதும், இவர் இயல்பு

மிகத் தெளி கேள்வி அகத்தியனார்
ஒல்காப் புலமைத் தொல்காப்பியனார்
அளவறு புலமை அவிநயனார்
புவிபுகழ் பெருமை அவிநயனார்
ஊங்கூர் கேள்வி இளம்பூரணர் எனும்
ஏதமில் மாதவர்
தண்டலங் கிழவன் தகைவரு நேமி
எண்டிசை நிறைபெயர் இராச
பவித்திரப் பல்லவ தரையன்

என்பவை இவர் கூறும் சிறப்பு மொழிகளில் சில என்பது இவருடைய தனிச்சிறப்பு.

நூல்கள்

இவர் தம் காலத்தில் வழங்கிய பலநூல்களைக் குறிப்பிடுகின்றார். ஐம்பெருங் காப்பியம், எண்பெருந் தொகை, பத்துப் பாட்டு, பதிணென்கீழ்க்கணக்கு,என்னும் இவ்விலக்கியங்களுள்ளும் (387) என்று இவர் கூறுவதிலிருந்து இப்பெயர்களும் பகுப்புகளும் பழைமையானவை என்று அறியலாம். மயிலைநாதர் காலத்தில் 'பாட்டியல்' என்று தனி இலக்கணம் தோன்றவில்லை என்ற கருதச் சான்று உண்டு என்றும் "எழுத்துச் சொற் பொருள் யாப்பணி என்பன. அச்சொல்லப்பட்ட பொருள்களை உணர்த்தின் இயற்பெயராம் என்று இவர் ஐந்திலக்கணமே குறிப்பிடுகிறார். (289)

உரைதந்த ஒளி

மயிலைநாதர் உரையினை இலக்கணப் புதையல் எனலாம். இவ்வுரையால் பலப்பல புதிய செய்திகள் வெளிவந்தன. நன்னூல் ஐந்திலக்கணம் ஐந்து அதிகாரங்களை கொண்ட பொருளால் ஆனவை என்பதும் தெரியவந்தது. மயிலை நாதரால் தான் இளம்பூரணர் ஒரு துறவி என்பதும் மறைந்து போன பல தமிழ் நூல்களின் பெயரும் அவற்றின் சில பகுதிகளும் வெளிப்பட்டன.

தொல்காப்பியரை மறுத்துக் கூறல்

சகரம் மொழிக்கு முதலில் வராது என்பதும், குற்றியலுகரம் மொழிக்கு முதலிலும் வரும் என்பதும் தொல்காப்பியர் கருத்து. இக்கருத்துக்கள் மயிலைநாதருக்கு மாறுபட்டவை. தொல்காப்பியரை மிக நாகரிகமாக இவர் மறுத்துள்ளார். வெளிப்படையாக மறுக்காமல் பின்வருமாறு நயம்படக் கூறினார்.

சரிசமழ்ப்புச் சட்டி சருகு சாவடி

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

சளிசகடுமுட்டை சவளி – சவிசரடு

சந்து சதங்கை சழக்காதி – ஈரிடத்தும்

வந்தன வால் சம்முதலும் வை

நாகரிகமும் பழக்க வழக்கங்களும்

மயிலைநாதர் உரையில்,அக்கால மக்களின் நாகரிகமும், பழக்க வழக்கமும் இடம்பெற்றுள்ளன. ஒருவரான் அரிய தவம் பெற்றேன் என்றக்கால், ஆண்பால் என்பதும், ஒருவரால் அரிய மடல் பெற்றேன் என்றக்காற் பெண்பால் என்பதும், குறிப்பான் விளங்கும் அறிவும், தவமும், பெண்பாலால் பெறல் அரியவோ எனின் நுண்ணிறி வுடையோர் நாலொரு பழகினும் பெண்ணறி வென்பது பெரும்பேதை மைத்தே' எனச் சான்றோர் சொல்லுப, ஆகலான் அரிய என்க என்று மயிலைநாதர் கூறும் கருத்து, அவர் காலத்தில் பெண்களுக்கு இருந்த நிலையைப் புலப்படுத்துகிறது.

எடுத்துக்காட்டாக, படைத்தலைவன், மனைவியைப் படைத்தலைவி என்றும், சேனாவரையன் மனைவியைச் சேனாவரி என்றும் அக்காலத்தவர் வழங்கினர். (276) தஞ்சாவூர், இவர் காலத்தில் சிறப்புடன் விளங்கியது, அதனைத் தஞ்சை என்று வழங்கினர் (276) கார்த்திகை விளக்கு விழா இவர் காலத்தில் கொண்டாடப்பட்டது. (400) செல்வர்கள் பொருள்களைத் தொகுத்து ஓரிடத்தில் வைத்திருந்தனர். என்றும் அவற்றை எடுத்து தரவும், வைக்கவும் ஏவலளாரைப் பயன்படுத்தினர் எனவும் 'உரைப்பகுதி' பின்வருவனவற்றில் விளங்குகிறது. பல பொத்தகம் கிடற்குழி, ஒருவன் ஏவுவான் ஏவலாளனை, பொத்தகங்கொடுவா என்றால், அவன் ஒரு பொத்தகம் கொடு வந்துவிடத்து தான் கருதியது அன்றெனின் அவன் மற்றையது கொணா என்னும் (432) வரிகளில் உணர்த்துகின்றார். வடநாடு சென்று கங்கை நீராடி வந்த துறவியர், கங்கையாடிப் போந்தேன், ஒரு படி சோறுதம்மின்,ஓராடை தம்மின் என்று இல்லர்தோலும் சென்று கேட்டுப் பெற்றனர் (385).

ஆடைப் பற்றிக் கூறும் குறிப்புகள்

குழிப்பாடி, சீனம், என்பன அவ்விடம் உணர்த்தின் இயற்பெயராம் இப்பாடம், குழிப்பாடி இப்பட்டுச் சினம் என அவ்விடத்திற் பொருளை உணர்த்தின் ஆகுபெயராம் (289)

கோலிகன், சாலிகன், பட்டணவன், சேணிகன், என்பன அச் சாதிகளை உணர்த்தின் இயற்பெயராம் இவ்வாடை கோலிகன், இவ்வாடை சாலிகன், இவ்வாடை பட்டணவன். இவ்வாடை சேணிகன் என அவ்ரவரான் ஆக்கப்பட்ட ஆடைகளை உணர்த்தின் ஆகுபெயராம் (288) **நூறு விற்கும் பட்டாடை உளவோ என்றாற்கு ஐம்பது விற்கும் கோசிகம் அல்லது இல்லை இத்துணைப் பட்பிடை யுள என்க? (405)** இச்சான்றுகளின் மூலம் ஆடைகளின் வகை, அவை நெய்த இடம், அவற்றை நெய்த சாதியினர் ஆகியவற்றை உணரலாம்.

முடிவுரை

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

காலந்தோறும் நன்னூலுக்கு பல உரைகள் தோன்றி உள்ளன. ஒவ்வோர் உரைக்கும் ஏதேனும் தனிப்பட்ட சிறப்பியல்பு இருக்கின்றது. அவ்வகையில், நன்னூலுக்கு உரை எழுதி, முதன் முதலில் உரை செய்த மயிலைநாதர் சிறப்பிடம் பெற்று திகழ்கின்றது.

தனிப்பெருமையுடன் விளங்குகின்ற இவ்வுரையாசிரியரின் உரைநூல் 19ம், 20ம் நூற்றாண்டுகளில், கல்லூரிகளிலும், பள்ளிகளிலும் இலக்கணம் கற்கும் மாணவர்களுக்கு ஏற்ற எளிய இலக்கண நூல்கள் தேவைப்பட்டதால் பல நன்னூல் விருத்தி உரையைத் தழுவி, சுருக்கமாகவும், தெளிவாகவும், எளிமையாகவும் காலத்திற்கேற்ற பல புதிய உதாரணமும்,மேற்கோளும் தந்து காண்டிகை உரை இயற்றினார். மேலும், முகவை, இராமாநுசக்கவிராயர், சிவஞானமுனிவர், ஆறுமுகநாவலர், விசாகப்பெருமாள் ஐயர், சடகோபராமச்சாரியார், பவாணந்தம் பிள்ளை ஆகியோர் இயற்றிய நூல்கள்,உரைகள் தமிழ் கற்கும் மாணவர்களுக்காக எழுதப்பட்டவை அரிதின் உணரின் மயிலைநாதர் உரை இலக்கணம் வரலாற்றிலியே சிறப்பிடம் பெறுகின்றது.

துணைநூற்பட்டியல்

[1] மு.வை.அரவிந்தன். *தமிழ்ப்பேராசிரியர்.* மணிவாசகர் பதிப்பகம் 8/7, சிங்கர்தெரு, பாரிமுனை, சென்னை 600018.

[2] முனைவர்.அ.பிச்சை. *தமிழியல் ஆய்வு வரலாறு.* கபிலன் பதிப்பகம், 53, ஏ.டி.எஸ். நகர், காந்திகிராமம்-2.

[3] புலவர் கோ.விஸ்வபதி, *நன்னூல் மூலமும் உரையும்.* பழனிப்பா பிரதர்ஸ், கோனார் மாளிகை, 25, பீட்டர் சாலை, சென்னை.

தமிழில் இக்கட்டுரையை இவ்வாறு மேற்கோளிடுங்கள்:

நதியா. "நன்னூலில் மயிலைநாதரின் உரை சிறப்பு." *தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்,* தொகுதி 3, சிற.இதழ் 2, தொகுதி 2, *திசம்பர்* 2020, பக். 223-232. டிஓஐ: **10.38067/ijtlls.2020.spl.v03i02v2.034**

Cite this Article in English (*MLA 8 Style*) as:

Nathiya. "The Textual Excellence of Mayilainathar's "Nannool"." *International Journal of Tamil Language and Literary Studies*, Vol. 3: Special Issue - 2, Vol. 2, December 2020, pp. 223-232. DOI: **10.38067/ijtlls.2020.spl.v03i02v2.034**

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி /Author Contribution Statement: இல்லை /NIL

கட்டுரையாளர் நன்றியுரை /Author Acknowledgement: இல்லை /NIL

கட்டுரையாளர் உறுதிமொழி/Author Declaration: இல்லை /NIL

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் அரையாண்டு பன்னாட்டு ஆய்விதழ்

International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

க.வெள்ளைவாரணரின் தொல்காப்பிய உவமையியல் உரை மரபுகள்

Tolkāppiyam Parable Textual Traditions of Ka.Vellaivaranar

மா.நாகலட்சுமி, உதவிப்பேராசிரியர், மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி, மதுரை.
M.Nagalakshmi, Assistant Professor, Mannar thirumalai Naicker College, Madurai.
ORCiD: https://orcid.org/0000-0003-3133-8082
DOI: 10.38067/ijtlls.2020.spl.v03i02v2.035

Abstract

In Ka.Vellaivaranar's text, the deposit is stated before the metaphorical realism and after the verb. The archaeologist clearly states through the narrator that the parable appears because of the four verbs and that the pain of special good, love are the stages of the parable. The tradition of the parable does not change and the first part of the first syllable and the last part of the last syllable similarly accepts the first part of the last and the last part of the first. He has clearly explained the meaning of the parable. Hence, the study gives a clear elucidation of the "Tolkāppiyam" parable textual traditions of Ka.Vellaivaranar.

Keywords: "Tolkāppiyam", Parable Textual Traditions, Ka.Vellaivaranar

தமிழ் என்றும் சாகாது; தன்னிலை மாறாது என்பதற்கேற்ப காலத்தால் முந்தைய மொழி இன்று செம்மொழி தர வரிசையில் மூத்த மொழியாக மிளிர்கிறது.ஆதிகாலத்தில் இருந்த பல மொழிகள் அழிந்தவிட்ட போதிலும் தன்னிலை மாறாமல் தமிழ் மொழி இருப்பதற்கு அதன் இலக்கண, இலக்கியங்களே காரணமாகும். நம் மொழியில் உள்ள சிறந்த நூல்கள் பிற மொழிகளிலும் மொழி பெயர்க்கப்படுகிறது. தொல்காப்பியர் இலக்கணத்தை எழுத்து, சொல், பொருள் என்று மூன்றாக பிரித்துள்ளார். பிற மொழிகளுக்கு இல்லாத சிறப்பு தமிழுக்கு உண்டென்றால் பொருளுக்கும் இலக்கணம் வகுத்ததுதான் ஆகும்.

பொருளதிகாரத்தில் உள்ள ஒன்பது இயல்களில் மெய்ப்பாட்டியலுக்கு பின்பும் செய்யுளியலுக்கு முன்பும் உவமையியல் ஏன் வைக்கப்பட்டுள்ளது என்பது குறித்து முதல் உரை இடம்பெற்றுள்ளது. ஒரு பொருளோடு ஒரு பொருளை ஒப்புமை கூறி விளக்குவது உவமையாகும்.அகம், புறம் என இருவகைப் பொருளும் உவமம் என்ற வழக்கினுள் இடம்பெறுகிறது. உடல் அசைவுகளை மெய்ப்பாடு மூலம் அறிந்து கொள்வதைப்போல பொருள் புலப்பாட்டை அறிவதற்கு உவமை ஏதுவாக இருப்பதால் மெய்ப்பாட்டியலுக்கு பின்பு உவமையியல் உள்ளது. தொல்காப்பிய பொருளதிகாரத்தில் முதல் இயலான அகத்திணையியலில் உள்ளுறை உவமம், ஏனை உவமம் என இரண்டு உவமைகளை கூறியிருந்தபோதிலும் உவமையியலில் இரண்டும் விரித்துக்கூறப்பட்டுள்ளது. ஏனை உவமம் உலக வழக்கிலும் செய்யுள் வழக்கிலும் வருவதால் அதனை முதலிலும்

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் அரையாண்டு பன்னாட்டு ஆய்விதழ்

International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

உள்ளுறை உவமம் செய்யுளுக்கே உரித்தாதலால் அதனை ஏனை உவமத்திற்கு பின்பும் செய்யுளியல் ஒட்டியும் கூறப்பட்டுள்ளது.

உவமைத் தோற்றம்

வினைபயன் மெய்உரு என்ற நான்கே
வகைபெற வந்த உவமைத் தோற்றம்"

உவமையால் பொருள் தோன்றும் தோற்றம் வினை, பயன், மெய், உரு என நால்வகைப்படும்.ஒரு பொருளுக்கு மற்றொரு பொருளை உவமையாகக் கூறுமிடத்து அவ்விரண்டிற்கும் பொதுவாகிய தொழில்காரணமாகவோ அத்தொழிலாற் பெறும் பயன் காரணமாகவோ மெய்யாகிய பொருளின் வடிவுகாரணமாகவும் அவ்வடிவின் கண் நிலைபெற்றுத்தோன்றும் நிறமாகிய வண்ணம் காரணமாகவும் உவமத்தால் பொருள் புலப்படும்.

மாரி யன்ன வண்கைத்
தேர்வே ளாயைக் காணிய சென்மே (புறம். 133)

வானிலிருந்து பெய்யும் மழை பிரதிபலன் பாராமல் மக்களுக்கு வாழ்வாதாரத்தை தருவது போல மன்னன் கையால் கொடுக்கும் பொருளும் பிரதிபலன் பாராமல் தருவதால் இரண்டிற்கும் ஒப்புமை கூறப்பட்டது. இவ்வுவமையாவது பயனால் வந்த உவமையாகும். இவை போன்று

குயில் போன்ற மொழி---செவியாலறியப்பட்டது.
தீப்போலச் சுடும்----- மெய்யினாலறியப்பட்டது.
ஆம்பல் நாறுந் துவர்வாய்; (குறுந்-300) ---மூக்காலறியப்பட்டது.
தம்மிலிருந்து தமதுபாத் துண்டற்றால்
அம்மா அரிவை முயக்கு(குறள் எண் -1107)---மனத்தினாலறியப்பட்டது.
உயர்ந்ததன் மேற்றே உள்ளுங் காலை

பொருளை புலப்படுத்துவதற்கு கூறப்படும் உவமைஉவமிக்கப்படும் பொருளாகிய உவமேயத்தை காட்டிலும் உயர்ந்த தன்மையில் இருக்க வேண்டும். உயர்ந்த பொருளுக்கு இழிந்ததனை உவமையாக கூறக்கூடாதென்பதும், உவமானத்துடன் உவமேயப்பொருள் முழுவதும் ஒத்திருக்காவிட்டாலும் ஒருபகுதியாவது ஒத்திருத்தல் என்ற பொதுத்தன்மை அமைந்திருக்க வேண்டும். உலகில் இழிந்ததெனக் கருதப்படும் பொருளை உவமையாக எடுத்துக்கூற நேர்ந்த போதிலும் அதன்கண் அமைந்த உயர்ந்த தன்மையை ஒப்புமையாகக்கொண்டு உயர்ந்த குறிப்புப்பொருந்த உவமம்செய்தல் வேண்டும்.

உவமையின் நிலைக்களம்

சிறப்பே நலனே காதல் வலியோடு
அந்நாற் பண்பும் நிலைக்கள மென்ப

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

உவமையின் நிலைக்களங்களாகசிறப்பு நலன் காதல் வலி ஆகும் .அவற்றில் சிறப்பு என்பது உலகத்தில் இயல்பு வகையாலன்றி செயற்கை வகையால் பெறுவது.

முரசுமுழங்கு தானை மூவரும் கூடி

அரசவை இருந்த தோற்றம் போலப்

பாடல் பற்றிய பயனுடைய எழா அல் (பொருநராற் 54-57)

தமிழ் வேந்தர்களாகிய சேர ,சோழ ,பாண்டியர் மூவரும் தமிழகத்தின் நலங்கருதித் தம்மில் ஒன்றுகூடி அரசவையில் வீற்றிருந்த தோற்றம் போல முரசு,முழங்கு ,தானை இருந்ததாக சிறப்புக்கருதி உவமை கூறப்பட்டது.

ஓவத்தன்ன வியனுடை வரைப்பின்"(புறம் - 251)

ஓவியம் போலும் பேரழகு வாய்ந்த இடத்தினையுடைய நகரம் (நலன் கருதி)உவமை கூறப்பட்டது.

"பாவையன்ன பலராய் மான்கவின்"(அகம்-98;) பாவையொத்த பலரும் ஆராயத்தக்க மாண்பமைந்த என் மகளது வனப்பு எனத் தாய் தன் மகளிடத்தே கொண்ட பேரன்பு காரணமாக கூறப்பட்டதால் காதலின் காரணமாக உவமை கூறப்பட்டது.

"அரிமா வன்ன அணங்குடைத்துப் பின் திருமாவளவன் (பட்டினப் 298) திருமாவளவனின் வலிமையை சிங்க ஏற்றோடு ஒப்பிடப்பட்டுள்ளதால் வலிமையின் காரணமாக உவமை கூறப்பட்டது. **"கிழக்கிடுப் பொருளோ டைந்து மாகும்."** ஒரு பொருளின் இழிவினைப் புலப்படுத்துவோர் உவமத்தால் அதனது இயல்பு தோன்றக் கூறுதல் இயல்பாதலின் அது கிழக்கிடுபொருள் எனப்படும்.

அரவுநுங்கு மதியி னுதலொளி கரப்ப (அகம்.313)

பிரிவிடை வேறு பட்டு வருந்தும் தலை மகளது நுதல் ஒளியிழந்த நிலையினை இராகுவென்னும் பாம்பினால் விழுங்கப்பட்டு ஒளியிழந்த சந்திரனுக்கு உவமையாகக் கூறியிருப்பதால் இது கிழக்கிடு பொருள் நிலைக்களமாகப் பிறந்த உவமையாகும். அவ்வாறானால் உவமையின் நிலைக்களன் ஐந்து ஆகும்.

உவமைக்குரிய மரபு

முதலுஞ் சினையுமென் றாயிரு பொருட்கு

நுதலிய மரபி னுரியவை யுரிய

உவமைக்குரிய மரபு யாதெனில் முதல், சினை என்று கூறக்கூடிய இருவகைப் பொருள்களில் முதல் ,முதலோடும் சினை, சினையோடு சேர்வது தான் மரபு ஆகும்.

மலைபோலும் யானை - முதலோடு முதல்

தாமரை மலர் போலும் சேவடி- சினையோடும சினை கூறப்பட்டுள்ளது.

மேலும்,

செப்பினும் வினாவினுஞ் சினைமுதற் கிளவிக்

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

கப்பொரு ளாகும் உறழ்துணைப் பொருளே

என்ற நூற்பாவால் முதலோடு சினையும் , சினையோடு முதலும் உவமம் செய்வதற்கு உரியவையாகும்.அவ்வாறு செய்யும்போது மரபு பிறழாமல் செய்யப்பட வேண்டும்.

அடைமரை யாயிதழ்ப் போதுபோற் கொண்ட
குடைநிழற் றோன்றுநின் செம்மலைக் காணூஉ (கலி.84)

இதில் குடைநிழற்கீழ்த் தோன்றும் குழவி என முதலோடு சினை கூறப்பட்டுள்ளது.

உவமையின் வேறுபாடு

"சுட்டிக் கூறா உவம மாயின் பொருளெதிர் புணர்த்துப் புணர்த்தன கொளலே" உவமையுடன் உவமேயத்திற்கு அமைந்த பொதுத்தன்மையினை சுட்டிக்கூறாத நிலையில் உவமம் வருமாயின் இவ்விரண்டையும் இணைத்து நோக்கி இன்னது உவமம் என அறிந்து கொள்ள வேண்டும்.

மோப்பக் குழையும் அனிச்சம் முகந் திரிந்து
நோக்கக் குழையும் விருந்து".(குறள் எண் 90)

இதில் அதுபோல என உவமை சுட்டிக் கூறப்படாததால் இது சுட்டிக்கூறாவுவமை ஆகும்.திருக்குறளுக்கு உரை எழுதிய பரிமேலழகர் இதனை எடுத்துக்காட்டுவுவமை எனக் கூறியிருக்கின்றார்.

உவமைக்குரிய இயல்பு

" **உவமும் பொருளும் ஒத்தல் வேண்டும்**" இந்நூற்பா உவமைக்குரிய இயல்பை உணர்த்துகிறது. உவமானமும் உவமேயமும் தம்முள் ஒத்துள்ளன என உலகத்தார்ஏற்கும் வண்ணம் உவமையமைதல் வேண்டும்.பொருள் புலப்பாட்டிற்குரிய கருவியாக அமைவது உவமையாயினும் தமக்குத் தோன்றினவற்றையெல்லாம் உவமையாகக் கூறாது எடுத்துக்கொண்ட பொருளுக்கு ஏற்புடையன என உலகத்தார் ஒத்துக்கொள்ளத் தக்கவற்றையே உவமையாகக் கூறுதல் வேண்டும்.

பொருளே யுவமஞ் செய்தனர் மொழியினும்
மருளறு சிறப்பின ஃ துவம மாகும்.

உவமேயமாகிய பொருளினை உவமையாக்கி உவமானத்தை உவமேயமாக்கி மயங்கக் கூறுமிடங்களில் அந்த உவமேய பொருள் குற்ற மற்ற சிறப்பின் உவமம் போல உயர்ந்ததாக்கிக் கூறப்படும். 'தாமரைமுகம்' என்பதனை 'முகத்தாமரை' என மாற்றி உவமை கூறும்போது வரும் உவம வேறுபாட்டினை பிற்கால அணியிலக்கண நூலார் உருவகம் என பிறிதோர் அணியாகக் கொள்வர்.

பெருமையுஞ் சிறுமையுஞ் சிறப்பிற்றீராக்
குறிப்பின் வருஉ நெறிப்பா டுடைய.

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

பெருமையும் சிறுமையும் பற்றி உவமை கூறும் போது உலக வழக்கில் இனிமை இல்லாமல் கூறாது கேட்போர்மனம் விரும்பியேற்றுக் கொள்ளும்படி செய்தல் வேண்டும்.

உவமையுணர்த்தும் சொற்கள்

அன்ன, ஏய்ப்ப, உறழ,ஒப்ப ,என்ன, மான, ஒன்ற,ஒடுங்க, ஒட்ட, வாங்க, வென்ற வியப்ப,எள்ள, விழைய ,இறப்ப, நிகர்ப்ப,கள்ள ,கடுப்ப ,காய்ப்ப, மதிப்ப, தகைய மருள ,மாற்ற ,மறுப்ப ,புல்ல ,பொருவ, பொற்ப, போல,வெல்ல, வீழ,நாட, நளிய நடுங்க, நந்த,ஓட, புரைய ஆகிய முப்பத்தாறும் அவை போல பிறவும் என்றதனால் இதில் சொல்லப்படாத நோக்க நேர அனைய அற்று, இன, ஏந்து ஏர்,சீர், கெழு,செத்து ,ஏர்ப்ப ,ஆர,துணைப்ப, மலைய ,அமர முதலிய உருபுகளும் ஐந்தாம் வேற்றுமைப் பொருள் பற்றி வருவனவும் கூறுங் காலைப் பல் குறிப்பினளே என்றதனால் புலிபோன்ற சாத்தன் எனப்பெயரெச்சமாகவும் புலி போலப் பாய்ந்தான் என வினையெச்சமாகவும் ,சாத்தன் புலிபோலும் என வினைமுற்றாகவும் அன்ன ,இன்ன என இடைச்சொல்லாகவும் பல்வேறு வடிவங்களில் உவம உருபுகள் பயின்று வருகின்றன.

அன்ன வாங்கு மான இறப்ப
என்ன உறழத் தகைய நோக்கொடு
கண்ணிய எட்டும் வினைப்பா லுவமம்

அன்ன ஆங்க மான இறப்ப என்ன உறழ தகைய நோக்க எனக் கருதும் எட்டும் வினை உவமத்திற்குரிய உருபுகளாம்.

“ஒளித்தியாங்கு மரபின் வயப்புலி போல “(அகம் .22)

அன்ன என் கிளவி பிறவொடுஞ் சிவணும். எட்டு வினை உருபுகளில் அன்ன என்பது பயன், மெய்,உரு என்னும் பிற உவமைகளுக்கும் உரியதாய் பொருந்தி வரும்.

எள்ள விழையப் புல்லப் பொருவக்
கள்ள மதிப்ப வெல்ல வீழ
என்றாங் கெட்டே பயனிலை யுவமம்

எள்ள, விழைய , புல்ல, பொருவ, கள்ள, மதிப்ப,வெல்ல,வீழ என்பவை பயனிலை உவம உருபுகளாகும்.

உவமை தோன்றும் வழிகள்
பெருமையுஞ் சிறுமையு மெய்ப்பா டெட்டன்
வழிமருங் கறியத் தோன்று மென்ப.

பெருமைப்பற்றியும் சிறுமைபற்றியும் ஒப்புமை கொள்ளப்படும் உவமைகள் நகைமுதல் உவமை ஈறாக சொல்லப்பட்ட எண்வகை மெய்ப்பாடுகளின் வழியே புலப்படத் தோன்றும்.

உவமப்போலி

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

பிறிதொடு படாது பிறப்பொடு நோக்கி

முன்ன மரபிற் கூறுங் காலைத்

துணிவோடு வருஉந் துணிவோர் கொளினே

உவமேயப் பொருள் இதுவென வெளிப்படக் கூறாமல் உவமப் பொருளை மட்டும் கூறுதல். உவமையும் கருப்பொருளைச் சார்ந்து இதற்கு இது உவமை என உவமேயப் பொருளை குறிப்பினால் அதுவும் கற்றறிந்தோர்களுக்கு மட்டும் புலனாகுமாறு கூறுதல் இது செய்யுளில் பயின்று வரும். உவமையும் உவமிக்கப்படும் பொருளுமாக சேர்த்து கூறப்படாத நிலையிலும் உள்ளுறையாக இது உவமம் போன்று பொருள் கொள்ளப்படுதலின் இதனை உள்ளுறை உவமம் என்கிறோம்.மேலும் இதனை உவமப்போலி எனவும் வழங்குவர்.

உவமப் போலி ஐந்தென மொழிப.

வினை ,பயன் ,மெய், உரு, பிறப்பு ஆகியவற்றின் காரணமாக தோன்றும் உவமைகளை உவமப்போலி என்பர்.மேலும்

தவலருஞ் சிறப்பினத் தன்மை நாடின்

வினையினும் பயத்தினும் உறுப்பினும் உருவினும்

பிறப்பினும் வரூஉந் திறந்த வென்ப.

இதில் தவலருஞ் சிறப்பினத் தன்மை நாடின் என்றதால் ஏனை உவமத்தை காட்டிலும் உள்ளுறை உவமமே செய்யுட்கும் பொருள் இலக்கணத்திற்கும் சிறந்ததாகும்.

கரும்புநடு பாத்திக் கலித்த தாமரை

சுரும்புசி களையும் பெரும்புன லூர

புதல்வ னீன்றவெம் முயங்க

லதுவே தெய்யநின் மார்புசிதைப் பதுவே (ஐங்குறு.65)

வினையுவமப் போலி ஆகும்.கரும்பு நடு பாத்தியில் தாமாக முளைத்த தாமரை சுரும்பின் பசி தீர்க்குமா என்று தலைவி தான் இல்லறம் பூண்டு விருந்தோம்பல் செய்கின்றோம் அதுபோல என்று பிறிதோர் உவமை கூறப்படவில்லை. தலைவி செய்யும் வினைப் பற்றி கூறியிருப்பதால் இது வினையுவமப் போலி ஆகும்.

ஏனைய பிற உவமங்கள்

ஒரீஇக் கூறலும் மரீஇய பண்பே உவமையை உவமிக்கப்படும் பொருளின் நீக்கிக் கூறுதலும் நெடுங்காலமாக நிலைபெற்று வழங்கும் உவம மரபாகும்.

உவமைத்தன்மையும் உரித்தென மொழிப

பயனிலை புரிந்த வழக்கத் தான.

உவமிக்கப்படும் பொருளோடு உவமைதோன்ற வருதலேயன்றி உவமையது தன்மை கூறலும் பயனிலை பொருந்திய உவமையாதலாகிறது.

பாரி பாரி யென்று பல ஏத்தி

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

ஒருவற் புகழ்வர் செந்நாப் புலவர்
பாரி யொருவனும் அல்லன்
மாரியு முண் டீண் டுலகுபுரப் பதுவே (புறம் 107)ள

பாரியின் கொடைச்சிறப்பு கூறப்பட்டுள்ளது.

அடுக்கிய தோற்றம் விடுத்தல் பண்பே
நிரனிறுத் தமைத்தல் நிரனிறை சுண்ணம்
வரன்முறை வந்த மூன்றலங் கடையே

பொருள்கோள் வகையுள் நிரள்நிரைப் பொருளில் உவமம் வரும். சுண்ணம் என்பது நாற்சீரடி இரண்டின்கண் அமைந்த எண்சீர்களை பொருள் இயல்பறிந்து கூட்டியுணரும் பொருள்கோள்.இதில் உவமையும் பொருளும் வேறு வேறு நிற்க உவமம் செய்தால் பொருள் புலப்பாட்டுக்கு சரியாக அமையாது.அதேபோல் தான் அடிமறி மொழிமாற்று ஆகும்.அதனால் சுண்ணம் ,அடிமறி ,மொழிமாற்று மூன்றும் உவமை செய்ய தகுந்த பொருள்கோள் அல்ல என நீக்கி வைக்கப்பட்டது.

இவ்வாறு தொல்காப்பியரின் உவமையியல் பகுதியில் ஆசிரியர் க.வெள்ளைவாரணரின் உரை தொல்காப்பிய நூற்பாவை நாம் தெளிவாக புரிந்துகொள்ளும் வகையில் அமைந்துள்ளது.

பார்வைநூல்கள்

[1] க.வெள்ளைவாரணன். தொல்காப்பியம் உவமையியல் உரைவளம், பதிப்புத்துறை, மதுரை காமராசர் பல்கலைக்கழகம்.

[2] ச.வே.சுப்பிரமணியன். தொல்காப்பிய உரைவளக் கோவை, பொருளதிகாரம் உவமவியல், மெய்யப்பன் பதிப்பகம்.

[3] இளம்பூரணனார். தொல்காப்பியம் எழுத்து, சொல்-பொருள், சாரதாப் பதிப்பகம்.

தமிழில் இக்கட்டுரையை இவ்வாறு மேற்கோளிடுங்கள்:

நாகலட்சுமி. "க.வெள்ளைவாரணரின் தொல்காப்பிய உவமையியல் உரை மரபுகள்." *தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்,* தொகுதி 3, சிற.இதழ் 2, தொகுதி 2, *திசம்பர்* 2020, பக். 233-240. டிஒஐ: **10.38067/ijtlls.2020.spl.v03i02v2.035**

Cite this Article in English (*MLA 8 Style*) as:

Nagalakshmi. "***Tolkāppiyam* Parable Textual Traditions of Ka.Vellaivaranar**." *International Journal of Tamil Language and Literary Studies,* Vol. 3: Special Issue - 2, Vol. 2, December 2020, pp. 233-240. DOI: **10.38067/ijtlls.2020.spl.v03i02v2.035**

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி /Author Contribution Statement: இல்லை /NIL

கட்டுரையாளர் நன்றியுரை /Author Acknowledgement: இல்லை /Nil

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

கட்டுரையாளர் உறுதிமொழி/Author Declaration: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்./I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் அரையாண்டு பன்னாட்டு ஆய்விதழ்

International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

நற்றிணையின் உரையும் பதிப்பும்

Explanatory Notes and Publication for Natrinai

ந.பாமிதா, முனைவர்பட்டஆய்வாளர், திருவள்ளுவர் அரசு கலைக்கல்லூரி, இராசிபுரம்.
N.Famitha, Ph.D. Scholar, Tamil Department, Thiruvalluvar Govt.Arts and Science College, Rasipuram.
ORCiD: https://orcid.org/0000-0001-9257-4965
முனைவர் இரா. ரம்யா மகேஸ்வரி, உதவிப்பேராசிரியர், திருவள்ளுவர் அரசு கலைக்கல்லூரி, இராசிபுரம்.
Dr.R.Ramyamaheswari, Assistant Professor, Tamil Department, Thiruvalluvar Govt.Arts and Science College, Rasipuram.
ORCiD: https://orcid.org/0000-0002-1229-0960
DOI: 10.38067/ijtlls.2020.spl.v03i02v2.036

Abstract

Sangam Literature mainly gives importance to love and valour. There are some anthologies in particular that deals with the theme. Eight Anthologies (Ettuthogai) and Ten Idylls (Pathuppaatu) is notable among them. "Natrinai" is one of the verses of Eight Anthologies. It means excellent thinai. Thinai means Discipline. Natrinai portraits four hundred verses with measured feet with beautiful words. It is also called as Natrinai Nanuru. It has high speculation of economics. It depicts the intuition of people. Pinnathu Narayanasamy was the first person who wrote description for "Natrinai". As the description has so many differences in the concept of the poem and name of the poet, it created a demand for another description. So Avvai Duraisamy Pillai wrote a description for the verse. His description is given with the perfect examination which has the example of research text. It has higher notions than the other description. The work has many recent publications and publisher. Everyone pleases with the description of Avvai Duraisamy.

Keywords: Natrinai Nanuru, Discipline, Love, Economics, Pinnathur Narayana Samy, Avvai Duraisamy Pillai, Publisher, Publications.

முன்னுரை

நற்றிணை, நல்+திணை எனப் பிரிந்து நல்ல ஒழுக்கம் என்பதைச் சுட்டும். அறத்தொடு நிற்கும் அகமரபினை இயம்புவதாலும், அளவான அடிகளால் அன்பின் ஐந்திணையை நயமுடன் நானூறு பாக்கள் மூலம் விளக்குவதாலும் 'நற்றிணை' என்றும் 'நற்றிணை நானூறு' என்றும் வழங்கப்படுகிறது. நற்றிணையில் பாடல்கள் பொருளியல் சிந்தனை உள்ளனவாகக் காணப்படுகின்றன. பொருளைப் பற்றிய கருத்துக்கள் அனைத்தும் அறவழிப் பொருளையே பெரிதும் வலியுறுத்துகின்றன.

பகுப்பும் தொகுப்பும்

மனிதர்களின் அகவுணர்வுகளை உணர்த்தும் பாடல்களின் தொகுப்புதான் நற்றிணை. நூற்றி எழுபத்தைந்து புலவர்கள் வெவ்வேறு இனத்தவரால் வேறுவேறு காலத்தில் வாழ்ந்து இப்பாடல்களை இயற்றியிருப்பினும் திணையால் அகத்தைக் கூறுகிறது. நற்றிணையின் சிற்றெல்லை ஒன்பது பேரெல்லை பன்னிரெண்டு என்றிருப்பினும், ஓரிரு பாடல்கள் 13,14 அடிகளுடன் காணப்படுகின்றன.

ஔவை துரைசாமிப் பிள்ளையின் புலமை

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

நற்றிணைக்குப் பல சான்றோர் பெருமக்கள் உரை ஒழுதியுள்ளனர் எனினும் பல்வேறு ஏட்டுப் பிரதிகளையும் நுட்பமாகப் பரிசோதித்து பொருத்தமான குறிப்புகளைத் தந்து சான்று காட்டிச் சொல்லும் நேர்மைக்கு உரியவர் ஔவை துரைசாமிப் பிள்ளை. இவருடைய உரை பல சிறப்புகளைக் கொண்டுள்ளது. புலவர் குறிப்பு, உரை விளக்கம், தொடர்புடைய ஒப்புமைப் பகுதி, அகச் சான்றுகளுடன் புறச்சான்று, கல்வெட்டுச் சான்று என வரையப்பட்டுள்ளது. சங்கப் பாடல்கள் இயற்கை வளம் செறிந்தவை என்பதால் சுட்டப்படும் மரம் செடி கொடி ஆகியவற்றின் சிறப்புகளையும் சுட்டிச் செல்வது அவருடைய அறிவியல் புலமைக்குச் சான்றாகும்.

ஔவை துரைசாமிப் பிள்ளையின் பிற நூல்கள்:

ஐங்குறுநூறு உரை, சிலப்பதிகார ஆராய்ச்சி, பதிற்றுப்பத்து உரை, நந்தா விளக்கு, தெய்வப் புலவர் திருவள்ளுவர், தமிழ்த் தாமரை, சூளாமணி, சைவ இலக்கிய வரலாறு, புறநானூறு மூலமும் உரையும், மணிமேகலை ஆராய்ச்சி போன்ற பல நூல்களையும் எழுதியுள்ளார். ஊர்ப்பெயர் - வரலாற்றாராய்ச்சி, மருள்நீக்கியார் நாடகம் ஆகியவை அச்சில் வெளிவராத நூல்களாக உள்ளன.**“நற்றிணைக்குப் பழைய உரை இல்லை. 20ஆம் நூற்றாண்டு உரையாசிரியர்களில் ஒருவரான பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் நற்றிணைக்குச் சிறந்த உரையும் ஆராய்ச்சி முன்னுரையும் இயற்றிப் பதிப்பித்தார். அண்மையில் ஔவை.சு.துரைசாமிப்பிள்ளை அரியதோர் உரை விளக்கம் எழுதியுள்ளார்”[1].** (உரையாசிரியர்கள் மு.வை.அரவிந்தன் ப-321)

நற்றிணையின் பதிப்பு வரலாறு

சென்னைப் பல்கலைக் கழகத்தின் தமிழ்த்துறைத் தலைவராயிருந்த பேராசிரியர் வையாபுரிப் பிள்ளை அவர்கள். அப்பொழுது சமாசக் காரியதரிசியாய் பணிபுரிந்த திரு.மா.பாலசுப்பிரமணிய முதலியார் அவர்கள், ஔவை துரைசாமிப் பிள்ளையை, வையாபுரிப் பிள்ளைக்கு அறிமுகம் செய்து வைத்தார். துரைசாமிப் பிள்ளையை வரவேற்று, இவர் எழுதிய ஐங்குறுநூற்று உரையைப் பாராட்டி, தம்மிடமிருந்த நற்றிணை ஏடு ஒன்றைக் காட்டி, இதையும் நீங்கள் ஆராய்ந்து வெளியிட வேண்டும் என்று உரைத்துள்ளார். அதற்கு ஔவை துரைசாமிப் பிள்ளையவர்கள் ஒப்புக் கொண்டு, அந்த ஏட்டை தருமாறு வேண்டியுள்ளார். இது மதுரைத் தமிழ்ச் சங்க ஏடு என்றும் இதனை நீங்கள் பல்கலைக் கழகத்தின் வழியாகப் பெற வேண்டும் என உரைத்து அதற்கு உரிய முறையையும் தெரிவித்துள்ளார்.

நற்றிணை ஆராய்ச்சிக்கு துணை செய்த ஏடுகள்

1. அரசினர் கையெழுத்து நூல் நிலைய ஏடு
2. மதுரைத் தமிழ்ச்சங்கத்து ஏடு
3. டொம்மிச்சேரி கருப்பையாத் தேவர் ஏடு
4. புதுப்பட்டி சிவ.மு.முத்தையா செட்டியார் ஏடு

பதிப்பு முயற்சி

நற்றிணை ஆராய்ச்சிக்கு துணை செய்த ஏடுகளை உடன் வைத்து ஆராய்ந்ததில் சுமார் 1500க்கு மேற்பட்ட பாடவேறுபாடுகளும், பெயர் தெரியாதிருந்த பல பாட்டுக்களின் ஆசிரியர்

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

பெயர்களும் தெரியவந்தன சில ஆசிரியர்களின் பெயர்களும் திருத்தமடைந்தன. அவற்றின் உண்மை வடிவு காண்பதற்கும், ஆசிரியர் பெயர்களிலும் பாட்டுக்களிலும் காணப்படும் ஊர்களை அறிதற்கும் அரசியலார் வெளியிட்டிருக்கும் கல்வெட்டுத் தொகுதிகளும் ஆண்டறிக்கைகளும் போதிய துணைபுரிந்தன. ஏடுகளை ஒப்பு நோக்கிய போது காணப்பட்ட பாட வேறுபாடுகளால் பாடல்களுக்கு உரையே வேறு எழுதவேண்டிய இன்றியமையாமை பிறந்தது. அதனால் இப்பதிப்பு நற்றிணை மூலத்தோடு விளக்கவுரை பெற்று வெளிவந்துள்ளது.

பெயர் வேறுபாடு

துரைசாமிப் பிள்ளையவர்கள் அச்சாகி வந்த நற்றிணை நூலைப் பார்த்துப் பாடல்களைப் பதிக்கவில்லை. பழைய ஏடுகளை நேரிற்கண்டு ஒப்பு நோக்கிச் சிறந்த பாட வேறுபாடுகளை ஆராய்ந்து தெளிந்த பின்னரே பதிப்பித்திருக்கிறார். சான்றாக **"ஐயரவர்கள் பதிப்பில் பிரமச்சாரிஎன்று காணப்படும் பெயர் பிரமன்காரி"**[2] (நற்-34) என்றும்,**"கோண்மா நெடுங்கோட்டனார் என்பது கோமால் நெடுங்கோடனார்"**[3](நற்-40) என்றும்,**"சல்லியங் குமரனார் என்பது அரிசிலங்குமானார்"**[4] (நற்-141) என்றும் திருந்தியுள்ளன. **"முட்டத்திருமாறன் என்பதை முடத்திருமாறன்"**[5] (நற்-105) என்று அழைக்கப்பட்டு வருகிறது. இவ்வாறு திருத்தம் பெறுவன பல உள்ளன.

பாடல்கள் பாடிய புலவர்களின் பெயர் காணப்படாதிருந்த பல பாட்டுக்களுக்கு ஆக்கியோர் பெயர், இப்பொழுது நமது உரைவேந்தரால் காணப்பட்டுள்ளது. பாட்டின் நலம் கண்டு மகிழ்வோர். அதனைப் படைத்த புலவர் பெயர் காணாமல் எய்தும் வியப்பிற்கு இது ஒரு தெளிவான மருந்தாகும் (நற்-8,10,22,24,84)

உரை நலம்:

சங்க இலக்கிய நூல்களுக்கு உரை எழுதுவோர் பல உள்ளன.**'அல்குல்'**[6] (நற்-8) என்னும் சொல்லிற்கு பொருள் எழுதியவர்கள் ஆண்களும், பெண்களும் சேர்ந்து கற்க வேண்டிய நூல்கள் சங்க இலக்கியம் என்பதை மறந்து பெண்களுக்கு நாணத்தை ஏற்படுத்தக் கூடிய வகையில் பொருளுரைத்தனர். இதனை ஔவை அவர்கள் மாற்றியுள்ளார். அல்குல் எனும் சொல் ஆடவர்க்கு உரியதென உணர்த்தி அதற்குத் துணையாக "கொள்வீர் அல்குல் ஓர் கோவணம்" எனும் ஞானசம்பந்தரது தேவாரத்தை எடுத்துக் காட்டியுள்ளார்.

மற்றொரிடத்தில் **"ஏவல் மறுத்த சிறு விளையாட்டி"**[7](நற்-110), என்ற பாடலின் விளக்கவுரையில்ஒழுக்கமும் அறிவும் உணர்ந்த பெற்றியைக் குறிக்கும் பொழுது,**"கொண்ட கொழுநன்"என்றது கொழுநற்குக் கொளற் குரிமையும்,கொடுத்த தந்தை என்றது தந்தைக்குக் கொடையுரிமையும் இயல்பாய்க் கிடந்தவாறு சுட்டினாள் என இயல்பு தோன்ற உரையமைத்துள்ளார்**.

பாட்டின்கண் ஒவ்வொரு சொல்லும் அமைந்து கிடக்கும் சிறப்பினை உரையாசிரியர் அவற்றின் இயல்பும் சூழலும் தோன்ற விளக்குவது பாடலுக்கு மேலும் ஒளி கூட்டுகிறது. **"விளையாடாயமோடு"**[8](நற்-172) எனத் தொடங்கும்பாடலின்கண் தலைமகள் விளையாட்டயர்கையில் பெண்களால் **"வேண்டுமென்றே புதைத்ததன்று"**என்னும் விளக்கம் பாட்டினை மேம்படுத்துகின்றது.

International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

பெண்மையை பெண்மையின் மென்மையை அதற்கு நேர்மாறான உள்ளத்திண்மையை நன்குணர்ந்தவர் நமது உரையாசிரியர். பெண்ணுள்ளத்தின் பெருந்தகைமையைக் குறிக்கின்றார். **காதலால் உடம்பும் உயிரும் வாடியபோது உயிரினும் மேலான நாணிறந்து தலைவி கூறுகின்றாள் அத்தலைமகளது கூற்றிற்கு ஆசிரியர் தரும் ஏற்றம் பெண்மைப் பெருவிளக்கினை மேலும் சுடர்தரச் செய்கின்றது. அவர் உரை தலைவியது இக்கூற்றின் கண் காதலுணர்ச்சியாற் கைம்பிக்கு வெதும்பும் இளமையுள்ளம், கற்புச்சிறையிற் கிடந்து அலமரும் திறம் நன்று விளங்குகிறது”**[9](நற்-182).

பிற்காலப் பதிப்புகள்

பின்னத்தூராரின் பதிப்பிற்குப் பிறகு ஔவை துரைசாமி பிள்ளையின் பதிப்பு அனைவரும் வரவேற்கத் தக்கவையாக அமைந்தது. நற்றிணைக்கு ஔவை சு.துரைசாமிப் பிள்ளையின் விரிவான ஆராய்ச்சியுரையுடன் கூடிய பதிப்பு வெளிவந்துள்ளது. நியூசெஞ்சுரி புக்ஹவுஸ் பி.லிட் நிறுவனத்தார் சங்க இலக்கியங்கள் எனும் தலைப்பில் பன்னிரெண்டு பாகங்கள் கொண்ட தொகுதியை வெளியிட்டனர். அதில் நற்றிணை பாடல்களின் மூலம் மட்டும் பதிப்பிக்கப்பட்டுள்ளது. உரையின் துணையின்றியே விளங்கிக் கொள்ளும் வகையில் பாடல்கள் சந்தி பிரித்துக் கொடுத்திருப்பதும். அவற்றின் நிறுத்தற் குறியீடுகளை மேற்கொண்டிருப்பதும் இப்பதிப்பின் சிறப்பு என்று அந்நூலின் பதிப்புரையில் தெரிவித்துள்ளனர். இதன் இரண்டாம் பதிப்பு 1981-ல் வெளிவந்தது.

இப்பதிப்பு 158 பக்கங்களைக் கொண்டதாக அமைந்துள்ளது. பின்ணிணைப்புப் பகுதியில் நற்றிணையின் 234-ஆவது பாடல் என்று கருதி எஸ்.வையாபுரிப்பிள்ளை எடுத்துக்காட்டும் (களவியற்காரிகை ப.129) பாடலையும் தொல்காப்பியப் பொருளதிகார உரையில் (களவியல், நூல் 23) நச்சினார்க்கினியர் எடுத்துக்காட்டும் செய்யுள் ஒன்றும் நற்றிணை பாடல்களின் சாயலைப் போல் உள்ளது. 1967இல் புலியூர்கேசிகன் தெளிவுரையுடன் கூடிய பதிப்பிணைப் பாரி நிலையம் வெளியிட்டுள்ளது. இப்பதிப்பு இரண்டு தொகுதிகளாகப் பிரிந்து 436 பக்கங்களைக் கொண்டுள்ளது. “இதில் 234-ஆவது பாடல் குறுந்தொகையின் 307-ஆவது பாடலாக இருக்கலாம் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. நற்றிணை எனும் அகநூல் தொடர்பாக உ.வே.சா திரட்டி வைத்திருந்த குறிப்புகளை எச்.வேங்கடராமன் செம்மை செய்து, உ.வே.சா நூல் நிலையம் வழியாக 1989 இல் பதிப்பித்தார்.

நூற்பதிப்புக் கழகங்கள்

சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம் (1952) பாரி நிலையத்தாரின் பதிப்பு, மர்ரே அன் கம்பெனி, அருணா பப்ளிகேசன்ஸ், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் ஆகிய வெளியீட்டாளர்களின் பதிப்புகளும் வெளிவந்துள்ளன. ஏட்டிலிருந்து நூலைப் பதிப்பிக்கும்போது பல இடர்பாடுகள் ஏற்படுவதுண்டு, மூல வடிவமான எழுத்துக்களை நன்று ஆய்ந்து அச்சேற்ற வேண்டும். பனையோலைகளில் எழுதி வைக்கப்பட்ட செய்யுட்கள் ஒருவரால் ஒரே நாளில் எழுதப்பட்டவை அல்ல வெவ்வேறு காலங்களில் புலவர்கள் பலர் எழுதியவையாகும். ஔவை அவர்கள் உரை விளக்கத்திற்கு உதாரணம் காட்டும் பொழுது தொல்காப்பிய நூற்பாக்களை சுட்டியுள்ளார்.

ஔவை துரைசாமிப் பிள்ளையின் நற்றிணை மூலமும் உரையும் என்ற நூலை சாரதா பதிப்பகம் 2016-ஆம் ஆண்டு வெளியிட்டுள்ளது.

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

முனைவர் கு.வெ.பாலசுப்பிரமணியன் எழுதிய நற்றிணை மூலமும் உரையும் என்ற நூலை நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் 2004-ஆம் ஆண்டு வெளியிட்டுள்ளது. புலியூர்க்கேசிகன் எழுதிய தெளிவுரையை ஸ்ரீ செண்பகா பதிப்பகம் 2010-ஆம் ஆண்டு வெளியிட்டுள்ளது. உரையாசிரியர் அ.ப.பாலையன் எழுதிய உரையை சாரதா பதிப்பகம் 2009-ஆம் ஆண்டு வெளியிட்டுள்ளது.

நூல் அமைப்பு:

ஔவையின் நூல் அமைப்பு முறையானது பதிப்புரை முன்னுரை,அணிந்துரை, உரைநலம் ஆகிய தலைப்புகளைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு பாடலைப் பற்றிக் கூறும் பொழுது ஆசிரியர் பெயர் வரலாறு, ஆசிரியர் வரலாறு, துறை விளக்கம், கூற்று விளக்கம், உரை விளக்கம், மேற்கோள் பாடல்களையும் அமைத்து எழுதியுள்ளார். **234 ஆவது பாடலைக் குறிக்கும் பொழுது புதுப்பட்டி யேடு 233 ஆம் பாட்டின் இறுதியில் “இதனை அடுத்துவரும் பாட்டு இறந்ததுஎன்று கூறுகிறது என்றும் தேவர் ஏடு, “இப்பாட்டு இறந்தது” என்று குறிக்கிறது”[10] (நற்)** எனக் கூறியுள்ளார்.

385-ஆவது பாடலைக் குறிக்கும் பொழுது இப்பாட்டு இவ்வளவில் முடிந்தது, இறுதியில் “இவ்வஞ்சிலாந்தையார் பாட்டு இறந்தது”[11] (நற்) என்றொரு குறிப்புத் தமிழ்ச்சங்க ஏட்டில் உளது. அச்சுப்படியில் இக்குறிப்பும் காணப்படவில்லை. ஆயினும் இப்பாட்டின் அடிக்குறிப்பு,“கிடைத்த பிரதிகளனைத்திலும் இந்த அளவே காணப்படுகிறது. இதன் எஞ்சிய பாகமும் துறைக் குறிப்பும் பாடினார் பெயரும் காணப்படவில்லை” என்று கூறுகிறது. மதுரைத் தமிழ்ச்சங்க ஏட்டில் “எழுதெழில் மழைக்கண்” என்பதும் சிதைந்து விட்டது எனக் கூறியுள்ளார்.இறுதியில் செய்யுள் முதற்குறிப்பு, சிறப்புப் பெயர் அகரமுதலி பாடினோரும், பாடல்களும், பாடப்பட்டோர் ஆகிய குறிப்புகளையும் கூறியுள்ளார்.

தொகுப்புரை

ஔவை துரைசாமியின் உரையில் இலக்கிய நெறியும் மரபும் காணப்படுகின்றன. பாட்டில் உரைகாண முன்பின் மாற்றிக் கூறுமிடத்தில் மாற்றியும் சொற்களை வருவித்துக் கூற வேண்டிய இடத்துச் சொற்களைச் சேர்த்தும் உரை கூறுவார். பாட்டு எழுந்த சூழலை விளக்குவார். அமைப்பில் அருமை, நடையில் எளிமை, உரையின் பண்புகள், நுட்பங்களைப் பரவலாகக் காணமுடிகிறது. இந்நூலின் பாடல்களுக்குத் திணைப்பாகுபாடு செய்யப்படவில்லை. அகப்பாடல்களுக்குத் திணைப்பாகுபாடு இன்றியமையாத் தேவை என்பதால் பிற்கால அச்சுப்பதிப்பாளர்கள் நற்றிணையின் பாடல்களுக்குத் திணைப்பாகுபாடு செய்து பதிப்பித்தனர். பின்னத்தூரார், சோமசுந்தரனார், துரைசாமிப்பிள்ளை, எச்.வேங்கடராமன், புலியூர்க்கேசிகன் ஆகிய பலர் உரை எழுதி பதிப்பித்துள்ளனர்.

துணை நூற்பட்டியல்

[1] ஔவை சு.துரைசாமிப்பிள்ளை. நற்றிணை மூலமும் உரையும், சாரதா பதிப்பகம் சென்னை.

[2] புலியூர் கேசிகன் உரை. நற்றிணை, ஸ்ரீ செண்பகா பதிப்பகம், 32-B, கிருஷ்ணா தெரு,

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

சென்னை – 600 017.

[3] மு.வை.அரவிந்தன். உரையாசிரியர்கள், மணிவாசகர் பதிப்பகம், 8/7,சிங்கர்தெரு, பாரிமுனை, சென்னை.

தமிழில் இக்கட்டுரையை இவ்வாறு மேற்கோளிடுங்கள்:

ந.பாமிதா & ரம்யா மகேஸ்வரி. "நற்றிணையின் உரையும் பதிப்பும்." *தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்*, தொகுதி 3, சிற.இதழ் 2, தொகுதி 2 *திசம்பர்* 2020, பக். 241-246. டிஓஐ: **10.38067/ijtlls.2020.spl.v03i02v2.036**

Cite this Article in English (*MLA 8 Style*) as:
Famitha & Ramyamaheswari . "Love (Kalavu) Theoretical Development in "Tholkapiam" and Textual Convention." *International Journal of Tamil Language and Literary Studies*, Vol. 3: Special Issue - 2, Vol. 2, December 2020, pp. 241-246. DOI: **10.38067/ijtlls.2020.spl.v03i02v2.036**

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி /Author Contribution Statement: இல்லை /NIL

கட்டுரையாளர் நன்றியுரை /Author Acknowledgement: இல்லை /NIL

கட்டுரையாளர் உறுதிமொழி/Author Declaration: இல்லை /NIL

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் அரையாண்டு பன்னாட்டு ஆய்விதழ்

International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

வைத்தியநாத தேசிகரின் உரைத்திறன்

The Explanatory Skill of Vaithiyanatha Desikar

சி.பாரதி, முனைவர்பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை , பெரியார் பல்கலைக்கழகம், சேலம்-.
S. Bharathi, Research Scholar, Department of Tamil, Periyar University, Salem
ORCiD: https://orcid.org/**0000-0002-2186-4954**
முனைவர். வசந்தமாலை, இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை, பெரியார் பல்கலைக்கழகம், சேலம்-
Dr.R.Vasanthamalai, Associate Professor, Department of Tamil, Periyar University,
ORCiD: https://orcid.org/0000-0002-5867-3780
DOI: 10.38067/ijtlls.2020.spl.v03i02v2.037

Abstract

In the development of Language, transformation is the observable fact by which stable variations are made in the features and the use of a language. Language updates itself over the generation of people in a society or country. "Tolkāppiyam" is considered as the fundamental grammatical and social treatise of the Tamil language. Critics like Ilampuranar, Naccinarkkiniyar, and Professor Senavarayar have written elucidation scripts for the "Tolkāppiyam". The critics organized the scripts with their own ideologies as it should be resisted over the generations. People find it difficult to understand the original text without the help of critics' explanatory texts. It is no amplification to say that the contribution made by the critics to the Tamil grammar books is immeasurable. Vaithiyanatha Desikar's Grammar book is considered as one of the best among five distinctive grammar books in the history of Tamil grammar. This paper proposes to elaborate on how to identify the structure of the text, meaning of the text, and the new techniques, focusing on the grammatical quotations in the grammar with the help of the prime source "Tolkāppiyam".

Keywords: Explanatory Skill, Vaithiyanatha Desikar

முன்னுரை

மொழி என்பது காலத்திற்கு ஏற்ற வகையில் மாறிவரும் இயல்புடையது. ஒவ்வொரு காலகட்டத்திற்கு ஏற்ப மொழி தன்னைப் புதுப்பித்துக்கொண்டே செல்கின்றன. தமிழ் மொழியின் ஆணிவேராக இடம்பெறும் தொல்காப்பியத்திற்கு இளம்பூரணர், பேராசிரியர், சேனாவரையர், நச்சினார்க்கினியர் என்று பல்வேறு உரையாசிரியர்கள் உரை இயற்றியுள்ளனர். இவ்வுரையாசிரியர்கள் உரை வகுத்துச் செல்லும் தருணத்தில் தன்னுடைய கருத்துக்களை நிலை நிறுத்துபவர்களாகவே உரை இயற்றியுள்ளனர். மூலநூல் இயற்றிய ஆசிரியரைப் புரிந்துகொள்வதில் பல்வேறு சிக்கல்கள் உருவாகின்றன. தமிழ் இலக்கண நூல்களுக்கு உரையாசிரியர்கள் செய்த பங்கு அளவிடற்கரியது என்று சொன்னால் அது மிகையன்று. வைத்தியநாத தேசிகரின் கடின உழைப்பில் வெளிவந்த இலக்கண விளக்கம் தமிழ் இலக்கண வரலாற்றில் தனிச்சிறப்பு பெற்ற ஐந்திலக்கண நூல்களுள் ஒன்றாகத் திகழ்கின்றது. இலக்கணவிளக்கம் எழுத்ததிகாரத்தில் இடம்பெறும் தொல்காப்பிய மேற்கோள்களை

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

மையப்படுத்தி உரையின் அமைப்பு குறித்தும், உரைத்திறன் குறித்தும், புதிய உத்தி முறைகள் குறித்தும் அடையாளப்படுத்துவதே இக்கட்டுரையின் நோக்கம்.

தொல்காப்பியம்

பழிப்பில் சூத்திரம் பட்ட பண்பின்
கரப்பின்றி முடிவது காண்டிகை யாகும். (தொல்.பொருள்.சூ.656)

இதன்வழி ``செய்யுளியலுள் ஓதிய இலக்கணமும் இவ்வியலுள் மேற்கூறப்பட்ட மரபுகளும் பற்றிவரும் குற்றமில்லாத சூத்திரத்தான் உணர்த்தக் கருதிய இலக்கணங்களுள் யாதொன்றையும் மறைத்தலின்றிப் பொருள் நனி விளங்கும் சொற்களாலும் தொடர்களானும் முடிந்து நிற்பது காண்டிகையாகும்.'' (தொல்.பொருள்.பகுதி.3 ஆராய்ச்சிக் காண்டிகையுரை. பெ.மாதையன், ப.215) என்பதன்வழி தொல்காப்பியத்திலேயே உரைபற்றியப் பதிவு இடம்பெறுகின்றது என்பதை அறியமுடிகின்றது.

நன்னூல்

பாடம் கருத்தே சொல்வகை சொற்பொருள்
தொகுத்துரை உதாரணம் வினா விடை விசேடம்
பிரிவு அதிகாரம் துணிவு பயனோடு
ஆசிரிய வசனம் என்று ஈரேழ் உரையே. (நன்னூல்.எழுத்.நூ.21)

என்பதன்வழி

1. "மூலப்பாடம்
2. கருத்துரை
3. சொற்களைக் குறித்தெழுதும் உரை
4. சொல்லுக்குப் பொருள் எழுதும் பதவுரை
5. பொழிப்புரை
6. எடுத்துக்காட்டு
7. வினா
8. விடை
9. சிறப்பாக வேண்டியவைகளைத் தந்துரைத்தல்
10. வேற்றுமையுருபு முதலியன தொக்கி நிற்பின் அவைகளை விரித்துரைத்தல்
11. எடுத்துக்கொண்ட அதிகாரம் இதுவாதலால் இச்சூத்திரத்தின் பொருள் இதுவென அவ்வதிகாரத்தோடு பொருந்த உரைத்தல்.
12. ஐயுற நின்ற இடத்தில் இதற்கு இதுவே பொருள் எனத் துணிந்துரைத்தல்
13. இவ்வாறு சொல்லியதனால் வந்த பயன் இது என்று உரைத்தல்
14. பழைய நூல்களில் மேற்கோள் காட்டுதல்'' **(நன்னூல்-சோம. இளவரசு உரை, பக்.22-23)**

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

மேற்குறித்த சான்றுகளின் மூலம் உரையினது பொது இலக்கணம் குறித்து நன்னூலார் 14 நிலைகளில் தெளிவுபடுத்துகின்றார் என்பது புலனாகிறது.

உரைத்திறன்

வைத்தியநாத தேசிகர் தான் இயற்றிய இலக்கண விளக்கத்திற்கு எந்த நிலையிலும் குழப்பம் இருக்கக்கூடாது என்பதற்குத் தானே உரைவகுத்துள்ளார். கி.பி.பதினேழாம் நூற்றாண்டில் உரை வகுத்த உரையாசிரியர் உரை முறைகளில் சில புதிய உத்தி முறைகளைக் கையாண்டுள்ளார். அவை, 1. இதன்பொருள் 2. விளக்கம் 3. எடுத்துக்காட்டு 4. வரலாறு 5.முன்னை உரை மரபைப் பின்பற்றல் என்னும் ஐந்து நிலைககளில் உரை விளக்கத்தைத் தெளிவுபடுத்திச் செல்கின்றார். ஒத்த நூற்பாக்கள் எனும் அமைப்பில் இலக்கண விளக்கம் எழுத்ததிகாரம் பத்தாவது நூற்பாவிற்கு உரை வகுத்துச் செல்லுகையில் செறிவான முறையில் உரையைப் பதிவுசெய்துவிட்டு **ஒத்த நூற்பாக்கள்** என்னும் நிலையில் தொல். 84, தொல்.100, நன்.75, தொன்னூல் விளக்கம், 03, முத்துவீரியம் எழுத்ததிகாரம் 43, (இலக்கண விளக்கம் - எழுத். (ப.ஆ.) தி.வே.கோபாலையர் ப.129) என்று இந்நூற்பாவோடு தொடர்புடைய பிற இலக்கண நூற்பாக்களையும் தொகுத்துத் தருகின்றார். இந்த உத்திமுறை உரையாசிரியர்கள் யாரும் கையாளாதவை என்பதன்வழி தன்னை நிலைநிறுத்திக் கொள்கின்றார் என்பது புலப்படுகின்றது.

தொல்காப்பிய மேற்கோள்கள்

தொல்காப்பிய நூற்பாக்கள் சொற்கள் நிலையிலும், ஒன்று, இரண்டு, மூன்று என்று உரையின் தேவைக்கு ஏற்ற வகையிலும் மேற்கோள்களாகக் கையாளப்பட்டுள்ளன. இம்மேற்கோள்கள் முன்னர் குறிப்பிட்ட ஐந்து நிலைகளில் வேறு வேறு இலக்கணப் பொருளமைப்பின் கீழ் 509 இடங்களில் மேற்கோள்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. மேற்குறிப்பிட்ட குறிப்புகளின் வழி வைத்தியநாத தேசிகரின் தொல்காப்பிய அறிவாற்றல் நன்கு புலப்படும்.

இலக்கணவிளக்கம்

இலக்கணவிளக்கம் எழுத்ததிகாரத்திற்கு உரை வகுத்துச் செல்லும் தருணத்தில் தொல்காப்பியத்திலிருந்து 509 மேற்கோள்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இம்மேற்கோள்கள்

வ.எண்	இலக்கண விளக்கம்	தொல். மேற்கோள்கள்	மீண்டும் மீண்டும் இடம்பெறும் மேற்கோள்கள்
1.	எழுத்தியல்	127	25
2.	பதவியல்	041	22
3.	உயிரீற்றுப்புணரியல்	238	25

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் அரையாண்டு பன்னாட்டு ஆய்விதழ்

International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

4.	மெய்யீற்றுப்புணரியல்	074	28
5.	உருபு புணரியல்	029	07
	மொத்தம்	509	97

என்பதன்வழி இலக்கண விளக்க நூற்பாக்களைத் தெளிவுபடுத்துவதற்காக 509 தொல்காப்பிய நூற்பாக்களை உரைமேற்கோள்களாகப் பயன்படுத்தியுள்ளார். இவற்றுள் மீண்டும் மீண்டும் இடம்பெறும் வகையில் 97 நூற்பாக்கள் வெவ்வேறு பொருண்மையின் அடிப்படையில் கையாளப்பட்டுள்ளன என்பது புலப்படுகின்றது.

வ.எண்	**இலக்கண விளக்கம்-எழுத்திகாரம்**	**தொல்காப்பிய உரைமேற்கோள்கள்**
1.	இதன்பொருள்	17
2.	விளக்கம்	301
3.	எடுத்துக்காட்டு	019
4.	வரலாறு	059
5.	முன்னை உரைமரபு	113
	மொத்தம்	509

என்பதன் வழி பகுத்துத் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. வைத்தியநாத தேசிகர் தன்நூலுக்கு உரைவகுத்துச் செல்லுகையில் ஐந்து நிலைகளில் உத்தி முறைகளைக் கையாண்டு புதுமையான கருத்துக்களைப் பதிவுசெய்து தன்னை நிலைநிறுத்திக் கொள்கின்றார் என்பது புலப்படுகின்றது. அந்த வகையில் "உரையாசிரியர்கள் பாடலின் கருத்தை விளக்குவதற்குச் சொற்களின் பொருளையும் அவற்றின் பல்வேறு பரிமாணங்களையும் எடுத்து விளக்க வேண்டியது அவசியம். இதற்கு அவர்கள் பின்பற்றியுள்ள நெறிமுறைகள் பலவாக உள்ளன". (உரையியல், பெ.மாதையன், ப.31) என்பதன் அடிப்படையில் இனி காணலாம்.

கடவுள் வணக்கம்

மலைமகள் ஒருபால் மணந்து உலகு அளித்த
தலைவனை வணங்கிச் சாற்றுவன் எழுத்தே (இலக்கண விளக்கம், எழுத். நூ.01)

இந்நூற்பாவிற்குச் செறிவான முறையில் உரை இயற்றிச் செல்லும் தருணத்தில் ``இரண்டாம் வேற்றுமை உருபு உயர்திணைப் பெயர்கள் ஒழியாது வருதல் வேண்டும் என்பது விதி. ஆனால் செய்யுள் யாப்புக் கருதி `ஆடூஉ அறிசொல்' என்பது போலச் சிறுபான்மை செய்யுள் விகாரத்தால் மறைந்தும் வருதல் கூடும். சூத்திரமும் எழுவகைச் செய்யுளுள் ஒன்று'' (இலக்கண விளக்கம் எழுத்து 01, உரை ப.71) என்று கூறிச் செல்லுகையில்

பாட்டுஉரை நூலே வாய்மொழி பிசியே
முதுசொல் அங்கதம் என்று அவ்வேழ் நிலத்தும் (தொல்.செய்.78)

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

இதன்வழி தொல்காப்பியர் கூறிய பாட்டு, உரை, நூல், வாய்மொழி, பிசி, அங்கதம், முதுசொல் போன்ற ஏழுவகை இலக்கிய வகைகள் இலக்கண விளக்க நூற்பா விளக்கத்தோடு ஒன்றி வருவதால் உரைமேற்கோள்களில் ஒன்றாகப் பயன்படுத்தியுள்ளார் என்பது வெளிப்படுகின்றது.

சார்பெழுத்துக்கள்

"குற்றியல் இகரம் குற்றியல் உகரம்
ஆய்தமொடு உயிர்மெய் ஈரளவு ஐஔ
…ஆயிரு நூற்றுஎண் ணைந்தும் அதன் விரியே" (இலக்கண விளக்கம், எழுத்.நூ.05)

இந்நூற்பாவிற்கு உரையியற்றிச் செல்லும் சூழலில் வைத்தியநாத தேசிகர் சார்பெழுத்து ஒன்பது என்றும் சார்பெழுத்தின் விரி 240 என்றும் பதிவிட்டுச் செல்லுகின்றார். சார்பெழுத்தின் வரையறையில் தொல்காப்பியம் 03 வகையாகவும் நன்னூல் 10 வகையாகவும் பதிவிட்டுச் செல்லுகின்றனர். உரையாசிரியர் இவற்றிலிருந்து மாறுபட்டு புதிய கருத்தைப் பதிவு செய்கின்றார். இக்கருத்து தமிழ் இலக்கண வரலாற்றில் யாரும் கூறாத புதிய கருத்து என்பது தெளிவுபடுகின்றது. இவ்வாறு உரை நகர்த்திச் செல்லும் தருணத்தில் ``குற்றியலிகரம், குற்றியலுகரம், ஆய்தம் என்ற மூன்றனையுமே சார்பெழுத்தாகக் கூறிய தொல்காப்பியனாரும்'' (இ.வி.எழுத்.நூ.05, ப.93) என்னுமிடத்தில் (தொல்.41; 42; 33; செய்18; 56; 57; 13; 51; 52; 330 சார்பெழுத்துக்கள்) போன்ற தொல்காப்பிய நூற்பாக்களைத் தன் தேவைக்கு ஏற்றவகையில் உரைமேற்கோள்களாகக் கையாளப்பட்டுள்ளது. இதன்வழி வைத்தியநாத தேசிகர் தொல்காப்பியத்தில் அறிவாற்றல் படைத்தவர் மற்றும் ஆழங்கால் பட்டவர் என்பது நன்கு விளங்கும்.

முடிவுரை

தொல்காப்பியம், இறையனார்களவியல், நன்னூல், இலக்கணவிளக்கம், போன்ற நூல்களில் கால அடிப்படையில் சில மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டிருப்பதை மேற்குறித்த சான்றுகள் தெளிவுபடுத்துகின்றது. தொல்காப்பிய நூற்பாக்கள் சொற்கள் நிலையிலும், ஓரடி, ஈரடி, மூவடி என்று தன் உரைவிளக்கத்திற்கு ஏற்ற வகையில் மேற்கோள்களாக கையாளப்பட்டுள்ளன என்பதை மேற்குறித்த சான்றுகளின் வழி வெளிப்படுகின்றது. இலக்கண விளக்கத்திற்கு உரையியற்றும் சூழலில் தொல்காப்பிய நூற்பாக்கள் 509 இடங்களிலும், மீண்டும் மீண்டும் இடம்பெறும் வகையில் 97 இடங்களிலும் தொல்காப்பிய நூற்பாக்கள் மேற்கோள்களாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன என்பது புலனாகிறது. இலக்கண விளக்கத்திற்கு உரை இயற்றும் தருணத்தில் இதன்பொருள், விளக்கம், எடுத்துக்காட்டு, வரலாறு, முன்னை உரை மரபைப் பின்பற்றல் என்னும் ஐந்து நிலைகளில் உரையமைத்து இறுதியில் ஒத்த நூற்பாக்கள் என்னும் புதிய உத்திமுறை ஒன்றை கையாண்டிருப்பது வைத்தியநாத தேசிகரின் தனித்தன்மையைப் புலப்படுத்தும். இவ்வரையறையின்படி

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

வைத்தியநாத தேசிகரின் உரை அமைப்பு முறையும், உரைத்திறனும், புதிய உத்திமுறைகள் குறித்தும் இக்கட்டுரையின்வழி நன்கு புலப்படுகின்றது.

துணைநூற்பட்டியல்

[1] இலக்கண விளக்கம், எழுத்ததிகாரம் (ப.ஆ.) தி.வே.கேபாலையர், தஞ்சை சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர், பதிப்பு.2001.

[2] தொல்காப்பியம், பொருளதிகாரம்-பகுதி மூன்று, ஆராய்ச்சிக் காண்டிகையுரை, (ப.ஆ), பெ.மாதையன், பெரியார் பல்கலைக்கழகம், சேலம், பதிப்பு.2012.

[3] நன்னூல், சோம.இளவரசு, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, பதிப்பு-2003.

[4] உரையியல், பெ.மாதையன், பாவை பப்ளிகேஷன்ஸ், சென்னை, பதிப்பு.2014.

[5] தொல்காப்பியம், ச.வே. சு.உரை, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, பதிப்பு.2010.

தமிழில் இக்கட்டுரையை இவ்வாறு மேற்கோளிடுங்கள்:

சி.பாரதி & வசந்தமாலை. "வைத்தியநாத தேசிகரின் உரைத்திறன் ." *தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்,* தொகுதி 3, சிற.இதழ் 2, தொகுதி 2, *திசம்பர்* 2020, பக். 247-252. டிஓஐ: **10.38067/ijtlls.2020.spl.v03i02v2.037**

Cite this Article in English (*MLA 8 Style*) as:
Bharathi & Vasanthamalai, A. "**The Explanatory Skill of Vaithiyanatha Desikar**." *International Journal of Tamil Language and Literary Studies,* Vol. 3: Special Issue - 2, Vol. 2, December 2020, pp. 247-252. DOI: **10.38067/ijtlls.2020.spl.v03i02v2.037**

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி /Author Contribution Statement: இல்லை /NIL

கட்டுரையாளர் நன்றியுரை /Author Acknowledgement: இல்லை /Nil

கட்டுரையாளர் உறுதிமொழி/Author Declaration: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்./I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் அரையாண்டு பன்னாட்டு ஆய்விதழ்

International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

பாவலரேறு ச.பாலசுந்தரனாரின் ஆராய்ச்சிக் காண்டிகையுரையை முன்வைத்து தொல்காப்பிய எழுத்ததிகாரப் பாடவேறுபாடுகள்

Pavalar S.Balasundaranar's Araicci Kandigaiyurai Text Variations in Tolkappiya Eluththathikaram

ந. பிரகாஷ், முனைவர் பட்ட ஆய்வாளர், இலக்கியத்துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்-10.
N. Prakash Research Scholar, Dept. of Literature, Tamil University, Thanjavur - 10
ORCiD: https://orcid.org/0000-0002-5578-2914
முனைவர் இரா. காமராசு, பேராசிரியர் மற்றும் தலைவர், நாட்டுப்புறவியல் துறை, தமிழ்ப், பல்கலைக்கழகம், தஞ்சாவூர் – 10
Dr. R. Kamarasu, Professor & Head, Dept. of Folklore, Tamil University, Thanjavur - 10
ORCiD: https://orcid.org/0000-0002-3311-2231
DOI: 10.38067/ijtlls.2020.spl.v03i02v2.038

Abstract

The oldest available Tamil Grammar book "Tolkappiyam" has seen various commentaries at various periods. Pavalar S.Balasundaram is one such commentator who has written detailed, deep research commentary for the entire Tolkappiyam. Apart from his extensive commentary, he also differs from other commentators on changing the original text itself in accordance with Tamil Conventions. This article explains the variations in texts that are found in Balasundaram's commentary and explains the justification he has given for those changed in his commentary.

Keywords: "Tolkappiyam", S.Balasundaram, Text Variations, Tamil Grammar

தொல்காப்பியத்திற்கு வந்த இருபதாம் நூற்றாண்டு உரைகளில் ச.பாலசுந்தரனாரின் உரை குறிப்பிடத்தக்கதாகும். தொல்காப்பியம் முழுமைக்கும் பாடவேறுபாடுகள் கண்டறிந்து அதற்கான பாடநிர்ணயங்களையும் செய்துள்ளார். அதற்கான காரணங்களையும் உரைகளில் எழுதியிருக்கின்றார். அவ்வகையில் எழுத்ததிகாரத்திற்குள்ள பாடவேறுபாடுகளையும் அதற்கு ச.பாலசுந்தரனார் தரும் பாடநிர்ணயங்களையும் பொருத்தப்பாட்டினையும் இக்கட்டுரை ஆராய்கிறது. தமிழ்ச் சமூகம் இலக்கணத்தைத் தெளிவுறக் கற்க வேண்டுமென்ற எண்ணத்தில் பல்வேறு விதமான உரைகளையும் கற்று அவற்றில் ஏற்பட்ட பிழைகளையும் சரியானவற்றையும் அறிந்து ஆழ்நோக்குடன் அறிவியல் முறைமையில் தொல்காப்பியத்திற்கு உரையெழுதியுள்ளார் ச.பாலசுந்தரனார்.

தமிழ் இலக்கணம் தொல்காப்பியத்துடன் முடிந்துவிட்டது என்றும்; அதன் பின் வந்த இலக்கணங்கள் வடமொழியுடன் பாடம் கூறப்பட்டவை என்றும் கூறுகிறார். இவர் தொல்காப்பிய உரை தவிர்த்து பல்வேறு இலக்கண, இலக்கிய நூல்களையும் இயற்றி அவற்றிற்கு உரைகளும் எழுதியுள்ளார். இவரின் உரை இலக்கணப் புலமை மிக்க அளப்பரிய உரையாகும். இருபதாம் நூற்றாண்டின் இலக்கண உரையாசிரியர்களுள் தனித்துவம் பெற்றவராகவும், தொன்மையான உரையாசிரியர்கள் கொண்டுள்ள பாடங்களுடன் உறழ்ந்தும் பிழை என்றால் சுட்டிக் காட்டியும் அதற்குச் சரியான பாடம் கொள்ளும்

E-ISSN: 2581-7140 **UGC CARE Listed Journal**
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 **Available at: www.ijtlls.com**

முறைமையினையும் ஆழ்நோக்கும் அகவுரையுடன் தொல்காப்பியம் முழுமைக்கும் ஆராய்ச்சிக் காண்டிகையுரை எழுதிப் பதிப்பித்துள்ளார்.

உரைத்திறன்

பாவலரேறு ச. பாலசுந்தரனார் பல்வேறு விதமான உத்தி முறைகளின் மூலம் உரையெழுதியுள்ளார். அவை, பாயிர உரை எழுதுதல், அதிகாரத்திற்கு முன்னுரை எழுதுதல், அதிகாரத்தை விளக்கும் முறைமை, இயல் விளக்க முறைமை, நூற்பா விளக்க முறைமை, அதிகாரம் – இயல் – நூற்பா இவற்றிற்கான இயைபு காட்டல், உரை வேறுபாடு, உரை விளக்க வேறுபாடு, பாடவேறுபாடு, உரைகளில் பாட வேறுபாடு, மாட்டெறிதல், எடுத்துக்காட்டு கையாளுதல், நூற்பாவைக் கொண்டு கூட்டிப் பொருள் கொள்ளுதல், பிற உரைகளை ஏற்றல் – மறுத்துல் எனப் பல்வேறு உத்திமுறைகளைக் கையாண்டுள்ளார். இத்தகு ஆழ்நோக்கு நுண்மையின் மூலம் அவரின் உரைத்திறனை அறியமுடியும்.

எழுத்ததிகாரத்தில் – பாடவேறுபாடு

ஐந்திரம் - அயிந்திரம்

தொல்காப்பியச் சிறப்புப் பாயிரத்தில் **“ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன்”** என்று உள்ளது. ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன் என்பதற்கு உரையாசிரியர்கள், “இந்திரனால் செய்யப்பட்ட ஐந்திர வியாகரண நூலறிவு நிரம்பப் பெற்ற தொல்காப்பியன்” (ஆ. சிவலிங்கனார், 2016 : 22) எனப் பொருள் கொண்டுள்ளனர். ஐந்திரம் என்ற நூலினை நன்கு கற்றறிந்தவர் தொல்காப்பியர் என்று இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் கருதுகின்றனர். ஐந்திரம் என்ற சொல் பற்றிய கருத்து பல்வேறு கருத்தாக்கங்களுடன் காணப்படுகின்றது.

ஐந்திரம் என்பதற்கு அயிந்திரம் என்று இடம் பெறவேண்டும் எனச் சுவடிகளின் வாயிலாக அறியமுடிகின்றது.

அயிந்திரம்: சுவடிகள் – 11, 73, 1044, 1052, 1053 ஆகிய சுவடிப்பதிப்புகளில் கையாளப்பட்டுள்ள அயிந்திரம் என்னும் கருத்தாக்கத்தை மறுக்கும் கே. எம். வேங்கடராமையா, **அகரத் திம்பர் யகரப் புள்ளியும் ஐயென் நெடுஞ்சினை மெய்பெறத் தோன்றும் (நூ.56)** என்னும் விதியைச் சுட்டிக்காட்டி ஐந்திரம் – அய்ந்திரம் ஆகுமேயன்றி அயிந்திரம் என ஆகாது (கே. எம். வேங்கடராமையா, 1996, சிறப்புப் பாயிரம்) என கூறுகிறார். ஆனால் பாலசுந்தரனார் சுவடிகளில் காணப்பட்டதைப் போல் ஐந்திரம் – அயிந்திரம் ஆகுமென **“அகர இகரம் ஐகார மாகும்” (தொல். 54)** என்னும் விதிப்படி புலப்படுத்தியுள்ளார்.

படுப – படுவ

எழுத்தெனப் படு(ப)வ
அகரமுதல் னகர இறுவாய்
முப்பஃதென்ப
சார்ந்துவரல் மரபின் மூன்றலங்கடையே (தொல், நூ. 1)

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

என்பதில் படுப என்பதற்குப் படுவ எனப் பாடம் கொண்டுள்ளார். ஆனால் இதற்குச் சுவடிச் சான்றுகள் இல்லை. இதற்குத் தொல்காப்பிய நூற்பாவின் வழி விடையைக் கண்டுணர முடியும். படுவ என்பதில் “வ” என்பது பலவறிசொல் (பலவின்பால் சொல்) என்பதாகும்.

அஆ வவென வரூஉம் இறுதி
அப்பால் மூன்றே பலவறி சொல்லே (தொல். கிள. 9)

அ,ஆ,வ என வரும் மூன்றும் பலவறி சொல்லாகும். “ரஃகான் ஒற்றும் பகர இறுதியும் மாரைக் கிளவி உளப்பட மூன்றும் நேரத் தோன்றும் பலரறி சொல்லே” (தொல் .கிள. 7) என்பதின் மூலம் “ப” என்பது உயர்திணையைக் குறிக்கும் பலரறி (பலர்பால்) சொல்லாகும். இதனால் “ப” என்பதற்கு “வ” என்று பாடம் கொள்ளப்பட்டுள்ளது.

“என்ப” என்பது “என்று கூறுவர்” என உயர்திணை பற்றி வருகிறது. எழுத்தெனப்படுப என்றால் “எழுத்தென என்று கூறுவர்” என்னும் பொருளில் அச்சூத்திரம் அமைந்துவிடும். இதனை வேறுபடுத்தவே “படுவ” என இவ்வுரையாசிரியர் தெளிவுபடுத்தினார் (செ. சத்தியநாதன், 2017 : 93) என்னும் சத்தியநாதன் கூற்று இங்கு எண்ணத்தக்கதாகும்.

மொழிப - மொழிவ

அளபிறந்[1] துயிர்த்தலு[2] மொற்றிசை நீடலும்
உளவென மொழிப[3] விசையொடு சிவணிய
நரம்பின் மறைய வென்மனார் புலவர் (தொல். நூ. 33)

அளபிறந் – அளவிறந், சுவடிகள் : 73, 115, 1053, 2. துயிர்த்தலும் – திசைத்தலும், சுவடி : 1052, 3. மொழிப – மொழிவ, சுவடிச் சான்று இல்லை (கே. எம். வேங்கடராமையா, 1996 : 8). மொழிப – மொழிவ என்பதற்கு மேற்சுட்டிய படுப – படுவ என்று பாலசுந்தரனார் பாடம் கொள்ளும் முறை ஒப்புநோக்கத்தக்கதாகும். துயிர்த்தலும் என்பதற்கு சுவடிப்பதிப்பு 1052’இல் திசைத்திலும் என்று பாடம் காணப்படுகிறது. பாலசுந்தரனார் உரை நூற்பா 33'இல் **“அளபிறந் திசைத்தலும் ஒற்றிசை நீடலும்” (பக்.86)** என்னும் நூற்பா மூலம் பாலசுந்தரனாரின் பாடம் கொள்ளும் முறைமைக்கு வலுச் சேர்க்கிறது. அளபிறந் – அளவிறந் என்பதற்குப் பாலசுந்தரனார் பாடம் எதுவும் கொள்ளவில்லை. முன்னர் உள்ளதையே பயன்படுத்தியுள்ளார்.

எகர ஒகரம் – இகர உகரம்

எகர, ஒகரம் - இகர உகரமாக மரபின் வழிக் கூறுதல் எண்ணத்தக்கதாகும். **“எகர ஒகரத் தியற்கையு மற்றே” (தொல். நூ. 16)** என்று அமைந்துள்ளது. இது உரையாசிரியர்கள் கொண்ட பிழையான பாடம் என்று சுட்டுகிறார் பாலசுந்தரனார். இந்நூல் நெறிக்குச் சரியான பாடம் . **“இகர உகரத் தியற்கையு மற்றே” (ப.74)** என்று பாடம் கொண்டுள்ளார். இகர உகரங்களைச் சார்பெழுத்தாகக் கொள்ளாமல் உயிர் எழுத்தாகக் கொண்டதால் அவை புள்ளிபெறுவதற்கு வாய்ப்பில்லை எனக் கருதியதால் “இகர உகரத் தியற்கை மற்றே” என்பது எகர ஒகரமாக மாறியிருக்கும் என்று பாலசுந்தரனார் சுட்டுகின்றார். “இனி, இப்பாடம் பிறழ்ந்தமைக்குக் காரணம் “மெய்யின் இயற்கை புள்ளியொடு(ம்) நிலையல்” (தொல்.நூ.5) என்னும் சூத்திரம்

International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

வடிவிற்கே இலக்கணங்கூறுவதாகக் கொண்ட கொள்கையானும் இவ் இகர, உகரங்களைச் சார்பெழுத்தாகக் கருதாமல் உயிரெழுத்தாகக் கருதியமையான் அவை புள்ளிபெறுவதற்கு இயைபில்லை. தமிழின்கண் உள்ள ஒகரங்களின் (நெடிலுக்கும் குறிலுக்கும்) வடிவு பற்றியே விதி கூறுவதாக எண்ணி உரையாசிரியரே, அவர்க்குமுன் பாடஞ் சொன்னவரோ மெய்ம்மையான பாடத்தைத் திருத்தி "எகர ஒகரத் தியற்கையு மற்றே" என அமைந்திருக்கலாம்" (பெ. மாதையன், 2012 : 75) என்று சான்றுகளின் வழி அறியலாம். **"அவ்வியல் நிலையும் ஏனை மூன்றே" (தொல். நூ. 12),** என்பதன் மூலம் சார்பெழுத்துக்கள் மாட்டெறிந்து கூறப்படுகிறது.

வினா – வினாஅ (அளபெடுத்தல்)

"ஆ ஏ ஓ அம் மூன்றும் வினா" (தொல்.நூ.32) என்னும் நூற்பாவில் வினா என்பதற்கு வினாஅ என்று அளபெடுத்து வரவேண்டும் என்கின்றார். "இச் சூத்திரத்தில் வினாஅ என்னும் சொல்லின்கண் ஆகாரம் அளபெடுத்து நிற்றல் வேண்டும் (கே. எம். வேங்கடராமையா, 1996:7) என்கிறார் வேங்கடராஜுலு ரெட்டியார். மேலும், "சுவடிகள் எவற்றிலும் அளபெடையில்லை" (மேலது, 7) என்கிறார் ஆ. சிவலிங்கனார்.

உரையாசிரியர்கள் யாவரும் அளபெடுத்து வருதலை முன்மொழியவில்லை. அதன்கண் பொருள் விளக்கம் கூறி உரை எழுதியுள்ளனர். ஆனால் பாலசுந்தரனார் அளபெடுத்து வருதலைக் கொண்டு நூற்பா எழுதியுள்ளார். **"ஆ ஏ ஓ அம் மூன்றும் வினாஅ" (தொல். நூ. 32, ப. 86)** என்று பாடம் கொண்டுள்ளார்.

புணர் மொழி – பொருள் மொழி

பாவலர் பாலசுந்தரனார் புணர் மொழி – பொருள் மொழி என்னும் பாடங் கொள்ளும் முறையினை விளக்கும்பொழுது பொருள் மொழி வருமிடத்தில் புணர்மொழி என்றே உரையாசிரியன்மார் பிழை எனக் கருதாமல் விளக்கங்களை இயம்பியுள்ளனர் என்கிறார்.

வேற்றுமை குறித்த (புணர் மொழி) பொருள் மொழி நிலையும்
வேற்றுமை அல்வழிப் (புணர் மொழி) பொருள் மொழி நிலையும்
எழுத்தே சாரியை ஆயிரு பண்பின்
ஒழுக்கல் வலிய புணருங் காலை (தொல். நூ. 112)

எனும் நூற்பாவில் பொருள் மொழி என்றே கையாண்டுள்ளார்.

மேற்கூறிய சொற்கள் வேற்றுமைப் பொருள் நிலைகுறித்த சொற்களும், வேற்றுமை வழியல்லாத (அல்வழிப்) பொருள் நிலை குறித்த சொற்களுமாய்ப் புணரும். அங்ஙனம் அவை இருவழியாகிப் புணருமிடத்து அவை எழுத்தும் சாரியையும் பெறுவதாகிய அவ் இரு பண்பினொடு நடத்தலை வலிமையாக உடையனவாகும்.

"இச்சூத்திரத்து முதலிரண்டடியினும் உள்ள "பொருள் மொழி நிலையும்" என்னும் பாடம் எவ்வகையாலோ பிறழ்ந்து "புணர் மொழி நிலையும்" எனவுளது. அதனைப் பிழையெனக் கருதாமல் உரையாசிரியன்மார் குழம்பித் தடுமாறி இயைபற்ற விளக்கங்களை இயம்பிச் சென்றனர். ஆசிரியர் அமைத்த பாடம் "பொருள் மொழிநிலை" என்பதேயாம்.

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

இதனை, “ணகார இறுதி வல்லெழுத் தியையின், டகார மாகும் வேற்றுமைப் பொருட்கே” (புள்ளி.7), “யகர இறுதி வேற்றுமைப் பொருள்வயின் வல்லெழுத் தியையின் அவ்வெழுத்து மிகுமே” (புள்ளி. 62), “லன எனவரூஉம் புள்ளியிறுதி முன்... வேற்றுமை குறித்த பொருள் வயினான” (குற்றிய. 76), “அச்சக் கிளவிக் கைந்தும் இரண்டும் எச்ச மிலவே பொருள்வயி னான” (வேற். மய. 17) எனப் பின்னர் எடுத்தாளுதலான் அறிக (பெ. மாதையன், 2012 :136 – 137) என்று கூறுகிறார் பாலசுந்தரனார்.

இதனைப், புணர்மொழிநிலை என்ற பாடம் அன்று; பொருள் மொழிநிலை என்பதே பாடமாதற்கு ஏற்றது என்ற செய்தி ஆய்ந்து நிறுவப்பெற்றுள்ளது (மேலது, xxvii) என்று தி. வே. கோபாலையர் கூறுகிறார். இந்நூற்பா தொடரின் இயல்பு, நடை பற்றிய பாடம் கொள்ளும் முறைமையாகும். “இது நூற்பாவின் இலக்கண அமைதி பற்றிய பாடம் என்பதினும் தொல்காப்பியத் தொடரியல்பு – நடை – கருதிய பாடம் எனவே பொருந்தும் (பா. மதிவாணன், 2017 : 35) என்கிறார் பா. மதிவாணன்.

இவ்வாறாகத் தொல்காப்பிய எழுத்ததிகாரத்திற்கு ஆராய்ச்சிக் காண்டிகையுரையில் ச.பாலசுந்தரனார் தரும் பொருத்தப்பாடுகள் உரைமரபில் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். வரலாற்றில் நிகழ்ந்த புரிதலின்மைகளைச் சுட்டிக்காட்டல், வடமொழிக்கும் தமிழிற்குமான தனித்தன்மைகளைக் காட்டி பாடநிர்ணயம் செய்தல், தொல்காப்பிய இலக்கண அமைப்பிற்கேற்ற பாடநிர்ணயம் மற்றும் ஆய்வுரை ஆகியன இவரின் உரையின் முறையியல்களாக அமைகின்றன.

உசாத்துணைகள்

[1] கணேசையர், (2007), தொல்காப்பியம் எழுத்ததிகார மூலமும் நச்சினார்க்கினியருரையும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.

[2] சத்தியநாதன், செ., (2017), தொல்காப்பியம் இளம்பூரணர் – ச. பாலசுந்தரனார் உரை வேறுபாடு (முனைவர் பட்ட ஆய்வேடு), பி.ஜி.பி. கலை மற்றும் அறிவியல் கல்லூரி, நாமக்கல்.

[3] சிவலிங்னார், ஆ., (தொ. ஆ), (2016), தொல்காப்பியம் சிறப்புப் பாயிரம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், செண்னை.

[4] மதிவாணன், பா., (2017), தொல்காப்பியம் பால. பாடம், அய்யா நிலையம், தஞ்சாவூர்.
மாதையன், பெ., (பதி. ஆ.), (2012), தொல்காப்பியம் எழுத்ததிகாரம் ஆராய்ச்சிக் காண்டிகையுரை, பெரியார் பல்கலைக்கழகம், சேலம்.

[5] ...., (2012), தொல்காப்பியம் சொல்லதிகாரம் ஆராய்ச்சிக் காண்டிகையுரை, பெரியார் பல்கலைக்கழகம், சேலம்.

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

[6] வேங்கடராமையா, கே. எம்., (1996), தொல்காப்பியம் மூலம் பாட வேறுபாடுகள் – ஆழ்நோக்காய்வு, பன்னாட்டுத் திராவிட மொழியியற் கழகம், திருவனந்தபுரம்.

தமிழில் இக்கட்டுரையை இவ்வாறு மேற்கோளிடுங்கள்:

ந. பிரகாஷ் & காமராசு. "பாவலரேறு ச.பாலசுந்தரனாரின் ஆராய்ச்சிக் காண்டிகையுரையை முன்வைத்து தொல்காப்பிய எழுத்ததிகாரப் பாடவேறுபாடுகள்." *தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்,* தொகுதி 3, சிற.இதழ் 2, தொகுதி 2, *திசம்பர்* 2020, பக். 252-258. டிஓஐ: **10.38067/ijtlls.2020.spl.v03i02v2.038**

Cite this Article in English (*MLA 8 Style*) as:

Prakash & Kamarasu. "Pavalar S.Balasundaranar's Araicci Kandigaiyurai Text Variations in Tolkappiya Eluththathikaram." *International Journal of Tamil Language and Literary Studies*, Vol. 3: Special Issue - 2, Vol. 2, December 2020, pp. 252-258. DOI: **10.38067/ijtlls.2020.spl.v03i02v2.038**

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி /Author Contribution Statement: இல்லை /NIL

கட்டுரையாளர் நன்றியுரை /Author Acknowledgement: இல்லை /NIL

கட்டுரையாளர் உறுதிமொழி/Author Declaration: இல்லை /NIL

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் அரையாண்டு பன்னாட்டு ஆய்விதழ்

International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

உ.வே. சாமிநாதையரின் மணிமேகலை உரைச்சிறப்புகள்

U.VE.SA Manimegalai Text Features

கி.பிரேமாராணி, உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, காமராஜ் கல்லூரி (சுயநிதிப்பிரிவு), தூத்துக்குடி.
K. Prema Rani, Assistant Professor, Tamil Department, Kamaraj College (sf), Thoothukudi.
ORCiD: http://orcid/0000-0002-9755-4696
DOI: 10.38067/ijtlls.2020.spl.v03i02v2.039

Abstract

Many commentators such as U.V. Saminathiyar, P.V. Somasundaranar, N.M. Vengatasamy Nattar, Duraisamy Pillai, Kannan, Ramasubramaniyam. This article or section needs sources or references that appear in credible, third-party publications. Due to the rare efforts of the commentators, the ancient Tamil texts came to light beyond the darkness of time. Rare ideas in Tamil books were understood. E.g. It has been published as three editions. The first edition was published in 1898, the second edition in 1920 and the third edition in 1931. His writing career began in 1878 and continued until his death in 1942.

Keywords: U.Ve.Sa,Manimegalai, Text, Commentator

முன்னுரை

ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்றான மணிமேகலைக்கு உ.வே.சாமிநாதையர், பொ.வே.சோமசுந்தரனார், ந.மு.வேங்கடசாமிநாட்டார், ஔவை துரைசாமிபிள்ளை, புலியூர்க்கேசிகன், இராமசுப்பிரமணியம், கண்ணன், இராசம், புலமை வேங்கடசாமி நாட்டார் எனப்பல உரையாசிரியர்கள் உரையெழுதியுள்ளனர். மணிமேகலைகாப்பியம் குறித்தும், உரைகள் குறித்தும், உ.வே.சா.வின் உரைச்சிறப்புகள் குறித்தும் இக்கட்டுரையில் காணலாம்.

மணிமேகலை

கி.பி. 2ஆம்நூற்றாண்டில் தோன்றிய பௌத்தநூல் மணிமேகலை. இதன் ஆசிரியர் கூலவாணிகன் சீத்தலைச்சாத்தனார். விழாவறைகாதை முதல் பவத்திறம்அறுக எனப் பாவை நோற்ற காதை முடிய முப்பது காதைகளைக் கொண்டுள்ளது. கோவலற்கும் மாதவிக்கும் பிறந்த மகளான மணிமேகலையின் வரலாறு தழுவிப் புத்ததருமத்தை விரித்துரைக்கும் குறிப்புடன் தோன்றிய தொடர்நிலைச் செய்யுள் ஆகும். மது ஒழிப்பு, பொய் ஒழிப்பு, பரத்தமை ஒழிப்பு, கொலை ஒழிப்பு, களவு ஒழிப்பு முதலியவற்றை அடிப்படையாக ஒழிக்க வேண்டும் என்பதை மணிமேகலை காப்பியம் வலியுறுத்துகின்றது.

பௌத்தசமயக் கருத்துக்களை விளக்குவதே ஆசிரியரின் முதல் நோக்கம் என்பதால் காப்பிய இலக்கணமும் இலக்கியச்சுவையும் இதில் இரண்டாம் இடத்தைப் பெறுகின்றன. எனவே இது முழுவதும் ஒரு சமயக் காப்பியமாகவே செய்யப்பட்டுள்ளது. பரத்தையர் குலத்தில்

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

பிறந்தவளைப் பெருங்காப்பியத்தின் தலைவியாக்கிப் பெருமை பெறச் செய்துவிட்டார் சாத்தனார்.

உரையாசிரியர்கள்

உலகமொழிகளில் வேறு எந்த மொழியிலும் இல்லாத அளவிற்கு சிறந்த உரைகள் தொடர்ச்சியாகத் தமிழில் தோன்றிக்கொண்டே இருக்கின்றன. கி.பி.9ஆம் நூற்றாண்டின் பிற்பகுதிக்கும் 12ஆம் நூற்றாண்டின் முற்பகுதிக்கும் இடைப்பட்ட காலமே உரையாசிரியர்களின் காலம். உரையாசிரியர்கள், பல நூல்களைக் கற்றுத் தெளிந்த பின்னர், ஏதேனும் ஒரு நூலைத் தமக்கு உரியதாகத் தேர்ந்து எடுத்துக்கொண்டு, அந்நூலில் மூழ்கினர். நூலாசிரியரின் உள்ளக்கருத்தினை நுணுகி ஆராய்ந்து, தெளிவுபெற எடுத்து எழுதும் வன்மையாளராய் உரையாசிரியர்கள் விளங்கினர்.

உரையாசிரியர்களின் அரிய முயற்சியின் காரணமாகப் பழந்தமிழ் நூல்கள் கால இருளைக் கடந்து வெளிச்சத்திற்கு வந்தன. தமிழ்நூல்களில் உள்ள அரிய கருத்துக்கள் விளங்கின. தமிழ்மொழியின் அமைப்பு, காலந்தோறும் எவ்வாறு மாறுதல் அடைந்து வந்துள்ளது என்பதையும், தமிழ்மக்களின் வாழ்க்கை நிலை, அரசியல் மாறுதல், பழக்கவழக்கம் ஆகியவற்றையும் உரைகள் உணர்த்துகின்றன. மறைந்துபோன தமிழ்நூல்களின் பெயர், அவற்றை இயற்றிய புலவர்களின் பெயர், அந்நூல்களின் சிலபகுதிகள் ஆகியவற்றை பேணிக்காத்து வருபவை உரையாசிரியர்களின் உரைகளேயாகும்.

உ.வே.சாமிநாதையர்

பழந்தமிழ் இலக்கியங்கள் பலவற்றைத் தொகுத்து வெளியிட்ட உ.வே.சா. அவர்கள் 19.02.1855இல் வேங்கடசுப்பையருக்கும், சரசுவதி அம்மாளுக்கும் உத்தமநாதபுரம் என்னும் சிற்றூரில் பிறந்தார். 1870இல் உ.வே.சா. மீனாட்சி சுந்தரம்பிள்ளையிடம் தமிழ் கற்கச் சேர்ந்தார். தம் ஆசிரியரின் ஆணையின்படி வேங்கடராமன் எனும் தன் பெயரைச் சாமிநாதன் என மாற்றிக் கொண்டார்.

“சங்ககாலத்தமிழும் பிற்காலத்தமிழும்,” புதியதும் பழையதும்,” “நல்லுரைக் கோவை”போன்ற பல உரைநடை நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார். சென்னைப் பல்கலைக்கழகத்தில் இவர் ஆற்றிய சொற்பொழிவே “சங்ககாலத்தமிழும் பிற்காலத்தமிழும்”எனும் நூலாக வெளிவந்தது.

சீவகசிந்தாமணி, மணிமேகலை, சிலப்பதிகாரம், புறநானூறு, திருமுருகாற்றுப்படை, பத்துப்பாட்டு, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, முல்லைப்பாட்டு, மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை, மலைபடுகடாம், 12 புராணங்கள், பெருங்கதை, 9 உலா நூல்கள், 6 தூது நூல்கள், 3 வெண்பா நூல்கள், 4 அந்தாதி நூல்கள், 8 பரணி நூல்கள், 2 மும்மணிக்கோவை நூல்கள் என 90க்கும்

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

மேற்பட்ட புத்தகங்களை அச்சுப்பதிப்பித்ததோடு 3000க்கும் அதிகமான ஏட்டுச் சுவடிகளையும் கையெழுத்தேடுகளையும் சேகரித்துள்ளார்.

ஆனந்தவிகடனில் 1940 முதல் 1942 வரை தனது வரலாற்றைத் தொடராக எழுதியுள்ளார். 1950இல் இவரின் "என்சரிதம்"தனிப்புத்தக வடிவம் பெற்றது. உ.வே.சா. கவிஞராகவும், பேச்சாளராகவும், உரையாசிரியராகவும், தன் வரலாற்றாசிரியராகவும் இருப்பினும் பதிப்பாசிரியராகவே புகழ் பெற்றார்.

மணிமேகலைக்கு உ.வே.சா. மூன்று பதிப்புகளை வெளியிட்டுள்ளார். முதற்பதிப்பு 1898 ஆம் ஆண்டும், இரண்டாம் பதிப்பு 1920ஆம் ஆண்டும், மூன்றாம் பதிப்பு 1931ஆம் ஆண்டும் திருந்திய செம்பதிப்பாகவும் வெளிவந்துள்ளன. 1878 இல் தொடங்கிய அவரது எழுத்துப்பணி 1942 இல் அவர் மறைவது வரைத் தொடர்ந்தது.

உரைச்சிறப்புகள்

உ.வே.சா. மணிமேகலை உரையில் பிரதிபேதம் கூறும் பண்பு காணப்படுகிறது. தனது உரையில் 29வது காதையான தவத்திறம் பூண்டுதருமம் கேட்ட காதைக்குப் பெரும்பாலும் பிரதிபேதம்; மட்டுமே சுட்டியுள்ளார். மணிமேகலையில் அதே வரிகள், பொருள்கள் வேறு இடத்தில் வந்துள்ளது எனில் அவற்றைக் குறிப்பிட்டுள்ளார். பின்வருகின்ற தொடரைச் சுட்டி விளக்கம் தருகின்ற பண்பினையும் காண முடிகின்றது. இவர் தனது உரையில் மணிமேகலை உரையில் எடுத்துக்காட்டியுள்ள நூல்கள், அவற்றின் சுருக்க குறியீட்டு விளக்கங்கள், மூன்றாம் பதிப்பின் முடிவுரை, நூலாசிரியர் வரலாறு, மணிமேகலையின் வாயிலாக அறியலாகும் தெய்வங்கள், அரசர்கள், இடங்கள் போன்றவற்றையும் மணிமேகலை காப்பியத்தின் கதைச் சுருக்கத்தினையும் தனது உரையின் முகவுரையில் குறிப்பிட்டுள்ளார். இவரது உரையானது அரும்பத உரையாகக் காணப்படுகிறது. இதன் மூலம் நாம் மணிமேகலை காப்பியத்தினை எளிதில் அறிந்து கொள்ள இயலுகின்றது. இவரது உரை சுருக்கமாக ஆயின் நுணுக்கமாக அமைதல் கவனிக்கத்தக்கது.

உ.வே.சா. மணிமேகலை உரையில் உவமைகள் எடுத்தாளுதல், அணிநயம் சுட்டல், கதைகள் எடுத்தாளுதல், பழமொழிகள் சுட்டல், சமயப்புலமை வெளிப்படுத்துதல், மரபு செய்திகள், பழக்கவழக்கங்கள் சுட்டல், இலக்கிய இலக்கண ஆளுமைகள், பிற உரைகள் எடுத்தாளுதல், இலக்கணக் குறிப்புகள் எனப் பல உரைநெறிகள் காணப்படுகின்றன. "கந்த சாலியின் கழிபெரு வித்தோர்"(மணி-10:46) என்னும் வரிக்கு, கந்தசாலி என்பது சிறந்த வாசனையுள்ள ஒரு வகை நெல். இக்காலத்தில் இந்நெல் கன்னட தேசத்திலுள்ள மங்கலாபுரத்தில் மிகுதியாக உள்ளது. மணிமேகலையின் உயர்வு பற்றி அவளுக்குக் கந்தசாலி எனும் உயர்ந்தவகை நெல் உவமையாகக் கூறப்பட்டுள்ளது என்றும், அந்நெல் தற்போது எங்கு பயிரிடப்படுகிறது என்றும் விரிவான விளக்கத்தினை நாம் உ.வே.சா. உரையின் மூலம் அறியலாம்.

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

"திருவி லிட்டுத் திகழ்தரு மேனியள்: (மணி- 6:10) என்ற தொடருக்கு உ.வே.சா. "இந்திவில்லைப் போல ஒளிவிட்டு அழகைத் தருகின்ற திருமேனியையுடையளாய் இந்திரவில் எவ்வாறு தோன்றும் என்பது புலப்படாமையால் அவ்வாறு தோன்றுகின்ற தெய்வங்களுக்கு அஃது உவமமாயிற்று"என்று உவமம் தோன்றியுள்ள காரணத்தினைச் சுட்டி விளக்குகிறார்.

"கொடுஞ்சி"(மணி-30:48) எனும் சொல்லிற்கு கொடுஞ்சி என்பது தாமரைப் பூவடிவமாகப் பண்ணித் தேர்த்தட்டின் முன்னே நடுவது என்பர் ஆசிரியர் நச்சினார்க்கினியர் எனத் தனது உரையில் நச்சினார்க்கினியரின் கருத்தினை எடுத்தாண்டுள்ளார். உ.வே.சா. தனது உரையில் மணிமேகலையில் உள்ள அனைத்து காதைகளுக்கும் பிரதிபேதம் சுட்டியுள்ளார். 29வது காதைக்கு பிரதிபேதம் மட்டுமே சுட்டியுள்ளார். உ.வே.சா. பிரதிபேதம் என்று குறிப்பிட்டுள்ளதை ஔவை – துரைசாமிபிள்ளை பாடம் என்று குறிப்பிட்டுள்ளார் எனலாம்.

"ஆண்டைய வருத்தா பத்தி யோடியல்" (மணி-27:10) என்ற வரிக்கு உ.வே.சா. ஆண்டவருத்தாபத்தியோடியைபு என்றும், "இயல்பியானை"(மணி-27:47) என்ற சொல்லிற்கு இயைபிலியானை என்றும் பிரதிபேதம் சுட்டியுள்ளார். இவ்வாறு தனது உரையில் அனைத்து காதைகளிலும் பிரதிபேதத்தினைக் குறிப்பிட்டுள்ளார். "கோடாச் செங்கோற் சோழர்தங் குலக்கொடி" (மணி.பதி:23) என்பதில் சோழர் தம் குலக்கொடி என்பதற்கு உ.வே.சா. வேற்று வேந்தர் அணுகாமையால் சோழர்தங் குலக்கொடியாயுள்ளாள் என்று உ.வே.சா. விளக்கம் தருகின்றார். "மணிமே கலாதெய்வம் வந்துதோன் றியதும்" (மணி.பதி:43) என்பதற்கு உ.வே.சா. மணிமேகலா தெய்வம் என்பது அரக்கர் வாதை பண்ணாதபடி இந்திரன் ஏவலாலே சில தீவுகளைப் பாதுகாத்துக் கொண்டிருத்தலை உடையது. கோவலனுடைய குலதெய்வம் என்று மணிமேகலா தெய்வம் குறித்து விரிவான விளக்கம் தருகின்றார். "தின்னுயி ரீவ ரீயா ராயின்" (மணி.2:4) பாண்டியன் நெடுஞ்செழியனிற்ப அவன் மனைவியாகிய பெருங்கோப்பெண்டும் உடனே இறந்த சரித்திரம் நினைக்கத்தக்கது என உ.வே.சா. பாண்டியன் நெடுஞ்செழியனின் இறப்பிற்குப்பின் அவனது மனைவி இறந்த செய்தியினை இங்கு குறிப்பிட்டுள்ளார்.

"மகனை முறைசெய்த மன்னவன் வழியோர்" (மணி.22:210) கன்றையிழந்த பசுவின் துயரைத் தீர்த்தர்க்குத் தன் மகனைக் கிடத்தி அவன் மார்பில் உருளை செல்லும்படித் தேரையூர்த்த மனுவேந்தன் என்று மனுநீதிச்சோழன் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். "காமற் கடந்த வாமன் பாதந்" (மணி.5:77) மாரன் என்பதற்குப் பொருள் மன்மதனன்றென்பது பௌத்த சமய மரபாதனால் இந்நூலிற் காமனென்று வருமிடமெல்லாம் மாரனென்று பொருள் கொள்க என்று பௌத்த சமய மரபினைக் குறிப்பிட்டுள்ளார்.

முடிவுரை

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

மேற்கண்டவாறு உ.வே.சா.வின் உரையில் உவமைகள், மரபுச்செய்திகள், பழக்கவழக்கங்கள் மக்களின் நம்பிக்கைகள், பிற உரைகளைச் சுட்டுதல், பிரதிபேதம் சுட்டல், அணிநயம் சுட்டல் எனப் பல பண்புகளோடு உ.வே.சா.வின் உரை சிறப்புடன் அமைந்துள்ளதைக் காணலாம். பிற ஆசிரியர்கள் சுட்டாத பிரதிபேதம் கூறும் பண்பினை நாம் உ.வே.சா.வின் உரையில் மட்டுமே காண இயலும்.

துணைநூற்பட்டியல்

[1] உ.வே.சா., 2008, மணிமேகலை அரும்பத உரை, பாரி நிலையம், சென்னை.

[2] அரவிந்தன்.மு.வை., 1968, உரையாசிரியர்கள், மணிவாசகர் பதிப்பகம், சென்னை.

[3] இரத்தின வெங்கடேசன், 1999, மணிமேகலையும் உயிர்த்தர்மமும், மணியம் பதிப்பகம், குறிஞ்சிப்பாடி.

[4] மோகன்.இரா., சொக்கலிங்கம்.ந, 1985 உரைமரபுகள், மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம்.

தமிழில் இக்கட்டுரையை இவ்வாறு மேற்கோளிடுங்கள்:

பிரேமாராணி. "உ.வே. சாமிநாதையரின் மணிமேகலை உரைச்சிறப்புகள்." *தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்*, தொகுதி 3, சிற.இதழ் 2, தொகுதி 2, *திசம்பர்* 2020, பக். 259-263. டிஓஐ: **10.38067/ijtlls.2020.spl.v03i02v2.039**

Cite this Article in English (*MLA 8 Style*) as:
Prema Rani. "U.VE.SA Manimegalai Text Features." *International Journal of Tamil Language and Literary Studies*, Vol. 3: Special Issue - 2, Vol. 2, December 2020, pp. 259-263. DOI: **10.38067/ijtlls.2020.spl.v03i02v2.039**

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி /Author Contribution Statement: இல்லை /NIL

கட்டுரையாளர் நன்றியுரை /Author Acknowledgement: இல்லை /NIL

கட்டுரையாளர் உறுதிமொழி/Author Declaration: இல்லை /NIL

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் அரையாண்டு பன்னாட்டு ஆய்விதழ்

International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

நன்னூல் உரையாசிரியர்களும் இலக்கண மேற்கோள்களும்

Nannool Text Writers and Grammatical Quotes

முனைவர் பீ. பெரியசாமி, தமிழ்த்துறைத்தலைவர், டி.எல்.ஆர். கலை மற்றும் அறிவியல் கல்லூரி, விளாப்பாக்கம் .
Dr. B. Periyaswamy, Assistant Professor & Head, Department of Tamil, DLR Arts and Science College, Villapakkam.
ORCiD: https://orcid.org/0000-0002-7395-9699
DOI: 10.38067/ijtlls.2020.spl.v03i02v2.040

Abstract

Grammatical texts are characterized by significant differences in their nature and structure. These can be explored focusing on the primary grammar texts, focusing on grammatical types, and focusing on combining the two levels. The epistle contains many uniquely rich 'texts'. It has a rich textual tradition with features that have more than one text in pre-nineteenth-century history. The quotes run from the Tamil grammatical tradition to the Agathiyam grammar. Tamil grammatical texts have significant similarities and differences in its structure and character. There are some commonalities and contradictions between the narrators in the narration, the interpretation and the evidence. The narrators deny each other politely and logically. Some commentators aim to adapt the original author's opinion. The article thus sets out to reveal the grammatical quotations found in the "Nannool" explanatory texts.

Keywords: Tamil Grammar, "Nannool", "Agathiyam", Avnayam, "Tholkappiyam", Text Writers, Literary Quotes

முன்னுரை

இலக்கண உரைகள் அதன் தன்மையிலும் அமைப்பிலும் குறிப்பிடத்தக்க வேறுபாடுகளைக் கொண்டு அமைந்துள்ளன. இவை முதன்மையான இலக்கண நூல்களை மையமிட்டும், இலக்கண வகைகளை மையமிட்டும், இரு நிலைகளையும் இணைத்து நோக்குதலை மையமிட்டும் ஆராயத்தக்கன. நன்னூல் தனித்தன்மை வாய்ந்த வளமான பல'உரை'களைப் பெற்றுள்ளது. பத்தொன்பதாம் நூற்றாண்டிற்கு முந்தைய வரலாற்றில் ஒன்றுக்கு மேற்பட்ட உரைகளைப் பெற்றிருக்கின்ற சிறப்புக்களையுடைய வளமான உரை மரபைக் கொண்டுள்ளது. அவ்வகையில் நன்னூல் உரைகளில் காணலாகும் இலக்கண மேற்கோள்களை வெளிப்படுத்துவதாக இக்கட்டுரை அமைகின்றது.

இலக்கண நூற்பாக்களை மேற்கோள்களாகத் தருதல்

உரையாசிரியர்கள் உரைக்கு உரமூட்டி அதன் தெளிவிற்கு ஒளியூட்ட உதாரணங்களைத் தருவதற்கு இலக்கண நூற்பாக்களைப் பயன்படுத்துகின்றனர். அவிநயம், அகத்தியம், தொல்காப்பியம், யாப்பருங்கலக்காரிகை, புறப்பொருள் வெண்பாமாலை, நன்னூல் போன்ற பல நூல்களிலிருந்து உதாரணங்களைக் காட்டியுள்ளனர்.

அகத்திய நூற்பாக்களை மேற்கோள்களாகத் தருதல்

அகத்தியம் பற்றியும், அகத்தியர் பற்றியும் சில உரைகளில் மட்டுமே குறிப்புகள் காணப்படுகின்றன. மயிலைநாதர், சங்கரநமச்சியாவர், சிவஞானமுனிவா,; முகவை இராமாநுசக்கவிராயர், ஆகியோரது உரைகளில் அகத்தியத்திலிருந்து சான்றுகள் காட்டப்பட்டுள்ளன. மயிலைநாதர் உரையில் அகத்தியத்திலிருந்து பத்து நூற்பாக்களுக்கு

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

சான்றுகள் காட்டப்பட்டுள்ளன. சான்றாக, நூற்பெயர் வகை சுட்டுமிடத்து கருத்தானால் பெயர் பெற்றன அகத்தியம் என நூற்பெயர் மட்டுமே சுட்டப்பட்டுள்ளது. பதவியலில், பகாப்பதம் குறித்து உணர்த்தும் நூற்பாவுரையில் "பெயரினும், வினையினும் மொழிமுதல் அடங்கும்" என்ற அகத்தியனார் சுட்டும் கருத்தையும், பெயரியலில், சொல்லின் கூறுபாடும், அதனியல்பும் குறித்து விளக்கும் உரையில், "வயிர வூசியு மயன்வினை யிரும்பும், செயிரறு பொன்னைச் செம்மைசெய் யாணியும், தமக்கமை கருவியுந் தாமா மவைபோல், உரைத்திற முணர்த்தலு முரையது தொழிலே" (பவணந்தி முனிவர் இயற்றிய நன்னூல் மூலமும் மயிலை நாதர் உரையும், சாமிநாதையர். உ.வே.(ப.ஆ), பக் - 115.) என்றும் குறித்துள்ளனர்.

திசைச்சொல் பற்றி உரை கூறுமிடத்தில், "கன்னித் தென்கரைக் கட்பழந்தீவம், சிங்களங் கொல்லங் கூவிள மென்னும், எல்லையின் புறத்தவும் ஈழம் பல்லவம், கன்னடம், வடுகு கலிங்கம், தெலிங்கம் கொங்கணந் துளுவங் குடகங் குன்றம் என்பன குடபாலிரு புறச் செயத் துடறுறைபு பழகுந் தமிழ்திரி நிலங்களும், முடியுடை மூவரு மிடுநிலவாட்சி, அரசு மேம்பட்ட குறுநிலத்குடிகள் பதின்மரு முடனிருப் பிருவரும் படைத்த பன்னிரு திசையிற் சொன்னய முடையும்" (நன்னூல் உரை வளம், பெயரியல் - 1, கண்ணன். இரா, பக் – 204) என்றார் அகத்தியனார் என மயிலைநாதர் மதிப்போடு கூறியிருப்பதனை அறியமுடிகின்றது.

"ஏற்கு மெவ்வகைப் பெயர்க்குமீ றாய்ப்பொருள் வேற்றுமை செய்வன வெட்டே வேற்றுமை" (நன்னூல் சொல்லதிகாரம், இளவரசு. சோம பக் – 31) எனும் நூற்பாவில் வேற்றுமைகளின் இயல்பும் அவற்றின் பகுதியும் உணர்த்துகின்ற உரை விளக்கத்திலும், பெயர்வேற்றுமையது இலக்கணம் உணர்த்துதல் பற்றிய உரையிலும், மூன்றாம் வேற்றுமை பற்றி உரைக்கும் இடத்திலும், ஆறாம் வேற்றுமை பற்றிய உரையிலும் அகத்தியச் சூத்திரங்களைப் பயன்படுத்தயுள்ளார்.

மயிலைநாதர் உரையில் அகத்தியச் சூத்திரங்களை 48, 130, 258, 259, 272, 290, 294, 296, 299, 322, 326, 332, 339, 341, 354, 377, 381, 394 ஆகிய நூற்பா உரையில் சுட்டிக்காட்டியுள்ளார். நன்னூலுக்கு உரையெழுதிய உரையாசிரியர்களில் சிலர் சிலவிடங்களில் மட்டுமே அகத்தியரைச் சுட்டிக் காட்டிச் சென்றுள்ளனர். மயிலைநாதர் பயன்படுத்தியுள்ள இடங்களில் சங்கரநமச்சிவாயர் பயன்படுத்தவில்லை. அகத்திய நூற்பாக்களை உரையாசிரியர்கள் பயன்படுத்தி இருப்பினும், பயன்படுத்தப்படும் நூற்பாக்கள் வேறுபடுகின்றன.

அவிநய நூற்பாக்களை மேற்கோள்களாகத் தருதல்

அகத்தியம் போலவே அவிநயம் பற்றிய குறிப்புகளும் உரையாசிரியர்களால் உரைகளில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. நன்னூல் உரையாசிரியர்களுள் மயிலைநாதர் ஒருவரே அவிநய நூற்பாக்களினை அதிகமாகத் தன்னுரையில் பயன்படுத்தியுள்ளார். சங்கரர் ஓரிரு இடங்களில் மட்டுமே பயன்படுத்தியிருக்கிறார். மயிலைநாதர் உரையாலேயே அவிநயம் என்ற இலக்கண நூலை அறியமுடிகிறது. அவிநய நூற்பாக்களை 59, 101, 128, 130, 149, 263, 319, 359, 369, 394 ஆகிய உரைகளில் சுட்டுகின்றார். மயிலைநாதர் தன்னுரையில் அவிநய

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

நூற்பாக்களைப் பலவிடங்களில் பயன்படுத்தியுள்ளமை சிறப்புக்குரியது. சார்பெழுத்து குறித்து உணர்த்துகின்ற,

"உயிர்மெய் யாய்த முயிரள பொற்றள
பஃகிய இஉ ஐஔ மஃகான்
தனிநிலை பத்துஞ் சார்பெழுத் தாகும்" (பவணந்தி முனிவர் இயற்றிய நன்னூல் மூலமும் மயிலை நாதர் உரையும், சாமிநாதையர். உ.வே.(ப.ஆ), பக் – 20)

எனும் நூற்பாவிற்கு உரைக்கும் பொழிப்புரையில்

"வன்மையொடு ரஃகான் ழஃகா னொழிந்தாங்
கன்மெய் யாய்தமோ டளபெழு மொரோவழி"

என்று அவிநயப் பாடல்களை தொடர்ச்சியாக எடுத்துக்காட்டுகின்றார். மேலும் மொழிக்கு முதலாமெழுத்துக்களாவன பற்றிக் கூறும் உதாரணத்தில்

"கசதப ஙவ்வே ஆதியு மிடையும்
டறவிடை ணனரழ லளஇடை கடையே
ஞநமய வவ்வே மூன்றிட மென்ப" (மேலது, பக் – 44)

எனும் அவிநயப் பாடலை எடுத்துரைக்கின்றார். பதம் உணர்த்தும் நூற்பாவுரையில் சங்கரநமச்சிவாயர்

"தன்னை யுணர்த்தி னெழுத்தாம்
பிறபொருளைச் சுட்டுதற்கண்ணேயாஞ் சொல்"

(பவணந்தி முனிவர் இயற்றிய நன்னூல் மூலமும் சங்கர நமச்சிவாயர் செய்து சிவஞான முனிவரால் திருத்தப்பட்ட புத்தம் புத்துரை என்னும் விருத்தியுரையும், தமோதரன். அ (ப.அ) பக் – 192) என அவிநயத்தை சுட்டுகிறார். பகாப்பதம் பற்றிய நூற்பாவுரையில்

"பெயர்ச்சொ லென்றா தொழிற்சொ லென்றா
இரண்டன் பாலா யடங்குமன் பயின்றே" (பவணந்தி முனிவர் இயற்றிய நன்னூல் மூலமும் மயிலை நாதர் உரையும், சாமிநாதையர். உ.வே.(ப.ஆ), பக் – 44) எனவும், தமிழ் சிறப்பெழுத்தும் பொதுவெழுத்தும் உணர்த்தும் இடத்தில் "றனழஎ ஒவ்வுந் தனியு மகாரமுந் தன்மைத் தமிழ் பொது மற்று" என்றும், பெண்ணியல்பினை நீங்கி ஆண்மையினை ஆசைப்படும் பொருள் ஆண்பாலனையவாம் ஆணியல்பை நீங்கிப் பெண்மையினை ஆசைப்படும்பொருள் பெண்பால்னையவாம். இருவரது தன்மையும் அஃறிணையைப் போலவுமாம் என்று கருத்துரைத்து இவையும்மக்கட்கதியினவேனும் அத்தன்மை நிரம்பாமையின் இவ்வாறு முடியுமென்க. ஆசைப்படுவனவெனவே அத்தன்மையிலே சிறிது சார்த்தப்படுவனவாய் நிற்பளவென்பதாயிற்று என்று பொழிப்புரை கூறி, பேடன் வந்தான், பேடி வந்தாள் என உதாரணம் தரும்போதும் அவிநய நூற்பாவையும் சான்றாகத் தருகின்றார்.

"அழிதூஉ வகையு மவற்றின் பாலே"

எனவும், வினைச்சொல் பற்றிய விளக்கம் தருமிடத்து,

"கால மறிதொழில் கருத்தனோ டியையப்
பால்வகை தோறும் படுமொழி வேறே"

E-ISSN: 2581-7140 **UGC CARE Listed Journal**
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 **Available at:** www.ijtlls.com
என்றும்

"வினையெனப் படுவது வேற்றுமை கொள்ளாது

நினையுங் காலைக் காலமொடு தோன்றும்" (மேலது, பக் – 119)

என்றும் அவிநயச் சான்றுகளைக் காட்டி மயிலை விளக்குகின்றார். மயிலைநாதர் கூறாத வேறு சில நூற்பாக்களுக்குச் சிவஞான முனிவர் அவிநயச் சான்றுரைக்கின்றார். ஐகாரக் குறுக்கமும் ஔகாரக் குறுக்கமும் பற்றியுரைக்கும்.

"தற்சுட் டளபொழி யைம்மூ வழியும்

நையு மௌவு முதலற் றாகும்"

(நன்னூல் காண்டிகையுரை, எழுத்ததிகாரம், கழகப்புலவர் குழுவினர், பக் – 60)

என உதாரணம் காட்டுமிடத்து அவிநயனார் கருத்தை மயிலைநாதர் எடுத்துக்காட்டியுள்ளதாக கூறிச் செல்கின்றார். பதமும் அதன் வகையும் கூறுகின்ற

"எழுத்தே தனித்துந் தொடர்ந்தும் பொருடறிற்

பதமா மதுபகாப் பதம்பகு பதமென

இருபா லாகி யியலு மென்ப" (பவணந்தி முனிவர் இயற்றிய நன்னூல் மூலமும் சங்கர நமச்சிவாய செய்து சிவஞான முனிவரால் திருத்தப்பட்ட புத்தம் புத்துரை என்னும் விருத்தியுரையும், தமோதரன். அ (ப.அ) பக் – 169)

எனும் நூற்பாவுரையில் விளக்கவுரை தருமிடத்து,

"தன்னை யுணர்த்தி னெழுத்தாம் பிறபொருளை

சுட்டுதற் கண்ணேயாஞ் சொல்" (மேலது, பக் – 191)

என்று சங்கரர் சுட்டுவது மயிலைநாதரைத் தழுவியேயாகும். வினையியலில் தெரிநிலைவினையின் பொது இலக்கணம் பற்றிய.

"செய்பவன் கருவி நிலஞ்செயல் காலஞ்

செய்பொரு ளாறுந் தருவது வினையே"

எனும் நூற்பாவிற்கு உரை கூறி உதாரண விளக்கம் தருகையில் அவிநயனார் உரைத்துள்ள

"கால மறிதொழில் கருத்தனோ டியையப்

பால்வகை தோறும் படுமொழி வேறே" (பவணந்தி முனிவர் இயற்றிய நன்னூல் மூலமும் சங்கர நமச்சிவாயருரையும், சாமிநாதையர்.உ.வே, பக் – 47) எனும் நூற்பாவைச் சுட்டுகின்றார். சங்கரநமச்சிவாயர் கூறியுள்ள அதே நூற்பாவிற்கு உரை கூறுமிடத்து கூழங்கைத்தம்பிரான் அவிநயனார் கருத்தைக் கையாண்டுள்ளார். ஒரு சில நூற்பாக்களில் மயிலைநாதரைத் தழுவியும், சங்கரரைத் தழுவியும் முகவைஇராமாநுசர், வ. குமாரசாமிப் புலவர், மோசசு ஆகிய உரையாசிரியர்கள் அவிநயனார் கருத்ததைத் தன்னுரைகளில் பயன்படுத்தியுள்ளனர்.

தொல்காப்பிய நூற்பாக்களைத் தருதல்

உரையாசிரியர்கள் தத்தம் உரைகளுக்கு உரை எழுதுகையில் கருத்து விளக்கத்திற்கும், உதாரணத்திற்கும் மேற்கோளாக தொல்காப்பியத்தையே மிகுதியாக எடுத்தாண்டுள்ளனர். ஒவ்வொரு அதிகாரத்திலும், ஒவ்வொரு இயலிலும் தொல்காப்பிய நூற்பாக்களைச் சுட்டி விளக்குகின்றனர். ஒரு சில உரையாசிரியர்கள் தம்முறையைப் பதவுரையாக

International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

அமைத்துக்கொண்டதால் தொல்காப்பிய நூற்பாக்களைச் சான்று காட்டவில்லை. தொல்காப்பியத்திற்கு உரையியற்றிய இளம்பூரணரது உரையே பவணந்தி முனிவரின் நன்னூலுக்கு அடிப்படை காரணமாக அமைந்தது. தொல்காப்பி;ய உரைக்கருத்துக்கள் நன்னூல் நூற்பாக்களில் அமைந்துள்ளதனைக் காணமுடிகிறது. நன்னூலுக்கு உரையியற்றிய மயிலைநாதர் தொல்காப்பிய நூற்பாக்களைப் பேரளவில் கையாண்டுள்ளார்.

இவரைத் தொடர்ந்து பல உரையாசிரியர்கள் தொல்காப்பிய நூற்பாக்களைக் கூறி தத்தம் உரைகளை வகுத்துள்ளனர். தொல்காப்பிய நூற்பாக்களைக் குறிப்பிட்டு ஆசிரியரை சிறப்பு அடைமொழி கொடுத்து போற்றுவதனை ஒல்காப் பெருமை தொல்காப்பியர் என்றும், ஆசிரியர் தொல்காப்பியனார் என்றும், மெய்ந்நூலார் தொல்காப்பியனார் என்றும், முன்னூலார் தொல்காப்பியனார் என்றும், தொல்காப்பியனார் என்னும் வரிகள் மூலம் உணர முடிகிறது. சில உரையாசிரியர்கள் தொல்காப்பிய நூற்பாக்களை ஏற்றும், சிலர் மறுத்தும், சிலர் போற்றியும் உரைகளை அமைந்துள்ளனர். மயிலைநாதர் பதினொன்று இடங்களிலும், சங்கரநமச்சிவாயர் பதினாறு இடங்களிலும் தொல்காப்பியரைச் சுட்டுகின்றனர். சான்றாக, சார்பெழுத்து பற்றி விளக்குகின்ற நூற்பாவுரையில், மயிலைநாதர்

“எழுத்தெனப் படுப அகரமுதல னகர விறுவாய் முப்பஃதென்ப

சார்ந்துவரன் மரபின் மூன்றலங் கடையே” (நன்னூல் காண்டிகையுரை, கழகப் புலவர் குழு, பக் – 230) என்ற நூற்பாவினை எடுத்துக்காட்டி விளக்குகின்றார். மூன்று சுட்டிற்கும் யாவும் எகரமுமாய வினாக்களுக்கும் வழியே அகரத்தோடும் கூடி ஙகரம் மொழிக்கு முதலாம் என்று கருத்துரை வழங்கி உதாரணம் கூறுமிடத்து,

“குற்றிய லுகர முறைப்பெயர் மருங்கி

னொற்றிய நகரமிசை நகரமொரு முதலும்”

(பவணந்தி முனிவர் இயற்றிய நன்னூல் மூலமும் சங்கர நமச்சிவாயருரையும், சாமிநாதையர்.உ.வே, பக் - 20.) என்று மொழிமரபில் கூறப்பட்ட நூற்பாவினைக் கையாண்டுள்ளார் மயிலைநாதர். சார்பெழுத்திற்கு விளக்கம் காண சங்கரநமச்சிவாயர் தொல்காப்பியத்தை கூறாது விடுத்தார். சங்கரர் செய்த உரையில் வேண்டுமிடங்களில் தருத்தம் கூற விழைந்த சிவஞான முனிவர் தொல்காப்பியத்தைத் தொட்டுச் செல்வதனைக் காண முடிகிறது. முனிவர் விளக்கும் போது, “அவ்வாறன்றி உயிர்மெய் யொழிந்தன, அகரம் முதலியன போல் தனித்தானும் ககரம் முதலியன போல அகரமொடு சிவணியானும் இயங்கும் இயல்பின்றி ஒரு மொழியைச் சார்ந்து வருதலே தமக்கு இலக்கணமாக உடைமையின் சார்பெழுத்தாயின எனக் கோடலுமாமென்க. இனி ஆசிரியர் தொல்காப்பியர் செய்கை யொன்றனையும் நோக்கிச் சார்பெழுத்து மூன்று எனக் கருவி செய்தாராகலின், இவ்வாசிரியர் செய்கையும், செய்யுளியலும் நோக்கிச் சார்பெழுத்து பத்து எனக் கருவி செய்தார் என்பதும் உய்த்துணர்க”15 என்று தொல்காப்பியத்தைச் சான்றுரைக்கின்றார். சிவஞான முனிவருக்குப் பின்வந்த உரையாசிரியர்களுள் நன்னூலுக்கு ஆராய்ச்சி தெளிவுரை எழுதிய மோசசுபொன்னையா சார்பெழுத்து பற்றி விளக்குமிடத்து,

“சார்ந்துவரி னல்லது தமக்கியல் பிலவெனத்

தேர்ந்து வெளிப்படுத்த ஏனை மூன்றும்

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

தத்தம் சார்பிற் பிறப்பொடு சிவணி

ஒத்த காட்சியில் தம்மியல் பியலும்" (நன்னூல் உரை வளம், எழுத்தியல் - 1, கண்ணன். இரா பக் – 48)

என்று தொல்காப்பியர் கூறுவதனைச் சான்றுரைக்கின்றார்.

"சரி சமழ்ப்புச் சட்டி சருகு சவடி

சளிசகடு சட்டை சவளி-சரடு

சந்து சதங்கை சழக்காதி யீரிடத்தும்

வந்தனவாற் சம்முதலும் வை"

என சிவஞான முனிவர் உரை கூறுமிடத்து,

"சகரக் கிளவியும் அவற்றோ ரற்றே

அஐஒள எனும் மூன்றலங் கடையே" (பவணந்தி முனிவர் இயற்றிய நன்னூல் மூலமும் சங்கர நமச்சிவாய செய்து சிவஞான முனிவரால் திருத்தப்பட்ட புத்தம் புத்துரை என்னும் விருத்தியுரையும், தமோதரன். அ (ப.அ) பக் – 177) என்பது முதலாக இன்னோரன்ன சில எழுத்துக்களை மொழிக்கு முதலாகா என ஆசிரியர் தொல்காப்பியர் விலக்கினாராராலோவெனின், "இவ்வட மொழிகளும் திசைச்சொற்களும் அக்காலத்து இவ்வாறு தமிழின் கண் பயின்று வாராமை பற்றி என்க" என்று உதாரண விளக்கம் தருகின்றபோது தொல்காப்பிய நூற்பாவை சுட்டுகின்றார்.

"பிரிநிலை வினாவெண் ணீற்றசை தேற்றம்

இசைநிறை யெனவா றேகா ரம்மே"

(நன்னூல் காண்டிகை உரை கழகப் புலவர் குழு. நன்னூல் விருத்தியுரை, முகவை இராமனுசர் கவிராயர், பக் – 247) எனும் நூற்பாவுரையில், உதாரணம் தருமிடத்து முகவை இராமாநுசக் கவிராயர்,

"தேற்றம் வினாவே பிரிநிலை யெண்ணே

யீற்றசை யிவ்வைந்தே காரம்மே"

(பவணந்தி முனிவர் இயற்றிய நன்னூல் மூலமும் சங்கர நமச்சிவாயருரையும், சாமிநாதையர்.உ.வே, பக் – 54) என்று ஆசிரியர் தொல்காப்பியனார் கூறுதலும் என உரைத்துள்ளமையால் தொல்காப்பிய நூற்பாவை சான்று காட்டியமை உணரமுடிகின்றது.

தொகுப்புரை

19 ஆம் நூற்றாண்டிற்கு முந்தைய வரலாற்றில் ஒன்றுக்கு மேற்பட்ட உரைகளைப் பெற்றிருப்பது நன்னூல் ஆகும். தமிழ் இலக்கண மரபு அகத்திய இலக்கணத்திலிருந்து தொடர்வதை மேற்கோள்கள் இயம்புகின்றன. இலக்கண உரைகள் அதன் அமைப்பிலும், தன்மையிலும் குறிப்பிடத்தக்க ஒற்றுமைகளையும் வேறுபாடுகளையும் கொண்டுள்ளன. மூலபாடம் கூறுதல், கருத்துக்களை விளக்குதல், சான்றுகளைத் தருதல் ஆகிய அனைத்திலும் உரையாசிரியர்களிடையே சில பண்புகள் ஒன்றுபட்டும் முரண்பட்டும் காணப்படுகின்றன. உரையாசிரியர்களை ஒருவருக்கொருவர் நாகரீகமாகவும், தருக்க நெறியிலும் மறுத்துள்ளனர்.

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

மூல ஆசிரியர் கருத்தினைத் தழுவுதலை சில உரையாசிரியர்கள் நோக்கமாகக் கொண்டுள்ளனர்.

துணைநூற்பட்டியல்

[1] கழகப் புலவர் குழுவினர் - நன்னூல் காண்டிகையுரை 154 டி.டி.கே திருநெல்வேலி தென்னிந்திய சாலை, ஆழ்வார் பேட்டை, சைவசித்தாந்த நூற்பதிப்புக் சென்னை - 600 018. கழகம், லிமிடெட்.

[2] முனைவர் இரா. கண்ணன் - நன்னூல் உரைவளம் எழுத்தியல் – 1 உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், மையத்தொழில் நுட்பப் பயிலக வளாகம்,இரண்டாம் முதன்மைச் சால, தரமணி, சென்னை - 600 113.

[3] முனைவர் இரா. கண்ணன் - நன்னூல் உரைவளம் வினைவியல், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், மையத்தொழில் நுட்பப் பயிலக வளாகம், இரண்டாம் முதன்மைச் சாலை, தரமணி, சென்னை - 600 113.

[4] புலவர் சோம. இளவரசு - நன்னூல் எழுத்ததிகாரம், மணிவாசகர் பதிப்பகம், 31, சிங்கர் தெரு, பாரிமுனை, சென்னை - 600 108.

[5] புலவர் சோம. இளவரசு - நன்னூல் சொல்லதிகாரம், மணிவாசகர் பதிப்பகம், 31, சிங்கர் தெரு, பாரிமுனை, சென்னை - 600 108.

[6] இளம்பூரனர் தொல்காப்பியத்தில் மெய்ப்பாட்டியல், உவமையியல், செய்யுளியல், மரபியல், திருநெல்வேலி தென் இந்திய சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகம் லிமிட்டட், 523, டி.டி.கே சாலை, சென்னை – 18.

[7] க.ப. அறவாணன், எழுநூறு ஆண்டுகளில் நன்னூல், பாரி நிலையம்,சென்னை.

[8] இராமாநுசக் கவிராயர், நன்னூல் விருத்தியுரை, ஆருத்ரா பதிப்பகம் 37, வடக்கு சாலை, தியாகராய நகர், சென்னை.

[9] முனைவர் இரா. கண்ணன் நன்னூல் உரைவளம் பெயரியல் -1, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், மையத்தொழில் நுட்பப் பயிலக வளாகம், இரண்டாம் முதன்மைச் சாலை, தரமணி, சென்னை – 600 113.

[10] முனைவர் இரா. கண்ணன் நன்னூல் உரைவளம் பெயரியல் -2, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், மையத்தொழில் நுட்பப் பயிலக வளாகம், இரண்டாம் முதன்மைச் சாலை, தரமணி, சென்னை – 600 113.

[11] தாமோதரன் அ – சங்கரநமச்சிவாயர், உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், தரமணி, சென்னை.

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

[12] கழகப் புலவர் குழுவினர் - நன்னூல் காண்டிகையுரை 154 டி.டி.கே திருநெல்வேலி தென்னிந்திய சாலை, ஆழ்வார் பேட்டை, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட், சென்னை - 600 018.

தமிழில் இக்கட்டுரையை இவ்வாறு மேற்கோளிடுங்கள்:

பெரியசாமி. "நன்னூல் உரையாசிரியர்களும் இலக்கண மேற்கோள்களும்." *தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்*, தொகுதி 3, சிற.இதழ் 2, தொகுதி 2, *திசம்பர்* 2020, பக். 264-271. டிஓஐ: **10.38067/ijtlls.2020.spl.v03i02v2.040**

Cite this Article in English (*MLA 8 Style*) as:
Periyaswamy. "*Nannool* Text Writers and Grammatical Quotes." *International Journal of Tamil Language and Literary Studies*, Vol. 3: Special Issue - 2, Vol. 2, December 2020, pp. 264-271.. DOI: **10.38067/ijtlls.2020.spl.v03i02v2.040**

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி /Author Contribution Statement: இல்லை /NIL

கட்டுரையாளர் நன்றியுரை /Author Acknowledgement: இல்லை /NIL

கட்டுரையாளர் உறுதிமொழி/Author Declaration: இல்லை /NIL

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் அரையாண்டு பன்னாட்டு ஆய்விதழ்

International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

சேனாவரையார் உரையில் பெயர் வழக்குகள்
Name Cases in Senavarayar's Speech

முனைவர் சு.பேச்சியம்மாள், தமிழியல் துறை, உதவிப்பேராசிரியர், ம.சு.பல்கலைக்கழகம், திருநெல்வேலி,
Dr.S.Petchiammal, Assistant Professor, Department of Tamil Studies, M.S.University, Tirunelveli
ORCiD: https://orcid.org/0000-0002-3733-4325
DOI: 10.38067/ijtlls.2020.spl.v03i02v2.041

Abstract

Texts in Tamil are spread over a large area. Although text texts appeared from the 9th to the 10th century AD. Tamil literary historians refer to the period from the 11th century to the 14th century as the period of orators. Those who first try to write a text for a book does not write a large - scale lecture or commentary on the quote. They first wrote the meaning of the acronyms in the verb. Mentioned which words to handle to conclude with words. Tolkappiya Senavarayar mentions in the first possible cleavage of vocabulary how to form words out of error. Adithya mentions that Klaviyakkam speaks of a syntactic sentence structure.

Keywords: Use of adverbs, Names, Proverbs in speech

முன்னுரை

தமிழில் உரைகள் ஒரு பெரும் பரப்பென விரிந்து கி.பி.9 முதல் 10 நூற்றாண்டு வரை உரை நூல்கள் தோன்றின என்றாலும் கி.பி. 11 ஆம் நூற்றாண்டு முதல் 14 நூற்றாண்டு வரையிலான காலத்தை உரையாசிரியர்களின் காலம் என்றே தமிழ் இலக்கிய வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். ஒரு நூலுக்கு முதன் முதலில் உரை எழுத முயன்றவர்கள் எடுத்த எடுப்பில் பெரிய அளவில் விரிவுரையோ விளக்கவுரையோ எழுதுவதில்லை. அவர்கள் முதலில் செய்யுளில் உள்ள அருஞ்சொற்களுக்குப் பொருள் எழுதினர். சொற்களைக் கொண்டு கூட்டி முடிப்பதற்கு எந்த சொற்களை கையாள வேண்டும் என்று குறிப்பிட்டனர். தொல்காப்பிய சேனாவரையார் சொல்லதிகாரத்தின் முதல் இயலான கிளவியாக்கத்தில் வழுக்களைந்து சொற்களை எவ்வாறு அமைத்துக் கொள்ள வேண்டும் என்று குறிப்பிடுகிறார். கிளவியாக்கம் என்பது சொற் சேர்க்கையாகிய வாக்கிய அமைப்பு பற்றி பேசுகின்றது என ஆதித்தர் குறிப்பிடுகிறார் **(கிளவி.உரைவளம்.ப.22)** அந்த வகையில் உரையாசியர் சொல்லதிகார உரையில் சேனாவரையார் தம் காலத்து நடைமுறை சொல் வழக்குகளையும் பெயர்களையும் உரையில் கையாண்டு இருப்பதை இக்கட்டுரையில் காணலாம்.

சேனாவரையார்

ஒரு இலக்கிய பிரதி எழுதப்பட்ட காலத்திலிருந்து பல நூற்றாண்டுக்குப் பின் வாசிக்கும் பொழுது அதன் அர்த்தங்களைப் புரிந்து கொள்ள இயலவில்லை. அதற்கு காரணம் காலச்சூழலும் மொழி மாற்றமும் சமயக் கோட்பாட்டுத் தாக்கமும் ஆகும். உரையாசிரியர்கள் உரைகள் மதியை மயக்குவன உண்மையை ஒளிப்பது குழப்பம் தருவது என்று குற்றச்

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

சாட்டுகள் இருந்தாலும் தொல்காப்பியத்திற்கும் சான்றோர் செய்யுளுக்கும் அதனை தொடர்ந்து வந்த இலக்கியங்களுக்கும் உரை எழுதி காத்தவர்கள் உரையாசிரியர்கள். அவ்வுரையாசிரியர்களில் ஒருவர் சேனாவரையார். "சேனாவரையர் தொல்காப்பியச் சொல்லதிகாரத்திற்கு உரை எழுதியவர். அவர் வேறு எந்த நூற்கும் உரை எழுதினார் என்பது திட்டமாகத் தெரியவில்லை. என்றாலும், இந்த ஒர் உரையே அவரது உரைத் திறனை நன்கு விளக்கப் போதிய சான்றாய் அமைந்து விட்டது" **(தமிழ் உரைநடை, ப. 112)** என்று அ.மு.பரமசிவானந்தம் கூறுவார்

"சேனாவரையர் உரைநடை திட்பநுட்பம் செறிந்தது. வடமொழிப் புலமையும் நிரம்பியவர் அவர்" **(தமிழ் இலக்கிய வரலாறு, ப.193)** என்கிறார் மு.வரதராசனார்.

திரு.வி.கணபதி என்பார், "சேனாவரையரது உரை உயர்ந்த நடையில் இயன்றது. சில இடங்களில் செய்யுள் நடைபோன்று திகழ்வது. நுட்பமும் ஆழமும் உடையது. சொற்செட்டுடன் விளங்குவது. முன்னைய உரை மரபில் நல்ல பயிற்சியில்லார் இதனைப் படித்தறிந்து கொள்ளுதற்கு அருமையாக உள்ளது" **(தமிழ் இலக்கண இலக்கிய அறிமுகம், ப.114)** என்று அவரின் உரையின் நடையைக் குறிப்பிட்டுப் பாராட்டுவார்.

"சேனாவரையர் சொல்லதிகாரம் ஒன்றிற்கே உரை கண்டிருப்பினும், தொல்காப்பியம் பற்றி முழு நோக்கு உடையர். எழுத்தையும் பொருளையும் அவர் சிங்க நோக்காகக் கண்டு விளக்கம் எழுதுகின்றார். சொல்லதிகார அமைப்பையும் முழுமையாக நோக்கி, இயல் அடைவிலும், சூத்திரங்களின் அமைப்பு, பாட வேறுபாடு ஓசை ஆகியவற்றிலும் ஈடுபடுகின்றார்" **(உரையாசிரியர்கள், ப.119)** என்று குறிப்பிடுகிறார் மு,வை.அரவிந்தன்.

சேனாவரையார் தம் காலத்து வழக்குகளை, "ஆ தீண்டு குற்றி" **(சேனா.சொல்.கிளவி.52)** "ஊசியொடு குயின்ற தூசும் பட்டும்"**(சேனா.சொல்.வேற்.73)**, "மருந்து தின்றெனப் பிணி நீங்கிற்று" **(சேனா.சொல்.வினை.228)** என்று மக்கள் பேச்சு வழக்கினை எடுத்துரைக்கின்றார்.

தகுதியும் வழக்கும் தழீஇயின ஒழுகும் **(சேனா.சொல். கிளவி.17)** என்ற நூற்பாவிற்கு விளக்கம் தரும் சேனாவரையார். தகுதி என்பது செத்தாரை துஞ்சினார் என்றாலும், சுடுகாட்டை நன்காடு என்றும் ஓலையை திருமுகம் என்றலும், கெட்டதனைப் பெருகிற்று என்றலும் என்று விளக்குகிறார்.வழக்கு என்பது காரணமின்றி வழங்குவது என்றும் அதற்குச் சான்றாக பண்பு கொள் பெயருக்கு வெண்களமர் உழவரையும், கருங்களமர் பறையரையும் பண்பைக் குறிக்காது சாதிப்பெயராய் வருவனவும் வழக்காறு என்கிறார்.

"னஃகான் னொற்றே யாடூஉ வறிசொல்"**(சேனா.சொல்.கிளவி.5)** என்ற நூற்பாவிற்கு சேனாவரையார் னகரத்தை இறுதியாக உடைய சொல் ஆடூஉ அறி சொல். உண்டான், உண்பன் என்ற சான்றுகளோடு குறிப்பு வினைமுற்றுச் சொற்களை உணர்த்தும் கரியன், கரியான் என்ற சொல்லும் பொருந்தும் என்கிறார்.

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

ஒன்றறி கிளவி தறட வூர்ந்த

குன்றியலுகரத்திறுதியாகும். (சேனா.சொல்.கிளவி.8)

என்ற நுற்பாவிற்கு தடற வூர்ந்த என்பதற்கு கிடக்கை முறைப்படி கூற வேண்டும் என்கிறார். மேலும் சான்று கூறும் போது வருவது, கூயிற்று, குண்டு கட்டு என்கிறார. இதில் குண்டுகட்டாக தூக்கிவிடுவேன் என்று தற்கால பேச்சுவழக்கில் பேசுவதைப் பார்த்திருக்கிறோம்.

செப்பும் வினாவும் வழாஅல் லோம்பல் **(சேனா.சொல்.கிளவி.13)** என்ற நூற்பாவிற்கு செப்பும் வினாவிற்கு குமரியாடிப் போந்தேன் "சோறு தம்மின்" என்று கூறுகிறார். கேட்கப்பட்டானின் அறியலுறுதலை உணர்த்தாமல் ஒன்றனை அறிவுறுத்தி நின்றதால் அது செப்பின் பாற்படும் என்கிறார். வண்ணச் சின்னச் சொல்லுக்கு சான்றான சொங்கால் நாரை - செங் என்பது செம்மை என்ற வண்ணம், கால் என்பது சினைப்பெயர் முதல்பெயர் நாரை மூன்றும் மயங்காமல் வரும் என்கிறார். கால் செந்நாரை, தலை பொருள் சாத்தன் என முறை மயங்கி வந்தால் அது மரபு வழு என்கிறார். வழக்கில் மயங்காமல் வரும் என்றும் செய்யுளில் வரும் போது மயங்கி வரும் என்கிறார். செவிசெஞ்சேவல், வாய்வன் காக்கை என்பன செஞ்செவிச் சேவல், வல்வாய்க்காக்கை என்று பொருள்பட வரும் என்கிறார். இவற்றை செவியாற் சிவந்த சேவல், வாயான் வலிய காக்கை என விரிக்கலாம் என்கிறார் சேனாவரையார். புகழ்தல் தொடர்பான வழக்குகளில் "குரிசில்" குறித்த வழக்குச் சொல் ஒரு இடத்தில் மட்டுமே பேசுகிறார்.

காப்பின் ஒப்பின் ஊர்தியின் இழையின்

ஒப்பின் புகழின் பழியின் என்றா (சேனா. சொல். வேற்.72)

என்ற நூற்பாவில் புகழின் என்ற சொல்லிற்கு குரிசிலைப் புகழும் என்று குறிப்பிட்டுள்ளார்.

மகடூஉ மருங்கின் பால்திரி கிளவி

மகடூஉ வியற்கை தொழிலவ் வயினான (சேனா. சொல். பெயர்.194)

என்ற நூற்பாவிற்கு விளக்கம் தரும் சேனாவரையார் "பெண்மகன் வந்தாள்" என்று சான்று கூறுகிறார். தொழில் தொடர்பான வழக்குகளில் வனைதல் குறித்த வழக்குச் சொல்லை அவற்றுள்,

எழுவாய் வேற்றுமை பெயர் தோன்று நிலையே (சேனா.சொல்.வேற்.66)

என்ற நூற்பாவின் உரையில் சாத்தன் குடத்தைக் கையான் வனைந்து கொற்றற்குக் கொடுத்தான் என்று குறிப்பிடுகிறார்.மேய்த்தல் தொடர்பான வழக்குச் சொற்கள் ,

வினையின் தோன்றும் பால்அறி கிளவியும்

பெயரின் தோன்றும் பால்அறி கிளவியு

மயங்கல்கூடாதம்மரபினவே (சேனா.சொல்.கிளவி.11)

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

என்ற நூற்பாவின் உரையில் தம்மர பினவே என்ற சொல்லிற்குச் சான்றாக, யானை மேய்ப்பானைப் பாகன் என்றலும், யாடு மேய்ப்பானை இடையன் என்றலும் மரபு எனக் குறிப்பிடுகிறார். கலம் தொடர்பான வழக்குச் சொல்லை,

செயப்படு பொருளைச் செய்தது போலத்
தொழிற்படக் கிளத்தலும் வழக்கியன் மரபே (சேனா. சொல், வினை.246)

என்ற நூற்பாவின் உரையில் கலங்கழீஇயிற்று கலங் கழுவப்பட்டது என்று குறிப்பிடுகின்றார். தொகுத்தல், சிதைத்தல், பிரித்தல் போன்ற வழக்குகளை அறுத்தலின் குறைத்தலின் தொகுத்தலின் பிரித்தலின் (சேனா.சொல்.வேற்.72) என்ற நூற்பாவிற்கு முறைப்பெயர் தொடர்பான வழக்குச் சொற்களை,

அதுவென் வேற்றுமை உயர்திணைத் தொகைவயின்
அதுவென் உருபுகெடக் குகரம் வருமே (சேனா. சொல். வேற்.ம.94)

என்ற நூற்பாவின் உரையில், நங்கை கணவன் என்னும் தொகையை விரித்து நங்கைக்குக் கணவன் என நான்கன் உருபு வந்தவாறு கண்டு கொள்க என்று குறிப்பிடுகின்றார். இக்காலகட்டத்தில் அவளுக்கு கணவன் என்றும் அப்பெண்ணிற்கு கணவன் என்றும் பேச்சு வழக்கில் பயன்படுத்துகிறோம். இந்நூற்பாவிற்கு உரை தரும் சேனாவரையார் கால திருமணமான பெண்ணின் கணவனை குறிப்பிடுகையில் நங்கைக்குத் கணவன் என்று குறிப்பிடும் வழக்கம் இருந்திருத்தல் போலும்.தொழில் தொடர்பான வழக்குகளில் கட்டிலேறுதல், வாழ்க்கைப்படுதல் குறித்த வழக்குச் சொற்களை

பெயரினும் தொழிலினும் பிரிபவை யெல்லாம்
மயங்கல் கூடா வழக்குவழிப் பட்டன (சேனா. சொல். கிளவி.50)

என்ற நூற்பாவின் உரையில் இவர் வாழ்க்கைப்பட்டார் என்பது தொழிலிற் பிரிந்த ஆணொழி மிகுசொல், இவர் கட்டிலேறினார் என்பது தொழிலிற் பிரிந்த பெண்ணொழி மிகுசொல் என்று குறிப்பிடுகிறார். அளவுப் பெயர் பற்றி,

அளவும் நிறையும் அவற்றொரு கொள்வழி
உனவென மொழிப உணர்ந்திசி னோரே (சேனா. சொல். வேற்.ம.116)

என்ற நூற்பாவின் உரையில் இந்நெற்பதக்கு எனவும் வரும் என்று குறிப்பிடுகிறார்.புழங்கு பொருள்கள் தொடர்பான வழக்குகளை

வினையின் தொகுதி காலத்தியலும் (சேனா. சொல். எச்.415)

என்ற நூற்பாவின் உரையில் "அரிவாள்" என வரும் என்றும்,

தகுதியும் வழக்கும் தழீஇயின ஒழுகும் (சேனா.சொல்.கிளவி.17)

ஓலை குறித்த சொற்களைச் சான்று காட்டுகிறார். உணவுப் பொருட்கள் தொடர்பான வழக்குச் சொற்களை,

செயப்படு பொருளைச் செய்தது போலத்

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

தொழிற்படக் கிளத்தலும் வழக்கியன் மரபே (சேனா. சொல். வினை.246)

என்ற நூற்பாவின் உரையில், "அரிசிதானேயட்டது" என்று சான்று கூறுகிறார்.

உரையிடத் தியலும் உடனிலை அறிதல் (சேனா.சொல்.எச்.458)

என்ற நூற்பாவிற்கு உரை தரும் சேனாவரையார் இந்நாழிக்கிந்நாழி சிறிது பெரிது என்று குறிப்பிடுகின்றார்.மரபு சார்ந்த வழக்குகளில் ஆபரணங்கள் மற்றும் புத்தகங்கள் தொடர்பான வழக்குச் சொல்லை.

அவற்றுள் ...வேற்றுமைத் தொகையே வேற்றுமை யியல (சேனா.சொல்.எச்.413)

என்ற நூற்பாவின் உரையில் கடிசூத்திரப் பொன். கடி சூத்திரத்திற்குப் பொன், சாத்தன் புத்தகம், சாத்தனது புத்தகம் என்றும் குறிப்பிடுகின்றார்.உணவுப் பொருட்கள் தொடர்பான வழக்கு சொற்களை, **எண்ணூங் காலும் அதுஅதன் மரபே (சேனா.சொல்.கிளவி.47)** என்ற நூற்பாவின் உரையில் சேனாவரையார் சோறுங்கறியும் அயின்றார் என வரும் எனவும் சோறுங்கறியும் தின்றார் என்பது வழு என்னும் குறிப்பிடுகின்றார். சில வட்டாரங்களில் இவ்வழக்கு இன்றும் புழக்கத்தில் உள்ளது. **"எச்சஞ் சிறப்பே ஐயம் எதிர்மறை" (சேனா.சொல்.இடை.255)** என்ற நூற்பாவின் உரையில் "ஆக்கம்" என்ற சொல்லிற்குச் சான்றாக பால் உணவும் ஆயிற்று என்றால் அதுவே மருந்துமாயிற்று என வருதல் என்று குறிப்பிடுகின்றார்.வழக்கங்கள் குறித்த நம்பிக்கைகளில்,

ஏனை எச்சம் வினைமுத லானும்
ஆன்வள் தியையும் வினைநிலையானும்
தாமியல் மருங்கின் முடியும் என்ப (சேனா.சொல்.வினை.232)

என்ற நூற்பாவின் உரையில் சேனாவரையர். இறந்த பின் இளமை வராது என்று குறிப்பிடுகிறார்.

இனைத்தென அறிந்த சினை முதற் கிளவிக்கு
வினைப்படு தொகுதியின் உம்மை வேண்டும் (சேனா.சொல்.கிளவி.33)

என்ற நூற்பாவிற்கு சான்று, முருகனுக்கு கை பன்னிரண்டு, தமிழ் நாட்டிற்கு வேந்தர் மூவர் என்ற பழமொழிகளை எடுத்துக்காட்டுகிறார்.

இயற்பெயரும் சிறப்புப் பெயரும் அமையும் வகை குறித்த நூற்பாவினை விளக்கும்போது சேனாவரையர். "உம்மையால் தவம், கல்வி, குடி, உறுப்பு முதலாயினவற்றானாகிய பெயரும் கொள்ளப்படும். அவை முனிவனகத்தியன் எனவும், தெய்வப்புலவன் திருவள்ளுவன் எனவும், சேரமான் சேரலாதன் எனவும், குருடன் கொற்றன் எனவும் வரும்." **(சேனா.சொல்.கிளவி.41,ப.71)** என்றும் இதே நூற்பாவுரையில் திருவீரவாசிரியன், மாந்தக்கொங் கேனாதி என்ற பெயர்களையும் அவர் சுட்டுகிறார்.

ஏனாதி, காவிதி, எட்டி எனப் பண்டைய மன்னர்கள் வழங்கிய பட்டப் பெயர்களையும் அவர் கையாண்டுள்ளார் **(சேனா.சொல்.கிளவி.41, ப.73)** "ஆல்" உருபைக் கூறவந்த

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

சேனாவரையர் "அகத்தியனால் தமிழுரைக்கப்பட்டது" **(சேனா.சொல்.வேற்.73, ப.125)** என்பதனையும், வேறோர் இடத்தில் அவர் "கபிலரது பாட்டு, பரணரது பாட்டியல்" **(சேனா.சொல்.வேற்.80,ப.140)** என்பதனையும் சுட்டிக் கூறுகின்றார்.

தொல்காப்பியன், கபிலன் என்ற பெயர்களையும் **(சேனா.சொல்.வேற்.ம.116, ப.176)** சேரமான், மலையமான் **(சேனா.சொல்.விளி 132, ப.187)**அருவாளன், சோழியன், அத்தி கோசத்தார், அம்பர் கிழான். பேரூர்கிழான், பட்டிபுத்திரர், கங்கைமாத்திரர் **(சேனா.சொல்.பெயர்.165, ப.205)** சீத்தலைச் சாத்தன், கொடும்புற மருதி **(சேனா.சொல்.பெயர்.174, ப.215)** பாரி **(சேனா.சொல்.இடை.259, ப.307)** பெருஞ்சேந்தனார், முடத்தமாமக் கண்ணியார் **(சேனா.சொல்.இடை.270, ப.310)** போன்ற இயற்பெயர்களையும், குடிப்பெயர்களையும், தமிழ் அறிஞர்களின் பெயர்களையும் சிறப்புப் பெயர்களையும் அவர் சான்று கூறி விளக்குகின்றார்.

முடிவுரை

மொழிக்கு அடிப்படையாகவும் ஆதாரமாகவும் இருப்பவை சொற்கள். ஒவ்வொரு காலச் சூழலுக்கு ஏற்றாற் போல் சொற்களில் ஏற்படும் மாற்றங்கள் அக்கால வழக்கு போன்றவற்றிலிருந்து சேனாவரையார் பெற்ற அனுபவத்தை வெளிப்படுத்தியுள்ளார். தொல்காப்பிய நூற்பாவிற்கு விளக்கம் தரும் உரையாசிரியர்களின் உரைகளில் உள்ள வழக்குச் சொற்களை, சங்க இலக்கியத்துடன் வரலாற்று மொழியியல் நோக்கில் ஒப்பீட்டு ஆய்வினை மேற்கொண்டால் மேலும் சில உண்மைகள் புலப்படும்.

துணைநூற்பட்டியல்

[1] அரவிந்தன். மு.வை, உரையாசிரியர்கள், மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம், ப. 119, 1983.
[2] கணபதி, வி, தமிழ் இலக்கண இலக்கிய அறிமுகம், சாரல்நூல் வெளியீடு, சேலம், ப.114, 1976.
[3] சதிஷ். அ, சங்க இலக்கிய உரைகள், அடையாளம் பதிப்பகம், திருச்சி, 2008.
[4] சிவலிங்கனார். ஆ. (பதி), கிளவியாக்கம் உரைவளம், உலக தமிழராய்ச்சி நிறுவனம், தரமணி பதிப்பகம், சென்னை, ப., 1982.
[5] செல்வநாயகம். வி, தமிழ் உரைநடை வரலாறு, இலங்கைப் பல்கலைக்கழகம், பேராதனை, ப.60, 1957.
[6] தொல்காப்பியம் சொல்லதிகார மூலமும் சேனாவரையார் உரையும், உலக தமிழராய்ச்சி நிறுவனம், சென்னை, ப.14 -330, 2007.
[7] பரமசிவானந்தம். அ.மு, தமிழ் உரைநடை, தமிழ்க் கலைப்பதிப்பகம், சென்னை, ப. 112, 1976.
[8] மாதையன். பெ, உரையியல் , பாவை பப்ளிகேஷன்ஸ், சென்னை, 2014.

E-ISSN: 2581-7140 **UGC CARE Listed Journal**
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 **Available at:** www.ijtlls.com

[9] மோகன். இரா. சொக்கலிங்கம். ந, உரை மரபுகள், மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம், ப. 118, 2011.

[10] வரதராசன், மு. தமிழ் இலக்கிய வரலாறு, சாகித்ய அகாதெமி, புதுடெல்லி, ப. 193, 1980.

தமிழில் இக்கட்டுரையை இவ்வாறு மேற்கோளிடுங்கள்:

பேச்சியம்மாள். "சேனாவரையார் உரையில் பெயர் வழக்குகள்." *தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்*, தொகுதி 3, சிற.இதழ் 2, தொகுதி 2, *திசம்பர்* 2020, பக். 272-278. டிஒஐ: **10.38067/ijtlls.2020.spl.v03i02v2.041**

Cite this Article in English (*MLA 8 Style*) as:
Petchiammal. "Name Cases in Senavarayar's Speech." *International Journal of Tamil Language and Literary Studies*, Vol. 3: Special Issue - 2, Vol. 2, December 2020, pp. 272-278. DOI: **10.38067/ijtlls.2020.spl.v03i02v2.041**

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி /Author Contribution Statement: இல்லை /NIL

கட்டுரையாளர் நன்றியுரை /Author Acknowledgement: இல்லை /NIL

கட்டுரையாளர் உறுதிமொழி/Author Declaration: இல்லை /NIL

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

19-ஆம் நூற்றாண்டு உரைநூலாசிரியர் 'திருமணம்' செல்வக்கேசவராயர்

The 19th Century Commentator 'Thirumanam' Selvakkesavarayar

மைத்திரி அன்பு, தலைவர், தமிழ் மாடம் அறக்கட்டளை, காஞ்சிபுரம்.
Dr.Mythreanbu, Trustee, Tamizh Madam Trust, Kanchipuram.
ORCiD: https://orcid.org/0000-0003-0621-1012
DOI: 10.38067/ijtlls.2020.spl.v03i02v2.042

Abstract

Marriage Selvakesavarayar, a legendary Tamil activist who created texts in Tamil through simple explanations through his secondary text books for the original ones. Sellakesavarayar is multilingual. Especially, he is proficient in English. However, he has given many explanations in his life and books; pointing out that the Tamil language has more information than any other language in the past. He has been interested in Tamil language and Tamil literature since his youth and had written textual commentaries with apt explanations. In the context of his work as a professor, he has written prose texts. His texts are composed with excellent prose texts; focusing on the difficulties that students face while reading and understanding prose. He has also researched and published some of the oldest Tamil texts. Being a neutral and a non-judgmental critic, he records many new ideas in his writings. This research article is designed to introduce him and to explain his honest performance qualities, living environment, family background, literary interest, and his obsession with the sources found in Tamil language and Tamil literature.

Keywords: 19th Century, Tamil Commentators', 'Thirumanam' Selvakkesavarayar

அறிமுகம்

திருமணம் செல்வக்கேசவராயர் தமிழியல் ஆய்வுகளில் தொடங்கி, இலக்கணம், உரைநடை, கதை, கவிதை, மொழியியல், அகராதியியல், நாட்டார் வழக்காற்றியல், வரலாறு எனப் பலத்துறைகளில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டு, குறிப்பாக 19-ஆம் நூற்றாண்டில் பல படைப்புகளை தமிழில் வெளியிட்டவர். இளம்வயது முதலே கல்வி கேள்விகளிலும், ஆராய்ச்சியிலும் விருப்பம் கொண்டவர். சென்னைக்கு அருகிலுள்ள 'திருமணம்' என்னும் ஊரில் கேசவசுப்பராயர்-பாக்கியம் தம்பதியினருக்கும் 1864 இல் மகனாகப் பிறந்த இவர், தனது 'செல்வக்கேசவராயன்' என்ற பெயருடன் தன் ஊரின் பெயரையும் சேர்த்து 'திருமணம் செல்வக்கேசவராயன்' என்று அழைக்கப்பட்டார். **“இவருக்கு 'அயுர்வேத பாஸ்கரன்' என்றொரு புனைப்பெயரும் வழக்கத்திலிருந்ததாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன” (பா.இறையரசன்., செம்மொழிச் செம்மல்கள்-1.,ப.177)** இவரது தந்தையார் பச்சையப்பன் பள்ளியில் தமிழாசிரியராகப் பணியாற்றிய நாள்முதலே தன்மகனை கல்வியாளனாக உருவாக்குவதில் ஊக்கம் கொண்டிருந்ததால், செல்வக்கேசவர் தமிழ், ஆங்கிலம், மலையாளம், தெலுங்கு உள்ளிட்ட மொழியிலும் திறம்பெற்றுள்ளார்.

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

மேலும் இவர் தமிழ், ஆங்கிலம் முதலிய இரு மொழிப்பாடங்களையும் கற்பதில் சிறுவயது முதலே அதிகம் ஆர்வம் காட்டியதாலும்; பச்சையப்பன் கல்லூரியில் 'இண்டர்மீடியர்' படிக்கும் பொழுதும் கல்வியிலிலும் தமிழையே விருப்பப்பாடமாக ஏற்று கற்றதாலும்; இவர் பாராட்டப்பட கூடியவராகத் திகழ்கிறார். தமிழில் எம்.ஏ., (முதுகலை) பட்டத்தை முதல் முதலாக பெற்றவர் என்று பெருமையும் இவருக்குண்டு என்பது குறிப்பிடத்தக்கது. இவர் தன் திருமண வாழ்விற்கு பின்னரும், குழந்தைகளுக்கு **"பரிமேலழகர், நச்சினார்க்கினியர், சேனாவரையார் என்று தமிழிலக்கண உரையாசிரியர்களின் பெயர்களைச் சூட்டியுள்ளார்" (சா.கிருட்டிணமூர்த்தி, ச.சிவகாமி,(ப.ஆ)., திருமணம் செல்வக்கேசவராய முதலியார்.,ப.2,)** என்பதை அறியும் பொழுது இவருக்குள் இருந்த தமிழிலக்கண ஆர்வத்தையும் ஈர்ப்பையும் உணரலாம்.

தமிழுணர்வாளர்

செல்வக்கேசவராயர் ஆங்கிலப் புலமைப்பெற்ற தமிழுணர்வாளராக வாழ்ந்துள்ளார். இவருக்குத் தமிழ் மொழியைப் போலவே ஆங்கிலமொழியிலும் புலமை இருந்ததே அதற்கு காரணமாகும். எவ்வாறு பாரதியார், தனக்குத் தெரிந்த மொழிகளிலிருந்து தமிழைச் சிறப்புப்படுத்திக் கூறினாரோ, அவ்வாறே இவரும் கல்லூரியில் பணியாற்றியச் சூழலில் பலவிடங்களில் தமிழுக்குக் குறைந்த மதிப்பு தோன்றும் நேரங்களில், ஆங்கிலத்தைக் காட்டிலும் தமிழ்மொழி பலநூற்றாண்டுகள் பழமையும் பொருட்செறிவும் மிக்கது என்பதை விவரித்துள்ளார். இதற்கான உதாரணங்களாகக் கீழ்காணும் சில நிகழ்வுகளைக் குறிப்பிடலாம்.

> **ஒருமுறை பச்சையப்பன் கல்லூரித் தமிழ்ச்சங்க ஆண்டுவிழாவிற்கு செல்வக்கேசவராயர் தலைமை தாங்குகிறார். அப்பொழுது அவ்விழாவில் பேசிய இளைஞர் ஒருவர் ஆங்கிலக் கவிகளுக்கும் தமிழ்க்கவிகளுக்கும் உள்ள குணங்களைச் சுட்டிக்காட்டி ஒரு கட்டுரை வாசிக்கிறார். அதில் ஆங்கிலக் கவிகள் பாடிய பாட்டுகளிலிருக்கும் இன்பம் போலத் தமிழ்க்கவிகளில் இல்லை என்றவாறு பொருளிருக்கிறது. இதனை உணர்ந்த செல்வக்கேசவராயர் தலைமைச் சொற்பொழிவின் பொழுது, தமிழ்க்கவிகளைக் குறைத்து மதிப்பிட்ட இளைஞரைக் கண்டித்து, மகாகவி சேக்ஸ்பியர் தம் நாடகம் ஒன்றில் 'கண்டவுடன் காதல் கொள்ளாதார் பிறகு எப்பொழுதும் உண்மையில் காதல் கொள்ளாதவரே' என்று கூறியுள்ளார். இது உயரியச் சிந்தனையே. இருப்பினும் இச்சிந்தனையைப் பன்னூற்றாண்டுகளுக்கு முன்னதாகவே தமிழில் திருவள்ளுவர் என்னும் பெரும்புலவர், 'கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள் / என்ன பயனும் இல' (கு.எ.1100) என்றவாறு வெளிப்படுத்தியுள்ளார். எனவே ஆங்கிலக்கவிகளின் கருத்துரைகளைக் காட்டிலும் முன்னோடியாகத் தமிழ்க்கவிகள்**

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

இருக்கும் என்றவாறு இன்னும் சில மேற்கோள்களையும் எடுத்துக்காட்டி விளக்கியுள்ளார் (சா.கிருட்டிணமூர்த்தி, ச.சிவகாமி., மேலது., பக்.3-4)

அதேபோல மற்றொருமுறை பல ஆங்கில அறிஞர்களும் தமிழறிஞர்களும் கூடியிருந்த பேரவை நிகழ்வு ஒன்றில், அறிஞர் ஒருவர் ஆங்கிலக் கவிகளைப் பற்றிப் புகழ்ந்துப் பேசி, ***"லார்ட் பைரனின் 'Roll Roll on Roll thou dark blue ocean'*** **என்ற வரிகளைச் சுட்டிக்காட்டி, அதில் கடலலைகள் உருண்டு வரும் காட்சி, அவ்வோசையுடன் அழகாகப் பதிவிடப்பட்டுள்ளது' என்று கூறியபொழுது, உடனே செல்வக்கேசவராயர் புகழேந்திப்புலவர் எழுதிய,**

போவாய் வருவாய் புரண்டு விழுந்திரங்கி
நாவாய் குழற நடுங்குறுவாய் – *தீவாய்*
அரவகற்றும் என்போல் ஆர்கடலே மாதை
இரவகற்றி வந்தாய்கொல் இன்று

என்ற பாடலை எடுத்துக்கூறி, இதில் கடல் அலைகள் ஒன்றன்பின் ஒன்றாய் வருவதும், போவதும் புரளுவதும் விழுவதும் இறங்குவதும் எவ்வளவு அழகாய் எழுதப்பட்டிருக்கிறது. ஒருவன் கடற்கரையில் நின்று அலைகளைப் பார்ப்பதும் அவைகளின் ஓசையைக் கேட்பதும் போல நமது கண்முன் தோன்றும்படி புகழேந்திப்புலவர் எவ்வளவு சிறப்பாக இப்பாடலில் வருணனைச் செய்துள்ளார். லார்ட் பைரன் எழுதியதைக் காட்டிலும் இப்பாடல் மேம்பட்டது அல்லவா? என்று கூறினார் (சா.கிருட்டிணமூர்த்தி, ச.சிவகாமி., மேலது., ப.4) இவ்வாறு தமிழ் மொழியானது மற்ற மொழிகளுக்குரிய புகழை விட எந்தவகையிலும் குறைந்ததில்லை என்பதை மெய்ப்பிப்பதில் செல்வக்கேசவராயர் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தார், என்பதே இவரது தமிழுணர்வுக்கான எடுத்துக்காட்டாகும். அதோடு மட்டுமின்றி இவர் நூலாக்கப் பணிகளை மேற்கொண்டதன் வழியாகவும் தமிழுணர்வை வெளிப்படுத்தியுள்ளார். அவ்வகையில் இவர் இயற்றிய 'Parallel Proverbs' என்னும் நூல் குறிப்பிடத்தக்கதாகிறது. இந்நூலில் இவர் ஆங்கிலத்திலுள்ள பழமொழிகள் ஒவ்வொன்றிக்கும் ஒப்பான தமிழ்ப் பழமொழிகளை இணைத்து அச்சிட்டுள்ளார். அதேபோல தமிழ்மொழியின் வளர்ச்சிக்கு ஏற்றவகையில் பல நூலாக்கப் பணிகளை மேற்கொண்டுள்ளார்.

கல்லூரியில் பணியாற்றியக் காலத்தில் பாடம் கற்பிப்பதோடு மட்டுமின்றி, தமிழ்மொழி வளர்ச்சிக்கும், மாணவர்களிடையிலான தமிழ் உணர்ச்சிக்கும் வலுசேர்க்கும் வகையில் 'தமிழ்க்கழகம்' ஒன்றைச் செல்வக்கேசவராயர் நிறுவியுள்ளார். **"மாணவர்களைக் கொண்டே நடத்தப்பட்ட இக்கழகம் அவர்களின் சொல்லாற்றல் திறத்தையும் எழுத்து பயிற்சியையும் வளர்க்கும் வகையில் அமைந்தது. தொடர்ந்து நடந்தப்பட்ட இக்கழகத்தின் பயிற்சிகள் மூலம் மாணவர்களுக்குக் கிடைத்த தமிழ்வளம் அளப்பரியது"(புலவர் அரசு., தமிழ்ப்பேரறிஞர் நால்வர்., ப.8)** என்று 'புலவர்அரசு' குறிப்பிடுகிறார். இதன் தொடர்ச்சியில்

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

மாணவர்கள் அடுத்தடுத்து கற்க வேண்டிய நூல்கள் முதலான தகவல்களைத் தெரிவிக்கும் வகையில் இவர், **'தமிழ் வியாசங்கள்'** என்னும் நூலை வெளியிட்டுள்ளார்.

செல்வக்கேசவராயர் பழமையை உள்வாங்கி புதுமையை ஏற்று, காலமாற்றத்திற்கு ஏற்ப தேவையறிந்து கற்பித்தலில் புதுமைகளைப் புகுத்தியவராகத் திகழ்கிறார். இவர் ஆங்கிலம் கற்று, தமிழ்மொழி வளர்ச்சிக்கு உதவிய தமிழறிஞர் என்று பலராலும் போற்றப்படுகிறார். அவ்வகையில் இவரை, **"நறைபழுத்த துறை தீந்தமிழின் தொல் இலக்கியங்களையும் புதுமொழியாய் நேற்றைக்குப் பிறந்த ஆங்கிலத்தின் புதிய இலக்கியங்களையும் கற்ற செல்வச்கேசவர், பழமைக்குப் பழமையாய், புதுமைக்குப் புதுமையாய்த் தமிழை வளர்த்த செம்மல்" (பா.இறையரசன்., செம்மொழிச்செம்மல்கள் – 1., ப.172)** என 'இறையரசன்' புகழ்ந்துரைக்கிறார். புகழுக்காக என்றில்லாமல் இவராற்றிய செயல்பாடுகள் ஒவ்வொன்றும் தமிழுணர்வுக்கானச் செயலாக்கங்களாக என்றென்றும் போற்றத் தக்கவைகளாகின்றன.

நடுநிலைத் திறனாய்வாளர்

பொதுவாக அக்காலச் சூழலில் பலரும் ஆய்வுப்பொருளில் மக்களிடத்தில் உருப்பெற்றிருக்கும் கருத்துக்கு, மாற்றுகருத்தைக் கூற தயங்குவர். ஏனெனில் பலரின் பழிக்கு ஆளாகக்கூடும் என்ற அச்சஉணர்வு அவர்களுக்குள் இருந்ததே அதற்கான காரணமாகும். ஆனால் செல்வக்கேசவராயர் அத்தகைய அச்சத்திற்கும் பொதுக்கருத்தியலுக்கும் எதிரானவர். யாராயினும் இவர்தம் கருத்தைக் கூறுவதற்கும், தக்க சான்றுகளுடன் நிறுவுவதற்கும் தயங்காதவர். இவர் 'தமிழுக்குக்கதி' என்று 'கம்பரையும் திருவள்ளுவரையும் சிறப்பித்துக் கூறுகிறார். அதேநேரத்தில் பல்வேறு மாறுபட்ட கருத்துக்களையும் முன்வைக்கிறார். இவரது நூலாக்கப்பணிகள் அனைத்திலும் நடுநிலை திறனாய்வு இடம்பெறுவதைக் காணமுடிகிறது.

> **தமது பெருமதிப்புக்குரிய பரிமேலழகரை மறுத்து, திறனாய்வாளனின் தலைமை உரிமையான கருத்துரிமையை நிலைநாட்டும் திருமணம் செல்வக்கேசவராயரை நினைக்கிறேன்; வள்ளுவர், கம்பர், சேக்கிழார், வைணவ ஆசிரியர்கள் முதலியோரின் மீது படர்ந்திருந்த மூடபக்தியை விலக்கி, தெளிந்த தூய இலக்கிய உள்ளத்தோடு அவர்களின் படைப்புகளை எடைபோடும் அவரது திறனாய்வு அஞ்சாமையை நினைக்கிறேன்; தமிழின் ஆற்றலை அய்யத்துக்கு இடமின்றி நிலைநாட்டும் அவர் 'தனித்தமிழ் தேவையில்லை' என்ற முடிவின் திட்பத்தை நினைக்கிறேன்; திருமணத்தாரே நீரன்றோ திறனாய்வாளர்! (சாலை இளந்திரையன்., புதுத்தமிழ் முதல்வர்கள்.,ப.5)**

என்று செல்வக்கேசவராயரின் திறனாய்வு குணம் குறித்துச் 'சாலைஇளந்திரையன்' குறிப்பிடும் கூற்று இங்குக் குறிப்பிடத்தக்கதாகிறது.

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

செல்வக்கேசவராயர் தன்காலத்தில் வாழ்ந்த தமிழ் ஆளுமைகளுடன் நட்புகொண்டு, தம்ஆராய்ச்சி அறிவையும்; சான்றோர் நட்பையும் வளர்த்துகொண்டவர். வ.உ.சிதம்பரம்பிள்ளை, உ.வே.சாமிநாதஐயர், சி.வை.தாமோதரம்பிள்ளை, சிங்காரவேலு முதலியார் போன்றோர் அதில் குறிப்பிடத்தக்கவர்கள். அதேபோல ***"தமிழின் முதல் திறனாய்வாளர்களான உரையாசிரியர்கள் மீது இருவருக்குத் தனிப்பட்ட மதிப்பு இருந்தும், அவர்களின் பிழைகளைச் சுட்டிக்காட்டாமல் மௌனம் சாதிக்க இவரால் இயலவில்லை. உரையாசிரியர்களின் பிழைகளை மேலோட்டமாகக் குறிப்பிட்டுச் செல்லும் பழக்கமும் இவரிடமில்லை"(சாலை இளந்திரையன்., மேலது., ப.151)*** என்பதே இவரது திறனாய்வுப்பார்வைக்குக் கிடைக்கும் முழுநிறைவாகும். அவ்வகையில் 'தனித்தமிழ் தேவையில்லை' எனத் துணிந்துரைக்கும் துணிவும், தமிழ்ச்சான்றோர் பலரின் கருத்தை மறுத்துக்கூறும் தன்மையும் செல்வக்கேசவராயர் உயர்வு-தாழ்வு பாராமல் திறனாய்வில் நடுநிலையில் நின்று தம் தமிழாய்வைச் சிறப்புறக் கையாள்பவர் என்ற பெயரை அவருக்குப் பெற்றுத்தந்திருக்கிறது.

பதிப்பாக்கம்

பத்தொன்பதாம் நூற்றாண்டில் இலக்கணப் பயில்வு மரபின் பின்னணியாக உரைநடை இலக்கண நூல்களை உருவாக்குதல், ஓலைச்சுவடிகளிலிருந்து பழந்தமிழ் இலக்கண நூல்களை அச்சாக்கம் செய்தல் முதலான பணிகள் தமிழ்ச்சூழலில் மேற்கொள்ளப்பட்டன. இவ்வகைநூல் உருவாக்கத்தின் தொடர்ச்சியாக இன்று செவ்வியல் நூல்கள் என்று வரையறை செய்யப்பட்டுள்ள தொல்காப்பியம், இறையனார் அகப்பொருள் முதலான நூல்கள் அச்சாக்கம் பெற்றுள்ளன. செய்யுள் வடிவில் இலக்கண நூல்களை எழுதுவதை விடுத்து, வசனநடையில் எழுதும் முயற்சிகள் தோன்றின.

"பதினேழாம் நூற்றாண்டில் தத்துவபோதக சுவாமிகள் என்ற ஐரோப்பியர் உருவாக்கிய உரைநடை வடிவ நூலின் விவரத்தை மயிலை சீனி.வேங்கடசாமி குறிப்பிடுவதிலிருந்து இச்சூழலை நம்மால் புரிந்துக்கொள்ள முடிகிறது"(சாலை இளந்திரையன்., மேலது., ப.31) செல்வக்கேசவராயரும் பதிப்புப்பணியில் ஈடுபட்டு, அறநெறியைப் போதிக்கும் வகையிலும், ஆராய்ச்சிப் பதிப்புகளாகவும் தமது நூல்களை உரைநடை வடிவில் வெளியிட்டுள்ளார். செல்வக்கேசவராயர் மாணவர்களும் மற்றவர்களும் கற்கும் வகையில் இலக்கணங்களை உரைநடைவடிவில் பதிப்பித்துத் தந்தார். இவர் பதிப்புகள் ஆராய்ச்சிப் பதிப்புகளாக அமைந்திருத்தல் சிறப்பு, இது குறித்து **"பழமொழி நானூறு என்ற அற இலக்கியத்தினைப் பதிப்பித்த செல்வக்கேசவராயரின் ஆங்கில முன்னுரை மிகச்சிறப்பானது. இப்பதிப்பைப் பதிப்பிப்பதற்கான நோக்கம், வரலாறு, கிடைத்த ஓலைச்சுவடிகள், ஆய்வு முன்னோடிகள், மற்ற அற இலக்கியங்களிலிருந்து இந்நூல் எவ்வாறு வேறுபடுகிறது என்ற குறிப்புகள் ஆகியன இதில் இடம்பெற்றிருக்கிறது"**

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

(வா.மு.சே.ஆண்டவர். (ப.ஆ & தொ.ஆ.), திருமணம் செல்வக்கேசவராய முதலியாரின் பஞ்ச லட்சணம்., ப.V) என்று வா.மு.சே.ஆண்டவர் குறிப்பிடுகிறார். இக்குறிப்புரை இவரது ஆராய்ச்சி திறனுக்கானச் சான்றாகிறது.

பதிப்பித்த நூல்கள்

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் தமிழின் உரைநடை வளம் செழிக்கச்செய்த செல்வக்கேசவராயர், ஆசாரக்கோவை, அறநெறிச்சாரம், முதுமொழிக்காஞ்சி, பழமொழி நானூறு, அரிச்சந்திரபுராணம், குசேலபாக்கியானம் ஆகிய நூல்களைப் பதிப்பித்துள்ளார்.

வசனநடை

'வசனம்' என்ற சொல் வடமொழிச் சொல்லாகும். இது தமிழில் உரைநடையைக் குறிக்கும் சொல்லாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. காலமாற்றத்திற்கு ஏற்ப இலக்கியத்திலும் மாற்றங்கள் நடைபெறுதல் இயல்பாகும். அவ்வகையில் கிறித்துவ பாதிரிமார்களின் வருகையால் வசனநடை தமிழுக்கு வந்தது. இதுகுறித்துச் செல்வக்கேசவராயர், **"இயற்றமிழ் வசன நூல்கள் முதலில் கிறிஸ்தவப் பாதிரிமார்களால் எழுதவும் எழுதுவிக்கவும் பட்டன. அவையெல்லாம் மதக்கோட்பாடுகளைப் பரவுவித்தற்கானவை. ஆயினும், தமிழ் வசனம் உலக வழக்கை ஒட்டி உருப்படுவதற்கு அவை துணைக்கருவிகள் ஆயின. கட்டுரை நடைக்குக் கருக்கட்டினவர்கள் நமது பழைய உரையாசிரியர்களே. ஆயினும், கருக்களைச் சீர்செய்து கொள்வதில் பாதிரிமார்களது வசன நூல்களுக்கு நாம் ஒருவாறு கடமைப்பட்டவர்களாகிறோம்.வசன நூல்களை எழுத ஊக்கம் பிறப்பித்தவர்களும் பாதிரிமார்களே"(திருமணம் செல்வக்கேசவராய முதலியார்., தமிழ் வியாசங்கள்.,ப.110)** என்று குறிப்பிடுகிறார். மேலும் தமிழிலக்கியச் சூழலில் கல்வி பரவலாக்கத்திற்கும், வாசிக்கத் தெரிந்தோரும் படித்துப் பொருள் உணர்ந்துகொள்ள வசனநடை எளிமையானதாக இருந்தது. இதனைக் கருத்தில்கொண்டே செல்வக்கேசவராயர் வசனநடையில் நூல்களை இயற்றவும், பதிப்பிக்கவும் முனைந்துள்ளார்.

சங்ககாலம் தொடங்கி, காவியம், வரலாறு, சோதிடம், மருத்துவம் முதலான பல துறைகளிலும் தமிழர்களின் அறிவுத்திறத்தைச் செய்யுள் வடிவங்களில் வெளியான நூல்களே தீர்மானித்திருந்தன. செய்யுள் வடிவத்திலான இலக்கியங்களின் பொருளைப் புரிந்துக்கொள்ளுதல் கடினமாகும். இக்கடினத்தன்மையைப் போக்கவே உரையாசிரியர்கள் உரை எழுதும் பணியில் இறங்கினர். உரையாசிரியர்களும் தனித்த உரைநடை நூல்களை எழுதவில்லை, மாறாகத் தமிழ்மொழியில் அமைந்த இலக்கண-இலக்கிய நூல்களுக்குப் பொருளுரை கண்டனர். அவ்வகையில் **"திருக்குறளுக்கு உரை எழுதிய பரிமேலழகர் தம் உரைப்பாயிரத்தில் தரும் செய்திகள் தமிழ் உரைநடையின் செறிவுக்குக் கட்டியம் கூறுவதாக அமைந்திருக்கிறது" (இ,மேரி.,வீரமாமுனிவரின் உரைநடை நூல்கள் ஓர் ஆய்வு., ப.173)**

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

அதன்பின்னர் தனித்த உரைநடை நூல்களைக் கிறித்தவச் சமயத் துறவிகள் தொடங்குகின்றனர்.

'சீகன்பால்குவின் உரைநடை' பேச்சு வழக்கைக் கொண்டமைந்தது. இருந்தும் வீரமாமுனிவரின் உரைநடை வந்ததற்கு பிறகே உரைநடை நூலுக்கான தேவைகள் முழுமையாக பூர்த்தியாயின. வீரமாமுனிவரின் நூலுக்கான இலக்கணமாக **"நன்னூலார்" (நன்னூல்.,நூ.**14) குறிப்பிடும் 32 தந்திர உத்திகளோடும்; எனும் ஏழுவகை மதங்களோடும், ஒரு நூலாசிரியர், தான் எழுதும் நூலில் தன்னுடைய கருத்துகளை மட்டும் விளக்கிக்கொண்டு செல்லாமல் பிறருடைய கருத்துக்களையும் சொல்லி, அவற்றிற்கு உடன்படுவது போலக்காட்டிப் பின்னர், அவற்றை மறுத்து இறுதியில் தன்னுடைய கருத்தை நிலைநாட்டுவதே தமிழர் மரபாக இருந்தது, என்பதற்கு பொருந்த உரைநூல்களை எழுதியுள்ளார்.

உரைநடை நூலாக்கங்கள்

செல்வக்கேசவராயர் காலத்தில் எண்ணற்ற உரைநடை நூல்கள் வெளிவரவில்லை. ஒருசில உரைநடை நூல்களே இருந்தன. அந்நூல்களின் நடையும் முன்னேற்றம் அற்றவையாகக் காணப்பட்டன. அதனால் இவர் உரைநடை வளர்ச்சிக்குத் தம்மால் இயன்ற அளவில் தொண்டாற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் இருந்தார். மேலும் அந்நாளில் புலவர்களாய் இருந்தவர்கள் செய்யுள் இயற்றுவதற்குத்தான் அதிக முக்கியத்துவம் கொடுத்தனர். உரைநடையின் பால் அவர்தம் கவனம் செல்லவில்லை. அச்சூழலில் செல்வக்கேசவராயர் 'அக்பர்' எனும் உரைநடை நூலை வெளியிட்டார். அந்நூல் பலரது பாராட்டையும் பெற்று, தமிழ் உரைநடை வளர்ச்சிக்கு வளமூட்டும் வகையில் அமைந்தது.

செல்வக்கேசவராயரிடம் இருந்த நடுநிலையான திறனாய்வுப் பார்வையும் இவரை நூலாசிரியராக, திறமிக்க படைப்பாளியாக உருமாற்றியுள்ளது.அவ்வகையில் இவரது **"உரைநடை நூல்கள்" (தமிழ், தமிழ் வியாசங்கள், அக்பர், கம்பநாடர், திருவள்ளுவர், குசேலர், இராபின்சன் குரூஸோ, கண்ணகி சரித்திரம், கலிங்கத்துப்பரணி, வியாச மஞ்சரி, அபிநவக் கதைகள், பஞ்சலட்சணம், இணைப்பழமொழிகள், மாதவ கோவிந்த ரானடே, அராபிக் கதைகள்" – உரைநூல் பட்டியல்)** தமிழியல் நடையில் பொருட்செறிவு மிக்கதாக இருக்கின்றன. கம்பநாடர், கண்ணகிசரித்திரம், திருவள்ளுவர் முதலியன நூல்கள் திறனாய்வு முறையில் எழுதப்பட்ட நூல்கள் சிறப்பிடம் பெறுகின்றன.

1921-இல் மறைந்த செல்வக்கேசவராயர், தான்வாழ்ந்த காலத்தில் புதிய உரைநூல்களின் வழியே எளிய முறையில் தமிழைப் பரப்பி, தமிழ்மொழியினூடான உரைநடை வளர்ச்சிக்குப் பெரும்பங்காற்றிய செயலால் இவர் என்றென்றும் நினைவுக்கூறத் தக்கவராகிறார்.

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

துணை நூற்பட்டியல்

[1] பா.இறையரசன்., செம்மொழிச் செம்மல்கள் - 1., ப.177, தமிழ்மண் பதிப்பகம், சென்னை – 17, பதிப்பு 2009.

[2] சா.கிருட்டிணமூர்த்தி, ச.சிவகாமி, (ப.ஆ)., திருமணம் செல்வக்கேசவராய முதலியார்., ப.2, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை – 113, பதிப்பு 2004.

[3] மேலது., ப.3-4

[4] மேலது. ப.4

[5] புலவர் அரசு., தமிழ்ப்பேரறிஞர் நால்வர்., ப.8 (எ.ஆ.ப)

[6] பா.இறையரசன்., செம்மொழிச்செம்மல்கள் – 1., ப.172, தமிழ்மண் பதிப்பகம், சென்னை – 17, பதிப்பு 2009.

[7] சாலை இளந்திரையன்., புதுத்தமிழ் முதல்வர்கள்.,ப.5, தமிழ்ப் புத்தகாலயம், சென்னை, பதிப்பு 1972.

[8] மேலது., ப.151

[9] மேலது., ப.31

[10] வா.மு.சே.ஆண்டவர். (ப.ஆ & தொ.ஆ.), திருமணம் செல்வக்கேசவராய முதலியாரின் பஞ்ச லட்சணம்., ப.V, சேதுச்செல்வி பதிப்பகம், சென்னை – 93., மீள்பதிப்பு 2018.

[11] திருமணம் செல்வக்கேசவராய முதலியார்., தமிழ் வியாசங்கள்.,ப.110, சீதை பதிப்பகம், சென்னை – 14, பதிப்பு 1962.

[12] இ,மேரி.,வீரமாமுனிவரின் உரைநடை நூல்கள் ஓர் ஆய்வு., ப.173, முனைவர் பட்ட ஆய்வேடு, அழகப்பா பல்கலைக்கழகம், (1999).

[13] புலியூர்க் கேசிகன் (ப.ஆ)., நன்னூல்.,நூ.14, பாரிநிலையம், சென்னை – 108, பதிப்பு 2012.

[14] "தமிழ், தமிழ் வியாசங்கள், அக்பர், கம்பநாடர், திருவள்ளுவர், குசேலர், இராபின்சன் குரூஸோ, கண்ணகி சரித்திரம், கலிங்கத்துப்பரணி, வியாச மஞ்சரி, அபிநவக் கதைகள், பஞ்சலட்சணம், இணைப்பழமொழிகள், மாதவ கோவிந்த ரானடே, அராபிக் கதைகள்" – உரைநூல் பட்டியல்

தமிழில் இக்கட்டுரையை இவ்வாறு மேற்கோளிடுங்கள்:

மைத்திரி அன்பு. "19-ஆம் நூற்றாண்டு உரைநூலாசிரியர் 'திருமணம்' செல்வக்கேசவராயர்." *தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்*, தொகுதி 3, சிற.இதழ் 2, தொகுதி 2, *திசம்பர்* 2020, பக். 279-287. டிஓஐ: **10.38067/ijtlls.2020.spl.v03i02v2.042**

Cite this Article in English (*MLA 8 Style*) as:

E-ISSN: 2581-7140 **UGC CARE Listed Journal**
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 **Available at:** www.ijtlls.com

Mythreanbu. "**The 19th Century Commentator 'Thirumanam' Selvakkesavarayar**." *International Journal of Tamil Language and Literary Studies*, Vol. 3: Special Issue - 2, Vol. 2, December 2020, pp. 279-287. DOI: **10.38067/ijtlls.2020.spl.v03i02v2.042**

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி /Author Contribution Statement: இல்லை /NIL

கட்டுரையாளர் நன்றியுரை /Author Acknowledgement: இல்லை /Nil

கட்டுரையாளர் உறுதிமொழி/Author Declaration: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்./I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் அரையாண்டு பன்னாட்டு ஆய்விதழ்

International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

தொல்காப்பிய எழுத்ததிகார உரையில் வட்டார வழக்கு

Regional Case in Tholkappia Authoritative Discourse

சு.மகேஷ் பாண்டி, முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, அய்ய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரி சிவகாசி.
S.Mahesh pandi, Ph.D Scholar, Tamil Department, Ayya Nadar Janaki Ammal College, Sivakasi.
ORCiD:https://orcid.org/0000-0003-0883-570X
முனைவர் சு.நயினார், இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை, அய்ய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரி,சிவகாசி.
Dr.S.Nainar, Associate Professor in Tamil, Ayya Nadar Janaki Ammal College, Sivakasi.
ORCiD: https://orcid.org/0000-0003-2103-6507,
DOI: 10.38067/ijtlls.2020.spl.v03i02v2.043

Abstract

The Spoken language remains as the basic weapon for the growth of literature. The corrected structure of spoken language is changed as written format. To estimate the difference in sound, spoken language is converted into written language or written format. The archaeologist who defined the birth of literature has moved it from the path of liturgical language. Variation in spelling and phonology sounds like regional cases of the places. "Tholkappiam" left the recording of the vernacular to civilization and headed to classify the grammar as avaiyal kilavi. In textual texts translate regional cases. This article expands on the notion that folklore is a major factor in the formation of grammar.

Keywords: Tholkappiyam– Text – Commentator – Folklore – Phonology – Regional cases.

நோக்குகளம்

இலக்கண வளர்ச்சிக்கு அடித்தளமிடும் கருவியாக பேச்சு மொழி விளங்குகின்றது. பேச்சு மொழியின் திருந்திய வடிவமே எழுத்து மொழியாக மாற்றம் கொள்கிறது. ஒலி வேறுபாட்டினை கட்புலனாக்க பேச்சு மொழி எழுத்து மொழி ஆக்கப்பட்டது. எழுத்தியலின் பிறப்பிற்கு வரையறை கூறிய தொல்காப்பியர் அதனை வழக்காறு மொழியின் வழித்தடத்திலிருந்து நகர்த்தியுள்ளார். இனஎழுத்துக்கள் மற்றும் ஒலிநிலையில் உள்ள மாறுபாடு, வட்டார வழக்குகளாக ஒலிக்கின்றன. சாரியைகள் வட்டார வழக்கின் கூறாக அமைகின்றன. போலி, மயங்கியல் மொழி, உருவின் தொகுதி, திசைச்சொற்கள் போன்றவற்றில் மக்களின் புழங்குச் சொற்கள் வெளிப்படுகின்றன. புணர்ச்சி விதிகள், ஒற்று மிகும், மிகா இடங்கள் இவைகளில் ஒலி வேறுபாடு புலப்படுகின்றன. தொல்காப்பியர் வட்டார மொழியினை பதிவுறுத்துவது நாகரிகம் அன்று என்று விடுத்து அவையல் கிளவி என இலக்கணம் வகுக்கத் தலைப்பட்டார். உரையாசிரியர்கள் உரைகளில் எடுத்துக்காட்டுகள் வட்டார வழக்குகளை மொழிகின்றன. இலக்கணம் இயற்றியதின் முதன்மைக் காரணியாக நாட்டுப்புற வழக்காறுகள் அமைகின்றன என்பதை நோக்குகளமாகக் கொண்டு ஆய்வு விரிகின்றது.

E-ISSN: 2581-7140
UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020
Available at: www.ijtlls.com

வட்டார வழக்குக் கூறுகள்

இக்காலத் தமிழுக்கு இலக்கணம் எழுதப் புகும் ஒருவர் புணர்ச்சி இலக்கணத்தை விளக்கும் போது 'மேல்+பாலம்' என்பது மதுரை வட்டார வழக்கில் உள்ளதைப் போன்று 'மேப்பாலம்' என்றோ, குமரி வட்டார வழக்கில் உள்ளதைப் போன்று 'மேம்பாலம்' என்றோ ஆகலாம் என்று குறிப்பிட்ட நேருவதைக் காணலாம். இதே அடிப்படையில் தொல்காப்பியத்தை அணுகுவோமானால் ஒரே கருத்தை விளக்குவதற்கு ஒன்றிற்கு மேற்பட்ட நூற்பாக்கள் தரப்படுவதன் பொருளை உணரலாம். எடுத்துக்காட்டாகக் கீழ்க்கண்ட இரு நூற்பாக்களையும் காணலாம்.

ஏனைப் புளிப்பெயர் மெல்லெழுத்து மிகுமே (எழு.246)

வல்லெழுத்து மிகினும் மான மில்லை

ஒல்வழி யறிதல் வழக்கத் தான (எழு.247)

இவ்விரண்டு நூற்பாக்களுக்கும் இளம்பூரணர் தரும் எடுத்துக்காட்டுக்கள் முறையே 'புளிங்கூழ்' 'புளிக்கூழ்' என்பனவாகும். மேலும், தொல்காப்பியர், 'போலி' 'உறழ்பாகும்' **'மயங்கியல் மொழி' 'மருவின் தொகுதி' 'திசைச் சொல்'** என்று குறிப்பிடுவதெல்லாம் வட்டார வழக்குக் கூறுகளே என்று கருதப்பட முடியும். ஒலிநிலையில் கீழ்காணும் வேறுபாடுகளைத் தொல்காப்பியர் தருகிறார். எழுத்ததிகாரத்திணுள் இவற்றைக் காண்கிறோம்.

உயிர் மயக்கம்

சில வட்டார வழக்குகளுள் **உயிர்மயக்கம்** வழங்கியதனையும் அவை பிறவற்றுள் கூட்டுயிர்களாக வழங்கியதனையும் கீழ்காணும் நூற்பாக்கள் விளக்குகின்றன.

அகர இகரம் ஐகாரம் ஆகும். (எழு.54)

அகர உகரம் ஔகாரம் ஆகும் (எழு.55)

'அஇயர்' என்றும் 'அஉவை' என்றும் எடுத்துக்காட்டுக்கள் தந்த இளம்பூரணர் 'அது கொள்ளற்க' என்று குறிப்பிடுவதிலிருந்து உயிர் மயக்கம் சிறுபான்மை வழக்கிலோ அல்லது இலக்கியத்தினுள் ஏற்றுக்கொள்ளப்படாத பேச்சு வழக்கிலோ இருந்திருக்க வேண்டுமென்று புலப்படுகிறது.

ஓரள பாகும் இடனுமா ருண்டே

தேருங் காலை மொழிவயி னான (எழு.57)

எனும் நூற்பா, ஐகாரம் சிலவிடங்களில், இக்காலத் தமிழைப் போன்று எகரமாகவோ, அகரமாகவோ ஒலிக்கப்பட்டிருக்க வேண்டுமென்று புலப்படுத்துகிறது. இதுவும் ஒரு குறிப்பிட்ட வட்டார வழக்குக்கூறாதல் வேண்டும்.

சுட்டுமுதல லாகிய ஐயென் இறுதி

வற்றொடு சிவணி நிற்றலும் உரித்தே (எழு.178)

எனும் நூற்பாவும் இக்கருத்தையே உறுதிப்படுத்துகிறது.

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

இகர யகரம் இறுதி விரவும் (எழு.58)

என்னும் நூற்பா மொழி இறுதியில் இகரமும் யகரமும் ஊசலாட்டத்தில் ஈடுபட்டன என்பதை விளக்குகிறது.

மகரத் தொடர்மொழி மயங்குதல் வரைந்த
னுகரத் தொடர்மொழி... (எழு.82)

எனும் தொடர், மொழி இறுதியில் மகரமும் னகரமும் ஊசலாட்டத்தில் உள்ள சில சொற்களிலாவது ஈடுபட்டன என்பதனை விளக்குகிறது.

ஆயிரக் கிளவி வரூஉங் காலை
முதலீ ரெண்ணின் உகரங் கெடுமே (எழு.464)

எனும் நூற்பாவும், அதனைத் தொடர்ந்து வரும்,

முதனிலை நீடினும் மான மில்லை (எழு.465)

எனும் நூற்பாவும் சில வட்டார வழக்குகளுள் மொழி முதலிருந்த குறில் பிறவற்றுள் நெடிலாக வழங்கியதனை விளக்குகிறது. இதனை விளக்குவதற்கு இளம்பூரணர் தரும் எடுத்துக்காட்டுக்கள் வருமாறு:

ஒராயிரம் -ஓராயிரம், இராயிரம் -ஈராயிரம்

மேற்கண்ட அனைத்தையும் ஒரு சேரத் தொகுத்தோமானால் ஒலி நிலையில் கீழ்க்கண்ட வட்டார வழக்குக் கூறுகள் இருந்திருத்தல் வேண்டும்.

வ.எண்	**வட்டார வழக்கு – அ**	**வட்டார வழக்கு – ஆ**
1	உயிர் மயக்கம்	உயிர் கூட்டு
2	-ஐ-	-எ- அ-
3	-இ	-ய்
4	-ம்	-ன்
5	குற்றுயிர்	நெட்டுயிர்

இவ்வைந்து கூறுகளும் பட்டியலில் கண்ட அமைப்பு முறைப்படியே அ, ஆ எனும் இரு வட்டார வழக்குகளில் இருந்திருக்க வேண்டுமென்பதில்லை. எப்படி ஒன்றுக்கு மேற்பட்ட வட்டார வழக்குகள் விளக்கப்படுகின்றன என்பதில் ஐயமில்லை.

ஒற்று மிகும், மிகா இடங்கள்

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

புணர்ச்சி விதிகளை வகுக்கும் போதும் வட்டார வழக்குக் குறிப்புகள் வெளிப்படுவதனைக் காணலாம். ஒற்று மிகுந்த வட்டார வழக்குகள் சிலவும், அவ்வாறு ஒற்று மிகாத இயல்பான வட்டார வழக்குகள் சிலவும் வழங்கியிருந்தன என்பதனைக் கீழ்காணும் நூற்பாக்கள் விளக்குகின்றன. இளம்பூரணர் தரும் எடுத்துக்காட்டுக்கள் இதனைப் பகர்கின்றன.

மெல்லெழுத் தியற்கை யுறழினும் வரையார் (எழு.146)

கதிர்ஞெரி – கதிர்ஞ்ஞெரி

உயிரீ றாகிய முன்னிலைக் கிளவியும்
புள்ளி யிறுதி முன்னிலைக் கிளவியும்
இயல்பா குநவும் உறழ்பா குநவுமென்று
ஆயீ ரியல வல்லெழுத்து வரினே (எழு.152)

நடகொற்றா – நடக்கொற்றா

கீழென் கிளவி உறழத் தோன்றும் (எழு.396)

கீழ்குளம் - கீழ்க்குளம்

இதே அடிப்படையில் பேசப்படும் ஏனைய நூற்பாக்கள் வருமாறு,

வ.எண்	சூத்திரம்	இளம்பூரணர் உரை எடுத்துக்காட்டு
1	எழுத்து – 157	சூர்கோட்பட்டான் - சூர்க்கோட்பட்டான்
2	எழுத்து – 159	கிளிகுறிது - கிளிக்குறிது
3	எழுத்து – 160	அவ்வழிகொண்டான் - அவ்வழிக்கொண்டான்
4	எழுத்து – 215	பல பல – பலப்பல
5	எழுத்து – 216	சில சில – சிலச்சில
6	எழுத்து - 428, 429	யாங்குக் கொண்டான் - யாங்கு கொண்டான்

இவற்றை நோக்கும் போது குறைந்தது இரண்டு வட்டார வழக்குகள் இங்கு விவரிக்கப்பட்டுள்ளன எனத் தோன்றுகிறது. முதலில் கூறப்படும் இயல்பு நிலை கொண்ட வழக்கு ஒன்றும், இரண்டாவதாகப் பேசப்படும் ஒற்று ஒன்றும் இருந்திருக்க வேண்டும். இறுதியாகக் கொடுக்கப்பட்டுள்ள நூற்பாக்களில் (428, 429) மட்டுமே இயல்புநிலை இரண்டாவதாகக் குறிக்கப்பட்டுள்ளது. தொகுப்பு நிலையில் இம்மாற்றம் ஏற்பட்டிருக்கலாம்.

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

இதனை ஆறாவது வட்டார வழக்குக் கூறாக ஏற்கலாம். இவ்வழக்குக் கூறு மற்றொரு சிந்தனையையும் எழுப்புகிறது. இன்றைய பேச்சுத்தமிழில் இவ்வெடுத்துக்காட்டுக்கள் கீழ்க்கண்டவாறே ஒலிக்கப்படும். கிளிகுறிது – கிளிக்குறிது

தடையொலி

மொழியிடையில் இரண்டு உயிர்களுக்கிடையே வரும் தடையொலி உரசொலியாக மாறுதல் இன்றைய பேச்சுத் தமிழில் இயல்பு. மொழியிடையில் வரும் தடையொலியாகவே நிற்பனவற்றை எழுத்தில் இரட்டித்து எழுதிக்காட்டுகிறோம். தொல்காப்பியர் காலத்தில் இப்படிப்பட்ட உரசொலியாக்கம் இருந்ததென்பதற்கு எந்தச் சான்றுமில்லாவிடினும் **ஒலிப்பிலாத் தடையொலி** சில வட்டார வழக்கிலாவது தன்னுடைய தன்மையில் ஏதோ ஒரு மாறுதலைப் பெறத் தொடங்கியிருக்கலாம் என்று எண்ணத் தோன்றுகிறது.

தத்தம் திரிபே சிறிய வென்ப (எழு.88)

எனும் சூத்திரம் நூற்பா பேச்சு வழக்கில் காணப்பட்ட உறழ்ச்சிகளைத் தொல்காப்பியர் உணர்ந்திருந்தார் என்பதனையே புலப்படுத்துகிறது. மற்றொரு வழக்கு மாறுபாடு மெல்லினத்திற்கும் வல்லினத்திற்கும் இடையே காணப்படுவதாகும்.

யாமரக் கிளவியும் பிடாவுந் தளாவும்
ஆமுப் பெயரும் மெல்லெழுத்து மிகுமே (எழு.230)
வல்லெழுத்து மிகினு மான மில்லை (எழு.231)

எனும் சூத்திரங்கள் இரு வட்டார வழக்குகளை விளக்குகின்றன. இவற்றிற்கு இளம்பூரணர் தரும் எடுத்துக்காட்டுக்கள் வருமாறு:

"யாஅங்கோடு – யா அக்கோடு, பிடாஅங்கோடு – பிடா அக்கோடு, தளாஅங்கோடு – தளா அக்கோடு" இதே அடிப்படையில் பேசப்படும் ஏனைய சூத்திரங்கள் வருமாறு,

வ.எண்	சூத்திரம்	இளம்புரணர் எடுத்துக்காட்டு
1	எழு.246, 247	புளிங்கூழ் – புளிக்கூழ்
2	எழுத்து.269	பூங்கொடி – பூக்கொடி
3	எழுத்து.301, 302	வெரிங்குறை – வெரிக்குறை
4	எழுத்து.341	தேன்குடம் – தேக்குடம்
5	எழுத்து.361	வேய்ங்குறை - வேய்க்குறை
6	எழுத்து.388	பாழ்க்கிணறு – பாழ்ங்கிணறு

"கடன் (மதுரை வழக்கு) – கடம் (நாகர்கோயில் வழக்கு)

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

மேப்பாலம் (மதுரை வழக்கு) – மேம்பாலம்

ஒலி மாறுதல்

வட்டார வழக்கு வேறுபாடகக் கருதமுடியும். எனினும் போதிய சான்றுகள் கிட்டவில்லை. முதலில் குறிப்பிட்ட ஒலி மாறுதல்களுக்கு முன்னோடியாக வட்டார வழக்குகளே அமைந்திருத்தல் வேண்டும். சில குறிப்பிட்ட வட்டாரத்து வழக்காவே இவை இருந்திருக்க வேண்டும் என்பதனை உரையாசிரியர்களது குறிப்புகள் உணர்த்துகின்றன. 'அகர இகரம் ஐகாரம் ஆகும்' எனும் நூற்பாவிற்கு இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் கீழ்க்கண்டவாறு உரையெழுதுகின்றனர்.

'அகரமும் இகரமும் கூட்டிச் சொல்ல ஐகாரம் போல ஆகும். ஐயர், அஇயர் என வரும். அது கொள்ளற்க' என்று இளம்பூரணர் உரை வகுக்கிறார். 'அகரமும் இகரமும் கூட்டிச் சொல்ல ஐகாரம் போல இசைக்கும். அது கொள்ளற்க... போல என்றது தொக்கது.. ஆகுமென்றதனான் இஃது இலக்கணமாயிற்று.' என்று நச்சினார்க்கினியர் உரை வரையறுக்கிறார்.

'கொள்ளற்க' என்று இருவருமே விலக்குவதாலும் நச்சினார்க்கினியர் நேரடியாகவே 'இலக்கணமன்று' என்று கூறுவதனாலும் இவை சில வட்டாரங்களிலேயே வழங்கியிருத்தல் வேண்டுமென்பது புலப்படுகிறது. இது போன்று முதலில் ஒரு வட்டார வழக்குக் கூறாக இருந்த உறழ்ச்சி, பின்னர் பல வட்டார வழக்குகளிலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு இறுதியாக அனைத்து வட்டார வழக்குகளிலும் இடம்பெறுவதனையே ஒலி மாறுதலாகக் கொள்கிறோம். மொழியில் காணப்படும் ஒலி மாறுதல்களுக்கு வட்டார வழக்குகளும் ஒரு இன்றியமையாத அடிப்படையாகின்றன.

'அழி வழக்கு', 'இழிவழக்கு', 'வழக்கிறந்தன', 'சிறுபான்மை வரவு', 'ஆரியச் சிதைவு', 'தலைதடுமாறாக மயங்கின இயல்பு' என்றெல்லாம் உரையாசிரியர்கள் குறிப்பிடுவன வட்டார வழக்காதல் வேண்டும். பேச்சு வழக்குச் சொற்களை இலக்கியத்துள் ஏற்பது இழிந்தது எனும் மனப்பான்மை இலக்கண ஆசிரியர்கள் காலத்திலும் உரையாசிரியர்கள் காலத்திலும் தலைதூக்கியிருக்க வேண்டும். இன்றும் கூட இத்தகையோர் மனப்பான்மையைக் காணலாம். வட்டார வழக்குகளைப் பற்றிய நேரடியான ஆய்வு எதுவும் காணப்படாததற்கு இதுவே காரணமாகும். எனினும், சில வட்டார வழக்குக் கூறுகளாவது இலக்கண ஆசிரியர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டன என்பதனை கீழ்வரும் சூத்திரம் விளக்குகிறது.

மருவின் தொகுதி மயங்கியல் மொழியும்

உரியவை உளவே புணர்நிலைச் சுட்டே (எழு.112)

இருப்பினும், அத்தகைய பேச்சு வழக்குச் சொற்களை ஏற்பது இலக்கண ஆசிரியர்களுக்கு முழு நிறைவைத் தரவில்லை என்பதனை 'மயங்கியல் மொழி' என்னும் தொடர் சுட்டுகிறது.

சாரியைகள்

அடுத்து வட்டார வழக்குக் கூறு சாரியை பற்றியதாகும். 'இன்' சாரியை பெற்றிருந்த

E-ISSN: 2581-7140
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020
UGC CARE Listed Journal
Available at: www.ijtlls.com

ஒரு வட்டார வழக்கும் அதற்கு மாறாக ‘அத்துச்’ சாரியை பெற்றிருந்த மற்றொரு வழக்கும் இருந்திருக்க வேண்டும். கீழ்வரும் சூத்திரங்கள் இதனை விளக்குகின்றன.

அ ஆ உ ஊ ஏ ஔ என்னும்
அப்பா லாறான் நிலைமொழி முன்னர்
வேற்றுமை உருபிற் கின்னே சாரியை (எழு.174)

விளவின்கண், பலாவினை…

அ ஆ என்னும் மரப்பெயர்க் கிளவிக்கு
அத்தொடுஞ் சிவணும் ஏழன் உருபே (எழு.182)

விளவத்துக்கண், பலாவத்துக்கண்

இவ்வடிப்படையில் பேசப்படும் ஏனைய நூற்பாக்கள் வருமாறு,

வ.எண்	**சூத்திரம்**	**இளம்பூரணர் எடுத்துக்காட்டு**
1	எழுத்து.194	அழத்தை – அழனினை
2	எழுத்து.219, 220	மகவின்கை – மகத்துக்கை
3	எழுத்து.242	பனியத்துக் கொண்டான் - பனியிற் கொண்டான்
4	எழுத்து.243	வளியத்துக் கொண்டான் - வளியிற் கொண்டான்
5	எழுத்து.288	மழையத்துக் கொண்டான் - மழையிற் கொண்டான்
6	எழுத்து.378	வெயிலத்துக் கொண்டான் - வெயிலிற் கொண்டான்
7	எழுத்து.403	இருளத்துக் கொண்டான் - இருளிற்கொண்டான்

இவற்றின் அடிப்படையில் கீழ்க்கண்டவாறு ஒரு வட்டார வழக்குக் கூறினை அமைத்துக் கொள்ளலாம்.

வட்டார வழக்கு – அ	**வட்டார வழக்கு – ஆ**
-இன்-	-அத்து-

இந்த ‘இன்’ சாரியை சில வட்டாரங்களில் மாற்றுவடிவம் பெறாமல் கெட்டும் வழங்கியிருத்தல் வேண்டும். இன்னும் சில வட்டாரங்களில் ‘அன்’ எனும் மாற்றுச் சாரியை வழங்கியது என்பதனைக் கீழ்வரும் நூற்பாக்கள் விளக்குகின்றன.

அவற்றுள்

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

இன்னின் கெடுதல் உரித்து மாகும் (எழு.121)

ஆன்கோடு – ஆவின்கோடு

வண்டும் பெண்டும் இன்னொடு சிவணும் (எழு. 421)

பெண்டின் கால் - வண்டின் கால்

பெண்டென் கிளவிக்கு அன்னும் வரையார் (எழு422)

மேலும் சில எடுத்துக்காட்டுக்கள் வருமாறு,

வ.எண்	சூத்திரம்	இளம்பூரணர் எடுத்துக்காட்டு
1	எழுத்து. 202	வடக்கின்கண் – வடக்கண்
2	எழுத்து. 203	மண்ணினை – மண்ணை கல்லினை – கல்லை

அகரம் சாரியையினது வேறுபாட்டினைப் பினவரும் சூத்திரம் விளக்குகிறது.

சாவ என்னுஞ் செயவென் எச்சத்து

இறுதி வகரங் கெடுதலும் உரித்தே (எழு. 210)

சாவக்குத்தினான் - சாக்குத்தினான்.

வ.எண்	சூத்திரம்	இளம்பூரணர் எடுத்துக்காட்டு
1	எழுத்து. 270, 271	ஊன்குறை – ஊனக்குறை
2	எழுத்து. 385	தாழக்கோல் – தாழ்க்கோல்

இன்றைய பேச்சுத் தமிழில் காணப்படுவதைப் போல 'அசைகெடல்' என்னும் முறையும் சில வட்டார வழக்குகளிலாவது செயற்பட்டிருக்க வேண்டுமென்பதனைக் கீழ்க்கண்ட நூற்பா சூத்திரம் விளக்குகிறது.

இயற்பெயர் முன்னர்த் தந்தை முறைவரின்
முதற்கண் மெய்கெட அகரம் நிலையும்
மேய்யொழித் தன் கெடும் அவ்வியற் பெயரே (எழு.347)

தொகுப்புரை

புணர்ச்சியில் வரும் இனஎழுத்துக்கள் பெரும்பாலும் வட்டார வழக்காக உள்ளன. போலி, உறழ்பாகும், மயங்கியல் மொழி, மருவின் தொகுதி, திசைச் சொல் வட்டார வழக்குகளாகின்றன. மொழியிடையில் இரண்டு உயிர்களுக்கிடையே வரும் தடையொலி

E-ISSN: 2581-7140
UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020
Available at: www.ijtlls.com

உரசொலியாக மாறுதல். அகரமும் இகரமும் கூட்டிச் சொல்ல ஐகாரம் போல இசைக்கும். அது கொள்ளற்க என்று உரைப்பதன் மூலம் நச்சினார்க்கினியார் வழக்காற்று மொழியை அடையாளப்படுத்துகிறார். 'அழி வழக்கு', 'இழிவழக்கு', 'வழக்கிறந்தன', 'சிறுபான்மை வரவு', 'ஆரியச் சிதைவு', 'தலைதடுமாறாக மயங்கின இயல்பு' என்றெல்லாம் உரையாசிரியர்கள் குறிப்பிடுவன வட்டார வழக்காதல் வேண்டும். வட்டார வழக்குக் கூறு சாரியை பற்றியதாகும். 'இன்' சாரியை பெற்றிருந்த ஒரு வட்டார வழக்கும் அதற்கு மாறாக 'அத்துச்' சாரியை பெற்றிருந்த மற்றொரு வழக்கும் இருந்திருக்க வேண்டும். இ்கெடல் முறையும் வட்டார வழக்குக் கூறுகள் இடம் பெற்றிருக்க வேண்டும்.

சான்றாதாரங்கள்

[1] இளம்பூரணர் (உரையாசிரியர்) - தொல்காப்பியம், எழுத்ததிகாரம், , திருநெல்வேலி சைவசிந்தாந்த நூற்பதிப்புக் கழகம், திருநெல்வேலி, பதிப்பு – ஜூலை 1998,

[2] கணேசையர் (பதிப்பாசிரியர்), தொல்காப்பியம், எழுத்ததிகார மூலமும் நச்சினார்க்கினியர் உரையும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை – 600 013. இரண்டாம் பதிப்பு – 2007.

[3] பாலசுந்தரம், ச.தொல்காப்பியம் - எழுத்திகாரம், ஆராய்ச்சிக் காண்டிகையுரை, தாமரை வெளியீட்டகம், தஞ்சாவூர், முதற்பதிப்பு, 1988

[4] அறவாணன், க.ப (கட்டுரையாளர்), தொல்காப்பியர் குமரி நாட்டவர், பச்சையப்பன் கல்லூரி, சென்னை,

[5] நீதிவாணன். ஜெ., (கட்டுரையாளர்) தொல்காப்பியத்துள் வட்டார வழக்குக் கூறுகள், அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி,

தமிழில் இக்கட்டுரையை இவ்வாறு மேற்கோளிடுங்கள்:

மகேஷ் பாண்டி & நயினார். "தொல்காப்பிய எழுத்ததிகார உரையில் வட்டார வழக்கு." *தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்*, தொகுதி 3, சிற.இதழ் 2, தொகுதி 2, *திசம்பர்* 2020, பக். 288-297. டிஓஐ: **10.38067/ijtlls.2020.spl.v03i02v2.043**

Cite this Article in English (*MLA 8 Style*) as:
Mahesh Pandi & Nainar. "Regional Case in Tholkappia Authoritative Discourse." *International Journal of Tamil Language and Literary Studies*, Vol. 3: Special Issue - 2, Vol. 2, December 2020, pp. 288-297. DOI: **10.38067/ijtlls.2020.spl.v03i02v2.043**

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி /Author Contribution Statement: இல்லை /NIL

கட்டுரையாளர் நன்றியுரை /Author Acknowledgement: இல்லை /Nil

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

கட்டுரையாளர் உறுதிமொழி/Author Declaration: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்./I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் அரையாண்டு பன்னாட்டு ஆய்விதழ்

International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

பரிமேலழகரின் உரையில் இலக்கணக் குறிப்புகள்

Grammatical Notes in the Writings of Parimelazhagar

முனைவர் மா.முரளி, உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, காமராஜ் கல்லூரி, தூத்துக்குடி.
Dr. M. Murali, Assistant Professor, Department of Tamil, Kamaraj College, Thoothukudi.
ORCiD: https://orcid.org/0000-0002-0357-5315
DOI: 10.38067/ijtlls.2020.spl.v03i02v2.044

Abstract

The text books are the resemblance to the original texts in Tamil. Text books are credited with making the original texts alive. In Tamil, there was a habit of writing grammar and grammar in tamil. The text would have been incorrect lying in the text. The main objective of this thesis is to study the grammar of the Parimelazhakar's Thirukural text. This article contains a collection of grammar, genetic spinning, reference to the types of names and reactions, sorting and identifying the ranks and identifying new grammar ways and changes.

Keywords: Grammatical References, Parimelazhagar, *Paripadal, Thirukkural*

முன்னுரை

பரிபாடல் மற்றும் திருக்குறளுக்கு உரையெழுதியவர் பரிமேலழகர். இவரது திருக்குறள் உரை இன்றுவரை சிறந்த உரையாகப் போற்றிப் பாரட்டப்பெற்று வருகிறது. இவரது திருக்குறள் உரை பரிமேலழகரின் பல்துறைப் புலமையைத் தெளிவுறுத்துவதோடு, அவரது இலக்கண ஆளுமையை வெளிச்சப்படுத்தி, இவரது உரை 'இலக்கண உரை' எனப் போற்றத் தகும் வகையில் அமைதல் சுட்டத்தக்கது.

இலக்கண விளக்கம் தருதல்

இலக்கணக் குறிப்புக்கள் தரும் இடங்கள் சிலவற்றில் அவற்றிற்கான விளக்கங்களையும் தந்து விளக்கிச் செல்லும் மரபு இவரிடம் காணப்படுகிறது.

பகையகத்துப் பேடிகை ஒள்வாள் அவையகத்
தஞ்சு மவன்கற்ற நூல் (குறள். 727)

பேடி என்பதற்குப், "பேடி பெண்ணியல்பு மிக்கு ஆணியல்பும் உடையவள் என்ற பொருளைத் தருகின்றது.

பலகுடை நீழலும் தங்குடைக் கீழ்க்காண்பர்
அலகுடை நிழலவர் (குறள். 1034)

என்ற குறளில் இடம்பெறும் 'அலகு – கதிர்: அஃ தீண்டாகு பெயராய் நெல்மேலதாயிற்று" என விளக்கம் தருகிறார்.

ஊன்றுசால் மருங்கின் ஈன்றறதன் பயனே (புறம்.35)

மரபிலக்கண நூற்பாக்களை எடுத்தாண்டு இலக்கண விளக்கம் தருதல்

இலக்கண குறிப்புக்களை விளக்க ஏற்ற இடங்களில் தொல்காப்பிய நூற்பாக்களையும், புறப்பொருள் வெண்பாமாலை போன்ற இலக்கண நூற்கருத்துக்களையும் ஒப்பிட்டு உரை தருதல் கவனிக்கத்தக்கது.

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடு வாழ்வார் (குறள்.3)

என்ற குறள் விளக்கத்தில் தொல்காப்பிய நூற்பாவை எடுத்தாண்டு விளக்குதலைக் காணலாம்.

'அன்பான் நினைவாரது உள்ளக் கமலத்தின்கண் அவர் நினைந்த வடிவோடு விரைந்து சேறலின், 'ஏகினா" என இறந்த காலத்தால் கூறினார். என்னை? 'வாராக் காலத்தும் நிகழும் காலத்தும், ஓராங்கு வரூஉம் வினைச் சொற்கிளவி, இறந்த காலத்துக் குறிப்பொழு கிளத்தல் விரைந்த பொருள என்மனார் புலவர்" (தொல்.நூ.726)[தொல்காப்பியம், சொல்லதிகாரம், ப.எ.35] தனைப் 'பூமேடைந்தான்" என்பதொரு பெயர் பற்றிப் பிறிதொரு கடவுட்கேற்றுவாருமுனர் என்று உரை தருவர்.

புதிய இலக்கண விதிகளை மாற்றங்களை அடையாளப்படுத்துதல்

தொல்காப்பியர், நன்னூலாhிர் சுட்டாத இலக்கண விதிகளையும், பின்னாளில் நன்னூல் குறிப்பிடுகிற, இலக்கணக் கோட்பாட்டு வளர்ச்சிகளையும் திருக்குறள் உரையில் பரிமேலழகர் பதிவு செய்தலைக் காணலாம்.

பயனில சொல் பாராட்டுவானை மகனெனல்
மக்கட் பதடி எனல் (குறள். 196)

என்ற குறளுக்கு விளக்கம் தரும்போது, 'அல் விகுதி வியங்கோள் முன் எதிர்மறையினும், பின் உடன்பாட்டிலும் வந்தது' என்கிறார். இங்குத் தொல்காப்பியரோ, நன்னூலாரோ சுட்டாத 'அல்' விகுதி வியங்கோளுக்கு வருதலைத் தெளிவுறுத்துதல் காணலாம். மேலும் 'எனல்' என்ற ஒரே வியங்கோள் சொல் உடன்பாடாகவும், எதிர்மறையாகவும் அதிலும் ஒரே குறளில் வருதலையும் அவர் குறிப்பாக உணர்த்தி நிற்றல் கண்டு மகிழலாம்.

அதிகமாக எடுத்தாளப்படும் இலக்கணக் குறிப்புக்கள்

திருக்குறளில் ஆகுபெயர்கள், வேற்றுமைகள், இடைச்சொற்கள், போன்றன குறித்த இலக்கணக் குறிப்புக்கள் அதிகம் இடம்பெறுகின்றன. மேலும் முதனிலைத் தொழிற்பெயர்கள், இடவழுமைதிகள், ஒருபொருட்கிளவிகள், போல்வன வருதலையும் எடுத்துக்காட்டுவார்.

ஆகுபெயர்கள்

சங்க இலக்கியப் பழைய உரைகாரர்கள் மட்டுமன்றிப் பரிமேலழகரும் அதிகமாக எடுத்துக்காட்டும் இலக்கணக் குறிப்பு ஆகுபெயராகும். ஆகுபெயர்களாக உரைகாரர்கள் உணர்த்தும் இடங்களில் பொருள்களை நுட்பமாக உணர்ந்து பொருள் கொள்ள வேண்டும் என்பதற்காகவே இவ்விடங்களை உரைகாரர்கள் அடையாளப்படுத்துகின்றனர்.

திருக்குறளில் ஏறத்தாழ 117 இடங்களில் ஆகுபெயர்கள் இடம் பெறுவதாகப் பரிமேலழகர் சுட்டுகிறார். அவர் உணர்த்தும் குறள்களின் எண்கள் வருமாறு.

16, 43, 48, 53, 62, 66, 72, 74, 88, 178, 180, 186, 247, 296, 334, 344, 352, 359, 390, 401, 407, 414, 419, 470, 509, 522 523, 564, 566, 595, 632, 635, 671, 706, 708, 725, 735, 737, 792, 796, 817, 871, 872, 907, 916 920, 939, 984, 996, 1006, 1010, 1013, 1024, 1031, 1034, 1038, 1039, 1042, 1047, 1052, 1056, 1058, 1097, 1099, 1100, 1131, 1131, 1152, 1214, 1221, 1231, 1237, 1256, 1261, 1263, 1287.

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
அறிஞர்களால் மதிப்பிடு செய்யப்படும் அரையாண்டு பன்னாட்டு ஆய்விதழ்

International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

எடுத்துக்காட்டாகப்,

புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலிற் சாதல்
அறங்கூறும் ஆக்கந் தரும் (குறள். 183)

என்ற குறளில் வரும் ‘அறம்’ என்பதனை ஆகுபெயராகக் குறிப்பிடுவார். இங்கு ‘அறம்’ என்பது ஆகுபெயராய் அற நூல்களை உணர்த்துதலைக் காணலாம். ஆகுபெயராய் உரைகண்டாலே இதுபோன்ற இடங்களில் பொருள்களைச் சரியாக உணர இயலும். இது போலவே,

நுணங்கிய கேள்வியர் அல்லார் வணங்கிய
வாயினர் ஆதல் அரிது (குறள். 419)

என்ற குறளில் வரும் ‘வாய்’ என்பதனை ஆகுபெயராய் குறிப்பிடுவார். ‘வாய்’ பனித்த மொழியைக் குறிப்பதாகச் சுட்டுவார்.

வேற்று உருபுகளோடு வேற்றுமைப் பொருட்களைச் சுட்டல்

வேற்றுமை உருபுகளைச் சுட்டுவதோடு, அவை உணர்த்தும் பொருட்களையும் உரை கூறும்போதே கூறிச் செல்லும் மரபு இவரிடம் காணப்படுகிறது.

அறத்தான் வருவதே இன்பம் மற்றெல்லாம்
புறத்த புகழும் இல (குறள். 39)

என்ற குறள் உரையில் ‘ஆனுருபு ஈண்டு உடனிகழ்ச்சிக் கண் வந்தது’ என்று உருபு உணர்த்தும் பொருளையும் தூங்குகைகையான் ஓங்கு நடைய’ (புறம்.22)புறப்பொருள் வெண்பாமாலை, ப.எ.20 சுட்டுகிறார்.

பற்றுக பற்றற்றாண் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு (குறள்.350)

என்ற உரை விளக்கத்தில் பற்றற்றான் பற்று என்புழி ஆறாவது செய்யுட் கிழமைக்கண் வந்தது எனக் குறிப்பிடுகிறார். இது போலவே குறள்கள் 6, 63, 147, 1148, 1236, 1374 ஆகியவற்றிலும் உருபுகள் உணர்த்தும் பொருள்களை அடையாளப்படுத்துகிறார்.

வேற்றுமைத் தொகைகள் சுட்டல்

திருக்குறளில் வேற்றுமைத் தொகைகள் 17 (குறள்கள்: 25, 63, 191, 319, 420, 445, 458, 476, 537, 810, 845, 1008, 1075, 1195, 1268, 1282, 1326) இடங்களில் வருவதாக அடையாளப்படுத்துகிறார். எடுத்துக்காட்டாக,

பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா
பிற்பகல் தாமே வரும் (குறள். 319)

என்ற குறள் உரையில் ‘முற்பகல், பிற்பகல் என்பன பின் முன்னாகத் தொக்க ஆறாம் வேற்றுமைத் தொகை’ என்கிறார். இது போலவே குறள் 845 உரையில், ‘வல்லதென ஏழாவது இறுதிக்கண் தொக்கது’ எனத் தெளிவுறுத்துவார்.

வேற்றுமை மயக்கம் உணர்த்துதல்

திருக்குறளில் 12 இடங்களில் (குறள்கள்:102, 167, 296, 460, 515, 859, 1117, 1196, 1231, 1264, 1292, 1321) வேற்றுமை மயக்கங்கள் காணப்படுதலை வெளிச்சப்படுத்துவார். எடுத்துக்காட்டாக,

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

காலத்தினாற் செய்த நன்றி சிறிதெனினும்

ஞாலத்தின் மாணப் பெரிது(குறள். 102)

என்ற குறளில் ""காலத்தினால்' என்பது வேற்றுமை மயக்கம்" எனத் தெளிவுறுத்துவார்.

இடைச்சொற்கள் அடையாளப்படுத்துதல்

அசைநிலைகள், உம்மைச் சொற்கள், எதிர்மறை விகுதிகள் போன்றனவற்றைத் திருக்குறள் உரையில் அடையாளப்படுத்துகிறார்.

அசைநிலைகள்

அசைநிலைகளையும், சில இடங்களில் அவை உணர்த்தும் பொருள்களையும் அடையாளப்படுத்துகிறார்.

இவ்வகையில் ஏகாரம் பிரிநிலையாகவும் (குறள்.57, 165), ஈற்றசையாகவும் (குறள்.1054) தேற்றமாகவும் (குறள். 261, 418) வருதலை எடுத்துக் காட்டுவார்.

உம்மைச் சொல் சிறப்பின்கண் வரும் இடங்களையும் (குறள். 17, 18, 71, 269, 332, 491, 521, 748, 762, 765, 1044, 1153, 1289, 1305, 1306), எச்ச உம்மை வருமிடங்களையும் (332, 1060, 1138, 1150, 1262), இறந்தது தழீஇய எச்சவும்மையாக வருமிடங்களையும் (குறள். 457, 577, 787, 856, 985, 986, 990, 1319), முற்றும்மையாக வருமிடங்களையும் (குறள். 402, 632, 992, 1107, 1108, 1247), இழிவு சிறப்பும்மையாக இடம்பெறும் இடங்களையும் (குறள். 282, 344, 403, 467, 469, 475, 491, 751, 819, 964, 965, 969, 1127, 1198, 1199, 1202), உம்மை தொக்கி வரும் இடங்களையும் (குறள். 132, 591, 609, 815, 933), விகாரத்தால் தொக்க எச்சவும்மைகளையும் (குறள். 112, 290, 1067, 1195, 1222), விகாரத்தால் தொக்க எண்ணும்மையையும் (குறள். 685), உம். அசைநிலையாக வரும் இடங்களையும் (குறள், 1148, 1165, 1327) எடுத்துக்காட்டுகிறார்.

பெயர்களை அடையாளப்படுத்துதல்

இயற்பெயர், பொதுப் பெயர்கள் அன்றி, சிந்திக்கத்தக்க, குறிக்கத் தகுந்த பெயர்களை மட்டும் உரைகளில் எடுத்துக் காட்டுகிறார். இத்தகைய பெயர்கள் சிந்தனைக்கு இடந்தருவனவாக அமைகின்றன. அவர் குறிப்பிடும் பெயர்கள் இதோ,

பண், கண் (குறள். 573) கண்ணகல் ஞானம் (திரிகடுகம்.1)

விலங்கு, நூல் (குறள்.410)

குற்றம் (குறள்.433) போல்வனவற்றைச் சாதிப்பெயர்களாகக் குறிப்பிடுகின்றார்.

நன்று (குறள். 1072), அறம் (குறள்: 321) உயிர் (குறள்.334) போன்றவற்றைச் சாதியொருமை எனக் குறிக்கின்றார்.

இது போன்ற வழக்குகள் இலக்கியங்களில் ஆளப்படுதல் கவனிக்கத்தக்கது.

"பொறையொருங்கி மேல்வருங்கால் தாங்கி இறைவற்

கிறையொருங்கு தேர்வது நாடு (குறள். 733)"

இதுபோலவே பாரங்கள் மக்கள் தொகுதி எனவும், ஆன் எருமை முதலியன விலங்கு தொகுதி எனவும் குறிப்பிடுவார்.

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் அரையாண்டு பன்னாட்டு ஆய்விதழ்

International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

அழிவு காரணப்பெயர் (குறள். 625), அஃது – சுட்டுப்பெயர் (1093), அதனால் சுட்டுப்பெயர் முன் வருதல் (குறள்.642), தம் என்பது அரசனோடு உளப்பகுத்துதல் (குறள்: 584) எனவும் குறிப்பிடுகிறார்.

வினைகள் மற்றும் அதன் வகைகளைச் சுட்டல்

சில குறிக்கத் தகுந்த வினைகளையும், வினை வகைகள் சிலவற்றையும் அடையாளப்படுத்துகிறார். இவ்வகையில் வினை முற்றுக்கள், குறிப்பு வினைகள், எச்சங்கள், எச்சத்திரிபுகள், தன்வினை, பிற வினைகள், எதிர்மறை வினைகள் போன்ற சில வினை வடிவங்களை உணர்த்துகிறார். இவற்றுள் சில அவரது இலக்கண நுட்ப அறிவை வெளிச்சப்படுத்துவனவாக அமைகின்றன. கீழ்க்கண்டன இவ்வகையில் அமைகின்றன. 'கடியு மிடத்தேற்றான் சோர்ந்தனள் கை' என்புழிப் போலத் தேற்றாமை தன்வினையாய் நின்றது' (கலி. மருதம்.27)

பகச்சொல்லிக் கேளிர்ப் பிரிப்பர் நகச்சொல்லிட
நட்பாடல் தேற்றா தவர் (குறள். 87)

இனிது (குறள். 99), அரிது (குறள். 1160)

வினைகுறிப்புப்பெயர்

புரிந்த (குறள்.59), உவக்கும் (228) மருள்தீர்ந்த (குறள் 199) அறியாத, குன்றாத (736) புரிந்த (குறள் 994) என்பவற்றைப் பெயரெச்சங்களாக எடுத்துக் காட்டுவார்.

இது போலவே, நோக்கி (குறள் 93) மடியா (குறள் 602) நாண (குறள் 1149) இவற்றை வினையெச்சங்களாகக் குறிப்பர்.

மடிந்து (குறள் 604) என்பது திரிந்து நின்ற வினையெச்சம் எனக் குறிப்பிடுகிறார்.

எண்பதத்தான் ஓரா முறை செய்யா மன்னவன்
தண்பதத்தான் தானே கெடும் (குறள்.548)

என்ற குறளில் 'எண்பதத்தா" னென்னும் முற்றுவினை எச்சமும், 'ஒரா" வென்னும் வினையெச்சமும், 'செய்யா' வென்னும் பெயரெச்ச எதிர்மறையுமு; செய்தல் வினை கொண்டன" எனப் பல இலக்கணக் குறிப்புகளைத் தொகுத்தும் சுட்டுகிறார். இதற்கு சான்றாக அல்லவை செய்தற்கு அறம் கூற்றம் (நான்மணி.85)

இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பா ரிலானும் கெடும் (குறள்.448)

என்ற குறள் உரையில் 'இல்லாத" 'எமரா" என்பன பெயரெச்ச அடுக்கு" எனக் குறிப்பிடுகிறார்.

பெயக்கண்டு நஞ்சுண்டமைவர் நயத்தக்க
நாகரிக் வேண்டுபவர். (குறள். 580)

முடிவுரை

பரிமேலழகர் திருக்குறள் உரையில் சுட்டும் இலக்கணக் குறிப்புக்கள் அவரது பழுத்த தமிழ் இலக்கணப் புலமையோடு வடமொழி இலக்கண ஆற்றலையும் உணர்த்தி நிற்கின்றன. மேலும் திருக்குறளுக்கு நயம் சேர்ப்பனவாகவும், திருக்குறளின் இலக்கியச் சுவையை,

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

அமைப்பை, அதன் இலக்கணப் பயன்பாட்டுச் செறிவையும் உணர்த்தி நிற்கின்றன. இவரது உரை, 'இலக்கண உரை" எனப் புகழத்தக்கதாய் அமைவதும் சுட்டத்தக்கது.

தொகுப்புரை

பரிமேலழகர் உரையின் தனிப்பட்ட நற்பண்புகளில் ஒன்று தீந்தமிழ் நடை, உரைநடையில் இவருக்கு ஒப்பான செறிவு, இனிமை, தெளிவு, நயம் ஆகியவற்றின் இணைப்பே வேறு எந்த உரையாசிரியிடமும் காண இயலாது. திருவள்ளுவருடன் போட்டியிட்டுத் திருவள்ளுவர் நடையை, சொற்செறிவை இனிமையை கருத்து ஆழத்தைப் பெற்றுள்ளார் என்பதில் ஐயமில்லை.

துணை நூற்பட்டியல்

[1] பரிமேலழகர் (உ.ஆ), 2008, திருக்குறள் மூலமும் உரையும், கழகப் பதிப்பு, சென்னை.

[2] ச.வே.சுப்பிரமணியன், 1999, தொல்காப்பியம் தெளிவுரை, மணிவாசகர் பதிப்பகம், சென்னை.

[3] ச.வே.சுப்பிரமணியன், 2013, பெருங்காப்பியங்கள் மூலமும் உரையும், மணிவாசகர் பதிப்பகம், சென்னை.

[4] சு.அழகேசன், நன்னூல் எளிய உரை சொல்லதிகாரம், சுதா பதிப்பகம், தூத்துக்குடி.

[5] மு.வை.அரவிந்தன், 2010, உரையாசிரியர்கள், மணிவாசகர் பதிப்பகம், சென்னை.

[6] தி.வே.கோபாலையர், 2004, தமிழ் இலக்கணப் பேரகராதி, சொல்-1, தமிழ் மண் பதிப்பகம், சென்னை.

[7] பவானந்தம் பிள்ளை (ப.ஆ.) 2006, இறையனார் அகப்பொருள் முல்லை நிலையம், சென்னை.

[8] ச.திருஞான சம்பந்தம் (தெ.உ) 2006, புறப்பொருள் வெண்பாமாலை கதிர் பதிப்பகம், திருவையாறு.

[9] பவானந்தம் பிள்ளை (ப.ஆ) 2006, இறையனார் அகப்பொருள் முல்லை பதிப்பகம், சென்னை.

[10] பரிமேலழகர் (உ.ஆ) 2008, திருக்குறள் மூலம் உரையும், கழகப்பதிப்பு, சென்னை.

தமிழில் இக்கட்டுரையை இவ்வாறு மேற்கோளிடுங்கள்:

முரளி . **"பரிமேலழகரின் உரையில் இலக்கணக் குறிப்புகள்."** *தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்,* தொகுதி 3, சிற.இதழ் 2, தொகுதி 2, *திசம்பர்* 2020, பக். 298-304. டிஓஐ: **10.38067/ijtlls.2020.spl.v03i02v2.044**

Cite this Article in English (*MLA 8 Style*) as:

Murali. "Grammatical Notes in the Writings of Parimelazhagar." *International Journal of Tamil Language and Literary Studies,* Vol. 3: Special Issue - 2, Vol. 2, December 2020, pp. 298-304. DOI: **10.38067/ijtlls.2020.spl.v03i02v2.044**

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி /Author Contribution Statement: இல்லை /NIL

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

கட்டுரையாளர் நன்றியுரை /Author Acknowledgement: இல்லை /Nil

கட்டுரையாளர் உறுதிமொழி/Author Declaration: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்./I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் அரையாண்டு பன்னாட்டு ஆய்விதழ்

International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

கைகோள் - இலக்கண நூல்களும் உரைகளும்
Kaikol- Grammatical Texts and its Explanations

இரா. முருகேஸ்வரி, முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர், ஸ்ரீபராசக்தி மகளிர் கல்லூரி, குற்றாலம்.
R. Murugeswari, Full Time Research Scholar, Tamil Department, Sri Parasakthi College For Women, Courtallam
ORCiD: https://orcid.org/0000-0003-3369-8612
முனைவர். ஹ. அல்தாஜ் பேகம், உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, ஸ்ரீ பராசக்தி மகளிர் கல்லூரி, குற்றாலம்.
Dr.H. Althaj Begum, Assistant Professor in Tamil**,** Sri Parasakthi College of Women, Kutralam
ORCiD: https://orcid.org/0000-0002-3322-6458
DOI: 10.38067/ijtlls.2020.spl.v03i02v2.045

Abstract

Tamil Literature is rich with the grammatical connotations and denotations. It has mainly focused human life into two ways. Through language, it decodes love and war in the social life of Tamil people. The World's first Tamil grammarian Tholkappiar has registered this pattern s in his Tamil grammar book of "Tolkāppiyam". The conduct of "Love affairs" has also been categorized into two parts as 'secret love' (Kalaviyal) and 'wedded segment of love; (Karpiyal). It is discussed in the chapter "Kaikol" in "Tolkāppiyam" which has 34 elements in literary compositions. While going through it, life and grammar are intertwined as like the soul and the body that insists without any one that cannot exist. The subsequent Tamil grammarians also have dealt in the same matter as per the ideas portrayed in the "Tolkāppiyam" without any changes. "Kaikol" or "Kaikkilai" has been described in the manner of lucid explanations to bring out the inner theme as relevant to the source text. The succeeding commentators seconded the voice of the source text "Tolkāppiyam" in an apt manner. Hence, the article details the subject related to 'Kaikol' grammatical text and its later commentaries

Keywords: Kaikol, Grammatical Text, Explanation

முன்னுரை

தமிழ் அக இலக்கியங்களுக்குத் தொல்காப்பியர் முதற்கொண்டு இலக்கணம் படைத்தோர் கைகோள் பற்றி பதிவுசெய்தமை களவியல், கற்பியல் என்ற இரு நிலையின் சொல்லாட்சியே கைகோள் ஆகும்.

தொல்காப்பியம் - கைகோள்

கைகோள் என்ற சொல்லாட்சி, வேர்ச் சொல் இல்லை. இருசொற்களின் கூட்டமைப்பு அல்லது இரு சொல் இணைவு. "கை" என்ற ஒரு சொல் பல பொருள்களைத் தரும். ஈண்டு ஒழுக்கம் எனப் பொருள் கொள்ளலாகும். "கோள்" என்ற சொல் கோட்பாடு அல்லது கொள்கை என்ற பொருள் கொள்ளலாகும். கைகோள் என்ற சொல்லாட்சி ஒழுக்கக் கோட்பாடு என்று பொருள் தருவதாக அமைகிறது.

கைகோள் என்பது தொல்காப்பியத்துள் செய்யுளியல் (நூற்பா 1259) 34 செய்யுள் உறுப்புகளுள் பதினான்காவது செய்யுளுறுப்பாக அறிமுகம் செய்யப்படுகிறது.

செய்யுள் உறுப்புக்கள்

மாத்திரை எழுத்தியல் அசைவகை எனாஅ,

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

யாத்த சீரே அடி யாப்பு எனாஅ,
மரபே தூக்கே தொடைவகை எனாஅ,
நோக்கே பாவே அளவியல் எனாஅத்,
திணையே கைகோள் கூற்று வகை எனாஅக்
கேட்போர் களனே காலவகை எனாஅப
பயனே மெய்ப்பாடு எச்சவகை எனாஅ,
முன்னம் பொருளே துறை வகை எனாஅ,
மாட்டே வண்ணமொடு யாப்பியல் வகையின்
ஆறுதலையி;ட்ட அந்நால் ஐந்தும்
அம்மை அழகு தொன்மை தோலே
விருந்தே இயைபே புலனே இழைபு எனாஅப்
பொருந்தக் கூறிய எட்டொடும் தொகைஇ
நல்லிசைப் புலவர் செய்யுள் உறுப்பென
வல்லிதிற் கூறி வகுத்துரைத் தனரே.(நூற்பா 1259)

அவை பின்வருமாறு அமைகின்றன. மேலும் கைகோள், என்பது களவு, கற்பு என இருவகைப்படும் என 1442, 1443, 1444 நூற்பாக்களில் பதிவு செய்கிறது தொல்காப்பியம்.

கைகோள் - களவு

காமப் புணர்ச்சியும், இடந்தலைப் படலும்,
பாங்கொடு தழாலும், தோழியிற் புணர்வும் என்று
ஆங்க நால் வகையினும் அடைந்த சார்பொடு
மறையென மொழிதல் மறையோர் ஆறே.

இயற்கைப் புணர்ச்சியும், இடந்தலைப்படலும், பாங்கற்கூட்டமும், தோழியிற் கூட்டமும் என்று சொல்லப்பெற்ற நான்கு வகையாலும், அவற்றைச் சார்ந்து வருபவையும், களவு என மொழிதல், களவிலக்கணம் கூறும் புலவர் நெறியாகும்.

கற்பு

மறை வெளிப்படுதலும், தமரின் பெறுதலும்,
இவை முதலாகிய இயல் நெறி திரியாது
மலிவும், புலவியும், ஊடலும், உணர்வும்,
பிரிவொடு புணர்ந்து கற்பெனப் படுமே.

களவொழுக்கம் வெளிப்படுதலும், களவொழுக்கமின்றித் தமரானே பெறுதலும், இவை முதலாக முறைமையில் திரியாது, மகிழ்தலும், புலத்தலும், ஊடலும், ஊடல் தீர்தலும், பிரிதலும், என்றவற்றோடு பொருந்தியது கற்பு எனப்பெறும் எனத் தொல்காப்பியம் கூறுகிறது.

கைகோள் முடிவு

"மெய்பெறும் அவையே கைகோள் வகையே." மேற்சொல்லப்பெற்ற களவு, கற்பு என்பன கைகோள் வகையாவன என தொல்காப்பியம் வழி அறிய முடிகிறது. தொல்காப்பியத்தில் அகத்திணையியல் (55), களவியல் (50), கற்பியல் (53), பொருளியல் (54),

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

நூற்பாக்கள் ஆகியவை அகப்பொருள் பற்றியனவை. ஆகமொத்தம் 212 நூற்பாக்களால் ஆனவை. ஏனைய மெய்ப்பாட்டியல், உவமையியல், செய்யுளியல் போன்றவற்றிலும் அகப்பொருள் செய்திகள், களவியல் நிகழ்வுகள், கற்பியல் நிகழ்வுகள் என பொதுத் தலைப்பிட்ட கைகோள் என்ற நிலையில் உள்ளன.

இறையனார் களவியல் – கைகோள்

இறையனார் களவியலில் அறுபது (60) நூற்பாக்களில் களவியல், கற்பியல் (கைகோள்) என இரண்டு நிலைகளில் நூல் அமைகிறது. அதில் களவியலுக்கு 33 நூற்பாக்களும், கற்பியலுக்கு 27 நூற்பாக்களும் என அமைகின்றன. ஓரடி நூற்பாக்கள் பதினைந்து உள்ளன.

இறையனார் களவியலில் கைகோள் பற்றிய குறிப்பை நூற்பா 50, 60 பதிவிடுகிறது.

திணையே கைகோள் கூற்றே கேட்போர்
இடனே காலம் எச்சம் மெய்ப்பாடு
பயனே கோள்என்று ஆங்கப் பத்தே
அகன்ஐந் திணையும் உரைத்தல் ஆறே (நூற்பா. 56 இறையனார் அகப்பொருள்)
களவு கற்பெனக் கண்ணிய ஈண்டையோர்
உளநிகழ் அன்பின் உயர்ச்சி மேன (நூற்பா. 60 இறையனார் அகப்பொருள்)

தமிழ்நெறி விளக்கம்

தமிழ்நெறி விளக்கம் நூல் முழுவதும் நமக்கு கிடைக்கவில்லை. பொருளியல் என்னும் ஒரு பகுதியில் 25 நூற்பாக்களே கிடைத்துள்ளன. அவற்றில் அகத்திணைக்கு இன்றியமையாத முதல், கரு, உரிப்பொருளை 13 நூற்பாக்களில் கூறுகிறார்.

கைகோள்

களவு பற்றி கூறும் இடத்தில், களவு கந்தருவத்துடன் ஒப்பது என்று கூறுகிறார். கற்பு என்ற பிரிவில் அறத்தொடு நிலை, உடன்செலவு, சேயிடைப்பிரிவு, ஆயிடைப்பிரிவு என நான்கு பகுதிகளாக அமைத்து தமிழ்நெறி விளக்கம் என்ற நூலில் விளக்குகிறார்.

களவு

முந்திய நூலோர் மொழிந்தவெண் மணத்தினும்
கந்திருவ முறைமை களவெனப் படுமே (நூற்பா. 14 தமிழ்நெறி விளக்கம்)

அதாவது,

- இயற்கைப் புணர்ச்சி
- பாங்கர் கூட்டம்
- தோழியர் கூட்டம்
- வரைவுக்கடாதல்
- உடன்போக்கு வலித்தல்

கற்பு

முக்கட் கூட்ட முதலா நான்கும்
தொக்கிய லொழுக்கங் கற்பெனத் தோன்றும் (நூற்பா. 21 தமிழ்நெறி விளக்கம்)

அதாவது,

- அறத்தொடு நிலை
- உடன்செலவு

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

- சேயிடைப்பிரிவு
- ஆயிடைப்பிரிவு

நம்பி அகப்பொருள் விளக்கம்

13-ஆம் நூற்றாண்டில் நாற்கவிராசர்நம்பி என்பவர் அகப்பொருள் நூலை எழுதினார். அந்நூல் நம்பியகப்பொருள் விளக்கம் என்று அழைக்கப்பெற்றது. நம்பி அகப்பொருளில் அகத்திணையியல் 116 நூற்பாக்களையும், களவியல் 54 நூற்பாக்களையும், கற்பியல் 10 நூற்பாக்களையும், ஒழிவியல் 43 நூற்பாக்களையும் கொண்டு ஐந்து இயல்களில் 252 நூற்பாக்களால் இந்நூல் அமைந்துள்ளது.

கைகோளின் வகை

அளவுஇல் இன்பத்து ஐந்திணை மருங்கின்
களவு, கற்பு என இரு கைகோள் வழங்கும் (நூற்பா. 26 நம்பி அகப்பொருள்)

கற்பிற்குரிய நிகழ்வுகள்

இயற்கைப்புணர்ச்சி, வன்புறை, தெளிவே
பிரிவழி மகிழ்ச்சி, பிரிவழிக் கலங்கல்,
இடர்ந்தலைப்பாடு, பாங்கன் கூட்டம்,
பாங்கி மதியுடன்பாடு, பாங்கியின் கூட்டம்,
பாங்கு அமை பகற்குறி, பகற்குறி இடையீடு,
இரவுக் குறியே, இரவுக்குறி இடையீடு,
வரைவு வேட்கை, வரைவு கடாதல்
ஒருவழித் தணத்தல், வரைவு இடை வைத்துப்
பொருள்வயின் பிரிதல், என்று ஒரு பதினேழும்
களவிற்கு உரிய கிளவித் தொகையே (நூற்பா. 123 நம்பிஅகப்பொருள் விளக்கம்)

களவியற்காரிகை

முதலும், இடையும், முடிவும் இல்லாத நூல் களவியற்காரிகை. நூலாசிரியர் பெயரோ, நூற்பெயரோ, உரையாசிரியர் பெயரோ தெரியாத நூல். இந்நூலை முதன்முதலில் பதிப்பித்தவர் பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை அவர்கள். 'களவியற்காரிகை' என்ற பெயரையும் கொடுத்தவர் பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை அவர்கள் தான். இந்நூல் கட்டளைக்கலித்துறை யாப்பில் மகடூஉ முன்னிலையோடு, அந்தாதி அமைப்பில் பாடல்கள் அமைந்துள்ளன. கைகோள், களவொழுக்கம், கற்பொழுக்கம் என இருவகை உணர்த்தி நூற்பாக்கள் அமைகின்றன.

களவொழுக்க வகை கூறும் நூற்பா

தெய்வப் புணர்ச்சியும் பாங்கனிற் கூட்டஞ் செவிலிதருந்
தையற்புணர்ச்சிப் பகற்குறி தானு மரபினிற்சார்ந்
துய்தற்குறியும் வரைவுகடாவுடன் போக்குணர்வு
மெய்யுற் றியல்பா லமையுங் களவொழுக்கமென்பரே (நூற்பா. 23 களவியற்காரிகை)

கற்பு பற்றி கூறும் நூற்பா

"வெளிப்படை முதலா விதும்பல் ஈறாக்

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

களிப்பென உரைப்பது கற்பெனப் படுமே (நூற்பா. 43 களவியற்காரிகை)

இரு தலைப்புகளில், வெளிப்படைநிலை, உரைபொருட்டு ஏகல் என்பன நூற்பா 44 முதல் நூற்பா 54 முடிய கற்பு பற்றியச் செய்திகளைக் கூறுகிறது களவியற்காரிகை.

மாறன் அகப்பொருள்

மாறன் அலங்காரம், மாறன் அகப்பொருள், பாப்பாவினம் ஆகிய மூன்றையும் இயற்றியவர் திருக்குருகைப் பெருமாள் கவிராயர்.

கைகோள் பற்றிய நூற்பா

மெய்கொள விழுமிதின் விளம்பிய வைந்திணை
கைகோள் களவுகற் பெனவிரு காட்சிய (நூற்பா. 31 மாறன் அகப்பொருள்)

களவியல் இலக்கணம் கூறும் நூற்பா

அறம்பொரு ளின்பமென் பவற்றுனைந் திணைக்கட்
சிறந்தநன் களவெனச் செப்பிய கூட்டம்
மறைவெளிப் படுத்திய மன்ற லெட்டனுட்
பொறைமலி யாழோர் புணர்ச்சிய தாகும் (நூற்பா. 129 மாறன் அகப்பொருள்)

கற்பியல் இலக்கணம் கூறும் நூற்பா

கற்பெனப் படுவது கற்பினை வழுவாது
தற்கொண் டானையுந் தன்னையும் பேணி
யில்லறத் தொழுகு மில்லறக் கிழத்தி
நல்லறத் தவர்மதி நன்மாண் பதனொடு
மகிழ்ச்சியு மூடலு மூட லுணர்த்தலு
மகிழ்ச்சியில் பிரிவுடன் பிறவு மியன்ற
புகழ்ச்சியி னெய்தியிற் பொருந்துவதாகும் (நூற்பா. 225 மாறன் அகப்பொருள்)

கற்பிற்குரிய நிலைப்பாடுகளை நூற்பா 226 முதல் 234 முடிய விவரிக்கின்றது. அதாவது,

- இல்வாழ்க்கை
- பரத்தையர் பிரிதல்
- உணர்த்த உணரும் ஊடற்குரியவை
- உணர்த்த உணரா ஊடற்குரியவை
- உணர்வதோடு உணரா ஊடற்குரியவை
- பரத்தையின் அகற்சியின்விரி
- காவல் முதலிய பிரிவின் வகை என நூற்பாக்களில் பதிவு செய்கின்றது.

முடிவுரை

களவியல், கற்பியலில் தொல்காப்பியருக்கு பின் வந்த அகஇலக்கண ஆசிரியர்கள் பெரும்பாலும் தொல்காப்பியத்தை ஒட்டியே இலக்கணம் வகுத்துள்ளனர் என்பது அறிய கிடைக்கின்றது. சில விரிவும் சுருக்கமும் கொண்டுள்ளமையும் அறியப்படுகின்றது.

துணைநூற்பட்டியல்

[1] இறையனார் களவியல், தமிழ் இலக்கண நூல்கள் மூலம் முழுவதும், பதிப்பாசிரியர் : முனைவர். ச.வே. சுப்பிரமணியன், 2009.

[2] தமிழ்நெறி விளக்கம், தமிழ் இலக்கண நூல்கள் மூலம் முழுவதும், பதிப்பாசிரியர் :

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

முனைவர். ச.வே. சுப்பிரமணியன், 2007.

[3] நம்பி அகப்பொருள், தமிழ் இலக்கண நூல்கள் மூலம் முழுவதும், பதிப்பாசிரியர் : முனைவர். ச.வே. சுப்பிரமணியன், 2009.

[4] களவியற்காரிகை, தமிழ் இலக்கண நூல்கள் மூலம் முழுவதும், பதிப்பாசிரியர் : முனைவர். ச.வே. சுப்பிரமணியன், 2009.

[5] மாறன் அகப்பொருள், தமிழ் இலக்கண நூல்கள் மூலம் முழுவதும், பதிப்பாசிரியர் : முனைவர். ச.வே. சுப்பிரமணியன், 2009.

தமிழில் இக்கட்டுரையை இவ்வாறு மேற்கோளிடுங்கள்:

முருகேஸ்வரி & அல்தாஜ் பேகம். “கைகோள் - இலக்கண நூல்களும் உரைகளும்.” *தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்*, தொகுதி 3, சிற.இதழ் 2, தொகுதி 2, *திசம்பர்* 2020, பக். 305-310. டிஒஐ: **10.38067/ijtlls.2020.spl.v03i02v2.045**

Cite this Article in English (*MLA 8 Style*) as:

Murugeswari & Althaj Begum. “Kaikol- Grammatical Texts and its Explanations.” *International Journal of Tamil Language and Literary Studies*, Vol. 3: Special Issue - 2, Vol. 2, December 2020, pp. 305-310. DOI: **10.38067/ijtlls.2020.spl.v03i02v2.045**

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி /Author Contribution Statement: இல்லை /NIL

கட்டுரையாளர் நன்றியுரை /Author Acknowledgement: இல்லை /Nil

கட்டுரையாளர் உறுதிமொழி/Author Declaration: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்./I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் அரையாண்டு பன்னாட்டு ஆய்விதழ்

International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

தொல்காப்பியம் மூவருரையும் உரைசிறப்பும்

The Explicatory Notes of the Trio and their Textual Excellence

ப.மேகலா, முனைவர் பட்ட ஆய்வாளர், வெ.ப.சு.தமிழாய்வு மையம், ம.தி.தா.இந்துக் கல்லூரி, திருநெல்வேலி.
P. Mekala, Ph.d Research Scholar, V.P.S. Research Center, M.D.T.Hindu College, Tirunelveli.
ORCiD: https://orcid.org/0000-0001-7212-9856
முனைவர் அ.சுந்தரம், இணைப் பேராசிரியர், வெ.ப.சு.தமிழாய்வு மையம், ம.தி.தா.இந்துக் கல்லூரி,, திருநெல்வேலி.
Dr.A.Sundaram, Guide & Associate Professor, V.P.S. Research Center, M.D.T.Hindu College, Tirunelveli.
ORCiD: https://orcid.org/0000-0003-4613-2087
DOI: 10.38067/ijtlls.2020.spl.v03i02v2.046

Abstract

"Tolkāppiyam" is the foremost of the Tamil Grammar books. It is glorified for its in depth study in language and social life of the Tamil language and Tamil social life. Grammar has three main categories as writing, word and meaning. It has been logically detailed in the grammatical treatise "Tolkāppiyam". What matched Tolkappier's grammar was the next for that grammar. There are three notable commentators on "Tolkāppiyam". They are Ilampuranar, Naccinarkkiniyar and Senavarayar, whose uniqueness in the text, their devotion to the language, the value they had to the original author, and the specialty with which they rendered to the text in relation to the source are explored in this article.

Keywords: Explicatory Notes, the Trio, Tamil Literature, Textual Excellence

முன்னுரை

உரைகள் தமிழ்மொழி, இலக்கியம், இலக்கணம் மற்றும் பண்பாட்டு வரலாற்றில் முக்கிய பங்கு வகிப்பதாகும். உரைகள் தமிழ் மொழியின் தனிச்சிறப்பான ஒன்று. இலக்கணமும் இலக்கியமும் முதன்மையானவை எனில் உரைகள் அதன் காரியமாகவும் விளக்கமாகவும் உள்ளது. உரையே பிற்காலத்தில் உரைநடை என்னும் ஒரு வகையாக தனித்துவம் பெற்றுத் திகழ்கிறது. பழம்பெரும் இலக்கண நூலான தொல்காப்பியத்தின் உரையாசிரியர்கள் பற்றியும் உரைசிறப்பு பற்றியும் இக்கட்டுரையில் எடுத்தாளப்பட்டுள்ளது.

உரை – விளக்கம்

உரை என்பது உரைத்தல் அல்லது சொல்லுதல் என்றப் பெயருடையது. 'கற்றலினாயினம் கேட்க' என்ற பொருண்மையினை விளக்குவது உரையாகும். உரைப் பற்றி தொல்காப்பியம்

சூத்திரத்துப் பொருளன்றியும் யாப்புற
இன்றியமையாது இயைபவை யெல்லாம்
ஒன்ற உரைப்பது உரையெனப் படுமே"[1]

குறிப்பிடுகிறது. பத்து மற்றும் பதினொன்றாம் நூற்றாண்டினை தமிழ் வரலாற்றில் உரைகளின் காலம் என்று தனிநிலைப்படுத்தலாம். முக்கியமான உரைகள் இக்காலக்கட்டத்தில்

International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

தோன்றியது. தொல்காப்பியம் உரை என்று சொல்லுகிற போது வரையறையை கொஞ்சம் விரிவுபடுத்தி நன்னூல் விருத்தியுரை என்கிறது.

சூத்திரத்துட் பொருளன்றியு மாண்டைக்(கு)
இன்றியமையா யாவையும் விளங்கத்
தன்னுரை யானும் பிறநூ லானும்
ஐய மகாஐங் காண்டிகை யுறுப்பொடு
மெய்யினை எஞ்சாது இசையது விருத்தி[2]

மூல நூல்களில் காணப்படும் கடின நடையையும், சொல் வழக்கையும், மரபுகளையும் புரிந்து கொள்ள உரைகள் பயன்படுகின்றன. மேலும் உவமம் உள்ளிட்ட உத்திமுறைகள் பாடல் அமைப்பு முறைகள், பாவடிவங்கள் அவற்றிடையே ஏற்பட்ட மாற்றங்கள் முதலியவற்றை அறியவும் உரைகள் துணைப்புரிகின்றன. உரை எவ்வாறு சொல்லப்பட வேண்டும் உரையின் வளமை எவ்வாறு இருத்தல் வேண்டும் என யாப்பெருங்கலக்காரிகை குறிப்பிடுவதாக அகப்பொருள் விளக்கம் மேற்கோள் காட்டுகிறது.

கருத்துரை கண்ணழிபு பொழிப்புத் திரட்ட
லகலங் கூற லெனநால் வகைத்தே
புகலுஞ் சூத்திரப் பொருளுரை யென்ப[3]

தொல்காப்பிய உரையாசிரியர்கள்

மூலநூல் ஆசிரியர் போலவே போற்றத்தக்க பெருமக்கற் நூலின் உரையாசிரியர்கள் ஆவர். மூல நூலின் வழியே உரை எழுதி மூல நூலை காத்ததுடன் அதன் செப்பம் குறiயாமல் நூலின் சிறப்பை எடுத்தியம்பியவர்கள் நூலின் உரையாசிரியர்களாவர். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முந்திய தொல்காப்பியத்தை இன்றளவும் நம்மோடு நெருங்கியருக்க செய்தது உரையாசிரியர்களின் உரை திறமாகும். தொல்காப்பியத்திற்கு உரை எழுதியவர்களில் மூவர் குறிப்பிடத்தக்கவர்களார். தொல்காப்பிய உரையாசிரியர்கள் முன்வரும் முழுநூலுக்கு உரை எழுதியவரும் இளம்பூரணராவர். இவர் கி.பி.11ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவர். மூல நூலிலிருந்து அதிகம் விலகாமல் மூலத்தைப் பின்பற்றி தெளிவோடும் சுருக்கத்தோடும் தகுந்த எடுத்துக்காட்டுகளுடன் உரையை சிறப்புச் செய்துள்ளார் எழுத்துக்கு இளம்பூரணம் என்றுப் புகழப்படுகிறார். நச்சினார்க்கினியருரை எழுத்து, சொல் முழுமைக்கும், பொருளதிகாரத்தில் உவமையியல், மெய்ப்பாட்டியல், மரபியல் ஒழிந்த ஆறு இயல்களுக்கும் கிடைத்துள்ளது. இவரின் காலம் 14ஆம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியாகும்.

இலக்கணத்திற்கும் இலக்கியத்திற்கும் சிறந்த உரையைப் படைத்துள்ளார். நச்சினார்க்கினியர் உரையில் கல்வியின் பெருமிதத்தைக் காணமுடிகிறது. கம்பீரமான உரைநடை இவரின் சிறப்பாகும். சேனாவரையருரை சொல்லதிகாரம் ஒன்றிற்கே கிடைத்துள்ளது. சேனாவரையர் என்பது இவரின் பட்டப்பெயராகும். இவர் 13ஆம்

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

நூற்றாண்டினரவர். சொல்லுக்கு சேனாவரையம் எனப் போற்றப்படுகிறார். சேனாவரையருரை மிக கடினமான நடையை கொண்டதாகும். ஆங்காங்கே வடமொழி ஆளுமையும் காணக்கிடக்கிறது.

உரையாசிரியரின் உரைசிறப்பு

இளம்பூரணர்

தொல்காப்பியர் மேல் கொண்டிருந்த பேரன்பால் தொல்காப்பியரை முதனூலாசிரியராக கொண்டுள்ளார். முதனூலாசிரியரான தாமே ‘மொழிப’ என வேறொருவர் போலக் கூறி;யுள்ளதை இளம்பூரணர் வேறொரு நூலாகச் செய்யப்படும் நிலைமை நோக்கிப் போலும்ஷ என்று உரை தருகிறார் இதன்மூலம் தொல்காப்பியரை இளம்பூரணர் முதனூலாசிரியராக கொண்டதை அறியலாம்.

அளபிறந் துயிர்த்தலு மொற்றிசை நீடலும்
உளவென மொழிப விசையொடு சிவணிய
நரம்பின் மறைய வென்மனார் புலவர்[4]

கைக்கிளை என்பதை சிறுமை உறவு என கூறவிழையும் உரையாசிரியர் அதனை ‘கை’ என்பது சிறுமை பற்றியும், கிளை என்பது உறவு என்றவாறு கைக்கடை, க்iயெட, கைவாள், கைஒலியல், கைவாய்க்கால் என பெருமையில்லாதவற்றை வழங்குபவாகலின் என விளக்கியமைக்கிறார்.

கைக்கிளை முதலாகப் பெருந்திணை இறுவாய்
முற்படக் கிளந்த எழுதிணை என்ப[5]

கைக்கிளையை ஒருதலை வேட்கை எனவும், பெருந்திணையை ஒவ்வாக் கூட்டமாய் இன்பம் பயத்தல் அரிது எனவும் கூறுகிறார். இது நூலுடையார் காமத்துப் பயனின்மை உய்த்து உணர உதவுகிறது.

ஏறிய மடல்திறம் இளமை தீர்திறம்
தேறுதல் ஒழிந்த காமத் மிகுதிறம்
மிக்க காமத்து மடலொடு தொகைஇச்
செப்பிய நான்கும் பெருந்திணைக் குறிப்பே[6]

எனும் சூத்திரத்திற்கு உரை எழுதும் உரையாசிரியர் ஏறிய மடந்திறம் தலைமகற்கே உரித்தது. இருவரும் இளமைப் பருவம் நீங்கியவழி அறத்தின் மேல் மனநிகழ்தலன்றி காமத்தின் மனம் நிகழ்லாகிறது. முதனூலாசிரியரின் உடன்பாடுகளை எதிர்மறையாக்கி ஏறாமடற்றிறம், இளமை தீராத்திறம், தேறுதலொழிந்த காமத்து மிகாத்திறம் என தன் கருத்தை கூறுவது வியப்புற வைக்கிறது.

நச்சினார்க்கினியர்

பொய்யும் வழுவுந் தோன்றிய பின்னர்

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

ஐயர் யாத்தனர் கரணம் என்ப[7]

எனும் நூற்பாவில் ‘என்ப’ என்பது முதனூலாசிரியரான தொல்காப்பியர் அல்லர் அது வடநூலோரைக் கருதியது எனக் கூறுகிறார் மற்ற உரையாசிரியர்களின் போக்கையும் இவர் எதிரிடைப் போக்கில் மறுத்துரைக்கிறார். மேலும் களவு இன்றியும் கற்பு நிகழுமென உரை தருகிறார். கள ஒழுக்கம் இன்றியும் இயற்கைப் புணர்ச்சி வழி கற்பு நிகழும் என்கிறார். குறிஞ்சி நிலத்து தலைவி நால்வகை நிலத்து பூவையும் மாலையாக சூடினாள் என குறிப்பிடுகிறார் தொல்காப்பியர் இதனை நச்சினார்க்கினியர் மறுத்துரைக்கிறார். நிலம், பொழுது என்பவற்றுள் ஒற்றுமைப்படாத பூக்கள் ஓரிடத்தில் ஒரு நேரத்தில் பூத்திருந்தன என கூறுவது பொருந்தாது இதற்கு இளவேனிற்கண் வருதலிற் பொழுதொடு புள்ளும் மயங்கிற்று என கபிலரின் பாடலை உதாரணம் காட்டுகிறார் என கருத்து மூலநூலாசிரியரின் கருத்துக்கு மாறானது எனினும் திடமாக வெளிப்படுத்தியுள்ளார்.

எந்நில மருங்கிற் பூவும் புள்ளு
மந்நிலம் பொழுதொடு வாரா வாயினும்
வந்த நிலத்தின் பயத்த வாகும்[8]

நச்சினார்க்கினியர் புறத்திணைக்கு உரை எழுதும் போது பல வரலாற்றுச் செய்திகளை ஆங்காங்கே எடுத்துரைக்கிறார்.

எஞ்சா மண்ணசை வேந்தனை வேந்த
னஞ்சுதகத் தலைச்சென் றடல் குறித்தன்றே[9]

ஒருவன் மேற்சென்றுழி ஒரவன் எதிர் செல்லாது தன்மதிற்புறத்து வருந்துணையம் இருப்பின் அது உழிஞையாகும் இதை சேரமான் செல்வுழித் தகடூரிடை அதியமான் இருந்தனை ஒப்புநோக்குகின்றார்.

சேனாவரையனார்

தொல்காப்பியரின் இலக்கண நூற்பா இலக்கிய நயமுடையது என்பதை அறிந்த சேனாவரையர் அவ்விலக்கிய நயத்தை போற்றும் வகையில் ‘செய்யுளின்பம் நோக்கி அளபெழுந்து நின்றது’ என சிறப்பிக்கிறார்.

யாஅர் என்னும் வினாவின் கிளவி
அத்திணை மருங்கின் முப்பாற்கும் உரித்தே[10]

எனும் சூத்திரத்தில் ‘யாஅர்’ என்னும் வினாவின் கிளவி அளபெடுத்துள்ளது இது செய்யுளின் இன்பம் கருதியாகும் என உரை குறிப்பிடுகிறது. முதனூலாசிரியரின் சூத்திர சொல்லில் நுண்பொருள் கண்டு உரை எழுதுவதோடு முதனூலாசிரியரின் நயத்தை எடுத்துரைத்தலிலும் தனிதிறம் காட்டுவது இவரின் உரை சிறப்பாகும். செய்யுள் வழக்கில் இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் என்ற நான்கும் இடம்பெறக்கூடும் என தொல்காப்பியம் குறிப்பிடுகிறது. இதற்கு உரை எழுதும் சேனாவரையம் திசைச் சொல்லுள் ஏனைச் சொல்லும்

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

உளவேனும் செய்யுட்குரித்தாய் வருவது பெயர் சொல்லாகும். வடசொல்லுள்ளும் பெயரல்லது செய்யுட்குரியவாய் வாரா ஆதலால் சான்றோர் செய்யுள் நோக்கி கண்டு கொள்க என பணிக்கிறார். செய்யுளில் மொழிகலப்பு ஏற்படுவதில் உரையாசிரியருக்கு விருப்பமில்லை என்பது வெளிப்படையாகிறது.

இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொல்லென்று
அனைத்தே செய்யுள் ஈட்டச் சொல்லே

மேலும் தொல்காப்பியர் வடநூலோடு மாறு கொள்ளாமல் நூலியற்றியவர் என்பதை எடுத்த முடிவாகக் கொண்டு உரை வரைந்தவர் சேனாவரையராவார்.

தொகுப்புரை

தொல்காப்பியத்திற்கு உரை எழுதியவர்களில் இளம்பூரணர், சேனாவரையர், நச்சினார்க்கினியர் என்ற மூவரும் குறிப்பிடத்தகுந்தவர். இம்மூவரும் சமயத்தில் ஈடுபாடுவுடையவர்கள், வெவ்வேறு காலத்தினராவர். மூவரும் முதனூலாசிரியர் கருத்தை ஏற்பது போன்றே பல இடங்களில் மறுத்தும் உரைக்கின்றனர். மேலும் தங்கள் கருத்தை தயங்கியும், கம்பீரமாகவும் எடுத்தாளுகின்றனர்.

முடிவுரை

இலக்கியம், இலக்கணம், உரை என்ற மூன்றும் மொழிப்புலத்தை மையமாகக் கொண்ட தளங்களாகும். தொல்காப்பியத்திற்கு உரைகண்ட பெருமக்கள் மூலநூல் அழிந்துபடாமல் ஒளி விளக்கம் செய்து காத்ததுடன் தங்களின் உரை திறன், தனிநடை, தனிச்சிறப்பு மூலம் அழியா வாழ்வு பெற்றுத் திகழ்கின்றனர்.

துணைநூற்பட்டியல்

[1] இளம்பூரணனார், தொல்காப்பியம் பொருளதிகாரம், இளம்பூரணனார் உரை, சாரதா பதிப்பகம், முதற்பதிப்பு – மே 2005.
[2] நன்னூல் எழுத்ததிகாரம், காண்டிகையுரை, சாரதா பதிப்பகம், சென்னை – 600 014,
[3] கோவிந்தராச முதலியார்- அகப்பொருள் விளக்கம், பழைய உரையுடன், தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை – 18, முதற்பதிப்பு – ஜனவரி 1948.
[4] சிதம்பரம் பிள்ளை (தொ.ஆ). தொல்காப்பியம் எழுத்ததிகாரம், முதற்பதிப்பு – 1928,
[5] தொல்காப்பியம் பொருளதிகாரம். இளம்பூரணனார் உரை, சாரதா பதிப்பகம், சென்னை – 600 005, முதற்பதிப்பு- மே 2005.
[6] தாமோதரம் பிள்ளை (ப.ஆ). தொல்காப்பியம் பொருளதிகாரம், நச்சினார்க்கினியர் உரை, முதற்பதிப்பு – 1885, தொல்காப்பியம் (சொல்லதிகாரம்), சேனாவரையனார் உரை, சாரதா பதிப்பகம், சென்னை – 600 014.

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

தமிழில் இக்கட்டுரையை இவ்வாறு மேற்கோளிடுங்கள்:

மேகலா & சுந்தரம். "தொல்காப்பியம் மூவருரையும் உரைசிறப்பும்." *தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்,* தொகுதி 3, சிற.இதழ் 2, தொகுதி 2, *திசம்பர்* 2020, பக். 311-316. டிஒஐ: **10.38067/ijtlls.2020.spl.v03i02v2.046**

Cite this Article in English (*MLA 8 Style*) as:
Mekala & Sundaram. "The Explicatory Notes of the Trio and their Textual Excellence." *International Journal of Tamil Language and Literary Studies,* Vol. 3: Special Issue - 2, Vol. 2, December 2020, pp. 311-316. DOI: **10.38067/ijtlls.2020.spl.v03i02v2.046**

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி /Author Contribution Statement: இல்லை /NIL

கட்டுரையாளர் நன்றியுரை /Author Acknowledgement: இல்லை /Nil

கட்டுரையாளர் உறுதிமொழி/Author Declaration: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்./I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal

E-ISSN: 2581-7140 **UGC CARE Listed Journal**
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 **Available at:** www.ijtlls.com

உரையாசிரியர்களின் பார்வையில் நோக்குக் கோட்பாடு

Perception in the View Point of the Secondary Commentators

ர.மேனகா, முனைவர்பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, பாரதியார் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்.
R.Menaga, Ph.D Research Scholar, Dept Of Tamil, Bharathiar University, Coimbatore.
ORCiD: https://orcid.org/0000-0002-5579-5635
முனைவர் ச.தங்கமணி, உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, பாரதியார் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்.
Dr S.Thangamani, Assistant Professor, Dept Of Tamil, Bharathiar University Coimbatore.
ORCiD: https://orcid.org/0000-0002-7968-6441
DOI: 10.38067/ijtlls.2020.spl.v03i02v2.047

Abstract

The "Tholkappiyam" is oldest grammar book in Tamil literature insisting the rules of language, life and tradition. "Tholkapiyam" consists of three sections. They are 'letter, word and meaning' (Ezhuthu, Sol, Porul) respectively. Tholkappiyar, the earliest grammarian of Tamil had utilized a peculiar style in his writings. 'Nokku or Perception' is a literary theory, expounded in a single maximum with two lines by Tholkappiyar in an astute way. A great theory has been given in a nutshell so briefly and concisely for better understanding. From a small unit of a poem to its complete line (or whole), the technique employed in it is called 'nokku'. This article examines the need of perception, the interpretation of the narrators, and the interpretation of the twentieth century narrators.

Keywords: Perception, View Point, Secondary Commentators

பழந்தமிழ் மரபுகளை உணர்த்தும் பழமையான இலக்கண நூலாகத் திகழும் தொல்காப்பியம் எழுத்து, சொல், பொருள் என்னும் மூன்று பிரிவுகளை உள்ளடக்கியதாகும். எழுத்து என்ற பெரும்பிரிவில் தனித்துநின்ற எழுத்து, எழுத்துக்களின் பிறப்பு அவை புணர்மொழியில் பெரும் மாற்றங்கள் போன்றவை கூறப்படுகின்றன. சொல் பற்றிய பிரிவில் சொற்கள் தொடர்ந்து தொடர்களாக அமையும் முறை, தமிழுக்குச் சிறப்பாக அமையும் அல்வழி வேற்றுமைத் தொடர்களின் இலக்கணம், பெயர், வினை, இடை, உரிச்சொற்களின் வேவ்வேறு வகையான விளக்கங்கள் போன்றவை பேசப்படுகின்றன. பொருள் இலக்கணம் இலக்கிய ஆக்கம் பற்றியதாகும். அதில் அகத்திணை புறத்திணை மரபுகள், இலக்கிய வகைமைகள், இலக்கியத்திற்கு அழகு சேர்க்கும் உவமை, மெய்ப்பாடு, அணிகள், இலக்கியக் கொள்கைகள் போன்றவை அக்கால மரபுப்படி எடுத்தியம்பப்படுகின்றன. பொருளதிகாரம் தமிழ் இலக்கியம் ஆக்கப்படும் முறையைக் கூறுகின்றது என்பதை, அதன் உள்ளடக்கத்தினைக் கண்டு அறியமுடிகின்றது.

தமிழின் மிகப் பழமையான கவிதையியல் கொள்கை தமிழ்ச் செய்யுள் படைப்புகளை அகம், புறம் என்ற அமைப்பிற்குள் அடக்கிப் பார்க்கின்றது. இதன் அடிப்படையில் தொல்காப்பியப் பொருளதிகாரம் தமிழின் இலக்கியக் கோட்பாடுகளை வரையறுக்கும் பகுதி என்றே கொள்ள வேண்டும். ஏனெனில் பொருளதிகாரத்தில் தமிழ் இலக்கியத்தின் பொருள்

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

இன்னவை என்பதும், அதன் இலக்கியம் இவ்வாறு உருவாக்கப்படவேண்டும் என்பதும், அது இன்ன வகைமையது என்பதும், அதன் எடுத்துரைப்பு மரபு இது என்பதும் மிக தெளிவாக அறியமுடிகின்றது. அவ்வகையில் பொருளதிகாரம் வரையறுக்கும் இலக்கியக் கோட்பாட்டுள் ஒன்று 'நோக்கு' என்பதாகும். அதுபற்றிய விளக்கமும், உரையாசிரியர்களின் விளக்கமும், இருபதாம் நூற்றாண்டு உரையாசிரியர்களின் விளக்கம் ஆகியவற்றை ஆய்வதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

நோக்குக் கோட்பாடு

தொல்காப்பியம், செய்யுளியலின் தொகைச் சூத்திரத்தில் நோக்கு என்பதைப் பத்தாவது உறுப்பாக வைத்துள்ளது. இவ்வுறுப்பு வடிவம், பொருள் முதலியவை சார்ந்ததாக எண்ணப்படுகின்றது. மாத்திரை, எழுத்து, அசை, சீர் ஆகியவற்றால் ஆன அடியையும் அடிகளுக்குள் அமையும் யாப்பு, தொடை முதலியவற்றையும் எடுத்துரைத்தபின், நோக்கினை விளக்கியுள்ளார். தொல்காப்பியத்தினைத் தவிரப் பிற்கால இலக்கண நூல்கள் நோக்கின் இலக்கணத்தினை யாப்பு அல்லது செய்யுள் இலக்கணத்தில் எடுத்துரைக்கவில்லை என்று விளக்கப்பட்டுள்ளது. **(தமிழண்ணல், தொல்காப்பியரின் இலக்கியக் கொள்கைகள், பக்.239)**

'தொல்காப்பியம் மட்டுமே கூறுகின்ற உறுப்பாக இந்நோக்கு அமைகின்றது. இந்நோக்கு, மாத்திரை, எழுத்து, அசை, சீர், அடி என்ற ஐவகைக் கூறுகளும் இணைந்து உருவாகும் ஒரு இலக்கியச் சிறப்பு என்று கொள்வதாகத் அமைந்துள்ளது." **(ச.வே.சுப்பிரமணியன், இலக்கணத்தொகை யாப்பு – பாட்டியல், ப.85)**

செய்யுளில் மாத்திரை முதல் அடிவரை உள்ள அனைத்து உறுப்புகளையும், நோக்குதல் 'நோக்கு" எனப்படும். இதனை,

மாத்திரை முதலா அடிநிலை காறும்
நோக்குதற் காரணம் நோக்கெனப் படுமே (தொல். செய்யுள். நு. 1361)

என்னும் நூற்பா எடுத்துரைக்கின்றது. **(செ.வை.சண்முகம், பொருளிலக்கணக் கோட்பாடு தொல்காப்பியம், யாப்பும் நோக்கும், ப.115)** தொல்காப்பியம், இந்நூற்பாவினைத் தவிர ஏனைய இடங்களில் நோக்கு பற்றிக் குறிப்பிடவில்லை. செய்யுளில் புலவர்கள் கொடுத்துள்ள செய்திகளை அச்செய்யுளின் மாத்திரை, எழுத்து, அசை, சீர், அடி முதலிய உறுப்புக்களை நோக்கும்போதுதான் நுட்பமாக உணரமுடியும் என்பதை நோக்கு என்னும் உறுப்பு உணர்த்துகின்றது.

உரையாசிரியர்களின் விளக்கம்

இளம்பூரணர், பேராசிரியர், நச்சினார்க்கினியர் ஆகிய மூன்று உரையாசிரியர்களும் நோக்கு சூத்திரத்தை விளக்கியுள்ளார்கள். தற்காலத்தில் வெள்ளைவாரணர், வ.சுப.மாணிக்கனார், தமிழண்ணல் ஆகியவர்களும் நோக்கு பற்றி எழுதியுள்ளார்கள். இவர்களில் தமிழண்ணலே விரிவாக ஆராய்ந்து தனி நூலே எழுதியுள்ளார்.

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

இளம்பூரணர்

நூற்பாவிற்கு உரைவகுத்த இளம்பூரணர், 'மாத்திரை முதலாக அடிநிலையளவும் நோக்குதலாகிய கருவி நோக்கென்று சொல்லப்படும்' எனக் குறிப்பிட்டுள்ளார். யாதானும் ஒன்றைத் தொடுக்குங் காலத்துக் கருதிய பொருளை முடிக்குங்காறும் பிறிதுநோக்காது அதுதன்னையே நோக்கி நிற்கு நிலை என விளக்கியுள்ளார். நோக்கினை ஓரடியில் நோக்குதல், பலவடியில் நோக்குதல் எனச் சுட்டியுள்ளார். மேலும் அந்நோக்கு, ஒரு நோக்காக ஓடுதல், பலநோக்காக ஓடுதல், இடையிட்டு நோக்குதல் என மூன்று வகைப்படும் என்பதை தம் உரையில் மிக விரிவாக விளக்கியுள்ளார். **(தமிழண்ணல், தொல்காப்பியரின் இலக்கியக் கொள்கைகள். பாகம் -1, ப.242)**

பேராசிரியர்

பேராசிரியர் தொகைச் சூத்திரத்தின் உரையில், 'நோக்கென்பது மாத்திரை முதலாகிய உறுப்புக்களைக் கேட்டோர்க்கு நோக்குப்படச் செய்தல்' எனக் குறிப்பிட்டு, நோக்கினை உணர்த்தும் நூற்பாவின் உரையில், 'மாத்திரையும், எழுத்தும், அசைநிலையும், சீரும் முதலாக அடி நிரம்புந் துணையும், நோக்குடையவாகச் செய்தல் வன்மையாற் பெறப்படுவது நோக்கென்னும் உறுப்பாவது' எனக் குறிப்பிடுவதனால் அவர் ஒவ்வொரு தனியுறுப்பின்கண்ணும் நோக்கு அமையுமெனக் கருதியுள்ளார் என்பதை அவர் உரையின் மூலம் அறியமுடிகின்றது. மேலும், கேட்டார் மறித்து நோக்கிப் பயன்கொள்ளுங் கருவியை நோக்குதற் காரணமென்றானென்பது. 'அடிநிலை காறும்' என்பது, ஓரடிக்கண்ணேயன்றியுஞ் செய்யுள் வந்த அடி எத்துணையாயினும் அவை முடிகாறு மென்றவாறு எனக் குறிப்பிட்டுள்ளார். செய்யுளில் அமைந்துள்ள அடிகள் முழுவதையும் நோக்குவது என்று விளக்கியுள்ளார். 'அடிநிலைகாறும்' என்பது செய்யுள் முழுவதையும் குறிக்கும். எனவே செய்யுள் ஓரடியில் அமைந்தாலும் ஈரடியில் அமைந்தாலும் பல்வேறு அடிகளில் அமைந்தாலும் அவற்றுள் நோக்கு அமையும் என்பதை அறியமுடிகின்றது. **(மேலது, ப.244)**

நச்சினார்க்கினியர்

நச்சினார்க்கினியரின் உரைப்பகுதி பேராசிரியரைப் பின்பற்றியதாக அமைந்திருக்கின்றது. செய்யுளியலின் தொகைச் சூத்திரத்தின் உரைப்பகுதியில், நோக்கென்றது மாத்திரை முதலிய உறுப்புக்களையுடைத்தாய்க் கேட்போர்க்கு நோக்குதல்படச் செய்தலேயாகும். நோக்குதல் - பயன்கோடல் எனக் குறிப்பிட்டுள்ளார். நோக்கின் பயன் செய்யுளைப் படித்து அனுபவித்தல் - உணர்தல் என்னும் பொருண்மையில் உரைவகுத்துள்ளார். நோக்கினை விளக்கும் நூற்பாவில் உள்ள 'அடிநிலைகாறும்' என்பதனை 'அடிநிறைகாறும்' எனப் பாடங்கொண்டுள்ளார். மாத்திரை முதலிய உறுப்புக்கொண்ட அடிநிரம்புந் துணையும் கேட்டோர் மீண்டு நோக்கிப் பயன் கோடலையுடையவாகச் செய்யும்

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

கருவியை நோக்கு என்று பெயர் கூறப்படும். நோக்குதல் என்பதனைப் பயன்கோடல் என்று விளக்கியுள்ளார். **(மேலது, ப.252)**

வெள்ளைவாரணர்

'ஒரு செய்யுளைக் கேட்டோர் அதன் கண் மாத்திரை முதலாக அடி நிரம்பும் துணையும் பாடற்பகுதியினை மீண்டும் மீண்டும் கூர்ந்து நோக்கி அப்பாடலின் கண் அமைந்த பொருள் நலங்களை உய்த்துணர்தற்குக் கருவியாயதோர் உறுப்பு நோக்கு' என கூறியுள்ளார்.

வ.சு.மாணிக்கனார்

தொல்காப்பியரின் "நோக்குக் கோட்பாடு பிற்கால இலக்கணங்களால் எடுத்தியம்பபடாத இலக்கிய ஆக்கத்திற்கானத் திறனாய்வுக் கோட்பாடு தான் நோக்கு இது உலக இலக்கியக் கொள்கையுடன் ஒப்புநோக்கவுள்ள தமிழ்முறைத் திறனாய்வு" என்கிறார்.

தமிழண்ணல்

நோக்கு என்பதனை மாத்திரை முதல் அனைத்துச் செய்யுள் உறுப்புக்களும் பயன்படுமாறு செய்யுள் அமைத்தலைக் குறிக்கும் என்பதைத் தமிழண்ணல்,

நோக்கு என்பது மறித்து நோக்குதல். ஒரு பாடலுள் ஒரு மாத்திரை முதல் அனைத்தையும் பயன்படுமாறு அமைப்பதையே இது குறிக்கிறது. ஒரு பாடலுள் ஒரு மாத்திரையையோ. அசையையோ, சீரோ நீக்கினாலும் மாற்றினாலும் பொருள் கெட்டுவிடும் என்கிற அளவிற்கு ஒவ்வொன்றையும் பொருள் கருதிப் பொருந்திய இடத்தில் வேண்டிய அளவு அமைத்துப் பாட்டுப் பொருளைச் சிறக்கச் செய்வதே நோக்காகும். 'இஃது ஏன்?, 'இஃது ஏன்?' என்று மறித்து மறித்து நோக்கினும், காரணம் காட்டி இது தேவையே என அதன் இன்றியமையாமையை உணர நிற்பதே நோக்காகும் எனக் குறிப்பிட்டுள்ளார். **(தமிழண்ணல், சங்க இலக்கிய ஒப்பீடு, இலக்கியக் கொள்கைகள், ப.96)**

நோக்கு என்பது குறித்த உரையாசிரியர்களின் கருத்துக்களை ஆராய்ந்து, நோக்கு என்பதற்குத் திறனாய்வு என்னும் பொருளைக் குறிப்பிட்டுள்ளார். மேலும், 'நோக்கு' என்ற இலக்கியக் கலைச்சொல்லுக்குக் 'குறிப்பை அறிதல்', 'திறனை ஆராய்தல்', 'ஒப்பிட்டுப் பார்த்தல்' என்றும் பொருள்கொள்ள இடமுளது என்று நோக்கின் பொருளைக் குறிப்பிட்டிருப்பது எண்ணத்தக்கதாகும். **(தமிழண்ணல், தொல்காப்பியரின் இலக்கியக் கொள்கைகள், ப.241)** தொல்காப்பியம், அதன் உரைவிளக்கங்களிலிருந்து நோக்கு என்பதனைப் பின்வருமாறு வரிசைப்படுத்தியுள்ளார்.

- நோக்கு அமைவதே இலக்கியமாகும் (செய்யுளாகும்). காப்பியம் அல்லது பாடல் முழுவதும் 'சொல்ல வந்த கருத்துப் பிறிது நோக்காது அது தன்னையே நோக்கி நிற்பது. காப்பியமாயினும் நெடும் பாடலாயினும் சிறு தனிப்பாடலாயினும், அடிக்கருத்து ஒன்றையே அதன் அனைத்து உறுப்புக்களும் - அடைமொழி முதல் நோக்கி நிற்க வேண்டும்.

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

❖ பாடலின் வினைமுடிபு, நடைப் போக்காகிய புறக் கட்டமைப்பையும் வடிவமும் பொருளும் ஆகியன ஒருங்கிணையும் அகக்கட்டமைப்பையும் பற்றியது.

இலக்கிய நோக்கு, உறுப்பு நோக்கு எனவும் பகுக்கலாம். இவற்றுள் இலக்கிய நோக்கு என்பதே திறனாய்வாகும். (மேலது, ப. 255) நோக்கு என்பதைச் செவ்வியல் பண்பகளில் ஒன்றெனச் சுட்டிக்காட்டிப் பின்வருமாறு அப்பண்பினை விளக்கியுள்ளார்.

செவ்வியல் மிகச் சிறந்த, கலைநுட்பம் வாய்ந்த, பிறர் பலரும் அவாவிப் பின்பற்ற வேண்டும் என்று எண்ணும்படியான, தரமிக்க இலக்கியங்களைக் குறிக்கிறதெனின் 'நோக்கு' அமையும் இலக்கியமே அங்ஙனம் அமைதல் வேண்டும். மேலை நாட்டுச் செவ்வியலுக்கு நாடக வொருமைகள், பொன்மையுணர்வு, விழுப்பக் கோட்பாடு போல்வன பல அடிப்படையாகின்றனவெனில் தமிழில் அவ்விலக்கியப் பண்பு வளர்ச்சிக்கு நோக்குக் கோட்பாடு அடித்தளமாகும் எனலாம்.

தமிழில் வடிவமும் அதில் அதற்கேற்ற பொருளும் முழுவதும் ஒத்திசைவதை 'யாப்பு' என்று தொல்காப்பியர் சுட்டுகிறார். அவ்வடிவத்தின் உயிர்நாடியாகச் சொல்லவரும் அடிக்கருத்து அமைந்துள்ளதா என மறித்து நோக்கிப் பயன்கோடலை – அஃதாவது பாடலைப் படித்துக் கருத்துலகுகளைக் கண்டு அதில் அமைந்துள்ள கட்டமைப்பைக் கண்டறிவதையும் அதற்கு அப்பாடலிலுள்ள ஒவ்வோருறுப்பும் உதவுவதை ஆய்ந்தறிவதையும் 'நோக்கு" எனத் தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார். **(மேலது, ப.264)** இவை செவ்வியல் பண்புகளேயாம்.

நாடக ஒருமைகளில் கூறப்படும் செயலொருமையும் இந்நோக்கினால் வற்புறுத்தப்படுகிறது. இளம்பூரணர் 'யாதானும் ஒன்றைத் தொடுக்குங்காலத்துக் கருதிய பொருளை முடிக்குங்காறும் பிறிது நோக்காது அது தன்னையோ நோக்கிநிற்கும் நிலை' என விளக்குவது இவண் கருதத்தக்கதாகும். மேற்குறித்த கருத்துக் கட்டமைப்பும் இச்செயலொருமையால் விளைவதேயாம். பத்தரை மாற்றுத் தங்கம் செவ்வியல் என்றால் அது பத்தரைமாற்றா என உரைத்துப்பார்ப்பதை 'நோக்கு' எனலாம். எனவே தமிழர் கண்ட செவ்வியற் சிந்தனையின் விளைவே நோக்கு என்பதில் எட்டுணையும் ஐயமின்று. என நோக்கின் பண்புகளை எடுத்துரைத்திருப்பது எண்ணத்தக்கதாகும். மேலும் தமிழ் இலக்கியத்தின செம்மைக்கும் சிறப்பிற்கும் இந்நோக்குக் கோட்பாடே காரணமெனவும் இக்கோட்பாட்டைப் பிரித்து விளக்கவில்லை என்றாலும் அதனால் அமைந்த இலக்கியங்களை மிகுதியாகப் படைத்துக்காட்டி அதனைத் தமிழர்கள் உயிருள்ளதாக்கியுள்ளனர் எனவும் விரிவாக எடுத்துரைத்துள்ளார். **(தமிழண்ணல், சங்க இலக்கிய ஒப்பீடு, இலக்கியக் கொள்கைகள், ப.100)**

நோக்கினை அவுசித்தியக் கோட்பாட்டோடு இணைத்து நோக்கியுள்ளார். அவுசித்தியம் என்பது வடமொழிக் கோட்பாடாகும். 'பொருத்தமுடைமை' என்பது இதன் பொருள். நோக்கில் மாத்திரை முதல் அடி வரையிலுள்ளவற்றைப் பார்ப்பது போன்று இலக்கியக் கூறுகள்

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

ஒவ்வொன்றும் பொருத்தமுற அமைவதே அவுசித்தியம் என்று விளக்கியுள்ளார். ஒரு பாடலில் உள்ள உறுப்புக்களை, திறனை, அணியை ஆராய்கிறது. இரசத்தை வினைவிப்பதே அவுசித்தியத்தின் குறிக்கோளென விளக்கியுள்ளார். இது பிற கோட்பாடுகள் அனைத்தும் 'பொருத்தமுற விளக்கியுள்ளார். இது பிற கோட்பாடுகள் அனைத்தும் 'பொருத்தமுற அமைவன பற்றியது' அதனால் கோட்பாடுகளின் கோட்பாடு என்பார். நோக்கும் பிற உறுப்புக்கள் எல்லாம் காரண காரிய இயைபுடன் அமைவது பற்றியது: அதனால் கோட்பாடுகின் கோட்பாடு எனக் குறிப்பிட்டுள்ளார். அவுசித்தியத்தின் மூலம் ஓர் இலக்கியம் முழுவதும் செம்மையுடன் படைக்கப்பட்டுள்ள பாங்கைக் கண்டு கொள்ளலாம்: நோக்கும் படைப்புச் செம்மையை உணர்த்துவதாகும். எனவே நோக்குடன் அவுசித்தியக் கோட்பாட்டை இணைத்து நோக்கியுள்ளார்.

சொல் நோக்கு, சீர் நோக்கு, மெய்ப்பாட்டு நோக்கு முதலிய பல்வேறு கோணங்களில் நோக்கினை ஆராய்ந்து அதனைத் தனியொரு இலக்கியக் கோட்பாட்டாகத் தமிழண்ணல் எண்ணியுள்ளார்.

தொகுப்புரை

தொல்காப்பியரின் நோக்குக்கோட்பாட்டிற்கு உரையாசிரியர்களான இளம்பூரணர், பேராசிரியர், நச்சினார்க்கினியர், வெள்ளைவாரணர், வ.சுப.மாணிக்கம், தமிழண்ணல் போன்றவர்களின் உரை விளக்கத்திலிருந்து கருத்துக்கள் பல அறியமுடிகின்றது. மேலும் 'நோக்கு' என்பது இலக்கியக் கலைச் சொல்லாகக் கருதப்படுகிறது, இலக்கிய நயத்தை மட்டும் சொல்லாது அதன் திறனை வெளிப்படுத்தும் ஒரு திறனாய்வுக் கொள்கையாகவும் நோக்குக் காணப்படுகின்றது. படைப்பாளனின் படைப்புத்திறனை வெளிக்காட்டும் தறனாய்வுக் கலையாக நோக்குக் கோட்பாடு விளங்குகிறது. ஒரு படைப்பு எவ்வாறு படைக்க வேண்டும், பாடலின் கருத்து எவ்வாறு பிறிது நோக்காது மையக்கருத்தை உணர்த்தும் விதமாக அமைய வேண்டும் என்றும், இந்நோக்குக் கோட்பாடு விளக்குகிறது. இவ்வாறு 'நோக்கு' இன்றி நல்படைப்பு அல்லது செவ்வியல் படைப்பு அமையாது நல்ல தரமான இலக்கியப் படைப்புக்களுக்கு இந்நோக்கு கோட்பாடு இன்றியமையாததாக விளங்குகிறது என்பதனை இக்கட்டுரையின் மூலம் அறியமுடிகின்றது.

துணைநூற்பட்டியல்

1. சிவலிங்கனார்.ஆ, தொல்காப்பியம் உரைவளம், பொருளதிகாரம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், தரமணி, சென்னை – 600113
2. முனைவர் செ.வை.சண்முகம், பொருளிலக்கணக் கோட்பாடு, தொல்காப்பியம் தொகுதி – 2, (யாப்பும் நோக்கும்), மெய்யப்பன் பதிப்பகம் 53, புதுத்தெரு, சிதம்பரம் - 608001

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

3. தமிழண்ணல், சங்க இலக்கிய ஒப்பீடு இலக்கியக் கொள்கைகள், மீனாட்சி புத்தக நிலையம், மயூரா வளாகம் 48, தாளப்ப முதலி தெரு, மதுரை – 625001
4. தமிழண்ணல், தொல்காப்பியரின் இலக்கியக் கொள்கைகள், செல்லப்பா பதிப்பகம், மயூரா வளாகம் 48, தானப்ப முதலி தெரு, மதுரை – 625001
5. விஜயலட்சுமி.த, தமிழ் இலக்கியக் கோட்பாடு, பூவரசி பதிப்பகம், சாலிகிராமம், சென்னை.

தமிழில் இக்கட்டுரையை இவ்வாறு மேற்கோளிடுங்கள்:

மேனகா & தங்கமணி. "உரையாசிரியர்களின் பார்வையில் நோக்குக் கோட்பாடு." *தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்*, தொகுதி 3, சிற.இதழ் 2, தொகுதி 2, *திசம்பர்* 2020, பக். 317-323. டிஓஐ: **10.38067/ijtlls.2020.spl.v03i02v2.047**

Cite this Article in English (*MLA 8 Style*) as:
Menaga & Thangamani. "Perception in the View Point of the Secondary Commentators'." *International Journal of Tamil Language and Literary Studies*, Vol. 3: Special Issue - 2, Vol. 2, December 2020, pp. 317-323. DOI: **10.38067/ijtlls.2020.spl.v03i02v2.047**

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி /Author Contribution Statement: இல்லை /NIL

கட்டுரையாளர் நன்றியுரை /Author Acknowledgement: இல்லை /Nil

கட்டுரையாளர் உறுதிமொழி/Author Declaration: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்./I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் அரையாண்டு பன்னாட்டு ஆய்விதழ்

International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

சொல்லதிகார முன்னுரைவழி தொல்காப்பிய உரையாசிரியர்களின் தொடரியல் நோக்கு

A Syntactic Perspective of the Commentators of "Tolkāppiyam" with the Preface of *Collatikaram*

தி. மோகன்ராஜ், முனைவர்ப் பட்ட ஆய்வாளர், இலக்கியத்துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம்,, தஞ்சாவூர்.
T. Mohanraj, Research Scholar, Department of Literature, Tamil University, Thanjavur.
ORCiD: https://orcid.org/0000-0003-1942-2716
முனைவர் க. திலகவதி, இணைப் பேராசிரியர், இலக்கியத்துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்
Dr. K. Thilagavathy, Associate Professor, Department of Literature, Tamil University, Thanjavur.
ORCiD: https://orcid.org/0000-0002-1329-4103
DOI: 10.38067/ijtlls.2020.spl.v03i02v2.048

Abstract

The second chapter of "Tolkāppiyam" is called collatikaram. It mainly explains not only the morphological structure of Tamil words but also the syntactic structure of the language. The classic and modern Commentators of collatikaram describe in detail about the syntactic explanations at appropriate places. At the beginning of kiLaviyakkam, the first segment in collatikaram, commentators explain about syntax at various perspectives. This research article discusses in detail on the difference in perspectives that are to be found in the commentators' commentaries. There are three types of perspectives that can be seen in their commentaries, namely Application Perspective, Philosophical Perspective and Structural Perspective.

Keywords: Syntactic Perspective, Commentators, *Tolkāppiyam*, *Collatikaram*

முன்னுரை

சொற்கள் ஒன்றோடொன்று தொடர்ந்துவந்து பொருள் தரும் அமைப்புத் தொடர் எனப்படும். ஒரு மொழியில் தொடர்கள் உருவாகும் அடிப்படைகள், தொடர்களின் அமைப்பு, தொடர்களின் வகைகள் போன்றவற்றை அறிவியல் முறையில் ஆய்வுசெய்யும் அறிவுப்புலம் தொடரியல் எனப்படுகிறது. தொகைநிலைத் தொடர்கள் (Compound Nouns), தொகாநிலைத் தொடர்கள் (Phrases), கிளவியம் (Clause), வாக்கியம் (Sentence) ஆகிய யாவும் ஒரு சொல்லைத் தொடர்ந்து மற்றொரு சொல்லைப் பெற்றுப் பொருள் தரும் அமைப்புகளாதலான் இவை யாவும் தொடரியலின் ஆய்வுப் பொருள்களாம். எனவே, தொடரியல் என்பது தொகைச்சொற்கள்(சண்முகம் செ.வை., தொல்காப்பியத் தொடரியல், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, ப.150, 2004) முதலாக முழுமைபெற்ற வாக்கியம் வரையிலான தொடர் அமைப்புகள் யாவற்றையும் உள்ளடக்கிய ஆய்வுப்புலம் எனலாம்.

மொழியியலில் நோம் சோம்ஸ்கி மாற்றிலக்கணக் கோட்பாட்டினை அறிமுகப்படுத்திய பின்னர் உலகளவில் மொழி ஆய்வுகளில் தொடரமைப்பு ஆய்வு முதன்மைபெற்றது(சண்முகம் செ.வை., தொல்காப்பியத் தொடரியல், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, ப.1, 2004). மொழிகளின் தொடரமைப்பினை மையப்படுத்திய ஆய்வுகள் பெருகின. தமிழிலும் தெ.பொ.மீ., ச.அகத்தியலிங்கம், இ.அண்ணாமலை, கி.அரங்கன், இரா.கோதண்டராமன், செ.வை.சண்முகம், செ.சண்முகம் போன்ற அறிஞர்கள் தமிழ்மொழியின் தொடரியல்

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

அமைப்பினைக் குறித்து விரிவான ஆய்வுகளை மேற்கொண்டனர். எனினும், தொடரியல் குறித்த ஆய்வு தமிழுக்குப் புதிதன்று. தொல்காப்பியம் தொடரியல் குறித்த பல்வேறு விதிகளை வகுத்துள்ளது (அண்ணாமலை சுப.(க), 'தொல்காப்பியரின் தொடரியற் கொள்கை', தொல்காப்பிய மொழியியல், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலை நகர், ப.321, 1972). சொல்லதிகாரத்தின் கிளவியாக்கம், வேற்றுமையியல், வேற்றுமை மயங்கியல், எச்சவியல், வினையியலின் பிற்பகுதி போன்ற இடங்களில் தொடரியல் கருத்துகள், குறிப்பாக மாற்றிலக்கணக் கருத்துகள் இடம்பெற்றுள்ளன. சான்றாக, பெயரெஞ்சு கிளவி(சொல்.229) பற்றிய நூற்பாவில் மாற்றிலக்கணம் விளக்கும் புதைநிலை, புறநிலை பற்றிய கருத்தியல் அமைத்திருப்பதைக் காணலாம். மேலும், எழுத்ததிகாரத்தில் விளக்கப்படும் புணர்ச்சி விதிகள் யாவும் வேற்றுமை, அல்வழி என்னும் தொடரியல் அமைப்பினை அடிப்படையாகக் கொண்டே அமைந்துள்ளன. தொல்காப்பியம் இலக்கண நூல் ஆதலின் ஆழமான மற்றும் விரிவான விளக்கங்களைக்கொண்ட மொழியின் தொடரமைப்பினை நூற்பா அளவில் சுருக்கமாகவே குறித்துச் சென்றுள்ளது. அந்நூற்பாக்களுக்கு உரை வரைந்த உரையாசிரியர்களே தமிழின் தொடரியல் பற்றி விரிவாக ஆராய்ந்து விளக்கியும் விவாதப் பொருளாக்கியும் பல்வேறு கருத்துகளைப் பதிவுசெய்துள்ளார்கள். அவர்கள், தொல்காப்பியத்தின் சொல்லதிகாரம் தனிச்சொற்களின் இலக்கணம் மட்டுமன்றித் தொடர் அமைப்புகளைப் பற்றியும் விளக்குகிறது என்னும் நோக்கில் அதனை அணுகிப் பலவகையான தொடரியல் கருத்துகளை ஆங்காங்கு எடுத்துரைத்துள்ளனர். அவ்வகையில், கிளவியாக்கத்தின் முதல் நூற்பாவின் உரைக்கு முன்னர் உரையாசிரியர்கள் சொல்லதிகாரத்தின் அமைப்பினைக் குறித்துக் கூறியுள்ள கருத்துகளில் தொடரமைப்பினைப் பற்றிய விளக்கமும் இடம்பெற்றுள்ளது. தொல்காப்பியச் சொல்லதிகாரத்தின் உரையாசிரியர்களான சேனாவரையர், தெய்வச்சிலையார், நச்சினார்க்கினியர் ஆகியோர் உரைகளின்வழி உரையாசிரியர்கள் மூன்று விதமான தொடரியல் நோக்குகளைக் கொண்டிருந்தனர் என்பதை அறியமுடிகிறது. அவை,

1. பயன்பாட்டு நோக்கு
2. மெய்யியல் நோக்கு
3. அமைப்புமுறை நோக்கு

என்பன. இம்மூன்று வித நோக்குகளையும் பகுப்பாய்வு செய்து விளக்குவது இக்கட்டுரையின் நோக்கமாகும். மேலும், இளம்பூரணர், கல்லாடனார், ஒருவர் ஆகியோர் சொல்லதிகார முன்னுரையில் தொடரியல் குறித்து வெளிப்படையாகக் கூறவில்லையாயினும் அவர்களின் முன்னுரையில் தொடரியல் கருத்தும் இடம்பெற்றுள்ளது என்பதையும் இந்தக் கட்டுரை புலப்படுத்துகிறது.

பயன்பாட்டு நோக்கு

சொல்லதிகாரத்திற்குத் தொடரியல் கருத்துகளை முதன்மையாக வைத்து உரை எழுதியவர் தெய்வச்சிலையார் (சண்முகம் செ.வை., தொல்காப்பியத் தொடரியல், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, ப.1, 2004). தமிழ்ச் சூழலில் முதன்முதலில் வாக்கியம் என்னும் சொல்லைக் கையாண்ட முதல் உரையாசிரியரும் அவரே ஆவார். சொல்லதிகார முன்னுரையில்,

'சொல்லிலக்கணம் அறிந்ததனாற் பயன், தொடர்மொழியாகிய வாக்கியத்தினைப் பிரித்துப் பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல் எனக் குறியிட வேண்டுதலின் அதன்பின் கூறப்பட்டது' (சிவலிங்கனார் ஆ(பதி.), தொல்காப்பியம் உரைவளம்

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் அரையாண்டு பன்னாட்டு ஆய்விதழ்

International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

சொல்லதிகாரம் – கிளவியாக்கம்,உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, ப.7, 1982) என்னுமிடத்தில் தொடர்மொழியின் மற்றொரு பெயராக வாக்கியம் என்னும் சொல்லினைக் கையாண்டுள்ளார். அவர் சொல்லதிகாரத்தின் உள்ளடக்கத்தை விளக்கும்போதும் தொடர்மொழியை ஒரு கூறாகக்கொண்டே அதில் அடங்கியுள்ள இயல்களைப் பட்டியலிட்டுள்ளார். *'சொற்களைப் பொருள் நிலைமை நோக்கித் தொடர்மொழி, தனிமொழி என இருவகைப்படுத்து, அத்தொடர்மொழியை அல்வழித் தொடர், வேற்றுமைத் தொடர் என இருவகைப்படுத்து...'* (சிவலிங்கனார் ஆ(பதி.), தொல்காப்பியம் உரைவளம் சொல்லதிகாரம் – கிளவியாக்கம்,உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, ப.6, 1982) என்று சொல்லதிகார இயல்களின் வரிசை முறையில் தொடரியலின் பங்கினைப் புலப்படுத்துகிறார். சேனாவரையர், நச்சினார்க்கினியர் ஆகியோர் சொல்லின் வகையைத் தனிமொழி, தொடர்மொழி என்னும் வரிசையில் கூறத் தெய்வச்சிலையார் தொடர்மொழி, தனிமொழி என்று வரிசை மாற்றிக் கூறியிருப்பதும் அவர் தொடரியலுக்குக் கொடுத்துள்ள முக்கியத்துவத்தை இயம்புவதாக உள்ளது.

தனிச்சொற்கள் தம்மளவில் பொருள் தருவன எனினும் மொழிப் பயன்பாட்டு நோக்கில் தொடர்களே முழுமையான பொருள்தருவன என்று மாற்றிலக்கணத்தார் கருதுவர். இந்தக் கருத்தினை அடியொற்றித் தெய்வச்சிலையாரும், *'பொருளுணர்த்துவன தனிமொழியாதலால் தொடர்மொழியென வகுத்ததனாற் பயன் என்னையெனின், பொருள் உணர்த்துதற்குச் சிறப்புடையன தொடர்மொழியென்று கொள்க'* (சிவலிங்கனார் ஆ(பதி.), தொல்காப்பியம் உரைவளம் சொல்லதிகாரம் – கிளவியாக்கம்,உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, ப.7, 1982) என்று மொழிப்பயன்பாட்டு நோக்கில் தொடர்மொழியின் சிறப்பினை விளக்கியுள்ளார். *'சாத்தன் என்றவழிப் பொருண்மை மாத்திரம் உணர்த்துதலல்லது கேட்டார்க்கொரு பயன்பட நில்லாமையின், 'சாத்தன் உண்டான்' எனப் பயன்பட வரூஉந் தொடர்மொழியே பயன் இனிது விளக்குவது என்க'* (சிவலிங்கனார் ஆ(பதி.), தொல்காப்பியம் உரைவளம் சொல்லதிகாரம் – கிளவியாக்கம்,உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, ப.7, 1982) என்பது அவரது மேல்விளக்கமாகும். மொழி என்பது சமூக உற்பத்திப் பொருளாகக் கருத்துப் புலப்பாட்டிற்கு உதவும் கருவியாக மொழியிலாளரால் கருதப்படுகிறது. அதன்படி, தனிச் சொல்லைவிடவும் தொடர்மொழியே கருத்துப் புலப்பாட்டிற்கு உதவுகிறது என்னும் கருத்து முதன்மை பெறுகிறது. இதே கருத்துடைய தெய்வச்சிலையாரும் தொடர்மொழியின் விளக்கத்தில் அதன் பயன்பாட்டு நோக்கினை முன்னிலைப்படுத்தியிருக்கிறார்.

மெய்யியல் நோக்கு

சேனாவரையரும் நச்சினார்க்கினியரும் சொற்களைத் தனிமொழி, தொடர்மொழி என இரண்டு பிரிவுகளாக வகுக்கின்றனர். அவர்கள் தொடர்மொழியை இருமொழித் தொடர், பன்மொழித்தொடர் என மேலும் இரண்டு பிரிவுகளாக வகுக்கின்றனர்(சிவலிங்கனார் ஆ(பதி.), தொல்காப்பியம் உரைவளம் சொல்லதிகாரம் – கிளவியாக்கம்,உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, ப.4 & 10, 1982). எனினும், அவற்றின் அமைப்புப் பற்றிய விளக்கத்தில் இருவரும் மாறுபடுகின்றனர். நச்சினார்க்கினியரின் பாகுபாடு அமைப்புமுறை விளக்கம் என்னும் பகுதியில் விளக்கப்படும். இங்குச் சேனாவரையரின் பாகுபாடு மட்டும் கருத்திற் கொள்ளப்படுகிறது. சேனாவரையர் இருமொழித் தொடர் மற்றும் பன்மொழித் தொடர் ஆகியவற்றுக்கு முறையே சாத்தான் வந்தான், அறம்வேண்டி அரசன் உலகம் புரந்தான்

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

என்னும் சான்றுகளைக் காட்டியுள்ளார். இவை இரண்டும் முழுமையான வாக்கியங்களாகும். மேலும், சேனாவரையர் தொடர்மொழியின் பண்பினைக் குறித்து விளக்கியுள்ள பகுதி இந்திய மெய்யியற் சிந்தனையோடு தொடர்புடையதாக அமைந்துள்ளது.

இந்திய மெய்யியல் சிந்தனைப் பள்ளிகள் அறிவின் அடிப்படைகளை விளக்கும் அறிவாராய்ச்சியியல் (Epistemology) குறித்துப் பல்வேறு கோட்பாடுகளை நிறுவியுள்ளன. அச்சிந்தனைப் பள்ளிகளுள் நையாயிகம் (Nyaya) அல்லது நியாயம் என்பதும் ஒன்றாகும். அது அறிவைப் பெறுவதற்குத் துணைபுரியும் கருவிகளைப் பற்றிப் பிரமாணங்கள் என்னும் பெயரில் விரிவாக ஆராய்ந்துள்ளது (Satischandra Chatterjee, The Nyaya Theory of Knowledge, Rupa Publications, New Delhi, P.21, 2015). அறிவை வழங்கும் கருவிகளுள் ஒன்றாக சப்தம் அல்லது ஆப்தவாக்கியம் கருதப்படுகிறது. தமிழில் இதனை உரை அளவை என்பர். இது மொழியோடு தொடர்புடையது ஆதலின் நையாயிகம் மொழியைப் பற்றியும் விரிவாக விளக்கியுள்ளது. பொருளுடைய வாக்கியம் நான்கு கூறுகளைத் தன்னகத்தே கொண்டிருக்கும் என்று நையாயிக நூலான 'பாஷா பரிச்சேத (Bhasa Pariccheda)' சுட்டுகிறது. அவை, முறையே, ஆகாங்ஸா, யோக்யதா, சந்நிதி, தாத்பர்யம் என்பனவாகும் (Satischandra Chatterjee, The Nyaya Theory of Knowledge, Rupa Publications, New Delhi, P.370, 2015). இவற்றுள் தாத்பர்யம் என்பது பேசுவோர் உள்ளக் குறிப்பினைப் பற்றியது ஆதலின் வாக்கியத்தின் முதன்மைக் கூறுகளாக முதல் மூன்றையும் கொள்ளலாம். சேனாவரையர், இந்த மூன்றையும் பற்றித் தொடர்மொழி பற்றிய விளக்கத்தில் குறிப்பிட்டுள்ளார். அவர் ஆகாங்ஸா, யோக்யதா, சந்நிதி ஆகிய மூன்றையும் முறையே அவாய்நிலை, தகுதி, அண்மை நிலை என்று வழங்குகிறார்.

'*தொடர்மொழியாவது அவாய்நிலையானும் தகுதியானும் அண்மை நிலையானும் இயைந்து பொருள் விளக்கும் தனிமொழியீட்டம்*' (சிவலிங்கனார் ஆ(பதி.), தொல்காப்பியம் உரைவளம் சொல்லதிகாரம் – கிளவியாக்கம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, ப.4, 1982) என்று உரைவரைந்துள்ளார். தனிமொழியீட்டம் என்று சொற்கள் தொடர்ந்துவரும் நிலையைக் குறிப்பிட்டாலும் அவை தொடர்ந்துவரும்போது அவாய் நிலை, தகுதி, அண்மை நிலை ஆகியன அமைந்திருக்கவேண்டும் என்று நையாயிகக் கருத்தை அடியொற்றி விளக்கியுள்ளார். இதற்கு ஆ.சிவலிங்கனார்,

அவாய் நிலை – ஒரு சொல் ஒரு சொல்லை இன்றியமையாது எதிர்பார்த்து(விரும்பி) நிற்கும் நிலை. காற்று வீசும்... காற்று என்பது வீசும் என்பதை அவாவித் தொடர்ந்தது.
தகுதி – இயைபான பொருத்தம்... நெருப்பால் சுடு என்ற தொடர் அமைவது தகுதியால் அமைவதாம்.

அண்மைநிலை – சொற்களைத் தொடர்ந்து கூறுங்கால் கால இடையீடு இல்லாமல் நெருக்கமாகக் கூறுதல்.(சிவலிங்கனார் ஆ(பதி.), தொல்காப்பியம் உரைவளம் சொல்லதிகாரம் – கிளவியாக்கம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, ப.4, 1982) என்று குறிப்புரை எழுதியுள்ளார். எனவே, சேனாவரையரின் தொடரியல் நோக்கு இந்திய மெய்யியலோடு தொடர்புடையதாக அமைந்துள்ளது. நச்சினார்க்கினியரும் இதை அப்படியே ஏற்றுள்ளார் என்பதும் சேனாவரையரின் தொடரியற் கோட்பாட்டிற்கு வலுச்சேர்ப்பதாக

International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

உள்ளது.(சிவலிங்கனார் ஆ(பதி.), தொல்காப்பியம் உரைவளம் சொல்லதிகாரம் – கிளவியாக்கம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, ப.10, 1982).

அமைப்புமுறை நோக்கு

நச்சினார்க்கினியரின் விளக்கம் தொடர்மொழிகளின் அமைப்புமுறை குறித்ததாக உள்ளது. இது மொழியியல் நோக்குடையது. தொடர்மொழியானது இருமொழித் தொடர், பன்மொழித்தொடர் என இருவகைப்படும் என்று கூறி, '*அவை தொடருங்கால் பயனிலை வகையானும் தொகைநிலை வகையானும் எண்ணுநிலை வகையானும் தொடரும்*' (சிவலிங்கனார் ஆ(பதி.), தொல்காப்பியம் உரைவளம் சொல்லதிகாரம் – கிளவியாக்கம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, ப.10, 1982). என்று சொற்கள் ஒன்றோடு ஒன்று தொடர்ந்து வந்து பொருள் தரும் நிலையில் அவற்றின் அமைப்பு முறையில் காணப்படும் வகைகளைப் பட்டியலிட்டுள்ளார்.

'*சாத்தன் வந்தான் – இது பயனிலைத் தொடர். யானைக்கோடு – இது தொகைநிலைத் தொடர். நிலம் நீர் – இது எண்ணுநிலைத் தொடர். இவை இருமொழித்தொடர். அறம் வேண்டி அரசன் உலகம் புரக்கும் – இது பன்மொழித் தொடர்*' (சிவலிங்கனார் ஆ(பதி.), தொல்காப்பியம் உரைவளம் சொல்லதிகாரம் – கிளவியாக்கம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, ப.11, 1982) என்று ஒவ்வோர் அமைப்பிற்கும் சான்றுகளைத் தந்துள்ளார். இந்நிலையில், நச்சினார்க்கினியர் மொழியியல் அடிப்படையில் தொடர்மொழியின் அமைப்பை முதன்மையாக வைத்து உரை வரைந்துள்ளார் எனலாம். இதே கருத்தினை இளம்பூரணர் உள்ளிட்ட பிற உரையாசிரியர்களும் கூறியுள்ளனர் எனினும் அவர்கள் யாவரும் முதல் நூற்பாவிற்கான உரையில் கூறியிருக்க நச்சினார்க்கினியர் மட்டுமே முன்னுரையில் கூறியுள்ளார் என்பதால் இக்கட்டுரையில் நச்சினார்க்கினியர் முன்னிலைப் படுத்தப்பட்டுள்ளார்.

இளம்பூரணரும் பிறரும்

இளம்பூரணர், சொல்லதிகார முன்னுரையில் தொடர்மொழி பற்றி வெளிப்படையாக எதுவும் குறிப்பிடவில்லை. எனினும், அவர் சொல்லதிகாரம் எட்டு வகைகளில் சொற்களைப் பற்றிய இலக்கணத்தை விளக்குகிறது என்று கூறும் பகுதியில் எழுவகை வழுக்களைப் பற்றியும் சொல்லதிகாரம் விளக்குகிறது என்று குறிப்பிட்டுள்ளார். அவற்றுள், திணைவழு, பால் வழு, இடவழு, கால வழு, மரபு வழு ஆகியவை தொடரமைப்பு நிலையிலேயே உருவாவன ஆகையால், சொல்லதிகார முன்னுரையில் அவை பற்றிப் பேசும் இளம்பூரணர் அது தொடரியல் பற்றிய இலக்கணத்தையும் இயம்புகின்றது என்னும் கருத்துடையவர் என்பது புலனாகிறது. (சிவலிங்கனார் ஆ(பதி.), தொல்காப்பியம் உரைவளம் சொல்லதிகாரம் – கிளவியாக்கம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, ப.10, 1982). சொல்லதிகார முன்னுரையில் கல்லாடனாரும் ஒருவரும் இளம்பூரணரின் உரையைப் பின்பற்றியுள்ளனர் ஆகையால் அவர்களுக்கும் இக்கருத்துப் பொருந்தும். (சிவலிங்கனார் ஆ(பதி.), தொல்காப்பியம் உரைவளம் சொல்லதிகாரம் – கிளவியாக்கம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, ப.10, 1982).

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

முடிவுரை

தொல்காப்பியச் சொல்லதிகார முன்னுரையில் உரையாசிரியர்கள் தொடரியல் குறித்துப் பல்வேறு வகையான கருத்துகளை வழங்கியுள்ளனர். ஒவ்வொருவரும் ஒரு கோட்பாட்டு நோக்கில் நின்று தொடரியல் பற்றி விளக்கியுள்ளனர். தெய்வச்சிலையார், தொடரமைப்பை அதன் பயன்பாட்டு நோக்கில் விளக்கியுள்ளார். சேனாவரையர், மெய்யியல் அடிப்படையில் தொடரமைப்புப் பற்றி விளக்கியுள்ளார். நச்சினார்க்கினியர், தொடர்களின் அமைப்பு முறையினை அடிப்படையாகக் கொண்டு தொடர்களைப் பற்றி விளக்கியுள்ளார். இளம்பூரணர், கல்லாடனார், ஒருவர் ஆகிய மூவரும் வெளிப்படையாகத் தொடரமைப்புப் பற்றிக் கூறவில்லை எனினும் அவர்களின் முன்னுரையில் மறைமுகமாகத் தொடரியல் கருத்துகள் இடம்பெற்றுள்ள என்பதை அறியமுடிகிறது.

துணைநூற்பட்டியல்

[1] சண்முகம் செ.வை., தொல்காப்பியத் தொடரியல், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 2004.

[2] அண்ணாமலை சுப.(க), 'தொல்காப்பியரின் தொடரியற் கொள்கை', தொல்காப்பிய மொழியியல், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலை நகர், 1972.

[3] சிவலிங்கனார் ஆ(பதி.), தொல்காப்பியம் உரைவளம் சொல்லதிகாரம் – கிளவியாக்கம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1982.

[4] Satischandra Chatterjee, The Nyaya Theory of Knowledge, Rupa Publications, New Delhi, 2015.

தமிழில் இக்கட்டுரையை இவ்வாறு மேற்கோளிடுங்கள்:

மோகன்ராஜ் & திலகவதி . **"சொல்லதிகார முன்னுரைவழி தொல்காப்பிய உரையாசிரியர்களின் தொடரியல் நோக்கு ."** *தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்*, தொகுதி 3, சிற.இதழ் 2, தொகுதி 2, *திசம்பர்* 2020, பக். 324-330. டிஒஐ: **10.38067/ijtlls.2020.spl.v03i02v2.048**

Cite this Article in English (*MLA 8 Style*) as:

Mohanraj**. &** Thilagavathy**. "A Syntactic Perspective of the Commentators of "Tolkāppiyam" with the Preface of *Collatikaram*.**" *International Journal of Tamil Language and Literary Studies,* Vol. 3: Special Issue - 2, Vol. 2, December 2020, pp. 324-330. DOI: **10.38067/ijtlls.2020.spl.v03i02v2.048**

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி /Author Contribution Statement: இல்லை /NIL

கட்டுரையாளர் நன்றியுரை /Author Acknowledgement: இல்லை /Nil

கட்டுரையாளர் உறுதிமொழி/Author Declaration: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்./I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் அரையாண்டு பன்னாட்டு ஆய்விதழ்

International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் அரையாண்டு பன்னாட்டு ஆய்விதழ்

International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

ஐங்குறுநூற்றின் பெயர் அறியப்படாத உரை

Anonymous Commentaries on "Ainkurunuru"

முனைவர் அ.மோகனா, உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, தியாகராசர் கல்லூரி, மதுரை.
Dr.A.Mohana, Assistant Professor, Department of Tamil, Thiagarajar College, Madurai.
ORCiD: https://orcid.org/0000-0002-1398-5297
DOI: 10.38067/ijtlls.2020.spl.v03i02v2.049

Abstract

Tamil has a rich commentary tradition. The commentaries that are available for Sangam literature can be classified in to two parts. i.e. commentaries available with the Commentator's name and commentaries without the Commentator's name. In Tamil tradition, the commentaries without Commentator's name are known as 'Peyar Ariyappataatha Urai' that is called as anonymous or unnamed commentary. While the commentaries with the Commentator's name institute the Sangam Literature, the commentaries without the Commentator's name textualized the classic nature of the Sangam Literature. In this context, this paper discusses the character of the unnamed commentary of "Ainkurunuru" (Collection of five hundred short poems deals with love) one amoung the eight anthologies of Sangam Age.

Keywords: Anonymous Commentaries, "Ainkurunuru", Commentary Tradition,

தமிழில் வளமான உரை மரபு உண்டு. இலக்கணம், இலக்கியம் என்னும் இரண்டு வெவ்வேறு இயங்குதளங்களிலும் உரையின் பங்களிப்பு இன்றியமையாததாக உள்ளது. தமிழில் கிடைக்கும் மிகப் பழமையான பனுவல் தொல்காப்பியம் என்னும் இலக்கணம். அவ்வாறே உரைமரபிற்குள் இறையனார் களவியலுக்கு எழுந்த நக்கீரர் உரையே காலத்தால் முந்தையதாக உள்ளது. உரை என்பது என்ன? அதன் பயன் யாது? உரை எவ்வாறு எழுதப்பட வேண்டும் என்பது குறித்தும் இலக்கண நூல்கள் நேர்த்தியான விதிகளை வகுத்துள்ளன. ஆனால் அவ்வாறு விதிகள் வகுக்கப்படாத காலத்திற்கு முன்னரே உரைகள் தோன்றிச் செழுமையான நிலையையும் அடைந்துவிட்டன. 'காலம் கடந்த ஒரு பிரதிக்கு நிகழ்கால அர்த்தத்தை உருவாக்கி வாசகனுக்கும் பிரதிக்கும் ஒரு பாலமாக இவ்வுரைச் செயல்படுகிறது'. (2012:50) என்ற கருத்து இங்குக் கவனத்திற்குரியது. இருப்பினும் உரையின் தேவை இல்லாத காலமும் தமிழ்ச்சூழலில் இருந்திருப்பதை,' உரையின்றிச் சூத்திரத்தானே பொருள்நிகழ்ந்த காலமும் உண்டென்பதாம் (தொல்.பொருள்.653பேரா.)' 'உதாரணங் காட்டல் வேண்டாமையை உணர்ந்து உரை நடந்த காலமும் உடையவாகும் முற்காலத்து நூல்களென்பது கருத்து (தொல்.பொருள்.656பேரா.)' ஆகிய உரைப்பகுதிகள் உணர்த்துகின்றன. இப்பின்புலத்தில் உரையின் தேவையானது மூலநூல்களின் காலத்திற்கு மிகவும் பிற்பட்டே ஏற்பட்டிருக்கின்றது என்பதனை உணரமுடிகின்றது. தமிழின் தொல்பழம்

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

பனுவல்களான சங்கப் பனுவல்களைப் பொறுத்தவரை அவற்றின் மீதான வாசிப்பு மரபுகளைக் கீழ்க்கண்ட படிநிலைகளில் புரிந்து கொள்ளலாம்.

- பாணர்களாலோ புலவர்களாலோ பாடப்பட்ட காலம்; பின்னர் எழுத்து வடிவம் பெற்றுச் செவ்வியல் தன்மையுடையதாக மாற்றம் பெற்றது.
- இவற்றின் முதல் வாசகர்கள் தொகுப்பாளர் மற்றும் தொகுப்பித்தவர்; இவர்களின் அரசியலுக்கிணங்க தொகை நூல்களுள் இப்பாடல்கள் இடம்பெற்றமை. (பெரும்பான்மை பாண்டியர்கள்; சிறுபான்மை சேரர்கள்) இவர்கள் இப்பாடல்களைக் குறிப்பிட்ட சூழலமைவுகளுக்குள் கொண்டு நிறுத்தியமை. பெரும்பாலும் இச்சூழலமைவு தொல்காப்பியம் சார்ந்ததாகவும் சிறுபான்மை பிற்கால இலக்கணம் சார்ந்ததாகவும் இருக்கும்.
- சுமார் பன்னிரண்டு நூற்றாண்டு கால இடைவெளியில் உரைகாரர்கள் இப்பிரதிகளை உள்வாங்கி மீட்டுருவாக்கம் செய்தல். சமகால வாசகனுக்கு இப்பனுவல்கள் குறித்த புரிதலை அதன் தன்மை மாறாமல் வழங்குதல்; தாம் சார்ந்த மரபிற்குத் தகுந்தவாறு பொருள் கொடுத்தல்.
- அச்சுக்கருவிகளின் பொதுப்புழக்கத்தில் இப்பனுவல்கள் யாவும் புதிய வாசிப்பு முறைமைக்குக் கொண்டு செல்லப்படுகின்றன. பனுவல்களோடு இணைந்து உரைகளும் அவ்வாசிப்பில் ஊடாடுகின்றன. இங்குப் பனுவல் - உரை - பதிப்பு என்ற நிலையிலான உறவு அமைகின்றது.
- பழம்பனுவல்களுக்கு உரைஎழுதுபவர்கள் பத்து தலைமுறைகளைத் தாண்டிய அனுபவப்பின்புலமும் அறிவு மரபும் கொண்டவர்களாக இருக்கின்றனர். அவர்களின் புலமைத்தளம் அப்பனுவலின் மீது கணிசமான செல்வாக்கினைச் செலுத்துகிறது. உரைகாரர்கள் அடிப்படையில் சங்க இலக்கியத்திற்கு எழுந்த உரைகளைப் பெயர் அறியாத உரை (பழைய உரை), பெயர் அறிந்த உரை என்று பகுக்கலாம். தமிழில் தொல்பழங்காலத்தைச் சார்ந்த பல நூலாசிரியர்களின் பெயர்களும், சங்கப் பாடல்கள் சிலவற்றை எழுதிய புலவர்களின் பெயர்களும் இன்றுவரை அறியப்படாமல் உள்ளன. ஆனால் ஓரளவிற்கு வரலாற்றுப் பதிவுகளைக் கொண்ட காலகட்டத்தைச் சேர்ந்த உரைகாரர்களின் பெயரும் மரபும் அறியப்படாமல் போனது விவாதத்திற்குரியது. இடைக்கால யாப்பிலக்கணத்தின் பெருமரபினை வெளிப்படுத்திய யாப்பருங்கல விருத்தியுரைகாரரின் பெயர் அறியப்படவில்லை. எழுதிய உரையின் தன்மையால் அவர் விருத்தியுரைகாரர் என்றே அழைக்கப்படுகின்றார். அவ்வாறே சங்க இலக்கியங்களுள் சிலவற்றிற்கு உரைகண்ட உரைகாரர்களின் பெயர், மரபு ஆகியன அறியப்படவில்லை என்பதனை எளிதாகக் கடந்து செல்ல இயலாது. இவர்களைப் பதிப்பாசிரியர்கள் பழைய உரையாசிரியர் என்று பதிவு செய்திருப்பதும்

E-ISSN: 2581-7140
UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020
Available at: www.ijtlls.com

குறிப்பிடத்தக்கது. அவர்கள் பழம் பனுவல்களுக்கு உரைகண்டவர்கள்; ஆனால் பிற்காலத்தவர்கள். பழைய உரைகாரர் என்பதால் அவர்களைக் காலத்தால் மிகவும் முந்தையவர்களாகக் கொள்வதற்கில்லை. சங்க இலக்கியத்திற்கு எழுந்த உரைகளை அவற்றின் இயங்கியல் தன்மையின் அடிப்படையில் கீழ்க்கண்ட நிலைகளில் தொகுத்துக்கொள்ளலாம்.

- பெயர் அறியாத உரை குறிப்பிட்ட சங்கப் பனுவலின் செவ்வியல்தன்மை சிதையாத வகையில் சமகால வாசகர்கள் புரிந்து கொள்ள ஏதுவாக உரை கூறிச் செல்கின்றது. (இந்நிலையில் ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, திருமுருகாற்றுப்படை ஆகிய பனுவல்களுக்கு எழுதப்பட்ட பெயர்தெரியாத உரைகள் குறிப்பிடத்தக்கன.)
- பெயர் அறிந்த உரை சங்கப் பனுவலை நிறுவனப்படுத்துகின்றது. தாம் சார்ந்த சமய மரபின் அடையாளத்தைப் பழம்பனுவல்களுக்கு அளிக்கின்றது. (திருமுருகாற்றுப்படைக்கு எழுந்த ஐவர் உரை)

இவ்விரு நிலைகளுக்கும் இடையில் தொல்காப்பிய பொருளதிகார விதிகளுக்கு சங்கப் பனுவல்களின் சூழலமைவுகளைப் பொருத்தும் முறைமையின் ஊடாட்டம். சங்க இலக்கியப்பனுவல்களோடு தவிர்க்கவே இயலாத உறவினைக் கொண்டிருக்கும் பனுவலாகத் தொல்காப்பியம் இருக்கின்றது. தொல்காப்பியத்திற்குச் சமகால, கடந்தகால, பிற்காலப் பாடல்களைக் கொண்ட தொகுப்பாகவே பாட்டும் தொகையும் தொகுப்பு உள்ளது. இவை தொகுக்கப்படுவதற்கான பார்வை களமாகத் தொல்காப்பியம் இருந்துள்ளதாகத் தி.சு.நடராசன் (2016:52) குறிப்பிடுகின்றார். எனவே உரைகாரர்களிடமும் தொல்காப்பியம் மற்றும் அதற்கெழுந்த உரைகள் செல்வாக்கு செலுத்தியுள்ளதில் வியப்பேதுமில்லை.

பெயர் அறியாத உரைமரபில் புறநானூற்றிற்கு எழுந்த உரைகுறித்தும், அதன் பதிப்பு, பாடபேதம் குறித்தும் காத்திரமான பல விவாதங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அவ்வாறே ஐங்குறுநூற்றிற்கு எழுந்த உரை குறித்தும் பேசப்பட்டுள்ளது. இருப்பினும் ஐங்குறுநூற்றின் உரையானது மீண்டும் மறுவாசிப்புக்கு உட்படுத்த வேண்டிய தேவையினைக் கொண்டுள்ளது.

சங்கப் பனுவல்களுள் ஐங்குறுநூறும் பதிற்றுப்பத்தும் மரபிலும் தொகுப்பு முறையிலும் ஒரே தன்மையன. இரண்டுமே சேர அரசர்களின் சிறப்பினை எடுத்துரைப்பவை. தொகுக்கப்பட்டதும் சேர அரசப் பின்புலத்திலேயே. ஐங்குறுநூறு உரையின் நேர்த்தியினைப் பல அறிஞர்கள் விதந்து சுட்டியுள்ளனர். பொருட்செறிவும் திட்பமும் நிறைந்த உரையாகவும் குறித்துள்ளனர். ஐங்குறுநூற்றினைப் பதிப்பித்த உ.வே.சா. இவ்வுரையின் தன்மை குறித்துப் பதிவு செய்துள்ள கருத்து வருமாறு, 'இந்நூலின் பழையவுரை பதவுரையுமன்று; பொழிப்புரையுமன்று; அகத்திணை நூல்களுக்கேயுரிய உள்ளுறையுவமம் இறைச்சிப்பொருள் முதலியவற்றைப் பெரும்பாலும் நலமுற விளக்கிச் சிலசில இடத்துமட்டும் திரிசொற்களின் பொருளைப் புலப்படுத்திச் சிறுபான்மை இலக்கணக் குறிப்பையும் சொன்முடிபு பொருண்

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

முடிபுகளையும் பெற்றுள்ளது. பழைய உரையில்லாத செய்யுட்களுக்கு உள்ளுறையுவம முதலியவற்றைப் புலப்படுத்தி ஏதோ ஒருவகையாக உரையெழுதி இதனுடன் பதிப்பிக்கலாமென்ற விருப்பம் சில அமயம் நிகழ்ந்ததுண்டு; நிகழ்ந்தும் இந்நூலையும் இவ்வுரையையும் உற்று நோக்கும் பொழுது உண்டாகிய அச்சம் அவ்விருப்பத்தை அடியோடே மாற்றிவிட்டது. இந்நூல் முழுமைக்கும் நான் எழுதிவைத்த அரும்பத வுரையை இதனொடும் பதிப்பியாமைக்குக் காரணமும் இதுவே (உ.வே.சா.,ஐங்குறுநூறு (1903) முதல் பதிப்பு ப.5)'

ஐங்குறுநூற்று உரைகாரர் மீதான உ.வே.சா.வின் மதிப்பினை உணர்த்துவதாக இப்பகுதி உள்ளது. இத்தொகையின் உரைசிறப்பிற்குப் பல ஆய்வறிஞர்களால் எடுத்துக்காட்டப்பட்ட பாடலும் உரையும் வருமாறு,

வேட்கைப் பத்து முதற்பாடல்,

வாழி யாதன் வாழி யவினி

நெற்பல பொலிக பொன்பெரிது சிறக்க

வெனவேட் டோளே யாயே யாமே

நனைய காஞ்சிச் சினைய சிறுமீன்

யாண ரூரன் வாழ்க

பாணனும் வாழ்க வெனவேட் டேமே

இப்பாடலுக்கு எழுதப்பட்ட சூழல்குறிப்பு, என்பது, புறத்தொழுக்கத்திலே நெடுநாளொழுகி, 'இது தகாது' எனத் தெளிந்த மனத்தனாய் மீண்டு தலைவியோடு கூடி ஒழுகா நின்ற தலைமகன் தோழியோடு சொல்லாடி யான் அவ்வாறொழுக நீயிர் நினைத்ததிறம் யாது என்றாற்கு அவள் சொல்லியது.

உரைப்பகுதி

காவற்பொருட்டு அரசன் வாழ்க; விருந்தாற்றுதற் பொருட்டு நெற்பல பொலிக; இரவலர்க்கு ஈதற் பொருட்டுப் பொன் மிக உண்டாகுக என யாய் இல்லத்திற்கு வேண்டுவன விரும்பி ஒழுகியதல்லது பிறிது நினைத்திலள்; அவள் இத்தன்மையளாக, நீ ஒழுகிய ஒழுக்கத்தால் நினக்கும் நின்னொழுக்கத்திற்கு துணையாகிய பாணனுக்கும் தீங்கு வருமென்றஞ்சி, யாண ரூரன் வாழ்க, பாணனும் வாழ்க என விரும்பினோம் யாங்களென்றவாறு

தலைவியை யாயென்றது புலத்தற்குக் காரணமாயின உளவாகவுமவை மனங்கொள்ளாத சிறப்பை நோக்கி, தோழியாங்களென உளப்படுத்தது ஆயத்தாரை நோக்கியெனக் கொள்க. பூவும் புலாலும் ஒக்க விளையும் ஊரனென்றது குலமகளிரைப் போலப் பொது மகளிரையும் ஒப்பக் கொண்டொழுகுவானென்பதாம். ஆதனவினி யென்பான் சேரமான்களிற் பாட்டுடைத் தலைவன். (உ.வே.சா., ஐங்குறுநூறு (1903) முதல் பதிப்பு ப. 25) வேட்கைப் பத்தின் முதல் பாடலுக்கு எழுதப்பட்டிருக்கும் இம்முழுமையான

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

உரையானது தொடர்ந்து வருகின்ற பாடல்களுக்கு இல்லை. குறிப்புகளாகவும் அருஞ்சொற் விளக்கங்களாகவும் திணை, துறை பொருத்தப்பாடுகளாகவுமே இருக்கின்றன. இவ்வுரைப்பகுதியை எடுத்துக்காட்டி மு.வை.அரவிந்தன் இத்தகைய விளக்கமான உரை பிற பாடல்களுக்குக் கிடைக்காமல் போனது பேரிழப்பு என்றுவாறு பதிவு செய்கிறார். ஆனால் சங்க இலக்கிய உரைகள் குறித்து ஆய்வு மேற்கொண்ட அ.சதீஷ் இவ்வுரையானது பிற பாடல்களைப் பொருள்கொள்ள உதவும் மாதிரியாக, திறப்பாக உரைகாரரால் அமைக்கப்பட்டது என்கிறார். முந்தைய கருத்து எப்போதும்போல் உரையானது சிதைந்தோ அல்லது மறைந்தோ போயிருக்கலாம் என்கிற நிலையில் அமைய இரண்டாவது கருத்து இது திட்டமிட்டச் செயல்பாடாக இருப்பதை எடுத்துக்காட்டுகின்றது.

இங்குக் கவனத்தில் கொள்ள வேண்டியது நற்றிணை உள்ளிட்ட பிற தொகைநூல்களைக் காட்டிலும் ஐங்குறுநூற்றின் தொகுப்பு முறைமை. திட்டமிட்டுப் பாடப்பட்ட பாடல்களைக் கொண்ட தொகுப்பு அது. திணைக்கு நூறு பாடல்கள் பத்து பத்தாக பாடப்பட்டிருக்கின்றன. இவை பாடப்பட்டுத் தொகுக்கப்பட்டவை அல்ல. மாறாகத் தொகுப்பிற்காகவே பாடப்பட்டவை. அதற்கான பின்புலமாகச் சேர அரசமரபு இருக்கின்றது. வேட்கைப் பத்தின் பத்துப் பாடல்களும் ‘வாழி ஆதன் வாழி அவினி’ என்றே தொடங்குகின்றன. இவை ஒரு வாய்பாடு தன்மை கொண்டவை. பத்துப் பாடல்களும் வேட்கையினை வெளிப்படுத்துபவை. அவ்வேட்கையானது அரசன் வாழ்க அவன் குடிகள் வாழ்க என்பதோடு தலைவியின் வேட்கையானது பரத்தையொழுக்கத்தினால் பிரிந்து சென்ற தலைவனும் வாழவேண்டும்; அவன் குற்றம் நீங்கி நற்பெயர் பெறவேண்டும் என்பதாக இருக்கிறது. இதுவே தொடர்ந்து வரும் பத்துப்பாடல்களின் பொருண்மையாக உள்ளது. (ஐந்தாம் பாடலிலிருந்து பொருண்மையில் சிறுமாற்றமுள்ளது) தலைவியின் இல்வாழ்விற்கும் தலைவனின் பரத்தைமை வாழ்விற்குமான உதாரணங்கள் மாறுகின்றன.

இப்படி ஒரு வாய்பாட்டுத் தன்மையுடன் பாடப்பட்ட இத்தொகை நூலுக்கு உரையும் இயல்பாகவே வாய்பாட்டு முறையில் அமைவதற்கான சாத்தியங்கள் மிகுதி. அதனைக் கருத்தில் கொண்டே ஐங்குறுநூற்றின் உரைகாரர் குறிப்பிட்ட சில பாடல்களுக்கு மட்டும் விளக்கமாக உரை எழுதிச் சென்றிருக்கிறார். முதற் பாடலைத் தவிர்த்து மேலும் சில பாடல்களுக்கு இவர் விரிவாக உரை எழுதியுள்ளார். திணைக்கு இரண்டு முதல் மூன்று பத்துகளுக்கு இவர் விளக்க உரை தருகின்றார். ஏனைய இடங்களில் உள்ளுறை, இறைச்சிப் பொருளை விளக்குகிறார். திணைப் பொருத்தப்பாட்டினைக் காட்டுகின்றார். ஒருமுறை அளித்த விளக்கத்தினை மறுமுறை வேறொரு இடத்தில் வழங்கும்போது அதற்கான காரணத்தினையும் தருகின்றார். இந்நிலையில் வேட்கைப்பத்தின் ஆறாம் பாடலும் அதற்கான உரைப்பகுதியும் வருமாறு,

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

வாழி யாதன் வாழி யவினி/ வேந்துபகை தணிக யாண்டுபல நந்துக/ வெனவேட் டோளே யாயே யாமே/ மலர்ந்த பொய்கை முகைந்த தாமரைத்/ தண்டுறை யூரன் வரைக/ வெந்தையுங் கொடுக்க வெனவேட் டேமே (ஐங்.6) (சூழலமைவுக் குறிப்பு) என்பது, களவினிற் பலநாளொழுகி வந்து வரைந்து கொண்ட தலைமகன் தோழியோடு சொல்லாடி, 'யான் வரையாது ஒழுகுகின்ற நாள் நீயிர் இங்கு இழைத்திருந்த திறம்யாது' என்றாற்கு அவள் சொல்லியது.

நின்னை எதிர்ப்பட்டவன்றே வரைந்தாயெனக் கொண்டு இல்லறத்திற்கு வேண்டுவனவிரும்பி ஒழுகியதல்லது தலைவி பிறிதொன்றும் நினைத்தலள்; யாங்கள் அகன்ற பொய்கைக்கு அணியாகத் தாமரையையுடைய ஊரனாதலால் அத்தண்டுறையூரன் மனைக்கு அணியாம் வண்ணம் இவளை வரைவானாக எந்தையும் கொடுப்பானாக என விரும்பினேம் எ-று ஈண்டுத் தலைவியை யாயென்றது, எதிர்ப்பட்ட ஞான்றே கற்புப் பூண்டொழுகுகின்ற சிறப்பை நோக்கி.

இப்பாடலின் நேர்பொருளைப் பார்க்கும் போது முதல் மூன்றடிகள் எப்போதும்போல் வேந்தனையும் நாட்டினையும் வாழ்த்துகின்றன. 'மலர்ந்த பொய்கை முகைந்த தாமரை தண்டுறை' என்பது தலைவனின் ஊர்ச்சிறப்பினையும் குறிப்பாக அவனது ஒழுக்கத்தையும் கூறுகின்றது. ஆனால் பிறகு வருகின்ற அடிகள் 'யூரன் வரைக எந்தையுங் கொடுக்க' என வேட்டேமே என்பது தலைவிக்கும் தலைவனுக்கும் நிகழவிருக்கும் திருமணத்தைப் பற்றியதாக உள்ளது. இது திணைமயக்கத்தினை வருவிப்பதாக உள்ளது. ஊரன் என்பது மருதநிலத்திற்குரிய தலைமைப் பெயராக இருக்கிறது. ஆனால் வரைவிற்குப் பிறகான ஊடலுக்கே மருதத்தினை நிலைகளனாக வகுக்கப்பட்டிருக்க திருமணத்திற்கு முந்தைய உறவு குறித்த கேள்வி எழுகின்றது. இதனை மனதில் கொண்ட உரைகாரர் 'நின்னை எதிர்ப்பட்டவன்றே வரைந்தாயெனக் கொண்டு' என்கிற பொருள் முடிபினைக் கொடுக்கிறார். இக்கருத்திற்கு வலுசேர்ப்பதற்கு 'யாய்' என்றது இத்தன்மையினைக் கவனத்தில் கொண்டே என்றும் கூறுகிறார்.

முதற்பாடலில் தலைவியை 'யாய்' என்று அன்னையின் இடத்திற்கு ஒப்ப அழைத்தமைக்குக் காரணம் தலைவிக்குத் தலைவன் இழைத்த தீங்கினை மறந்து அவன் வாழவேண்டும் என்று வாழ்த்துகின்ற மனப்பான்மையினைச் சுட்டியதாகக் கூறுகின்ற உரைகாரர் இங்கு 'யாய்' என்பதற்கு இப்படியொரு விளக்கத்தினை அளிக்கின்றார். அளிக்கப்பட்டிருக்கும் சூழலமைவு குறிப்புகளுக்கு வலுசேர்ப்பதற்காக உரைகாரர் இவ்வாறு உரையெழுதியிருக்கின்றார். மேலும் தொல்காப்பியத்திற்கு உரையெழுதிய இளம்பூரணர் இப்பாடலைக் கற்பின்கண் நிகழும் தோழிகூற்றிற்குச் சான்றுப்பாடலாக அளித்துள்ளார். எனவே இளம்பூரணர் உரையினை இவ்வுரைகாரர் உள்வாங்கியுள்ளமையும் தெளிவாகின்றது.

ஐங்குறுநூற்றின் முதல் பத்தான வேட்கைப் பத்தைப் பொறுத்தவரை முதல் ஐந்து பாடல்கள் ஒரு பொருண்மையினதாகவும் ஆறாம் பாடலைத் தொடர்ந்து வருகின்ற நான்கு

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

பாடல்களும் பிறிதொரு பொருண்மையினதாகவும் உள்ளன. 7, 8ஆம் பாடல்களுக்கு விரிவான உரை இல்லை. ஒன்பதாம் பாடலுக்குக் குறிப்புரை மட்டும் தரப்பட்டுள்ளது. பத்தாம் பாடலுக்கு விரிவாக உரை எழுதப்பட்டுள்ளது. மருதத்திணையில் எருமைப்பத்து, வேழற்பத்து ஆகிய பாடல்களுக்கும் உரைகாரர் விரிவாக உரையெழுதியுள்ளார்.

அடுத்து வைக்கப்பட்டுள்ள நெய்தல் திணையில் ஞாழற் பத்து, வெள்ளாங்குருகு பத்து, சிறுவெண் காக்கை பத்து ஆகியவை விரிவான உரையினைப் பெற்றுள்ளன. வெள்ளாங்குருகு பத்து, கிழவற்குரைத்த பத்து ஆகிய பாடல்களுக்கு அளிக்கப்பட்டுள்ள உரைக்குறிப்புகள் இவ்வுரையின் தன்மையினை உறுதிப்படுத்துவனவாக உள்ளன. வெள்ளாங்குருகு பத்தின் முதற்பாடலும் அதற்கான உரையும் வருமாறு,

வெள்ளாங் குருகின் பிள்ளை செத்தென/காணிய சென்ற மடநடை நாரை/மிதிப்ப நக்க காண்போ னெய்தல்/கட்கமழ்ந் தானாத் துறைவற்கு/நெக்க நெஞ்ச நேர்கல் லேனே. (ஐங்.151)

(சூழலமைவுக்குறிப்பு) என்பது, வாயில் வேண்டிய தோழிக்குத் தலைமகள் வாயின்மறுப்பாள் சொல்லியது. இதனுள்ளுறை: பரத்தையொருத்தியொடு ஒழுகுகின்ற ஒழுக்கம் இடையற்றதாகச் சென்ற வாயில்கள் நெருங்க அவள் நெஞ்சு நெகிழ்ந்து கூறிய காதன் மாற்றம் பரந்து செல்கின்ற துறைவனென்பதாம். வெள்ளாங்குருகென்றது பரத்தையாகவும் பிள்ளையென்றது பரத்தையோடு தலைமகனிடை உளதாகிய ஒழுக்கமாகவும், காணிய சென்ற மடநடை நாரை யென்றது வாயில்களாகவுங் கொள்க. இவை வருகின்ற பாட்டு ஒன்பதுக்கும் ஒக்கும். மிதித்தது அவளை நெருங்குதலாகவும், நக்க நெய்தல் அவனெஞ்சாகவும் கட்கமழ்ந்து ஆனாமை அவள் அவர்க்குக் கூறிய மாற்றம் எல்லாருக்கும் புலப்படுதலாகவும் இப்பாட்டிற்குக் கொள்க

இப்பாடலில் அமைந்த உள்ளுறையின் விளக்கமானது இனிவருகின்ற ஒன்பது பாடல்களுக்கும் உரியது என்கிறார் உரைகாரர். அனைத்துப் பாடல்களிலும் வருகின்ற முதல் இரண்டடிகளை விடுத்துப் பிற இடங்களில் வரும் உள்ளுறை, இறைச்சி கருத்துகளை மட்டும் விரித்துக் கூறுவதைக் காணமுடிகின்றது. அவ்வாறே கிழவற்குரைத்த பத்து முதற்பாடலின் உரையில், பரத்தை தலைமகற்குச் சொல்லியது;பெதும்பைப் பருவத்தாள் ஒரு பரத்தையோடு கூடி மறைந்து ஒழுகாநின்றா னென்பதறிந்து தலைவி புலந்துழி, இத்தவறு என்மாட்டில்லை; நீ இப்புலவியை நீக்க வேண்டும் என்று தோழிக்குத் தலைமகன் கூறப் புலவியை நீக்கக் கருதிய தோழி அவளிளமை கூறி நகையாடிச் சொல்லியதா உமாம்.

இனி வருகின்றபாட்டு ஒன்பதிற்கும் இத்துறையாம் என்ற குறிப்பு உள்ளது. சூழலமைவுக்குறிப்பினைத் தொடர்ந்து வருகின்ற இந்த அடியானது உரைகாரர் எழுதியதா அல்லது சூழலமைவுக்குறிப்பினை அளித்தவர் எழுதியதா என்கிற மயக்கம் ஏற்படுகின்றது. ஏனெனில் வெள்ளாங்குருகு பத்தினைப் போல முதற்பாடலை விளக்கி இவர் உரை எழுதவில்லை. இந்த ஒரு அடி மட்டுமே உள்ளது. பொதுவாகத் துறைக்குறிப்பு எழுதுவோர்

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

தொடர்ந்து ஒரே பொருண்மை பயின்றுவரும்போது 'இதுவுமது' என்கிற சொல்லாடலினையே பயன்படுத்துவர். ஐங்குறுநூற்றிலும் வேட்கைப் பத்தில் அச்சொல்லாடலினைக் காணமுடிகின்றது. எனவே இது உரைகாரரின் கருத்தாக இருக்கவே வாய்ப்புள்ளது. கிழவற்குரைத்த பத்தில் உள்ள பாடல்கள் அனைத்துமே மூன்றடிகளால் ஆனவை. எனவே கிடந்த முறையில் பொருள் கொள்வது எளிதாக உள்ளது. இதனைக் கருத்தில்கொண்டு துறைக்குறிப்பே போதுமானது என்று உரைகாரர் எண்ணியிருக்கலாம். பிற பாடல்களுக்குச் சூழலமைவு குறிப்புகள் கூட வழங்கப்படவில்லை.

குறிஞ்சித்திணையில் கேழற் பத்து, குரக்கு பத்து, கிள்ளைப்பத்து, மஞ்ஞை பத்து ஆகியபாடல்களுக்கு விளக்கவுரை எழுதியுள்ளார். பாலைத்திணையில் இளவேனிற் பத்து வேட்கைப் பத்து, கிழவற்குரைத்த பத்து ஆகியவற்றிற்கு அளிக்கப்பட்டுள்ள குறிப்பினைப் பெற்றுள்ளது.

அவரோ வாரார் தான்வந் தன்றே/குயிற்பெடை யின்குர லகவ/வயிர்க்கேழ் நுண்ணற னுடங்கும் பொழுதே (ஐங்.341)

தலைமகன் பிரிந்துழிக் குறித்த பருவம் வரக்கண்ட தலைமகள் சொல்லியது. இனி வருகின்ற பாட்டு ஒன்பதிற்கும் இஃது ஒக்கும். இப்பத்திலும் அனைத்தும் மூன்றடிப் பாடல்களாகவே உள்ளன. முதற்பாட்டிற்குக் கூட விரிவான விளக்கம் தராமல் பாட்டின் இயல்பினை நோக்கிக் குறிப்பினை மட்டுமே தந்து செல்கிறார். முல்லைத் திணையில் செவிலிக்கூற்றுப்பத்து, புறவணிப் பத்து ஆகிய இரு பத்துகளும் முற்குறித்த குறிப்புகளைப் பெற்றுள்ளன.

செவிலிக்கூற்றுப்பத்து மறியிடைப் படுத்த மான்பிணை போலப்,/புதல்வ னடுவணனாக நன்று/மினிது மன்றவவர் கிடக்கை முனிவின்றி/நீனிற வியலகங் கவைஇய/வீனு மும்பரும் பெறலருக் குரைத்தே (401) (சூழலமைவுக் குறிப்பு) என்பது கடிமனைச் சென்றுவந்த செவிலி உவந்தயுள்ளத்தளாய் நற்றாய்க்குச் சொல்லியது. இனி வருகின்ற பாட்டு ஒன்பதனுள் முதல் எட்டினுக்கும் இஃது ஒக்கும். கிழவற்குரைத்த பத்தினைப் போலவே உரைஎதுவும் அளிக்காமல் சூழலமைவுக்குறிப்பு முதல் எட்டுப் பாடல்களுக்குப் பொருந்தும் என்று மட்டும் குறித்துள்ளார். ஒன்பது, பத்தாம் பாடலுக்கு ஏன் பொருந்தாது? என்கிற விளக்கத்தினைத் தரவில்லை.

மேலும் முதல், இறுதி பாடல்களைத் தவிர்த்துப் பிற பாடல்களுக்குத் சூழலமைவுக் குறிப்பும் அளிக்கப்படவில்லை இறுதிப் பாடலுக்குச் 'என்பது, கடிமனைச் சென்ற செவிலி, தலைமகனும் தலைமகளும் புதல்வனொடு பாடல் கேட்டிருந்தமை கண்டு தன்னுள்ளே உவந்து சொல்லியது.' எனச் சூழலமைவுக் குறிப்பு எழுதப்பட்டுள்ளது. பிற பாடல்கள் யாவும் நற்றாய்க்கு உரைத்தாக இருக்க இறுதிப் பாடல் மட்டும் தன் மனத்திற்கு உரைத்ததாக உள்ளது. இப்பாடல்கள் யாவும் மூன்றடிப் பாடல்கள் அல்ல; விளக்கி எழுதுவதற்கான ஏதுக்கள் நிறைய உள்ள பாடல்களே என்பது குறிப்பிடத்தக்கது. அடுத்தாகப் புறவணிப் பத்திலும் முந்தைய பத்துகளுக்கு அளித்த குறிப்பினை உரைகாரர் அளித்துச் செல்கின்றார்.

International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

நன்றே காதலர் சென்ற வாறேயணிநிற விரும்பொறை மீமிசை/மணிநிற வுருவின தோகையு முடைத்தே (431)

பிரிவு உடம்பட்டும் ஆற்றாயாகின்றது என்னை என்று வினவிய வழி, அவர்போனசுரம் போகற்கரிதென்று ஆற்றேனாகின்றேன் என்ற தலைமகட்கு வேனிற் காலங்கழிந்தது; கார்ப்பருவத்தோற்றத்திலே பிரிந்தாராகலான், அச்சுரம் நன்று எனத் தோழி சொல்லி ஆற்றுவித்தது. இனி வருகின்ற பாட்டு ஒன்பதுக்கும் இஃது ஒக்கும்.

சூழலமைவுக் குறிப்போடு உரைக்குறிப்பும் இணைத்துப் பதிப்பிக்கப்பட்டுள்ளது முற்குறித்த மயக்கத்தினை வருவிக்கின்றது. இருப்பினும் இது உரைகாரரின் பதிவே என்பது பிற பத்துக்கள் மூலம் புரிந்து கொள்ள முடிகின்றது. எஞ்சிய ஒன்பது பாடல்களுக்கும் சூழலமைவுக் குறிப்புகளோ, சொற்பொருள் விளக்கங்களோ இல்லை. இப்பத்தில் இடம்பெற்றுள்ள அனைத்துப் பாடல்களும் மூன்றடிகளை மட்டும் கொண்டன.

இக்கருத்துகளையெல்லாம் தொகுத்து நோக்குமிடத்து, அ.சதீஷ் கூறியுள்ளவாறு இங்கு உரையானது திட்டமிட்டு அமைக்கப்பட்டுள்ளது. வாசகர்களே பனுவலுக்குள் பயணிப்பதற்கான திறப்புகளை மட்டும் இவ்வுரை அளித்துள்ளது என்பது புலனாகின்றது. இவ்வுரையாசிரியரின் அறிவு நுட்பத்தை அறிந்துகொள்ள மற்றுமொரு சான்றாக இவர் அளித்துள்ள இலக்கணக் குறிப்புகளைக் கூறமுடியும். இவ்வுரையானது இரண்டிடங்களில் இலக்கணக் குறிப்புகளைத் தந்துள்ளதாக அ.சதீஷ் குறிப்பிடுகின்றார்.

இரண்டு இடங்களில் இவ்வுரையாசிரியர் இலக்கணக் குறிப்புத் தருகிறார். நெய்தல் திணையில் தாய்க்குரைத்த பத்துவில் இடம்பெற்றுள்ள 104 ஆம் பாடலுக்கு உரை எழுதும்போது 'கொண்கன் செல்வனென்றது புதல்வனை; செல்வக் கொண்கன் செல்வனாரென்னும் எழுவாயின் முற்றுச்சொல் அஃதென்னும் பெயர்' (1949:50) என்று விளக்குகிறார்.... இதே போல பாலைத்திணையில் இடம்பெற்றுள்ள...'சிறுகண்யானை நிலந்தொடர் செல்லா என்பது முற்று' (1949:145) என விளக்குகிறார். இவ்விரண்டு பாடல்களுக்கும் பொருள் விளக்கம் கொள்ளும்போது ஏற்படும் மயக்கத்தைத் தீர்ப்பதற்கு இவ்விலக்கணக்குறிப்புகள் தரப்பட்டுள்ளன என்பதையும் விளக்கிக் காட்டியுள்ளார். இலக்கண நூல்களின் வரையறைக்குள் அடங்காத உரையாகவே ஐங்குறுநூற்றின் உரை உள்ளது. பாடல்களின் செவ்வியல்தன்மை சிதையாவண்ணம் தொல்காப்பிய விதிகளுக்கும் தொல்காப்பிய உரைகாரர்களின் கருத்திற்கும் இணங்கிய நிலையிலேயே இவ்வுரை எழுதப்பட்டுள்ளது. இவ்வுரையின் தனித்தன்மை குறித்த அ.சதீஷின் கருத்தானது மேற்கண்ட செய்திகளை உறுதி செய்யும்.

'ஐங்குறுநூற்றின் உரை தமிழ் உரைமரபின் தனித்த தத்துவார்த்தப் பின்புலத்தில் உருவாகி வந்ததை உணர்த்துகிறது. அதாவது ஐந்நூறு பாடல்கள் கொண்ட ஒரு தொகை நூலுக்கு எல்லா பாடல்களுக்கும் விரிவாக உரை யெழுதுதல் என்பதாக இல்லாமல்

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

திட்டமிடப்பட்ட ஒரு மாதிரியை உருவாக்கி அம்மாதிரியின் அடிப்படையில் பிற பாடல்களுக்கு வாசகர்களே உரை அமைத்துக் கொள்வதற்கான வழியினை இது திறந்து விடுவதும், இடையே நேரும் இடையூறுகளை நீக்குவதுமான இச்செயல்பாடு பிரதியை இயங்கவிட்டேதான் இயங்குதல் என்னும் தன்மையை உணர்த்துகின்றது. … இடையிடையே பல பாடல்களுக்கு உரை எழுதாமையும், ஓரிரு சொற்களுக்கு மட்டும் உரை எழுதுவதும் இந்தப் பின்புலத்தில் புரிந்து கொள்ளத்தக்கதே. ஆக, ஐங்குறுநூற்றின் உரை என்பது கிடைத்தவரையில் தன்னளவில் அது முழுமையானதே.' (2008:160-161)

துணை நூல்கள்

[1] எட்டுத் தொகையுள் மூன்றாவதாகிய ஐங்குறுநூறும் பழைய உரையும், உ.வே.சாமிநாதையர், கணேச அச்சுக்கூடம், சென்னை, 1903.

[2] தொல்காப்பியம் பொருளதிகாரம், பேராசிரியர் உரை, சி.கணேசையர் (ப.ஆ),சுன்னாகம் திருமகள் அச்சுக்கூடம், 1948.

[3] சங்க இலக்கியம் பாட்டும் தொகையும், எஸ்.வையாபுரிப்பிள்ளை (ப.ஆ), பாரிநிலையம், சென்னை, 1967

[4] சதீஷ்,அ., சங்க இலக்கிய உரைகள் பழந்தமிழ்க் கவிதைகளின் இடைக்கால வாசிப்பு முறைகள், அடையாளம் பதிப்பகம், சென்னை, 2002.

[5] நடராசன், தி.சு., தமிழ் அழகியல் மரபும் கோட்பாடும், நியூசெஞ்சுரிபுக் ஹவுஸ், சென்னை, 2016.

தமிழில் இக்கட்டுரையை இவ்வாறு மேற்கோளிடுங்கள்:

மோகனா. "ஐங்குறுநூற்றின் பெயர் அறியப்படாத உரை." *தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்,* தொகுதி 3, சிற.இதழ் 2, தொகுதி 2, *திசம்பர்* 2020, பக். 331-341. டிஓஐ: **10.38067/ijtlls.2020.spl.v03i02v2.049**

Cite this Article in English (*MLA 8 Style*) as:

Mohaha. "**Anonymous Commentaries on "Ainkurunuru"**." *International Journal of Tamil Language and Literary Studies,* Vol. 3: Special Issue - 2, Vol. 2, December 2020, pp. 331-341. DOI: **10.38067/ijtlls.2020.spl.v03i02v2.049**

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி /Author Contribution Statement: இல்லை /NIL

கட்டுரையாளர் நன்றியுரை /Author Acknowledgement: இல்லை /Nil

கட்டுரையாளர் உறுதிமொழி/Author Declaration: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்./I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

E-ISSN: 2581-7140 **UGC CARE Listed Journal**
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 **Available at:** www.ijtlls.com

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் அரையாண்டு பன்னாட்டு ஆய்விதழ்

International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

பொ.வே. சோமசுந்தரனாரின் உரைத்திறன்
Textual Effectiveness of Po.Ve. Somasundaranar

சா. ரிஸ்வானா பர்வீன், உதவிப் பேராசிரியர், மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி, மதுரை.
S.Rishwana Parveen, Assistant Professor, Mannar Thirumalai Naicker College, Madural.
ORCiD: https://orcid.org/0000-0001-2345-6789
DOI: 10.38067/ijtlls.2020.spl.v03i02v2.050

Abstract

In the history of Tamil Literature, there are volumes of explanatory texts written on the Classical original sources of Tamil Language and Literature. Po.Ve. Somasundaranar is one of the Tamil Veteran has rendered Tamil explanatory notes to the "Kurunthokai" from the "Ettuthokai" collection. The study focuses on the Alloore Nanmullaiyar songs as the epicentre to discuss on the topic. The commentator has given easy explanations to understand the poems. Quotes from other sources are inserted at apt places to give more emphasis on the original text. His metaphoric delineation is helpful to get clear idea on the original source. He exemplifies about the life and culture of the Sangam People. Vocabularies are better used to sustain with better clarification of the archaic Tamil words. The Grammatical notes are also pointed and explained in a logical manner. So, this article deliberates on the linguistic efficiency of Po.Ve. Somasundaranar in his rendering.

Keywords: Textual Effectiveness, Po.Ve. Somasundaranar, "Kurunthokai", "Ettuthokai"

முன்னுரை

உலகில் தோன்றிய மொழிகளில் வேறு எந்த மொழிகளிலும் இல்லாத அளவுக்கு பல வகையில் சிறந்த உரைகளானது காலந்தோறும் தமிழ் மொழியில் தோன்றிக் கொண்டே இருக்கின்றன. அந்த வகையில் பொ.வே. சோமசுந்தரனாரின் உரைத்திறத்தை எட்டுத்தொகை நூல்களில் ஒன்றான குறுந்தொகையில் அள்ளூர் நன்முல்லையார் பாடல்வழி எடுத்துரைப்பது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

உரையாசிரியர் குறிப்பு

இருபதாம் நூற்றாண்டின் தலைசிறந்த உரையாசிரியர்களுள் ஒருவரான பெருமழைப்புலவர் பொன்னுசாமி வேலுத்தேவர் சோமசுந்தரனார் அவர்கள் தஞ்சாவூர் மாவட்டம் திருத்துறைப்பூண்டியை அடுத்த மேலைப்பெருமழை என்ற ஊரில் 05.09.1909 – இல் பிறந்தவர். கவிஞர், உரைநடையாசிரியர், நாடகாசிரியர், பாடலாசிரியரகப் பரிணமித்த இவர் சொந்த ஊரின் பெயரிலேயே 'பெருமழைப்புலவர்' என அழைக்கப்பட்டார். இவரது ஆசான் கதிரேசன் செட்டியார் கூறியதற்கு இணங்க திருவாசகத்திற்கு உரை எழுதினார். இதுவே அவருக்கு சிறந்த உரையாசிரியராகத் திகழ அடித்தளமிட்டுக் கொடுத்தது. இவர் நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு, மணிமேகலை, குண்டலகேசி, வளையாபதி, சீவகசிந்தாமணி, சிறுகாப்பியங்களான உதயணகுமாரகாவியம், நீலகேசி, பரிபாடல், ஐந்திணை ஐம்பது, ஐந்திணை எழுபது, பெருங்கதை போன்ற ஏராளமான நூல்களுக்கு உரையெழுதியுள்ளார். சங்க இலக்கியங்களில் இவர் எழுதிய உரையில் திணைகள், துறைகள் குறித்த விளக்கம், இலக்கணக் குறிப்புகள், மேற்கோள்கள் அனைத்தும் மிகச் சிறப்பாக அமைந்துள்ளன.

உரையாசிரியர் உரைக்கும் உத்திமுறைகள்:

துறைவிளக்கம் கூறுதல்
மேற்கோள் காட்டல்

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

உவமை கூறுதல்
மரபுகளை எடுத்துரைத்தல்
இலக்கண குறிப்புரைத்தல்
அருஞ்சொற்பொருள் கூறுதல்
உள்ளுறை உவமம் கூறுதல்

அள்ளூர் நன்முல்லையார் குறிப்பு:

பாண்டிய நாட்டில் அள்ளூர் என்ற ஊரில் பிறந்தவர். தனது ஊரின் புகழை

கொற்றச் செழியன்
பிண்டட நெல்லின் அள்ளூ (அகம்: 46)

என்ற பாடல் வரிகள் மூலம் உணர்த்துகிறார். இவரது பாடல்கள் அகநானூற்றில் ஒரு பாடல் (பாடல்: 46) புறநானூற்றில் ஒரு பாடல் (பாடல்: 306) மேலும் குறுந்தொகையில் ஒன்பது பாடல்கள் (பாடல்எண்கள்: 32,67,68,93,96,140,157,202,237) என்று மொத்தம் பதினொன்று பாடல்கள் இவர் பாடியவை ஆகும்.

துறை விளக்கம் கூறுதல்

ஒவ்வொரு பாடலிலும் உரையாசிரியர் அவர்கள் பாடலின் பொருளை விளங்கிக் கொள்ளும்படி பாடலுக்கான சூழலை எடுத்துரைக்கின்றார். **'காலையும், பகலும், கையறு மாலையும்'(குறுந்:32:1)** எனத் தொடங்கும் பாடலில் தோழி வாயிலாக தலைவியைப் பெற நினைத்த தலைவன் என்னால் தலைவியைப் பிரியவும் இயலாது. அதனால் மடலேறுவதன் வாயிலாகத் தலைவியை அடைய முயன்றால் அது தலைவிக்கும் பழியை உண்டாக்கும். அவ்வாறு செய்யாமல் நான் உயிர் வாழ்தலும் இயலாது. ஆகவே உயிர்விடுதலே நன்று என்று துறை விளக்கத்தின் மூலம் பாடலுக்கான சூழலை எடுத்துரைக்கின்றார்.

தலைவியைப் பிரிந்து தலைவன் பரத்தையர் சேரிக்குச் சென்றிருந்தான். அதனால் தலைவி ஊடல் கொண்டாள். அவ்வூடலைத் தவிர்க்கும் பொருட்டுத் தோழியை தலைவன் தூதுரைத்தான். தோழியின் கூற்றை தலைவி மறுத்ததாக **"நன்னலந் தொலைய, நலமிகச் சாஅய்" (குறுந்: 93)** என்ற பாடல் அமைந்துள்ளது. இவ்வாறு ஒவ்வொரு பாடலுக்கும் விளக்கம் கூறியுள்ளார்.

மேற்கோள் காட்டுதல்

காலை முதலிய கால வேற்றுமைகள் காமம் கொண்டவர்களுக்குத் தோன்றாது. காமம் உள்ளம் முழுதும் தன்வயப்படுதிவிடும் இயல்புடையது. ஆகையால் அதன்மீது பற்று கொண்டவர்கள் அதைத்தவிர பிறிதொன்றை அறியமாட்டார்கள். இச்செய்தியை விளக்கும் வகையில் ,

எனைநான் என்பதறியேன் பகல்
இரவாவதும் அறியேன் (திருவாசகம்: உயிருண்)

இப்பாடலை மேற்கோளாகக் காட்டியுள்ளார்.

"பொழுது இடை தெரியிற் பொய்யே காமம்" என்றவாறு காமநோய் கொண்டவருக்கு மாலைப் பொழுது துன்பத்தைத் தரக்கூடியது. ஆகவே மாலையை 'கையறுமாலை' என்றும் 'ஊர்துஞ்சியாமம்' என்பது யான் மட்டும் தூங்காத யாமம் என்று எடுத்துரைக்கின்றார். இச்செய்தியை விளக்குவதற்காக ,

காலை யரும்பிப் பகலெல்லாம் போதாகி
மாலை மலரும் இந்நோய் (குறள்: 1227)

என்று திருக்குறளை மேற்கோளாகச் சுட்டுகிறார்.

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

பெண்களின் நகம் கிளியின் அலகு போன்று இருக்கிறது என்பதற்கு **'நுதிவிரல் சிவப்பக் கதியறிந்தியக்கலின்' (பெருங்கதை: 4-7:41-3) 'கிளிவாய் ஒப்பின் ஒளிவிடு வள்ளுகிர்' (பொருந: 34)** போன்றவற்றை மேற்கோளாகக் காட்டியுள்ளார். உளுந்து பனிக்காலத்தில் காய் காய்க்கும் இயல்புடையது. இதனை விளக்கிக் கூறுவதற்கு **"இரும்பனிப் பருவத்து மயிர்க்காய் உளுந்து" (நற்:89)** என்ற மேற்கோள் காட்டப்பட்டுள்ளது.ஊடல் என்பது அன்புடைய தலைவனிடத்தில் தலைவிக்கு வருவது. அன்பில்லாதவரிடத்தில் ஊடுதல் பயனில்லை என்பதை ,

நோத லெவன் மற்று நொந்தா ரென்ற ஃதறியும்
காதலர் இல்லா வழி (குறள்: 1308)

என்ற குறளை மேற்கோள்காட்டி விளக்கியுள்ளார்.

உவமை கூறுதல்

உவமையின் வாயிலாகப் பொருளைக்கூறி விளக்கும் உத்தியை நூலாசிரியர் மட்டுமல்லாமல் உரையாசிரியர்களும் மேற்கொண்டுள்ளனர். **"உள்ளார் கொல்லோ" (குறுந்:67)** என்ற பாடலில் மகளிரின் விரல் நுனிக்கு கிளிவாய் உவமையாகக் கூறப்பட்டுள்ளது. மலை தன்னிடம் இருந்து விழும் அருவியால் வேங்கை பொழிலினை வளப்படுத்தும். அதுபோல தலைவனும் நம்மை அருளுவான் என **"அருவி வேங்கை' (குறுந்:96)** என்ற பாடல் வாயிலாக அருவியைத் தலைவனாகவும் வேங்கைப் பொழிலைத் தலைவியாகவும் உவமைப்படுதிக் கூறியுள்ளார். நெருஞ்சி மலர் காட்சிக்கு இனியதாக இருக்கும். பின்னர் காய்ந்தபின்பு துன்புறுத்தும் முள்ளாக மாறும். அதுபோல தலைவனும் முதலில் இன்பம் செய்து பின்னர் பிரிந்து துன்பம் செய்தான் என்ற உவமையை,

நோம் என் நெஞ்சே நோம், என் நெஞ்சே
புன்புலத்து அமன்ற சிறியிலை நெருஞ்சிக்
கட்குஇன் புதுமலர் முட்பயந் தாஅங்கு
இனிய செய்த நம் காதலர்
இன்னா செய்தல் நோம்என் நெஞ்சே (குறுந்:202)

இப்பாடல் மூலம் விளக்குகிறார்.

மரபுகளை எடுத்துரைத்தல்:

சங்க காலத்தில் மகளிர் பொற்காசுகளை புதுநாணில் கோர்த்து அணியும் வழக்கம் உடையவர்களாக இருந்தனர். மேலும் பொற்காசுகள் வேப்பம்பழம் போன்று உருண்டை வடிவில் இருந்தது என்பதை,

...வேப்ப ஒண்பழம்,
புதுநாண் நுழைப்பான் நுதிமாண் வள்ளுகிர்ப்
பொலங்கல ஒருகா சேய்க்கும் (குறுந்:67)

பாடல் வாயிலாக பழங்காலத் தமிழர் மரபை அறிய முடிகிறது.

ஆண் ஓந்தி வலப்புறமாக எதிர்ப்படுதல் நன்னிமிதமாக கருதப்பட்டது என்பதை

வேதின வெரிநின் ஓதி முதுபோத்து
ஆறுசெல் மாக்கள் புல்கொளப் பொருந்தும்(குறுந்:140:1-2)

இப்பாடல் உணர்த்துகின்றது. தலைவி பூப்பெய்திய மூன்று நாட்களும் தலைவன் அவளோடு கூடுதல் கூடாது. ஏனெனில் பூப்புற்ற முதல் நாள் கூடி நின்ற கரு வயிற்றில் அழியும். இரண்டாம் நாள் கூடின் நின்ற கரு வயிற்றிலே சாகும். மூன்றாம்நாள் கூடின் நின்ற கரு

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

குறுவாழ்க்கை உடையதாக இருக்கும் என்ற மரபுச் செய்தியை பொ.வே.சோமசுந்தரனாரின் உரை வாயிலாக அறிந்து கொள்ள முடிகிறது.

இலக்கண குறிப்புரைத்தல்

உரையாசிரியர் சில இடங்களில் இலக்கணக் குறிப்புகளையும் எடுத்துக் காட்டியுள்ளார். குறுந்தொகை 67-வது பாடலில் ' **நுழைப்பாள்'** என்ற வார்த்தைக்கு நுழைக்கும் பொருட்டு **'பான்'** விகுதி பெற்ற வினையெச்சம் என்று குறிப்பிட்டுள்ளார். சிலர் இதனை உயர்திணை ஆண்பாலாகக் கொண்டு நுழைக்கும் பொற்கொல்லன் எனவும் பொருள் கொள்ளுவர். இருப்பினும் நூலற்ற அணிகலன்களை புதுநாணில் கோர்க்கும் தொழிலுடையவர் பெண்களே என்பதால் நுழைப்பான் என்ற வார்த்தையை நுழைப்பாள் என்று உரையாசிரியர் மாற்றியுள்ளார்.

அருஞ்சொற்பொருள் கூறுதல்

தற்போது வழக்கத்தில் இல்லாத பொருள் புரிந்து கொள்ள முடியாத கடினமான சொற்களுக்கு உரையாசிரியர் பொருள் கூறியுள்ளார். ' **வேதினம்'** என்ற சொல்லுக்கு **'ஈர்வாள்'** என கூறியுள்ளார். ஈர்வாள் என்பது இக்காலத்தில் ரம்பம் என வழங்கப்படுகிறது.

'போத் ஓந்தி' என்பதை ஆண் ஓந்தி எனக் குறிப்பிடுகிறார். போத்து என்பது ஆண்பாலுக்குரிய மரபு பெயராகும். **'புள் '** என்பதற்கு நிமித்தம் எனவும் பொருள் கூறுகிறார். **'துட்டு-அச்சம், வாள்-காலம், ஆல்-ஆசை, மலைவு-இடையூறு** என்றவாறு சொற்பொருள் விளக்கம் தருகிறார்.

உள்ளுறை உவமம் கூறுதல்

உள்ளுறை உவமம் என்பது உள்ளுருத்துச் சொல்லப்படுகின்ற ஒரு உவமையாகும். புலவர் தாம் கூறக் கருதிய பொருளை வெளிப்படையாக வேறுபொருள் தோன்றக் கூறி பின்பு அப்பொருளே தான் கருதிய பொருளுக்கு உவமையாகும்படி கூறுதலே உள்ளுறை உவமையாகும். இதனை,

வேதின வெரிநின் ஓதி முதுபோத்து
ஆறுசெல் மாக்கள் புள்கொளப் பொருந்தும்,
சுரனே சென்றனர், காதலர்; உரன் அழிந்து
ஈங்குயான் தாங்கிய எவ்வம்
யாங்குஅறிந் தன்று – இவ் அழுங்கல் ஊரே? (குறுந்:140)

தலைவன் பொருள் தேடி பாலை நிலத்தின்கண் செல்லும்போது ஆண் ஓந்தி எதிர்ப்படும். அது நன்நிமித்தம் என்று தோழி கூறுவாள். தலைவர் பிரியும் பொழுது செலவு அழுங்குவித்தல் செய்யாது அவர் பிரிவதற்கு இயைந்து ஒழுகினாய் என்றவாறு உள்ளுறையானே தோழியை இடித்துரைத்தாள். இவ்வாறு உள்ளுறை உவமையை தன் உரை வாயிலாக விளக்கிக் கூறுகிறார்.

தொகுப்புரை

- பாடலின் பொருளை தெளிவாக புரிந்து கொள்ளும் வண்ணம் பொ.வே.சோ அவர்கள் ஒவ்வொரு பாடலின் முன்பும் துறை விளக்கம் கூறித் தெளிவுபடுத்துகிறார்.
- பாடலின் உட்கருத்தை படிப்பவர்கள் உள்வாங்கும் விதமாக பல நூல்களில் இருந்து மேற்கோள்களை எடுத்துக்காட்டி விளக்குகிறார்.
- உவமையின் வாயிலாகவும் பாடலுக்கு பொருள் கூறி தெற்றன விளங்கச் செய்கிறார்.
- உரையாசிரியர் தன் உரை வாயிலாக சங்ககால மக்களின் வாழ்வியல் மரபுகளையும் எடுத்துக் கூறுகிறார்.
- பாடலில் வரும் இலக்கணக் குறிப்புகளையும் புலப்படுத்துகிறார்.
- அருஞ்சொற்பொருள்களின் மூலம் புதிய சொற்களுக்கு விளக்கம் கூறுகிறார்.

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

- உள்ளுறை உவமம் என்ற உத்தியை பயன்படுத்தியும் தன்னுடைய உரைக்கு வளம் சேர்த்துள்ளார்.

துணைநூற்பட்டியல்

[1] உரையாசிரியர்கள். மு.வை.அரவிந்தன், மணிவாசகர் நூலகம், 31, சிங்கர் தெரு, பாரிமுனை, சென்னை – 600108. எட்டாம் பதிப்பு – சனவரி2018.

[2] குறுந்தொகை திறனுரைகள். முனைவர் ஆ. மணி. தமிழன்னை ஆய்வகம், புதுச்சேரி- 9.

[3] குறுந்தொகை. உரையாசிரியர், பொ.வே.சோமசுந்தரனார், கழக வெளியீடு,திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிக்கழகம், சென்னை – 600 018, பதிப்பு – 2007.

[4] குறுந்தொகை விளக்கம். அண்ணாமலைப் பல்கலைக்கழகம், தமிழ் நூல் வெளியீடு,1958.

[5] குறுந்தொகை மூலமும் உரையும். மு.சண்முகம்பிள்ளை, தமிழ் பல்கலைக் கழக வெளியீடு, தஞ்சாவூர், பதிப்பு – 1994.

[6] சங்கப் புலவரின் பல்துறை அறிவு. முனைவர் ந.கடிகாசலம். மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம்- 608001.

[7] திருக்குறள். பரிமேலழகர் உரை. கௌரா ஏஜென்ஸீஸ், திருவல்லிக்கேணி, சென்னை.

[8] திருவாசகம் திருச்சதகம். பண்டிதமணி கதிரேசன் செட்டியார், சென்னை, 2010.

[9] நல்லிசைப் புலமை மெல்லியலாளர்கள். மகாவித்துவான் ரா.ராகவையங்கார். நாம் தமிழர் பதிப்பகம், சென்னை – 600 004, முதற்பதிப்பு – ஜூலை 2009.

[10] நற்றிணை. உரையாசிரியர், சு.வே. பாலசுப்ரமணியம், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை – 600 098, 2004.

[11] நற்றிணை. பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் உரை, கழக வெளியீடு, திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிக்கழகம், 522, டி.டி.கே. சாலை, ஆழ்வார்பேட்டை, சென்னை – 600 018. மறுபதிப்பு – 2007.

தமிழில் இக்கட்டுரையை இவ்வாறு மேற்கோளிடுங்கள்:

ரிஸ்வானா பர்வீன். "பொ.வே. சோமசுந்தரனாரின் உரைத்திறன்." *தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்,* தொகுதி 3, சிற.இதழ் 2, தொகுதி 2, *திசம்பர்* 2020, பக். 342-347. டிஓஐ: **10.38067/ijtlls.2020.spl.v03i02v2.050**

Cite this Article in English (*MLA 8 Style*) as:
Rishwana Parveen. "Textual Effectiveness of Po.Ve. Somasundaranar." *International Journal of Tamil Language and Literary Studies*, Vol. 3: Special Issue - 2, Vol. 2, December 2020, pp. 342-347. DOI: **10.38067/ijtlls.2020.spl.v03i02v2.050**

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி /Author Contribution Statement: இல்லை /NIL

கட்டுரையாளர் நன்றியுரை /Author Acknowledgement: இல்லை /Nil

E-ISSN: 2581-7140
UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020
Available at: www.ijtlls.com

கட்டுரையாளர் உறுதிமொழி/Author Declaration: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்./I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் அரையாண்டு பன்னாட்டு ஆய்விதழ்

International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

அகக்கவிதை உரையில் மரபு மாற்றமும் மயக்கமும்

Legacy Changes and Fainting in the Writings of Love (Akam) Poems

ந. ரேவதி, முனைவர்பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, பாரதியார் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் – 46
N. Revathi, Department of Tamil, Bharathiar University, Coimbatore
ORCiD: https://orcid.org/0000-0003-4139-9006
சு. ஆனந்தவேல், உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, பாரதியார் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்.
S. Ananthavel, Assistant Professor, Department of Tamil, Bharathiar University, Coimbatore
ORCiD: https://orcid.org/0000-0002-78324588
DOI: 10.38067/ijtlls.2020.spl.v03i02v2.051

Abstract

This research paper is about how the text changes are found in "Kurundhokai" and "Kalithokai" that differ from the "Tolkappiyam". Fainting and change are the basic concept of scholar thinking in poetry. The hypothesis of this article is the result of changes in their interpretations of the later writers. Basically, the grammatical literature of the "Tolkappiyam" period refers to various traditions. Legacy changes when it gets changes from its status quo. The fainting of that time and period, the fainting of the statement, and the textual change of the text author can be seen in the change which has taken place somewhat from the legacy of the "Tolkappiyam". It can be seen widely in the poetry of the Sangam Literary works "Kurundhokai" and "Kalithokai". Hence, the article focuses to bring down the related ideas and neo insights from the authentic sources.

Keywords: Textual Change, Fainting, Love (Akam) Poems

குறுந்தொகை மற்றும் கலித்தொகையில் காணலாகும் உரையாசிரியர்களின் உரை மாற்றங்கள் எவ்வாறு தொல்காப்பியர் கூறிய அகமரபிலிருந்து மாறுபட்டு காணப்படுகின்றது என்பதே இவ்வாய்வுக் கட்டுரையாகும். மயக்கமும் மாற்றமும் ஒரு பாடலில் நிகழ உரையாசிரியர்களின் சிந்தனையே அடிப்படையான கருத்தாக விளங்கி வருகின்றது. இந்நிலையில் அவர்களின் விளக்கங்களில் காணலாகும் மாற்றங்களின் விளைவே இக்கட்டுரைக்கு கருதுகோளாக அமைந்துள்ளது. தொல்காப்பியர் காலம் முதல் இலக்கண இலக்கியங்கள் பல்வேறு மரபுகளைக் கூறுகின்றன. மரபு என்ற சொல் சங்க இலக்கியங்களில் முறைமை, தகுதி, இயல்பு, தன்மை, பண்பு, திறல், மேம்பாடு, சுவை என்னும் பொருண்மையில் கையாளப்பட்டுள்ளது. முறைமை என்பதற்கு தமிழகராதி அடைவு, ஒழுக்கம், உறவு, இராசநீதி, ஊழ், தன்மை, உரிமை என்ற பொருள்களைத் தருகின்றது. சங்க இலக்கியத்தில் எழுபத்தி மூன்று இடங்களில் 'மரபு' என்னும் சொல் ஆட்சி பெற்றுள்ளது. எட்டுத்தொகை இலக்கியத்தில் ஐம்பத்தேழு இடங்களிலும் பத்துப்பாட்டு இலக்கியத்தில் பதினாறு இடங்களிலும் இச்சொல் பயின்று வந்துள்ளது.

மரபு திறனாய்வாளர்களின் விளக்கம்

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

- மரபு என்பதற்குத் தமிழகராதி ***"முறைமை, சான்றோரின் சொல் வழக்குமுறை, பழமை, வமிசம், பாரம்பரியம், இயல்பு, இலக்கணம், நல்லொழுக்கம், பெருமை, மேம்பாடு, நியாயம், வழிபாடு, பருவம், எனப் பதின்மூன்று பொருள்களைத் தருகின்றது."*** (தமிழகராதி (தொ.4), ப.3086).
- மேலை இலக்கியச் சொல்லதிகராதி மரபு என்னும் சொல் ஓர் எழுத்தாளன் தனக்கு முந்திய இலக்கியத்திடமிருந்து ***"மரபுரிமையாகப் பெறுகின்ற இலக்கிய ஆசாரங்களையும், உத்திகளையும், வழக்கங்களையுமே குறிக்கின்றது. குறிப்பாக கடந்த கால நூல்களை ஒன்றோடோன்று காரண காரியங்களுடன் இணைக்கின்ற இணைப்பை இச்சொல் குறிக்கும்"*** என விளக்கும். (வை. சச்சிதானந்தன் (1983), மேலை இலக்கியச் சொல்லகராதி, ப.204).
- உ.வே. சாமிநாதையர், பொ.வே. சோமசுந்தரனார், ஔவை சு. துரைசாமிப் பிள்ளை ஆகியோர் மரபு என்பதற்கு ***"இயல்பு, தன்மை"*** எனப் பொருள் கொள்வார். (உ.வே.சாமிநாதையர் (உ.ஆ), (1955), குறுந்தொகை. ப.452, பொ.வே. சோம சுந்தரனார் (உ.ஆ) (1969), பரிபாடல், ப.7, ஔ.வை. துரைசாமிப்பிள்ளை (உ.ஆ) (1956), புறநானூறு, ப.228).
- அரசஞ்சண்முகனார் ***"மரபு என்பது தொன்றுதொட்டு வந்த வழக்கு"*** என்று உரைப்பார். (அரசஞ்சண்முகனார் (1905), தொல்காப்பிய பாயிர விருத்தி, ப.184).
- தொல்காப்பியச் செல்வம் ***"மரபு என்பது ஒவ்வொரு பெயருக்கும் ஆன்றோர் வழங்கிய சொற்களை அவர்கள் வழங்கிய முறைப்படியே கூறுதல் ஆகும்"***என்கிறது. (லெப. கரு. இராமநாதன் செட்டியார் (1966), தொல்காப்பியச் செல்வம், ப.97).
- வையாபுரிப்பிள்ளை ***"ஓர் இனத்தார் ஒரு பொருள் பற்றி வழக்கமாய் அனுசரித்து வரும் நியதியே மரபு என்பது ஆகும்"*** எனக் குறிப்பிடுவார். (எஸ். வையாபுரிப்பிள்ளை (1974), தமிழர் பண்பாடு, ப.76).
- ச.வே. சுப்பிரமணியன் ***"பழக்கத்தின் காரணமாக வழக்கம் ஏற்பட்டு அதிலிருந்து மரபாக நிலைபெறுகின்றது"*** என்று மொழிவார். (ச.வே. சுப்பிரமணியன் (1978), இலக்கணத்தொகை யாப்பு, பாட்டியல், ப.61).

மரபு என்பதற்கு நன்னூலார்

எப்பொருள் எச்சொலின் எவ்வாறு உயர்ந்தோர்
செப்பினர் அப்படிச் செப்புதல் மரபு (நன்.388)

என்பார். தொல்காப்பியர் முதல் இக்கால அறிஞர்கள் வரை தரும் விளக்கங்களிலிருந்து மரபு என்பது தொன்று தொட்டு வருவது என வரையறை செய்தல் பொருத்தம் உடையதாகும். ஒவ்வொரு காலத்திலும் அந்தந்த கால மரபுகளில் சில காலப்போக்கில் மாற்றமடைந்துள்ளதனை இலக்கண, இலக்கியங்கள் உணர்த்துகின்றன.

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

தொல்காப்பியத்தில் மரபு மாற்றம்

தொல்காப்பியர் மரபியல் முதல் நூற்பாவில் ***"மாற்றருஞ் சிறப்பின மரபியல்"*** [8] (தொல்காப்பிய நூற்பா.1500) என மொழிகுவர். எனினும் அவர் காலத்திய பல மரபுகள் அவர் காலத்திலும் அவரையடுத்த காலகட்டங்களிலும் மாற்றம் அடைந்துள்ளன. அம்மாற்றத்தின் ஒரு கூறாக உரையாசிரியரின் உரைத்திறத்தைக் கூறலாம். தொல்காப்பிய இயல்களில் சில மரபு எனவும் சில இயல் எனவும் பெயர் பெறுவதைக் கருத்தில் கொண்டு ஆ.சிவலிங்கனார், ***"மரபு என முடியும் இயல்களில் கூறப்பட்ட செய்திகள் காலப்போக்கில் மாறுபடுவதற்கு, மாற்றப்படுவதற்கு உரியன அல்ல எனக் கொள்ளலாம். இயல் என முடிவன மாறவோ - மாற்றப்படவோ உள்ளன எனலாம்"*** எனக் கூறுவார். (ஆ.சிவலிங்கனார் (1978), தொல்காப்பிய மரபியல்கள் (கட்டுரை), இ.ப.த.ம.க. ஆய்வுக்கோவை (தொ.2), ப.163).
இவரது இக்கூற்று தொல்காப்பியர் கால மரபுகள் மாற்றம் பெறுவன என்பதை தெளிவுபடுத்துவதாக உள்ளது எனலாம். தொல்காப்பியர் பொருளதிகாரத்தில் கூறியுள்ள அகமரபு சங்க இலக்கியத்தில் மாற்றம் பெற்றுள்ளதைக் காண முடிகின்றது.

மரபு மாற்றத்திற்கான காரணங்கள்

கால வளர்ச்சி, சமுதாயத்தின் மாற்றம், புதுமையை விரும்புதல் ஆகியன தொல்காப்பிய மரபிலிருந்து இலக்கியங்களுக்குப் பொருந்தும் மாற்றங்கள் என்னும் நிலைகளில் காணலாம்.

தொல்காப்பிய அகமும் சங்க இலக்கிய அகமும்

திணை என்பது போலவே அகம் என்பதற்கும் தொல்காப்பியர் தனியே விளக்கம் தரவில்லை. ***"அகப்பொருளாவது போக நுகர்ச்சியாதலான் அதனால் ஆய பயன் தானே அறிதலின் அகம் என்றார்"*** (தொல்காப்பியம், இளம்பூரணர் உரை, 947). என உரைப்பார் இளம்பூரணார். அதே சமயம் நச்சினார்க்கினியர் ***"ஒத்த அன்பால் ஒருவனும் ஒருத்தியும் கூடுகின்ற காலத்துப் பிறந்த பேரின்பம் அக்கூட்டத்தின் பின்னர் அவ்விருவரும் ஒருவருக்கொருவர் தத்தமக்குப் புலனாக இவ்வாறிருந்ததெனக் கூறப்படாததாய், யாண்டும் உள்ளத்துணர்வே நுகர்ந்து இன்பமுறுவதோர் பொருளாதலின் அதனை அகம் என்றார். எனவே அகத்தே நிகழ்கின்ற இன்பத்திற்கு அகமென்றது ஓர் ஆகுபெயர் என விளக்குவர்"*** (நச்சினார்க்கினியர் உரை. தொல்.947). என்கின்றார். அகம் என்பதனை இதிலிருந்து உள், உள்ளம், உள்ளத்துத்தோன்றல், மனமொத்த உணர்வு, மறைபொருள், இல்வாழ்வு என்று கூறலாம்.

அகம் என்ற சொல் சங்க இலக்கியத்தில் பல இடங்களில் வருகின்றது. அகத்தோர் என்பது அரசனுடைய நாட்டில் உள்ளோர் என்ற பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளது. அவ்வாறாக உள்ளே என்ற பொருளில் பயன்படுத்தப்பட்ட அகம் பின்னர் அவர்களின் அகத்தினுள்ளே நடைபெற்ற காதல் விவகாரங்களைக் குறிக்கப் பயன்படத் தொடங்கிற்று எனலாம். தொல்காப்பியர் தனது பொருளதிகாரத்தில் அகத்திணையியல், களவியல், கற்பியல்,

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

பொருளியல் என அகத்திணைக்கே முக்கியத்துவம் கொடுத்திருப்பது தமிழண்ணலின் கருத்தை உறுதிபடுத்தும் விதமாக அமைகின்றது.

மயக்கமும் மாற்றமும்

மயக்கம் வேறு மாற்றம் வேறு என்றே கொள்ள வேண்டியுள்ளது. மாற்றம் என்பது மரபு தன் நிலையிலிருந்து மாறியிருப்பது. அதாவது சொல்லிய நிலையிலிருந்து திரிந்து போயிருக்கலாம், முழுமையும் கூறியதற்கு எதிராக விளங்கலாம் அல்லது புதியன தோன்றியிருக்கலாம். மயக்கம் என்பது ஒரு நிலையிலிருந்து சற்றே நழுவி மயக்கமுறுமாறு கலந்திருப்பது எனலாம் அவை முழுமையும் மாறிப்போயினவல்ல. அவ்வாறு காண்கையில் திணை மயக்கம் என்பது நில மயக்கத்தை மற்றும் சுட்டுவதில்லை. அது கால மயக்கத்தையும் சுட்டியே பேசப்படுகின்றது. சிறுபொழுது மற்றும் பெரும்பொழுது மயக்குறும் போது அதனை கால மயக்கம் எனச் சுட்டிக்கூறுகின்றார் நச்சினார்கினியர்.

தொல் எழில் வரைத்து அன்றி வயவு நோய் நலிதலின்
…மே தக இளவேனில் இறுத்தந்த பொழுதின் கண்
…நோய் சேர்ந்த வைகலான் வாடை வந்து அலைத்தரூஉம்
…பாழ்கொண்ட இமிழ் இசை இயல் மாலை அலைத்தரூஉம்
…கடிமலர் கமழ் நாற்றம் கங்குல் வந்து அலைத்தரூஉம்! (29)

இப்பாடலில் வாடையும் இளவேனிலும் மாலையும் கங்குலும் இடம் பெற்றுள்ளன. இவை பாலைக்குரியன அல்ல. ஆதலால் இதில் காலம் மயங்கி வந்துள்ளது என நச்சினார்க்கினியர் கூறுகின்றார்.

சுரம் செல் யானைக் கல்உறு கோட்டின்
தெற்றென் இறீஇயரோ – ஐய! – மற்றுயாம்
நும்மொடு நக்க வால்வெள் எயிறே
பாணர் பசுமீன் சொரிந்த மண்டைபோல
எமக்கும் பெரும் புலவுஆகி
நும்மும் பெறேஎம் இறீஇயர் எம்உயிரே (குறு.169)

இப்பாடல் கற்பு காலத்தில் தலைவியால் பாடப்பட்டது என பேராசிரியரும் களவு காலத்தில் தோழியால் கூறப்பட்டது என நச்சினார்க்கினியரும் மொழிந்துள்ளனர். இதனை கூற்று மயக்கம் என உரைக்கலாம்.

மக்கள் நுதலிய அகனைந்திணையுள்
சுட்டி ஒருவர் பெயர் கொளப்பெறாஅர்

பாத்திரங்களின் பெயர் சுட்டப்பட்டால் அகப்பாடல் எனினும் புறத்திணையிலேயே சேர்க்கப்படும். உதாரணமாக பத்துப்பாட்டின் நெடுநல்வாடையில்

வேம்புதலை யாத்த நோன்கால் எஃகம்

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

என்னும் வரியின் வேம்பு என்றதனாலேயே அது பாண்டியனைச் சுட்டுவதாகக் கூறி அகப்புறம் என்றனர்.

நீர் முற்றி மதில் பொரூஉம் பகை அல்லால் நேராதார்
போர் முற்று ஒன்று அறியாத புரிசை சூழ்புனல் ஊரன் (மருதக்கலி.67)

நச்சினார்கினியர் அகத்திணை பாடலாக இதனைக் கொண்ட நிலையில், புனலூரன் என்று கூறியது பாண்டிய மன்னனையேயாகும் ஆதலால் இது அகப்புறம் சார்ந்த பாடல் என உரையாசிரியர் நச்சினார்க்கினியர் கூறுகின்றார். இதனை இளம்புரணாரும் ஒப்புக்கொள்கின்றார்.

பொய்கை ஆம்பல் அணிநிறக் கொழுமுகை
வண்டுவாய் திறக்கும் தண்துறை ஊரனொடு
இருப்பின் இருமருங்கினமே கிடப்பின்
வில்லக விரலின் பொருந்தி அவன்
நல்அகம் சேரின் ஒரு மருங்கினமே (குறு.370)

இது முல்லைத்திணைப் பாடலாகும். இதில் நச்சினார்க்கினியர் தலைவன் பரத்தையருடன் செறித்து கிடக்கும் நிலைக்கு வில்லைப்பிடித்த விரல்களை உவமையாக்கியுள்ளார். ஆனால் பாடலில் பரத்தை குறித்த செய்தி இடம் பெறவில்லை.

சேறும் சேறும்' என்றலின் பண்டைத் தம்
மாயச் செலவாத் செத்து 'மருங்கு அற்று
மன்னிக் கழிக என்றேனே அன்னோ
ஆசு ஆகு எந்தை யாண்டு உளன் கொல்லோ?
கருங்கால் வெண்குருகு மேயும்
பெருங்குளம் ஆயிற்று என் இடைமுலை நிறைந்தே குறு.325)

தலைவன் பரத்தையிற் பிரிந்தமை ஈண்டு வஞ்சகச் செலவு எனப்பட்டது என நச்சினார்க்கினியர் கூறுகின்றார். இது நெய்தல் திணைப்பாடலாகும். இப்பாடலிலும் பரத்தையர் குறித்த சொல் இடம் பெறவில்லை. இதே போல் குறுந்தொகை 252ஆவது குறிஞ்சித்திணைக்குரிய பாடலிலும் பரத்தையர் பிரிவு குறித்து உரையாசிரியர் பேசுகின்றார்.

தொகுப்புரை

சங்க இலக்கிய அகநூல்களான குறுந்தொகை மற்றும் கலித்தொகையில் தொல்காப்பியர் கூறிய மரபானது உரையாசிரியர்கள் மூலப்பாடலுக்கு உரை கூறும் போது தன் சிந்தனையை உரையில் ஏற்றிக் கூறியுள்ளார்கள் என்பதை தெளிவுற அறியமுடிகின்றது. கால மயக்கம், கூற்று மயக்கம், உரையாசிரிகளின் உரைகளின் மாற்றம் ஆகியவை சங்க இலக்கிய அக நூல்களான குறுந்தொகை மற்றும் கலித்தொகையின் மூலபாடலில் தொல்காப்பியர் கூறிய மரபிலிருந்து சற்றே அடைந்துள்ள மாற்றத்தை காணமுடிகின்றது.

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

பார்வை நூல்கள்

[1] அரசஞ்சண்முகனார், தொல்காப்பிய பாயிர விருத்தி, வித்யா வினோதினி முத்ராசாலை, தஞ்சை, 1905.

[2] இராமநாத செட்டியார். லெ.ப.கரு, தொல்காப்பியச் செல்வம், மாணிக்கம் பிரஸ், சென்னை.

[3] சச்சிதானந்தன். வை, மேலை இலக்கிய சொல்லகராதி, மாக்மில்லன் இண்டியா லிமிடேட், சென்னை, 1983.

[4] சிவலிங்கனார்.ஆ, தொல்காப்பிய மரபியல்கள், இ.ப.த.ம.க. ஆய்வுக்கோவை, தொ-2, தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், கோயம்புத்தூர், 1978.

[4] சுப்பிரமணியன். ச.வே, இலக்கணத்தொகை, யாப்பு, பாட்டியல், தமிழ்ப்பதிப்பகம், அடையாறு, சென்னை, 1978.

[5] சோமசுந்தரனார். பொ.வெ., (உ.ஆ) பரிபாடல் மறுபதிப்பு, திருநெல்வேலி சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1969.

[6] தமிழ் அகராதி, தொ- 4, சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை, 1938.

[7] துரைசாமிப்பிள்ளை, ஔவை, சு., (உ.ஆ) புறநானூறு, மறுபதிப்பு, திருநெல்வேலி சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1966.

[8] நாகராசன் .வி, (உ.ஆ), குறுந்தொகை, நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,சென்னை, 2017. மாணிக்கம்.வ.சுப, தமிழ்க்காதல், பாரிநிலையம், சென்னை, 1962.

[9] விசுவநாதன். அ, (உ.ஆ), கலித்தொகை, நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை,

[10] வையாபுரிப்பிள்ளை.எஸ், தமிழர் பண்பாடு, தமிழ்ப்புத்தகாலயம், சென்னை, 1974.

தமிழில் இக்கட்டுரையை இவ்வாறு மேற்கோளிடுங்கள்:

ரேவதி & சு. ஆனந்தவேல். “அகக்கவிதை உரையில் மரபு மாற்றமும் மயக்கமும்.” *தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்*, தொகுதி 3, சிற.இதழ் 2, தொகுதி 2, *திசம்பர்* 2020, பக். 348-353. டிஒஐ: **10.38067/ijtlls.2020.spl.v03i02v2.051**

Cite this Article in English (*MLA 8 Style*) as:
Revathi & Ananthavel. “Legacy Changes and Fainting in the Writings of Love (Akam) Poems.” *International Journal of Tamil Language and Literary Studies*, Vol. 3: Special Issue - 2, Vol. 2, December 2020, pp. 348-353. DOI: **10.38067/ijtlls.2020.spl.v03i02v2.051**

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி /Author Contribution Statement: இல்லை /NIL

கட்டுரையாளர் நன்றியுரை /Author Acknowledgement: இல்லை /Nil

கட்டுரையாளர் உறுதிமொழி/Author Declaration: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்./I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140
UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020
Available at: www.ijtlls.com

நன்னூல் உரை வகைகளும் மறுப்புரை மரபுகளும்

Nannool: Text Types and the Ethics of Disclaimer

முனைவர் கு. வடிவேல்முருகன், உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, உருமு தனலெட்சுமி கல்லூரி, திருச்சிராப்பள்ளி.
Dr.G.Vadivelmurugan, Assistant Professor, Dept. of Tamil, Urumu Dhanalakshmi College, Tiruchirappalli.
ORCiD: https://orcid.org/0000-0002-6549-2232
DOI: 10.38067/ijtlls.2020.spl.v03i02v2.052

Abstract

The various texts written for the Nannool was not only for understand the Tamil Grammar and Literature, but also to understand words and its meanings with change towards time to realize the semantic changes for the words, to understand the semantic developmental stages, and to define the semantics for the words while we are doing dictionaries for the ancient Tamil Literature. The mostly various written texts in Tamil Grammar is the Nannool. This article is going to describe about nannool text with its specifics and text was Mayilainathar followers Ethics of Disclaimers.

Keywords: Nannool, Urai, Kandigai Urai, Viruthiyurai, Text Types, Ethis of Disclaimer

உரை வகைமைகள்

மூலபாடத்திற்குக் கருத்துரையும், சொல்வகையும், சொற்களுக்குரிய பொருள்களும், பொழிப்புரையும், விரிவுதரும் அகலவுரையும், உதாரணவுரையும், வினா - விடைகளை வேண்டியளவு தந்துரைத்தலும், வேற்றுமை உருபு முதலியவை இடைவரின் அவற்றை விரித்துரைத்தலும், எடுத்துக்கொண்ட அதிகாரத்தை விளக்குவதும், நூற்பாவின் பொருள் இதுவென அவ்வதிகாரத்தோடு பொருந்த உரைத்தலும், இப்படிச் சொல்லியதனால் வந்த பயன் இதுவென உரைத்தலும், ஆசிரியரின் கருத்தேற்றம் காட்டுதலும் எனப் பலவகையாலும் ஒரு நூலுக்கு உரை வகுக்கப்பெறுதல் உண்டு என்பது நன்னூல் (நூ.21) கருத்து.

தமிழ் இலக்கிய வகைமைகளைப்போல் உரை மரபும் சில வகைமைகளைத் தன்னுள் கொண்டுத் திகழ்கின்றது. தொல்காப்பியம், நன்னூல் உள்ளிட்ட இலக்கண நூல்கள் தமிழில் வழங்கும் இலக்கண உரைகளை அவற்றின் அமைப்பின் அடிப்படையில் காண்டிகையுரை, விருத்தியுரை எனப் பாகுபடுத்திப் பார்க்கும் போக்கை வளர்த்துள்ளன. தமிழில் காண்டிகையுரை, விருத்தியுரை, அரும்பத உரை என்ற பெயர்ப்பாகுபாட்டுடன் உரை நூல்கள் தோன்றியுள்ளனவேயன்றி, இன்ன உரை இன்ன காலத்தில் தோன்றியது என்று அறுதியிட்டுக் கூறுவதற்கான சான்றுகள் கிடைக்கவில்லை. தமிழ் மரபில் உரைகளை அவற்றின் அமைப்பின் அடிப்படையில் பாகுபடுத்திப் பார்க்கும் தன்மை தொல்காப்பியத்திற்கு முன்பிருந்தே கருக்கொண்டுவிட்டது என்று கூறலாம். இதனைத் தொல்காப்பியர் குறிப்பிடும் உரை வகைகள் குறித்த நூற்பாக்களின் வழி அறியலாம்.

உரை வகைமைகள் - தொல்காப்பியம் தரும் விளக்கம்

தொல்காப்பியம் காண்டிகை, உரை என்னும் இரண்டையே உரையின் வகைகளாகக் கூறியுள்ளது.

பழிப்பில் சூத்திரம் பட்ட பண்பின்
கரப்பின்றி முடிவது காண்டிகை யாகும் (தொல்.பொருள்.நூ.647)
விட்டகல் வின்றி விரிவொடு பொருந்திச்
சுட்டிய சூத்திரம் முடித்தற் பொருட்டா
ஏது நடையினும் எடுத்துக் காட்டினும்
மேவாங்கு அமைந்த மெய்ந்நெறித் ததுவே (தொல்.பொருள்.நூ.648)

மேற்கண்ட இரண்டு நூற்பாக்களும் காண்டிகை உரையின் இலக்கணம் கூறவந்தவை. காண்டிகை என்பது 'நூற்பா நுவலும் பொருளிலிருந்து விலகாமல் தகுந்த எடுத்துக்காட்டுக்களைக் காட்டி உரை அமைப்பது' என்பதாகும். இனி, 'உரை' என்பது குறித்துப் பின்வரும் நூற்பாக்கள் அமைகின்றன.

சூத்திரத்து உட்பொருள் அன்றியும் யாப்புற
இன்றி யமையாது இயைபவை எல்லாம்
ஒன்ற உரைப்பது உரையெனப் படுமே (தொல்.பொருள்.நூ.649)
மறுதலைக் கடாஅ மாற்றமும் உடைத்தாய்த்
தன்னூ லானும் முடிந்த நூலானும்
ஐயமும் மருட்கையும் செவ்விதின் நீக்கித்
தெற்றென ஒருபொருள் ஒற்றுமை கொளீஇத்
துணிவொடு நிற்றல் என்மனார் புலவர் (தொல்.பொருள்.நூ.650)

நூற்பாவிற்கு உரிய உரை மட்டுமின்றி உரைக்கு மறுதலையாய் உடையனவற்றைப் பற்றி வினவுதலும், அவ்வினாவிற்கு விடை கூறுதலும், ஐயம் ஏற்படும் இடங்களையும் மயக்கம் ஏற்படும் இடங்களையும் தெளிவாக விளக்கி, முறையாக ஒரு பொருளினை வரையறுத்து, அதனைத் துணிந்து உரைத்தலே உரையின் இலக்கணமாகத் தொல்காப்பியம் வரையறுக்கிறது. இங்கு, 'உரை' என்ற சொல் 'விருத்தி' என்னும் பொருளில் தொல்காப்பியரால் ஆளப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. ஆக, காண்டிகையும் உரையுமே தொல்காப்பியர் காலத்தில் உரை வகைகளாக அமைந்திருந்தன.

உரை வகைமைகள் - நன்னூல் தரும் விளக்கம்

கருத்து, பதப்பொருள், காட்டு, வினா, விடை ஆகிய ஐந்து கூறுகளினால் சூத்திரத்தின் உட்பொருளை விளக்குவது காண்டிகையுரை எனப்படும். காண்டிகை என்பதற்குப் பவணந்தி முனிவர்,

கருத்து பதப்பொருள் காட்டு மூன்றினும்
அவற்றொடு வினாவிடை யாக்க லானும்
சூத்திரத்து உட்பொருள் தோற்றுவ காண்டிகை (நன்னூல்.நூ.22)

என்று உரைக்கின்றார். விருத்தியுரை என்பதனை நன்னூலார் கூறுமிடத்து, 'காண்டிகை உறுப்புகளோடு வேண்டிய விளக்கங்கள் தந்து, தான் தரும் விளக்கங்களுக்கு ஆன்றோர் நூல்களிலிருந்து மேற்கோள்கள் காட்டி விளக்கி, விரித்து எழுதுவதே விருத்தியுரை' என்பதை,

சூத்திரத்து உட்பொருள் அன்றியும் ஆண்டைக்(கு)
இன்றி யமையா யாவையும் விளங்கத்
தன்னுரை யானும் பிறநூ லானும்
ஐயம் அகலஐங் காண்டிகை உறுப்பொடு
மெய்யினை எஞ்சாது இசைப்பது விருத்தி (நன்னூல்.நூ.23)

என்று உரைக்கின்றார் பவணந்தி முனிவர்.

சுருக்கமாகக் கூறினால், நன்னூல் உரைகளுள் காண்டிகை உரையின் கூறுகளாகக் கருத்துரை, பொழிப்புரை, உதாரணவுரை என்ற மூன்றையும் விருத்தியுரைக் கூறுகளாக விளக்கவுரை, அகலவுரை, துணிவுரை, விசேடவுரை, துணிவுரை, பயனுரை ஆகியனவற்றையும் கூறலாம்.

உரை வேறுபாடுகள்

பொதுவாக, மறுப்புரை ஏற்படுவதற்குரிய காரணங்கள் உரை வேறுபாடுகளேயாகும். ஒரே நூலுக்கு உரையெழுதிய உரையாசிரியர்கள் தங்களுக்குள் பல்வேறு நிலைகளில் கருத்து வேறுபாடு கொள்கின்றனர். இதற்கு அடிப்படையாக அமைவது கால வேறுபாடாகும். ஒரு குறிப்பிட்ட காலத்தில் வழங்கிவரும் மரபுகளும், பொருள் முடிபுகளும் அடுத்த நூற்றாண்டில் மாறுபடலாம். இவ்வாறு மாறுபடுகின்ற பொழுது உரை நூல்களிலும் சிலபல மாற்றங்கள் நிகழ்கின்றன. உரையாசிரியர்களுக்குக் கிடைத்துள்ள மூலாதாரங்களின் அளவைப் பொறுத்தும் உரையில் கருத்து வேறுபாடுகள் தோன்றுகின்றது. உரையாசிரியர்கள் சார்ந்துள்ள சமய, சமுதாய, அரசியல் பின்னணிகளும், அவர்தம் உரை வேறுபாடுகளுக்கு அடிப்படையாகின்றன. அனைத்திற்கும் மேலாக உரையாசிரியர்களின் புலமைத்திறனும், சிந்தனைத்திறனும், திறனாய்வுப் பார்வையும் உரை வேறுபாட்டிற்கு மிக முக்கிய காரணங்களாக அமைகின்றன. ஏடெழுதுவோரின் கவனப் பிழையால் புகுந்த பாடவேறுபாடுகளும், நூற்பாவைப் பிரிக்கும் முறைகளும், சொற்களைக் கொண்டு கூட்டும் நெறிகளும், காலத்தால் சொற்கள் எய்திய பொருள் வேறுபாடுகளும், சமுதாயத்தின் பழக்க வழக்க மாறுபாடுகளும் இயல்பாகவே உரைவேற்றுமைக்கு வழிவகுத்துவிட்டன.

மறுப்புரை மரபுகள்

நன்னூலுக்கு எழுந்துள்ள உரைகளுள் மயிலைநாதர் உரையே மிகுதியாக சங்கரநமச்சிவாயரால் மறுக்கப்பட்டுள்ளது. மயிலைநாதர் உரை மட்டுமின்றி நன்னூல் உரைகளில் பயன்படுத்தப்பட்டுள்ள தொல்காப்பிய உரையாசிரியர்களின் கருத்துக்களும் சில இடங்களில் மறுத்துரைக்கப்பட்டுள்ளன. ஆயினும், மறுப்புரை வழங்குமிடத்து எந்த உரையாசிரியர்களையும் பெயரைச் சுட்டி 'இன்னார்' என்று குறிப்பிட்டுக் கூறவில்லை. அதேபோல், உரை மறுப்பில் வெவ்வேறு உத்தி முறைகளைக் கையாளுகின்றமையையும் காண முடிகின்றது. அதாவது மூலபாடச்சான்று, மூலநூல் விதிகள், நூற்பாக்களின் இயைபு,

முதல்நூல் மரபு, இலக்கிய வழக்கு, காரணங்களின் தொகுப்பு, உவமை, நகைச்சுவை நடை முதலிய உத்தி முறைகளைப் பயன்படுத்தி உரையாசிரியர்கள் முன்னையக் கருத்துக்களை மறுத்துரைக்கின்றனர்.

இலக்கியம் அல்லது இலக்கணங்கள் உரைகாரர்களால் தொட்டனைத்தூறும் மணற்கேணியாக உருமாறுகிறது. அதாவது, ‘மூல பாடம்’ என்ற ஒரு செல்வத்தை நூலாசிரியர் வழங்கியுள்ளார் என்றால், அதற்கு ‘உரை’ என்ற புதுச் செல்வத்தை வாரி வழங்கியுள்ளனர் பல உரையாசிரியர்கள். பல்வேறு அறிஞர்கள், பல்வேறு காலத்தில் மூலத்திற்கு உரை இயற்றும்போது அவரவரது புலமைக்கும் பார்வைக்கும் ஏற்பக் கருத்து வேறுபாடுகள் எழுகின்றன. மூலத்தை மறுத்து எழுதப்பட்ட ஒரு கருத்துக்கு அல்லது உரைகோளுக்கு எதிர் கருத்துரை எழும்போது முன்னதன் உரைக்கு மறுபடியும் மறுப்புரை எழுகின்றது. இவ்வாறு ஒரு நூற்பாவோ, நூற்பாவில் ஒரு சொல்லோ, தொடரோ கூட பல உரைகளைப் பெற்றிருப்பதனைக் காணலாம்.

மறுப்புரை கூறும் பாங்கு

உரையாசிரியர்கள் மறுப்புரை கூறும் பாங்கு சிறப்புற அமைந்துள்ளது. ‘அது பொருந்தாது என்க’, ‘அது பாடம் அன்று’, ‘அது நூற்கருத்து அன்று என்க’, ‘அஃது உரை அன்று என்க’, ‘அது பொருள் அன்று என்க’, ‘அவர் காட்டும் உதாரணங்களுள் காண்க’, ‘வேறுபொருள் கூறுவாரும் உளர்’, ‘அது நிற்க’, என்று பல நூற்பா விளக்கங்களில் சங்கர நமச்சிவாயரும், சிவஞானமுனிவரும் மறுத்துக் கூறுகின்றனர். மேலும், சிற்சில நூற்பாக்களில், ‘இத்தொடக்கத்து வழாநிலைகளை இடவழுவமைதியாக உதாரணம் கூறுவார் கூற்றை எல்லாம் உய்த்துணர்ந்து களைக’, ‘அது மொழிமாற்றிற்கும் கொண்டு கூட்டிற்கும் வேற்றுமை உணராற் கூற்றாம் என்க’ என்று வலுவாக மறுப்பதனையும் அறிய முடிகின்றது. உதாரணமாக, **மக்கள் தேவர் நரகர் உயர்திணை மற்றுயிர் உள்ளவும் இல்லவும் அஃறிணை (நன்னூல்.நூ.261)** எனும் நூற்பாவிற்கு உரிய மயிலைநாதர் உரையை மறுத்துக் கூறுமிடத்து, “‘திணை நிலம் குலன் ஒழுக்கம்’ என்ப ஆகலின் திணை என்னும் பல பொருள் ஒரு சொல் ஈண்டுக் குலத்தினை உணர்த்தி நின்றது. உயர்திணை அல்லாத திணை அஃறிணை எனப்பட்டது. இவ்விரண்டும் பண்புத்தொகை… உயர்திணையை உயர்ந்த திணை என இறந்தகால வினைத்தொகையாக விரிக்கின், மரம் நாடோறும் உயர்ந்தமை கருதி உயர்மரம் எனவும் கல்வியறிவு நாடோறும் உயர்ந்தமை கருதி அதனையுடையார் மேலேற்றி, உயர்மக்கள் எனவும் கூறும் வினைத்தொகைபோல, உயர்திணை என்பதற்கு உயரும் புடைபெயர்ச்சி வினை காட்சி வகையானும் கருத்து வகையானும் இன்மையின் அது வினைத்தொகை அன்று எனவும் கொள்க” (நன்னூல் மூலமும் விருத்தியுரையும், ப.202) என்று சங்கரநமச்சிவாயர் மயிலைநாதருரையை மறுத்துரைப்பதனைக் காணமுடிகிறது.

தருக்க முறையில் மறுத்தல்

உரையாசிரியர்கள் பொருள் காணும்போது புது விளக்கங்கள் தருவதோடு மட்டுமன்றி, மற்றைய உரையாசிரியர்களை மறுத்தும் மொழிகின்றனர். எதிரெதிரான இரண்டு கருத்துகளால் ஏற்படும் கருத்து மோதல்களில் உரையாசிரியர்கள் பின்பற்றும் வழிமுறைகள்

வேறுவேறானதாக இருக்கலாம். சிலர் மாற்றாரைத் தூசெனக் கருதி மறுக்கலாம்; சிலர் மாற்றாரை மதித்து மறுக்கலாம்; சிலர் கருத்தினை மறுப்பதைவிட அக்கருத்திற்கு உரியவரைத்தான் எதிர்க்கிறார் எனப் பொருள் தாண்டியும் போய்விடலாம்; சிலர் கருத்தை மட்டுமே மறுக்கலாம்; சிலர் எதனையும் சுட்டி மறுக்காது புதியது ஒன்றை நிறுவலாம்.

உரையாசிரியர்கள் தம் மறுப்புக்கு ஏற்ப இலக்கிய மேற்கோள்களையும், தம் காலத்திய உலக வழக்காறுகளையும், தொல்காப்பியம் முதலான பழைய இலக்கண நூற்பாக்களையும், வடமொழி இலக்கண நெறிகளையும் எடுத்துக்காட்டி விளக்கியுள்ளனர். நன்னூலைப் பொறுத்தவரை உரையாசிரியர்கள் மறுப்புரைக்கும் இடங்கள் இரு திறத்தை உடையனவாகும். தொல்காப்பிய உரையாசிரியர்களை, பிற இலக்கண ஆசிரியர் மற்றும் உரையாசிரியர்களை மறுப்பது. நன்னூலுக்கு எழுந்த பிற உரைகளைக் காணுவதில் உண்டாகும் கருத்து வேறுபாடுகளை எடுத்துரைப்பது. அதிகமாக, இவ்விரண்டாவது வகையிலேயே நன்னூல் உரையாசிரியர்கள் மறுப்புரை வழங்குவதனை அறியமுடிகிறது. மயிலைநாதர் தன்னுரையின் சிறப்புப்பாயிரத்தில், "இதற்கு என்பது சிறப்புப்பாயிரம், இதற்குப் பொருள் மேலே சொல்லுதும்" (நன்னூல் மூலமும் மயிலைநாதர் உரையும், ப.2) என்றுரைக்கின்றார். பாயிர நூற்பாக்கள் அனைத்திற்கும் கருத்துரை கூறிய பின்பு, "இனித் தமிழினது தன்மையும், இந்நூற்குச் சிறப்புப் பாயிரமும் சொல்லுதும், 'மலர் தலை யுலகின்...... இருந்தவத்தோனே'" எனும் நூற்பாவின் தொடக்க வரி, முடிவு வரிகளைக் கூறியபின், "தமிழினது தன்மையும், இந்நூற்குச் சிறப்புப் பாயிரமும் உணர்த்துதனுதலிற்று" தருக்க முறையில் விளக்குகின்றார். இத்தருக்க முறையிலேயே பின்வந்தோர்களும் முன்னவர் உரைகளைச் சிலவிடங்களில் மறுக்கின்றனர்.

உவமை கூறி மறுத்தல்

மூல நூலுக்குப் பொருந்தாத உரைகள் இவை என்று தமக்குத் தோன்றுகின்ற வேண்டாத உரைகளை மறுக்கும்போது சங்கர நமச்சிவாயர் தகுந்த உவமைகளை எடுத்துக்காட்டி அதை முழுவதுமாக மறுக்கின்றார். "இனைத்தென்று அறிபொருள்" (நன்னூல், நூ.399) என்னும் பொதுவியல் நூற்பா உரையைச் சான்றாகக் குறிப்பிடலாம். உலகத்தில் எக்காலத்திலும், எவ்விடத்திலும் இல்லாத பவளக் கோட்டு நீலயானை, முயற்கோடு, ஆகாயப்பூப் போன்ற பொருள்களை வினைப்படுத்திக் கூறும்போது, முற்றும்மை கொடுத்துப் பவளக் கோட்டு நீலயானை எங்கும் இல்லை; முயற்கோடு, ஆகாயப்பூ எங்கும் இல்லை என்று சொல்ல வேண்டும். மயிலைநாதர் இந்நூற்பாவிற்கு, 'பவளக்கோட்டு நீலயானை பண்டும் இல்லை, முயற்கோடு ஈண்டும் இல்லை' என்ற உதாரணங்களை எச்சவும்மை கொடுத்து விளக்குவார். இதனைக் கருத்தில் கொண்டு சங்கர நமச்சிவாயர் தன்னுரையில் கேலிப்பொருள் தொனிக்கும் வகையில் உவமையால் மறுக்கின்றார். "உலகின் இலாப்பொருள் உள்பொருள்போல் காலத்தோடு பட்டது அன்று என்பது தோன்ற என்றும் இல்லை என்னாது காலத்தொடு பட்டதுபோல் வைத்துப் பவளக்கோட்டு நீல யானை பண்டும் இல்லை எனவும்மை தந்து உதாரணம் காட்டுவர். அது யானை குடத்தினும் இல்லை

குழிசியினும் இல்லை என்றது போலும் என்க" (நன்னூல் மூலமும் விருத்தியுரையும், ப. 370) என்று கூறுகிறார்.

முடிவுரை

கருத்துக்கள் சிறந்து விளங்க மறுப்புகள் தேவை என்பதை உரையாசிரியர்கள் வழி உணர முடிகிறது. உண்மைக் கருத்தை உணர்த்தவே மறுத்துரைக்கும் கோட்பாட்டினை அவர்கள் பின்பற்றியுள்ளனர். அவ்வாறு மறுத்துரைக்கும்போது தகுந்த காரணங்களைக் காட்டியே மறுத்துள்ளனர். நன்னூலுக்கு உரை வகுத்தவர்களுள் மயிலைநாதர் முதல் உரையாசிரியராகத் திகழ்ந்தமையால் இவரது உரையில் மறுத்தல் எனும் தன்மை ஒரு சில இடங்களில் மட்டுமே காணமுடிகின்றது. சங்கரநமச்சிவாயர், சிவஞான முனிவர் உரைகளில் இம்மறுப்புக் கோட்பாடு சிறந்து காணப்படுகின்றது. மேலும், ஒருவருக்கொருவர் நாகரீகமாக மறுப்பதோடு மட்டுமின்றி தருக்க நெறியில் மறுத்துக் கூறி உரைகள் இயற்றுவதில் மாறுபட்டும் திகழ்கின்றனர்.

துணை நூல்கள்

[1] மு.வை. அரவிந்தன், உரையாசிரியர்கள், மணிவாசகர் பதிப்பகம், பாரிமுனை, சென்னை – 600108.

[2] தொல்காப்பியம், பொருளதிகாரம், சாரதா பதிப்பகம், சென்னை, மூன்றாம் பதிப்பு திசம்பர்

[3] நன்னூல் மூலமும் மயிலைநாதருரையும், உ.வே.சாமிநாதையர் (ப.ஆ.), வைஜெயந்தி அச்சுக்கூடம், சென்னை, 1918.

[4] நன்னூல் மூலமும் விருத்தியுரையும், கழக வெளியீடு, சென்னை, 1966.

[5] புலவர் கோ. வில்வபதி, நன்னூல் மூலமும் உரையும், பழனியப்பா பிரதர்ஸ், சென்னை.

தமிழில் இக்கட்டுரையை இவ்வாறு மேற்கோளிடுங்கள்:

வடிவேல்முருகன். "*நன்னூல்* உரை வகைகளும் மறுப்புரை மரபுகளும்." *தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்*, தொகுதி 3, சிற.இதழ் 2, தொகுதி 2, *திசம்*பர் 2020, பக். 354-359. டிஓஐ: **10.38067/ijtlls.2020.spl.v03i02v2.052**

Cite this Article in English (*MLA 8 Style*) as:
Vadivelmurugan. "**Nannool: Text Types and the Ethics of Disclaimer**." *International Journal of Tamil Language and Literary Studies*, Vol. 3: Special Issue - 2, Vol. 2, December 2020, pp. 354-359. DOI: **10.38067/ijtlls.2020.spl.v03i02v2.052**

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி /Author Contribution Statement: இல்லை /NIL

கட்டுரையாளர் நன்றியுரை /Author Acknowledgement: இல்லை /Nil

கட்டுரையாளர் உறுதிமொழி/Author Declaration: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்./I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் அரையாண்டு பன்னாட்டு ஆய்விதழ்

International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

உரையாசிரியர்களின் உரைச்சிறப்புகள்

Textual Distinction of Explanatory Writers

முனைவர் அ. வனிதா, உதவிப்பேராசிரியர் , தமிழ்த்துறை,, எத்திராஜ் மகளிர் கல்லூரி, சென்னை – 8.
DR. A. Vanitha, Assistant Professor, Department of Tamil, Ethiraj College for Women, Chennai – 8.
ORCiD: https://orcid.org/0000-0002-7510-1098
DOI: 10.38067/ijtlls.2020.spl.v03i02v2.053

Abstract

Style varies according to the skill and scholarship of the writer. And will vary according to the concept and material published by the individual. Each of the narrators has established certain characteristics and limitations for themselves and established their own uniqueness. Speechwriters are those who have shaped their research by writing and expressing literary taste by balancing and analyzing ideas that are steeped in novelty and ignorance. U.V. Saminathaiyer *on* Explanatory Writers *"**Like the original text, the narrators speech is better understood and the narrators are more trained in the language than the authors.**" And that compliment is significant here.*

ஒல்காபெரும் தவத் தொல்காப் பாயமுனி
தன்பெயரால் உலகின்புற தருநூல்
உலங்கூர் உரையாம் இளம்பூரணமும்
ஆனா இயல்பின் சேனாவரையும்
உச்சிமேற் புலவர்கொள் நச்சினார்க்கினியமும்
மற்றுமற்று இடப்பொருள் முற்றும் உணர்ந்து

*In the above poem, the texts are named after the **speechwriters**, who call the **Ilampuranar Text Ilampuranam, Naccinarkkiniyar Text Naccinarkkiniyam, Senavarayar Text Senavarayam and Peraciriyar Text Peraciriyam.** Explanatory Writers study texts and write texts following certain protocols when writing texts. Thus this article seeks to reveal the textual features of the texts they wrote.*

Keywords: Speechwriters, narrators, characteristics, own uniqueness, language, Significant, Ilampuranam, Naccinarkkiniyam, Senavarayam, Peraciriyam. Textual features.

இளம்பூரணர் உரையை இளம்பூரணம் என்றும் **நச்சினார்க்கினியர் உரையை நச்சினார்க்கினியம்** என்றும் **சேனாவரையர் உரையை சேனாவரையம்** என்றும் **பேராசிரியர் உரையை பேராசிரியம்** என்றும் உரையாசிரியர்களின் பெயராலே உரைநூல்கள் பெயர்ப்பெற்று விளங்குது உரையாசிரியர்களின் உரைச்சிறப்பைக் காட்டுகின்றன.

ஒல்காபெரும் தவத் தொல்காப் பாயமுனி
தன்பெயரால் உலகின்புற தருநூல்
உலங்கூர் உரையாம் இளம்பூரணமும்
ஆனா இயல்பின் சேனாவரையும்
உச்சிமேற் புலவர்கொள் நச்சினார்க்கினியமும்

International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

மற்றுமற்று இடப்பொருள் முற்றும் உணர்ந்து"

என்னும் கருத்து உரையாசிரியர்களின் பெயர்களிலே உரைநூல்கள் பெயர் பெற்று வழங்கும் அளவிற்கு உரை சிறந்திருந்தது என்பதை உணர்த்துகிறது.

உரையாசிரியர்கள்

நடை என்பது எழுதுபவரின் திறமைக்கும் புலமைக்கும் ஏற்றவாறு வேறுபடும் தன்மை உடையது. மேலும் ஒருவர் வெளியிடும் கருத்திற்கும் பொருளுக்கும் தக்கவாறும் வேறுபடும். உரையாசிரியர்கள் ஒவ்வொருவரும் தமக்கென்று சில இயல்புகளையும் வரம்புகளையும் ஏற்படுத்திக் கொண்டு தத்தம் தனிச்சிறப்புகளை உரையில் நிலைநாட்டிச் சென்றுள்ளனர்.

உரையாசிரியர்கள் அறிதொறும் அறியாமை கண்டும் நவில்தொறும் நூல் நயத்தில் திளைத்தும் கருத்துக்களைச் சமன்செய்து சீர்தூக்கி ஆராய்ந்து இலக்கியச் சுவையை வெளிப்படுத்தி உரை எழுதி தம் ஆராய்ச்சிக்கு வடிவம் தந்தவர்கள் ஆவார். உ.வே.சாமிநாதையர் உரையாசிரியர்களை **"மூலநூலைப் போலவே உரையாசிரியர்களின் உரையும் சிறந்து விளங்கியது என்றும் நூலாசிரியர்களைக் காட்டிலும் உரையாசிரியர்கள் மொழியில் மிக்க பயிற்சி உடையவர்கள்"** என்றும் பாராட்டிக் கூறுவது இங்கு குறிப்பிடத்தக்கதாகும். உரையாசிரியர்கள் உரைகளை எழுதும் போது சில குறிப்பிட்ட நெறிமுறைகளைப் பின்பற்றித்தான் மூலநூல்களை ஆய்வுசெய்து உரைகளை எழுதியிருக்கிறார்கள். அவ்வாறு அவர்கள் எழுதிய உரைகளிலுள்ள உரைச்சிறப்புகளைக் கீழ்வருமாறு பகுத்து ஆய்ந்து இக்கட்டுரை வெளிப்படுத்த முற்படுகிறது.

முறைவைப்பு கூறுதல், வரையறை கூறுதல், வகைப்படுத்திக் கூறுதல், சொல்லாராய்ச்சித் திறனைக் காட்டுதல், சுருங்கச் சொல்லி விளக்குதல், வினாவிடை போக்கைக் காட்டுதல். பல்துறை அறிவைப் புலப்படுத்துதல், மேற்கோள் காட்டுதல், அடைமொழி நயம் கூறுதல், தொடர் நயம் கூறுதல், பொருள் நயம் கூறுதல், உவமைகளைக் கூறுதல், விடுகதையைக் கூறுதல், வேற்றுமை கூறுதல், இலக்கிய வன்மையைக் காட்டல், பேச்சு வழக்கினைக் கையாளுதல், நூல்தெரிவு முறை கூறுதல், நுதலியது கூறுதல், எடுத்துக்காட்டுகள் தருதல், விளக்கம் கூறுதல், பதசாரம் கூறுதல், உடன்பாடு கூறுதல், மறுப்புரை வழங்கல், விளங்காமை கூறுதல், பாடபேதம் தருதல், பதவுரை அல்லது பொழிப்புரை கூறுதல், தொகுத்துக் கூளுதல், வகுத்துக் காட்டுதல், மிகை அல்லது இலேசுக் கோட்பாடு கூறுதல், மீட்டுருவாக்கம் செய்தல், ஒப்புமைக் பகுதிகளைக் கூறுதல், புறனடைக் கோட்பாடு கூறுதல்

இங்கு ஒரு சிலவற்றைக் எடுத்துக்காட்டி விளக்கலாம்.

முறைவைப்பு கூறுதல்

ஓரியலுக்கும் அடுத்து வரும் இயலுக்கும் உள்ள தொடர்பை விளக்குவதையும் ஒரு நூற்பாவிற்கும் அடுத்துவரும் நூற்பாவிற்கும் உள்ள தொடர்பைக் சுட்டிச்செல்வதையும்

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

உரையாசிரியரிடத்தில் காணலாம். பேராசிரியர் ஒரே நூற்பாவில் வரும் செய்திகளின் முறைவைப்பையும் எடுத்துக்காட்டிச் எழுதுவார்.

நகையே அழுகை இளிவரல் மருட்கை
அச்சம் பெருமிதம் வெகுளி உவகை என்ற
அப்பால் எட்டே மெய்பாடு என்ப (தொல். 1197)

என்னும் நூற்பாக்குத் தரும் விளக்கத்தால் மேல்வரும் எட்டு மெய்ப்பாடுகளும் முறையே வைக்கப்படுதலின் அமைதியை விளக்குவதைக் காணலாம். ஒரு நூற்பாவொடு தொடரும் மற்றொரு நூற்பாவைக் காட்டுவதாக இவை அமைகின்றன.

வரையறை கூறுதல்

ஒன்றைப்பற்றிக் கூறுங்கால் வரையைறைப்படுத்திக் கூறும் நெறியைப் பேராசிரியர் மேற்கொள்வார். அகச்சுவைப் பற்றிக் கூறும் பேராசிரியர், **தன்கண் தோன்றலும் பிறர்கண் தோன்றலும் என்னும் தடுமாற்றமின்றிப் பிறிது பொருள் பற்றியே வரும்** என்று கூறுவது இதற்குச் சான்றாகும்.

வகைப்படுத்திக் கூறுதல்

வகைப்படுத்திக் கூறுதலும் உரையாசிரியர்கள் மேற்கண்ட நெறிகளில் ஒன்றாகும்.

எள்ளல் இளமை பேதை மடனென்று
உள்ளப்பட்ட நகை நான்கென்ப (தொல்.1198.)

என்னும் இந்நூற்பா நகைப்தற்குரிய கூறுபாடுகளைக் கூறுகிறது. **நகை என்பது சிரிப்பு. அது முறுவலித்து நகுதலும், அளவே சிரித்தலும், பெருகச் சிரித்தலும் என முன்றென்ப** என்னும் பேராசிரியர் உரையை இதற்குச் சான்றாகக் கூறலாம்.

சொல்லாராய்ச்சித் திறனைக் காட்டுதல்

நூலாசிரியர்களிடம் பெரும்மதிப்பு வைத்திருந்த உரையாசிரியர்கள் தம்காலத்திற்கு முரணான கருத்துகள் மூலநூலில் இருப்பினும் அவற்றிற்கு வழுவமைதி காட்டும் மரபை மேற்கொண்டனர். சேனாவரையார் தாம் ஏற்றுக்கொள்ள இயலாத இடங்களில் கூட சொல்லாராய்ச்சி திறனைக் காட்டுகின்றார். **எல்லே இலக்கம்** என்னும் நூற்பா இடையியலில் வரும். எல் என்பதை உரிச்சொல்லாகக் கொள்ள வேண்டும் என்பது சேனாவரையர் கருத்து. ஆனால் தொல்காப்பியர் இடைச்சொல் என்று கூறும்போது சேனாவரையர் தம் கருத்தையும் எழுதி நூலாசிரியரையும் மதிக்கின்றார். **எல் என்பது உரிச்சொல் நீர்மைத்து. ஆயினும் ஆசிரியர் இடைச்சொல்லாக ஓதினமையின் இடைச்சொல் என்று கோரும்,** என்று மிகச் சுருக்கமாக எழுதி தம் சொல்லாராச்சித் திறனை வெளிப்படுத்துகின்றார்.

சுருங்கச் சொல்லி விளக்குதல்

சுருங்கச் சொல்லி விளங்க வைப்பதில் இளம்பூரணர் ஆர்வம் கொண்டவர். புறப்பொருள் இன்னதென்பதை விளக்கும் போது **புறப்பொருளாவது மறஞ்செய்தலும்**

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

அறஞ்செய்தலும் ஆதலால், அவற்றாள் ஆயபயன் பிறர்க்குப் புலனாதலின் புறம் என்றார் என்று சுருக்கமாக விளக்குவார்.

வினாவிடை போக்கைக் காட்டுதல்

வினாவிடை போக்கு என்ற புலப்பாட்டு நெறியை உரையாசிரியர்கள் பெரிதும் பயன்படுத்தியுள்ளனர். அவர்களே கேள்வி கேட்பதாகவும் அவர்களே விடை கூறுவதாகவும் அமையும் உரைநடைப் போக்கை அவர்களிடத்தில் காணலாம். **மடம் என்பதற்கும் பேதமை என்பதற்கும் வேறுபாடு என்ன எனின்? மடம் என்பது பொருண்மை அறியாது திரியக்கோடல். மேதமை என்பது கேட்டதனை உய்த்துணராது மெய்யாகக் கோடல்** என விளக்கம் தருவார்கள்.

பல்துறை அறிவைப் புலப்படுத்துதல்

உரையாசிரியர்கள் தமிழ்மொழி அறிவை மட்டுமே பெற்றிருந்தார்கள் என்று கூறுமுடியாது. அவர்கள் அந்த அளவுக்கு கணிதம், அறிவியல், மருத்துவம் போன்ற பல்துறை அறிவையும் பெற்றிருந்தார்கள்.

பூப்பின் புறம்பாட டீராறு நாளும்
நீத்தகண் றுறையார் என்மனார் புலவர்
பரத்தையிற் பிரிந்த காலையான (தொல்.1133.)

பூப்பினது புறம்பு பன்னிரண்டு நாளும் தலைவியைவிட்டு அகன்றுறைவாரல்லர் என்று சொல்வார் பரத்தையிற் பிரிந்த காலத்து என்றவாறு. **இதனாற் பயன் என்னையெனின் அது கருத்தோன்றுங்காலம் என்க. கருத்தோன்றுங்காலம் என்றதனால் மருத்துவ அறிவையும்** உரையாசிரியர்கள் பெற்றிருந்தனர் என்பதை **அறியமுடிகிறது**.

மேற்கோள் காட்டுதல்

தாங்கள் எழுதும் உரைகளுக்கு மேற்கோள்களாகப் பல இலக்கியங்களையும் எடுத்தாளுவதை உரைகளில் காணலாம். **இளம்பூரணர் 16 நூல்களில் இருந்து மேற்கோள் காட்டியுள்ளார். திருக்குறள் மேற்கோள்கள் மிகுதியாகக் காணப்படுகின்றன. ஆசிரியமாலை, குணநாற்பது, தகடூர் யாத்திரை, பாண்டிக்கோவை** போன்ற மறைந்துபட்ட நூல்களின் மேற்கோள்களும் இவர் உரையில் காணப்படுகின்றன.

அடைமொழி நயம் கூறுதல்

அடைத்தொடர்களின் சிறப்பினையும் உரையாசிரியர்களின் உரைகள் புலப்படுத்துவதைக் காணலாம். **மாயப்பரத்தை (பொரு. 175). மாயம் என்பது பரத்தைக்கு பண்பாடு இனம் சுட்டாது வந்தது** என்று விளக்குவர் இளம்பூரணர்.

தொடர் நயம் கூறுதல்

உரையாசிரியர்கள் ஒவ்வொரு தொடர்களைப் பற்றியும் அதில் உள்ள நயத்தைப் பற்றியும் விளக்கிச் செல்வர்.

உயிரும் நாணும் மடனும் என்றிவை

International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

செயிற்தீர் சிறப்பின் நால்வர்க்கும் உரிய (தொல்.1147.)

என்பதில் தலைவி, தேழி, செவிலி, நற்றாய் என்னும் நால்வர்க்கும் உயிரும் நாணும் மடனும் உரித்தாகும் என்பது கூறப்பட்டுள்ளது. இதற்கு **இளம்பூரணர் இந்நால்வரும் ஆக்கமும் கேடும் ஒருவர்மாட்டு வந்துழி தமக்குற்றது போல நினைப்பாராதான் ஒருவரை ஒருவர் இன்றியமையாது ஓர் உயிர் போல்வர்** என்று விளக்கம் தருவார்.

பொருள் நயம் கூறுதல்

உரையாசிரியர்கள் தரும் உரை பொருள் நயத்துடன் தெளிவாய் அமைந்திருப்பதைக் காணலாம். **அகப்பாடல்களில் தலைவியைக் காணும் தலைவன் ஐயங்கொள்வானே தவிர தலைவி ஐயுறுவதாக இலக்கணம் வகுக்கப்படவில்லை. இதற்கு இளம்பூரணர் எடுத்துச் சொல்லும் காரணம் சுவையானது. தலைமகள் ஐயப்படாதது என்ன எனின் அவள் ஐயப்படுங்கால் தெய்வமோ என்று ஐயுறுதல் வேண்டும். அவ்வாறு ஐயுற்றால் அச்சம் வரும். அஃது ஏதுவாகக் காமநிகழ்ச்சி உண்டாகாது** என எழுதுவார்.

உவமைகளைக் கூறுதல்

உரையாசிரியர்களிடத்தில் தாம் கூற வந்த பொருளை விளக்கவும் செற்களை விளக்கவும் உவமைகளைக் கையாளுவதைக் காணலாம். **கலத்தல் மயக்கம் (தொல். மர. 19).** இளம்பூரணர் இந்நூற்பாவுக்கு, **கலத்தல் ஆவது முத்தும் பவளமும் நீலமும், மாணிக்கமும் விரவினாற் போல, மயக்கமாவது பொன்னும் வெள்ளியும் செப்பும் உருக்கி ஒன்றாக போரல்** என உவமையைக் கலந்து தெளிவாக எடுத்துரைக்கிறார்.

விடுகதையைக் கூறுதல்

உரையாசிரியர்கள் ஆங்காங்கே வாய்ப்பு ஏற்படும் போதெல்லாம் மக்கள் இடத்தில் வழக்கிலிருந்த விடுகதைகளை எடுத்தாளுவதைக் காணலாம். **அச்சுப்போல பூ பூக்கும், அமலே யன்ன காய் காய்க்கும்** என்று இளம்பூரணர் கூறுவதைக் காணலாம்.

பேச்சு வழக்கினைக் கையாளுதல்

சேனாவரையர் தம் காலத்து மக்கள் பேசிய பேச்சு வழக்கினை பல இடங்களில் குறிப்பிடுகின்றார். கிளவியாக்கம் பெயர்க்காரணம் பற்றிக் கூறும்போது **ஆக்கம்- அமைத்துக்கோடல்; நொய்யும் நொறுங்கும் கலைந்து அரிசி அமைத்தாரை அரிசி ஆக்கினார் என்பவாகலின் (நூற்பா – 1)** என்று உரை எழுகிறார்.

எடுத்துக்காட்டுகள் தருதல்

உரை எழுதிய பிறகு தேவையான இடங்களில் எடுத்துக்காட்டுகளைத் தந்து உரையாசிரியர்கள் முறையாகப் பொருத்திக்காட்டி விளக்குவார்கள். எடுத்துக் காட்டுகளைத் தராமல் விட்டுவிட்டால் உரை நிறைவுபெற்றதாக ஆகாது. உரிய இடங்களில் எடுத்துக்காட்டுகளைக் தருதல் இன்றியாமையாத மரபாகவே பின்பற்றப்பட்டுருக்கிறது.

வினை பயன் மெய் உரு என்ற நான்கே

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

வகைப்பெற வந்த உவமத் தோற்றம் (தொல்.1222)

என்னும் நூற்பாவுற்கு விளக்கம் கூறிய இளம்பூரணர் ஒவ்வொன்றுக்கும் எடுத்துக்காட்டுகளைத் தருவார். **புலி போல் பாய்ந்தான் – வினை, மாரியன்ன வண்கை – வினைபயன், தளிர் போலும் மேனி – பண்பு, துடி போலும் இடை – வடிவு** என்று எடுத்துக்காட்டுகளைத் தந்து உரை எழுதும் சிறப்பை, உரையாசிரியர்களிடத்தில் காணலாம்.

உடன்பாடு கூறுதல்

ஒரு செய்யுளுக்கு அல்லது நூற்பாவுக்கு ஒருவர் உரை எழுதும்போது அவர் தரும் உரைக்கு மாறுபட்ட உரை முன்பே இருக்குமானால் அந்த உரையையும் உரையாசிரியர் குறிப்பிடுவார். அப்படிக் குறிப்பிட்ட அந்த உரையோடு தனக்கு உடன்பாடு இருந்தால் அந்த உரையும் கொள்ளத்தக்கதே என்று தன் உடன்பாட்டைத் தெரிவிப்பர். இப்படிக் கூறுகிற மரபு உரையாசிரிகளிடையே இருந்திருக்கிறது.

வினையின் தோன்றும் பாலறி கிளவியும்
பெயரின் தோன்றும் பாலறி கிளவுயும்
மயல்கல் கூடா தம் மரபினவே (தொல்.494)

இதற்கு தழண்ணல் தன் உரையை கூறி, நச்சினார்கினியர் உரையையும் கூறிச் செல்வார். **வினையின் கண் அமைந்து பாலைச் சுட்டும் இடைச்சொற்களும் பெயரின்கண் அமைந்து பாலைச்சுட்டும்…. என்று கூறிச் சென்று, பால் வழுவாமை கூறவே திணை, இடம், காலம் மரபு முதலியன யாவும் மயங்குதல் கூடாது என்பதும் பெறப்படுமென்பது நச்சினார்க்கியர் கருத்து** என்று அவர் கருத்தையும் ஒத்துக்கொள்கிறார்.

மறுப்புரை வழங்கல்

மேலே கூறியதுபோல உடன்பாடு இல்லாத இடத்தில் மற்ற உரையாசிரியர் கருத்தை எடுத்துச் சொல்லி அந்த உரையைத் தகுந்த காரணங்களோடு மறுத்து ஒரு உரை எழுதி தன்னுடைய உரையைச் சரியென்று நிலைநாட்டுவார்.

பிறர் கருத்தோடு தனக்கு உள்ள மாறுபாட்டைத் தெரிவித்துப் பிறர் கருத்தைக் காரணங்களோடு மறுப்பது ஒரு மரபாகப் பின்பற்றப்பட்டிருக்கிறது. **கிளவியாக்கம் – பொருள் விளக்கம் தருவதில் சேனாவரையர் வேறு கருத்தையும் இளம்பூரணர் வேறுகருத்தையும் கூறுவதைச்** சொல்லலாம்.

விளங்காமை கூறுதல்

உரை எழுதுபவர் மிகச் சில இடங்களில் தமக்கு விளங்காத பகுதிகள் இருந்தால் **இது விளங்கவில்லை என்று அடக்கமாகவும் நுட்பமாகவும் கூறுவது உண்டு. வல்லார் வாய்க் கேட்டுணர்க, வந்தவழி கண்டு கொள்க** என்பன போல வரும் தொடர்களைப் பார்க்கும் போது நாம் இந்த உண்மையை உணர்ந்து கொள்ள முடிகிறது.

ஒன்றாத் தமரினும் பருவத்தும் சுரத்தும்

International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

கற்பொடு புணர்ந்த கௌவை உளப்பட

என்னும் தலைமகன் கூற்று நூற்பாவில் **இளம்பூரணர் ஒவ்வொரு கூற்றுக்கும் விளக்கம் கூறி சான்று தந்து செல்கிறார். ஆனால் கற்பொடு புணர்ந்த கௌவை உளப்பட என்பதற்கு எந்த விளக்கமும் கூறாமல், உதாரணம் கொடுக்காமல் வந்தவழிக் கண்டுகொள்க** என்கிறார்.

மீட்டுருவாக்கம் செய்தல்

மூலநூலில் நன்கு ஈடுபட்டுப் படித்துத் தேர்ந்து தெளிந்து அந்த நூலுக்கு முறையாக உரையெழுத முற்படுகின்ற உரையாசிரியர்கள் மூலநூலில் சில இன்றியமையாத செய்திகள் விடுபட்டுப் போயிருப்பதை அதிரிச்சியோடும் கவலையோடும் கவனித்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலை காணப்படுகிற மூலநூலில் விடுபட்டுப்போன செய்திகளை உரையாசிரியர்கள் தாம் தெரிந்து வைத்திருக்கும் போது அந்தச் செய்திகளையும் தகுந்த இடத்தில் பக்குவமாக மீட்டுருவாக்கம் செய்து மூலநூலை முழுமைப்படுத்தி இருக்கிறார்கள்.

தொல்காப்பிய அகத்திணையியலில் இளம்பூரணர் எஞ்சியோர்க்கும் எஞ்சுதல் இலவே (தொல். 45) என்னும் நூற்பாவில் **பிரிவின்கண் நற்றாய் செவிலி கண்டோர் முதலானோர் கூறும் கூற்றுகளுக்கு முறையாக ஆசிரியர் இலக்கணம் கூறுகிறார். தலைவி கூற்றுக்கு நூற்பா இல்லை. எனவே பாங்கர் முதாலாயினாரை இத்சூத்திரத்தாற் கூறுப. தலைமகள் கூற்று தனித்துக் கூறல் வேண்டும். இவரோடு ஒரு நிகரன்மையின் எனின், ஒக்கும். தலைமகள் கூற்று உணர்த்திய சூத்திரம் காலம் பழமையால் பெயர்த்து எழுதுவார் விழ எழுதினார் போலும். இது வரலாற்று நோக்கில் தனிச்சிறப்புக்கு உரிய பகுதியாகும்** என்கிறார்.

ஒப்புமைப் பகுதிகளைச் சுட்டல்

ஒரு பகுதிக்கு உரையாசிரியர் விளக்கம் கூறும்போது அதனோடு ஒப்புநோக்கி எண்ணத்தக்க ஒப்புமைப் பகுதிகளையும் சுட்டிச் செல்வது உண்டு. பொருள் நோக்கில் இத்தகைய ஒப்புமைப் பகுதிகளைச் சுட்டுதல் விரும்பத்தக்க ஒரு மரபாக விளங்கியிருக்கிறது.

என்பிலதனை வெயில்போலக் காயுமே
அன்பி லதனை அறம் (திருக்குறள், 77)

என்னும் திருக்குறளில் பரிமேலழகர் இவ்வாறு அல்லது செய்தார்க்கு அறங்கூற்றம் எனப் பிறரும் கூறினார் என்று ஒப்புமைப் பகுதியைச் சுட்டிச் செல்லுகிறார். என்பு இல்லாததை வெயில் எப்படிக் காயுமோ அதைப்போல அன்பு இல்லாததை அறம்காயும், என்பு இல்லாதது வெயிலால் துன்புறுவதைப்போல அன்பு இல்லாத உயிர் அறத்தால் துன்புறும் என்பதே இந்தக் குறளின் கருத்து.

இதனோடு ஒப்பவைத்து எண்ணத்தக்க கருத்தாக அல்லவை செய்தார்க்கு அறங்கூற்றம் என்ற நான்மணிக்கடிகையின் தொடர் பரிமேலழகர் மனத்துக்குத் தோன்றுகிறது. அதனை அங்கே ஒப்புமை நோக்கில் குறிப்பிடுகிறார்.

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

முடிவுரை

உரையாசிரியர்கள் நூலாசிரியரின் உள்ளக்கருத்தினை நுணுகி ஆராய்ந்து தெளிவு பெற எடுத்தெழுதும் வன்மையாளாராய் விளங்கினார்கள். அவர்களுடைய நடைகள் காலத்திற்கும் கருத்திற்கும் ஏற்ற நடையாக விளங்குகின்றன. இத்தகைய பெருமை உரையாசிரியர்களைச் சேரும். மேலும் இவ்வுரைகள் உரையாசிரியர்களின் உரையாற்றலையும் அவர்களின் பரந்துவிரிந்த உலகியல் அறிவையும் பன்மொழி பல்கலைப் புலமைகளையும் விளக்குவனவாக அமைகின்றன என்றால் அது மிகையாகாது.

பார்வை நூல்கள்

[1] சுப்பிரமணியன், ச.வே,**தொல்காப்பியம் (தெளிவுரை)**, மணிவாசகர் பதிப்பகம், சென்னை – 18, 2003.

[2] சண்முகம்பிள்ளை, **தொல்காப்பியம் எழுத்ததிகாரம்**, முல்லை நிலையம்,சென்னை – 17,1997.

[3] தழண்ணல், **தொல்காப்பியம் சொல்லதிகாரம்**, மணிவாசகர் பதிப்பகம், சென்னை -108, 1994.

[4] கோதண்டராமன், பொன், **ஆராய்ச்சி நெறிமுறைகள்**, ஐந்திணைப் பதிப்பகம், சென்னை – 5, 2001.

தமிழில் இக்கட்டுரையை இவ்வாறு மேற்கோளிடுங்கள்:

வனிதா, அ. "உரையாசிரியர்களின் உரைச்சிறப்புகள்." *தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்,* தொகுதி 3, சிற.இதழ் 2, தொகுதி 2, *திசம்பர்* 2020, பக். 360-368. டிஒஐ: **10.38067/ijtlls.2020.spl.v03i02v2.053**

Cite this Article in English (*MLA 8 Style*) as:
Vanitha A. "**Textual Distinction of Explanatory Writers**." *International Journal of Tamil Language and Literary Studies,* Vol. 3: Special Issue - 2, Vol. 2, December 2020, pp. 360-368. DOI: **10.38067/ijtlls.2020.spl.v03i02v2.053**

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி /Author Contribution Statement: இல்லை /NIL

கட்டுரையாளர் நன்றியுரை /Author Acknowledgement: இல்லை /Nil

கட்டுரையாளர் உறுதிமொழி/Author Declaration: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்./I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் அரையாண்டு பன்னாட்டு ஆய்விதழ்

International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

அருணகிரிநாதரின் திருப்புகழ் - உரைப்பதிப்பு
Arunagirinathar's Thiruppukazhu - Text Edition

முனைவர் ப. வனிதா, உதவிப்பேராசிரியர் , தமிழ்த்துறை,, எத்திராஜ் மகளிர் கல்லூரி, சென்னை – 8
DR. P. Vanitha, Assistant Professor, Department of Tamil, Ethiraj college for Women, Chennai – 8
ORCiD: https://orcid.org/0000-0001-6829-7646
DOI: 10.38067/ijtlls.2020.spl.v03i02v2.054

Abstract

In ancient times all the grammatical texts of Tamil literature U.V. SaminathaIyer, Ch. Vaiyapuri Pillai, CY Damodaram Pillai, Pinnathur A. Narayanasamy Iyyer, M. ShanmugapPillai and others. Due to their good efforts, numerous books have been published in the world of Tamil literature today. After reading the verses found in the palm fronds, copying and pasting several copies, they have published a book neatly, after carefully and patiently sorting out what the text is, with the correct source. Arunagirinathar has sung innumerable songs due to his devotion to Murugan. The songs have been compiled and published by many at different times. Turning is the foremost among them. The purpose of this review article is to examine the text of this journal. When editors expose what is in the yard, which have a duty to publish without error. They have been like-minded writers and narrators. The texts contain not only the original verses but also the texts. They have also been published separately and in a special way. Original version and Text version were published in two modes. This review article highlights the distinctive features and distinctions found in each edition. First of all, the first edition of the twist, the first text version that came to the turn, the individual edition, the compilation version, etc. are explained. This article seeks to explain the text versions that came to the turning point and its features.

Keywords: Arunagirinathar, Grammatical Texts, Tamil Literature, Innumerable songs, devotion, Lord Murugan, Editors, Original version, Text version.

பழங்காலத்தில் தமிழ் இலக்கிய இலக்கண நூல்களெல்லாம் ஓலைச்சுவடிகளில் இருந்தன. அவற்றை எல்லாம் ஆறுமுகநாவலர், உ.வே.சாமிநாத ஐயர், ச. வையாபுரிப்பிள்ளை, சி.வை.தாமோதரம் பிள்ளை, பின்னத்தூர் அ.நாராயணசாமி ஐயர், மு. சண்முகப்பிள்ளை போன்றோர் அரும்பாடுபட்டுப் பதிப்பித்தனர். இவர்களின் நன் முயற்சியால் தமிழ் இலக்கிய உலகில் இன்று எண்ணற்ற நூல்கள் பதிப்புப் பெற்றுள்ளன. பனையோலைகளில் காணப்பட்ட செய்யுள்களைப் படித்து, பிரதி எடுத்துப் பின்னர் பல பிரதிகளைப் பார்த்துச் சரியான மூலம், உரை எது என்பதைப் பிரித்தறிந்து நுண்ணறிவுடனும், பொறுமையுடனும் சீர்தூக்கிப் பார்த்த பின்னரே ஒரு நூலைச் செம்மையாகப் பதிப்பித்துள்ளனர்.

அவ்வகையில் அருணகிரிநாதர் எழுதிய நூல்களான திருப்புகழ், திருவகுப்பு, கந்தரலங்காரம், கந்தரந்தாதி, கந்தரநுபூதி, வேல் விருத்தம், மயில் விருத்தம், சேவல் விருத்தம், திருவெழுகூற்றிருக்கை ஆகிய அனைத்திற்கும் பல பதிப்புகள் வந்துள்ளன. இந்நூல்கள்

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் அரையாண்டு பன்னாட்டு ஆய்விதழ்

International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

பல்வேறு ஆசிரியர்களால், பல்வேறு காலங்களில் பதிப்பிக்கப்பட்டுள்ளன. இவற்றுள்திருப்புகழின்உரைப்பதிப்பைஆராய்வதேஇவ்வாய்வுக்கட்டுரையின்நோக்கம்ஆகும்.

அருணகிரிநாதர் நூல்கள் - பதிப்பு முறை

பதிப்பு என்பதை அச்சிடப்பட்ட நூல் எனத் தமிழ்ப் பேரகராதியும் Edition என்று ஆங்கிலக் கலைக்களஞ்சியமும் குறிப்பிடுகின்றன. பதிப்பாசிரியர்கள் ஓலையில் உள்ளவற்றை அச்சில் வெளிக்கொணர்வதும், பிழையின்றிப் பதிப்பிப்பதும் தமது கடமையாகக் கொண்டவர்கள். இவர்கள் நூலாசிரியர், உரையாசிரியர் போன்றே சிந்தனை உடையவர்களாக இருந்துள்ளனர். ஓலைகளில் மூலச் செய்யுள்கள் மட்டுமின்றி உரைகளும் இருந்துள்ளன. அவற்றையும் தனித்தனியே பிரித்துச் சிறப்பான முறையில் பதிப்பித்துள்ளனர். அருணகிரிநாதர் இயற்றிய நூல்கள் மூலப்பதிப்பு & உரைப்பதிப்பு
ஆகிய இரு முறைகளில் பதிப்பிக்கப்பட்டுள்ளன.

இப்பதிப்புகள் காலம், பதிப்பு நூல்களின் ஒத்த தன்மை, பொருள் விளக்கும் முறை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டும் ஆய்வின் சுருக்கம் கருதியும் ஒரு சில பதிப்புகள் மட்டும் சான்றாக எடுத்துக் கொள்ளப்பட்டன. இந்நூல் திருப்புகழின் பயனை மக்கள் தினந்தோறும் பெற்று உய்யும்பொருட்டு பதிப்பிக்கப்பட்டுள்ளது. ஓலைச் சுவடிகளில் இருந்த அருணகிரிநாதருடைய திருப்புகழை வடக்குப்பட்டு சுப்பிரமணியபிள்ளை அரும்பாடுபட்டுத் தேடித் தொகுத்தளித்துள்ளார். அருணகிரிநாதர் பதினாராயிரம் பாடல்களைப் பாடினார். ஆனால் இன்று முழுமையும் கிடைக்காமல் சில பாடல்களே கிடைத்துள்ளன. ஆங்காங்கு கிடைத்த சுவடிகளைக் கொண்டும், தமக்கு முன்பு பதிப்பித்துள்ள பதிப்புகளை அடிப்படையாகக் கொண்டும் பல பதிப்புகள் வெளிவந்துள்ளன.

இவ்வாறு வெளிவந்த நூல்களுள் 1304, 1311, 1331, 1361, 1326, 1234 என்னும் எண்ணிக்கையில் திருப்புகழ் பாடல்கள் கிடைத்துள்ளன. இவற்றுள் 1234 செய்யுள்களைக் கொண்ட வ. த. சுப்பிரமணிய பிள்ளையின் பதிப்பே முதற்முதல் பதிப்பாக உள்ளது. அவரைப் பின்பற்றிப் பல பதிப்புகளில் மிகுதியான பாடல்களைத் தொகுத்துப் பதிப்பித்துள்ளனர். இவ்வெண்ணிக்கை வேறுபாட்டிற்குக் காரணம், அவரவர்க்குக் கிடைத்தவற்றைக் கொண்டு பதிப்பித்ததே ஆகும். அதிக எண்ணிக்கையில் மட்டுமின்றி இருநூறு, நூறு, நூற்றொன்று, ஐம்பது, ஒன்பது, ஐந்து, நான்கு என மிகக் குறைந்த எண்ணிகையிலும் நூல்கள் வந்துள்ளன. திருப்புகழ் அனைத்தையும் மனனம் செய்வது கடினம் ஆகும். ஆகையால் சில பாடல்களைத் தேர்ந்தெடுத்துப் பல ஆசிரியர்கள் வெளியிட்டுள்ளனர்.

திருப்புகழுக்கு 1870 ஆம் ஆண்டில் நூறு பாடல்களைக் கொண்ட பதிப்பு ஒன்று உள்ளது. இதுவே முதற்பதிப்பாகக் கிடைத்துள்ளது. இப்பதிப்பினைத் தியாகராய சுவாமிகள் பார்வையில், திருவேங்கட முதலியாரது இயற்றமிழ் அச்சுக்கூடத்தில் அச்சாகியுள்ளது. இந்நூல் பத்தியமைப்பில் நூறு செய்யுள்களையும், காப்பு செய்யுள் மூன்றையும் கொண்டுள்ளது. பொதுவாகத் திருப்புகழ்,, திருப்புகழ், நவரத்தினத் திருப்புகழ், பஞ்சரத்னத் திருப்புகழ், மொழிபெயர்ப்பு திருப்புகழ், பாராயணத் திருப்புகழ் என்னும் முறைகளில் பதிப்பிக்கப்பட்டுள்ளது. இத்திருப்புகழினைப் பல ஆசிரியர்கள் பதிப்பித்துள்ளனர். இவற்றில்உரைப்பதிப்பைமட்டும்காண்போம்.

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

உரைப்பதிப்பு

அருணகிரிநாதர் முருகப்பெருமான்மீது இயற்றிய பாடல்களுக்குப் பலர் உரையெழுதிச் சிறப்புச் செய்துள்ளனர். உரையின் தன்மையை நோக்கிப் பின்வருமாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன. *குறிப்புரை, அரும்பதவுரை, தெளிவுரை, விளக்கவுரை, பொழிப்புரை, மெய்ஞ்ஞான, விருத்தியுரை, கருத்துரை, சிறப்புரை, விரிவுரை, சுருக்கவுரை.* மூல நூல்களைப் போலவே உரைநூல்களும் இலக்கியம் போல் இன்பம் ஊட்டுகின்றன. மூலநூல்களில் உள்ள எல்லாச் சிறப்புக் கூறுகளும் உரை நூல்களிலும் உண்டு. நூலுக்கு உரையெழுதத் தொடங்கும்முன், உரையாசிரியர்கள் நூலைப்பற்றிய பொதுவான செய்திகளைத் தொகுத்துக் கூறியுள்ளனர். நூல் உரைக்கும் ஆசிரியன் இயல்பு, பாடம் கேட்கும் முறை, பாடம் சொல்லும் முறை ஆகியவற்றையும் நூலின் வரலாறு, ஆசிரியர் வரலாறு ஆகியவற்றையும் விளக்கமாகக் கூறியபின் நூலுக்கு உரையெழுத் தொடங்கியுள்ளனர். இவற்றோடு உரையின் வகைகளையும் அவற்றின் இயல்பினையும் விளக்கினர். உரையாசிரியர் நூலுக்கு எழுதிய பொது விளக்கமே பாயிரம் எனப்பட்டது. பாயிரம் பொது, சிறப்பு என இரண்டாகப் பிரிக்கப்பட்டது. அதன்பின் சிறப்புப்பாயிரம் தற்சிறப்புப்பாயிரம், நூற்சிறப்புப்பாயிரம் என இரண்டாயிற்று.

உரையாசிரியர்கள் நூலுக்குமுன் எழுதிய முகவுரை உரைப்பாயிரம் என்றும், உரையாசிரியர்களையும், உரைகளையும் சிறப்பிக்கும் பாயிரம் உரைச்சிறப்புப் பாயிரம் என்றும் வழங்கின. இவற்றை உள்ளடக்கிய நிலையில் பலவகையான உரைகள் வளர்ச்சி பெற்றன. உரையின் வகையைக் குறிப்பிடும் தொல்காப்பியர் மரபியலில்,

பழிப்பில் சூத்திரம் பட்ட பண்பிற்
சுரப்பின்றி முடிவது காண்டிகை யாகும் (தொல்.மரபியல், நூற்.103.)
சூத்திரத்து உட்பொருள் அன்றியும் யாப்புற
இன்றி யமையாது இயைபவை எல்லாம்
ஒன்று உரைப்பது உரைஎனப் படுமே (தொல்.மரபியல், நூற்.105)

என்னும் நூற்பாக்களில் காண்டிகை உரை, விருத்தியுரை என்னும் இருவகைகளைக் குறிப்பிட்டுள்ளார். இந்நூற்பாவில் ‘உரை’ என்பது விருத்தியுரையைக் குறிக்கும் என விளக்கம் கூறப்பட்டுள்ளது. இறையனார் களவியல் உரை, நம்பியகப் பொருள் ஆகிய இரண்டும் உரை நான்கு என்று குறிப்பிட்டுள்ளன. இவ்வகையான உரைகள் எவ்வகையில் அமையவேண்டும் என நன்னூலின் பொதுப்பாயிரம் உரையின் பொது இலக்கணத்தைப் பின்வருமாறு சுட்டுகின்றது.

பாடம் கருத்தே சொல்வகை சொற்பொருள்
தொகுத்துரை உதாரணம் வினாவிடை விசேடம்
விரிவு அதிகாரம் துணிவு பயனோடு
ஆசிரிய வசனம்என்று ஈரேழ் உரையே (நன்னூல் மூலமும் மயிலைநாதர் உரையும், நூற்.20) இதற்கு மயிலைநாதர்,

பாடம் சொல்லலும், கருத்துரைத்தலும், சொல் வகுத்தும், சொற்பொருள் உரைத்தலும், பொழிப்புரைத்தலும், உதாரணம் காட்டலும், வினாத்

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

தோற்றலும், விடை கொடுத்தலும், விசேடம் காட்டலும், விரிவு காட்டலும், அதிகார வரவு காட்டலும், துணிவு கூறலும், பயனொடு படுத்தலும், ஆசிரிய வசனம் காட்டலும் என்னும் இப்பதினான்கு பகுதியானும் உரைக்கப்படும் சூத்திரப் பொருள் (நன்னூல் மூலமும் மயிலைநாதர் உரையும்ப.7)

எனப் பதினான்கு வகையைக் கூறியுள்ளார். இதனை அடியொற்றியே அருணகிரிநாதர் நூல்களுக்கு உரையெழுதியுள்ளனர். அவ்வுரைப்பதிப்பு இருநிலைகளில் உள்ளது. அவை பின்வருமாறு:

தனிப் பதிப்பு
தொகுப்புப் பதிப்பு

தனிப் பதிப்பு

நூலாசிரியர் பல நூல்களை எழுதியிருப்பின் ஏதாவது ஒன்றிற்கு மட்டும் உரையெழுதி வெளியிடுவது தனிப்பதிப்பு ஆகும். அருணகிரி நாதர் எழுதிய திருப்புகழ், திருவகுப்பு, கந்தரந்தாதி, கந்தரலங்காரம், கந்தரனுபூதி, வேல் விருத்தம், மயில் விருத்தம்முதலான நூல்களுக்குத் தனியே உரைப்பதிப்புகள் உள்ளன. இவற்றுள்திருப்புகழ்நூலிற்கான உரைப்பதிப்பைப் பற்றி இனிக் காண்போம்.

திருப்புகழிற்கு உரையுடன் கூடிய 45 பதிப்புகள் இருக்கின்றன. இப்பதிப்புகள் பல்வேறு தமிழ் ஆர்வலர்களாலும், பதிப்பாசிரியர்களாலும் பதிப்பிக்கப்பட்டுள்ளன. அவற்றுள்சில: சுந்தரநாத பிள்ளை, பு. முனிசாமி நாயுடு, மணி. திருநாவுக்கரசு முதலியார், மு. ரா. அருணாசலக் கவிராயர், செங்கல்வராய பிள்ளை, கிருபானந்தவாரியார், டி. எஸ். வாசுதேவன், டி. ஏ. சம்பந்த மூர்த்தி, இரா. கிருஷ்ணன், அ. மாணிக்கனார், வடிவேலு முதலியார் உரை.

கட்டுரையின் எல்லை கருதி ஒரு சில பதிப்புகள் மட்டும் விளக்கப்படுகின்றன.

1911 ஆம் ஆண்டு வடிவேலுமுதலியார் திருப்புகழ் மூலமும் உரையும் முதற்பாகம் 100 என்னும் உரைநூலைச் சென்னை ஸ்ரீலட்சுமி நாராயணவிலாசம் பிரஸில் வெளியிட்டுள்ளார். இந்நூல் 2ஆம் பதிப்பாக வெளியாகியுள்ளது. முதற்பதிப்பைப் பற்றி எந்தக் குறிப்பும் கிடைக்கவில்லை; இரண்டாம் பதிப்பில் காப்பாக மூன்று பாடல்களும் நூறு திருப்புகழ் பாடல்களும் உள்ளன; சந்தக்குழிப்பும், பதவுரையும் கொண்டிருக்கிறது. பதவுரையை அடுத்து விளக்கமான உரை, சில மேற்கோள்களுடன் உள்ளது. இந்நூலில் முதற்பதிப்பின் முகவுரையும் இடம்பெற்றுள்ளது. அம்முகவுரையில் மா. வடிவேலன்,

அந்நூல் பலவேறு சந்தங்களானமைந்திருப்பின் கற்றுவல்லோர்க்கும் சொல் முடிவு, பொருள்முடிவு முதலியவைகள் தெற்றென உணர்தல் அருமையினும் அருமை. ஆகலின் நாகரிகம் பரவி வரும் இக்காலத்திலும் அதற்குரிய ஒரு உரை இல்லாதிருப்பின் அது பெருங் குறையாமென்று எண்ணி அதற்குத் தக்க ஒரு பதப்பொருள் எழுதியிருக்கின்றனன் (மா. வடிவேலு முதலியார்

(உ.ஆ), திருப்புகழ் மூலமும் உரையும், ப.4.)

என உரையெழுதியதற்குக் காரணம் கூறியுள்ளார். முதற்பதிப்பின் பிழைகளைத் திருத்தம் செய்து இவ்விரண்டாம் பதிப்பை வெளியிட்டுள்ளார்.

International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

இந்நூலில் உள்ள உரைகள் எளிமையாகவும், பிறமொழிச் சொற்களுக்குத் தெளிவான விளக்கத்தையும் கொண்டிருக்கின்றன; பாடல்களிலுள்ள எல்லாச் சொற்களுக்கும் தெளிவாகப் பொருள் எழுதியுள்ளார்; பிற நூல்களில் இருந்து மேற்கோள்களை எடுத்தாண்டுள்ளார். இவையே இவருடைய உரைத்திறனை அறிந்துகொள்ள பெரும்துணைபுரிகின்றன.

மணிமங்கலம் திருநாவுக்கரசு முதலியார் உரை

1923ஆம் ஆண்டு திருப்புகழ் மூலமும் விருத்தியுரையும் (முதற்பாகம்) என்னும் நூலை, சென்னை தாதா அச்சுக்கூடத்தில் முதற்பதிப்பாகத் திருநாவுக்கரசு முதலியார் வெளியிட்டுள்ளார். அருணகிரிநாதர் வரலாறு, அருணகிரிநாதர் அருளிய நூல்கள், தலஅகராதி, சிறப்புப்பாயிரம் ஆகியனவும் இருக்கின்றன. திருப்புகழ்ச் சிறப்புப்பாயிரத்தில் நூற்பதிப்பு, நூற்பயன் என்னும் தலைப்பில் ஏழு பாடல்கள் இடம்பெற்றுள்ளன. அடுத்து நூறு பாடல்களுக்கு உரையும், இறுதியாகப் பாட்டு முதற்குறிப்பகராதியும் இடம்பெற்றுள்ளன.

இந்நூலின் உரையில் பல இடங்களில் பாடல்களுக்குத் தக்க மேற்கோள்களை எடுத்துக்காட்டியும் சொல்நயம் பொருள்நயம் ஆகியவற்றை விளக்கியும் பொருளை ஒழுங்குப்படுத்தியும் எழுதியுள்ளார். மேலும் அருணகிரிநாதர் வரலாற்றை ஆராய்ந்து தெளிவாகவும் விளக்கமாகவும் குறிப்பிட்டுள்ளார்.

முத்தமிழ்ப் புலமையும் வித்தகக் கவியில் வல்லவருமான அருணகிரிநாதர் அருளிய இந்நூலில் இலக்கியச் செறிவும், இலக்கண அமைதியும், சாத்திரப்பொருள் அடக்கமும் பெற்றிருத்தலோடு வடமொழிக் கலப்பும் பெரிதும் உடையதாய் இருக்கின்றது. இவை சந்தப் பாடல்கள் ஆதலின் அதனுடைய இன்பம் கருதிச் சொற்கள் திரித்தும் கொடுக்கப்பட்டுள்ளன. உரையாசிரியர் தமது உரையில்

> பாட்டுகள் பல பாடபேதங்களோடும் ஆங்காங்குச் சிதைந்து பொருள் புலப்படாநிலையில் காணப்படுகின்றன. அதனால் திருப்புகழுக்கு உரை வகுப்பது ஒரு கடினமான வேலை என்பது எல்லாருக்கும் இனிது விளங்கும். அத்தகைய நூலை ஒருவாறு உரையெழுத மேற்கொண்டு முதல் நூறு பாட்டுக்களுக்கு எழுதியுள்ளேன் (மணி. திருநாவுக்கரசு முதலியார், திருப்புகழ் மூலமும் விருத்தியுரையும், ப.3.)

எனத் திருப்புகழுக்கு உரையெழுதுவதன் கடினத்தைக் கூறியுள்ளார். இதன் 2ஆம் பதிப்பு மூன்றாம் பதிப்பு முறையே 1927, 1936 ஆம் ஆண்டுகளில் வெளியாகியுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

கிருபானந்தவாரியார் உரை

1959 ஆம் ஆண்டு திருமயிலைத் திருப்புகழ் என்னும் நூல் திருமயிலைத் திருக்கபாலீசுவரர் தேவஸ்தான வெளியீடாக வெளிவந்தது. இதற்குக் கிருபானந்தவாரியார் உரையெழுதியுள்ளார். முன்னுரையைக் கலைமகள் ஆசிரியர் கி. வா. ஷகந்நாதனும் வாழ்த்துரை எம். பக்தவச்சலமும் பதிப்புரையை பம்மல் வரதராஜ், சுப்பிரமணிய முதலியார், ப. சை. அண்ணாமலை முதலியார் முதலானோர் எழுதியுள்ளனர். அணிந்துரையில் முருகக்கடவுளையும், அருணகிரிநாதரின் பெருமைகளையும், நூல் பதிப்பைப் பற்றியும் எழுதியுள்ளனர்; திருமயிலைத் திருப்புகழில் பத்து பாடல்கள் இருக்கின்றன. இதற்கு பதவுரை, பொழிப்புரை, விரிவுரை, கருத்துரை போன்றவற்றை விளக்கமாகவும் சான்றுகளுடனும்

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

விளக்கியுள்ளார். திருப்புகழில் உள்ள வடசொற்கள், சந்தத் தொடர்பான தொடர்கள் ஆகியவற்றைப் புரிந்துகொள்ளும் வகையில் எளிய முறையில் உரையெழுதியுள்ளார்.

1965 ஆம் ஆண்டு திருப்புகழ் விரிவுரையைத் திருப்புகழ் காரியாலயத்தார் இரண்டாம் பதிப்பாக வெளியிட்டுள்ளனர். இதனுடைய முதற்பதிப்பு 1961இல் வெளியாகியுள்ளது என்பதைக் கிருபானந்தவாரியார் எழுதிய முன்னுரையின் வாயிலாக அறியமுடிகிறது.

இந்நூல் முருகக்கடவுள் துதி, அருணகிரிநாத சுவாமிகள் துதி, முன்னுரை, ஸ்ரீஅருணகிரிநாத சுவாமிகள் வரலாற்றுச் சுருக்கம், அதிகமாகக் கிடைத்துள்ள பாடல்கள் என்னும் தலைப்பில் எட்டுப் பாடல்கள், சிறப்புப்பாயிரத்தில் பதினாறு செய்யுள்கள் ஆகியவை இடம்பெற்றுள்ளன. நூற்பகுதியில் விநாயகர் துதி தொடங்கிச் க்ஷேத்திரக் கோவை வரை 1311 செய்யுள்கள் உள்ளன. திருப்புகழில் 1-456 அறுபடைவீடுகள், 457-660 பஞ்சபூதத் தலங்கள், 661-1001 காசி முதல் விசுவை வரையுள்ள தலங்கள், 1002-1210 பொதுப்பாடல்கள், க்ஷேத்திரக்கோவை ஒன்றும் உள்ளன. இதிலும் பதவுரை, விரிவுரை, பொழிப்புரை, கருத்துரை போன்றவை இருக்கின்றன. நூலின் பிற்பகுதியில் பாட்டு முதற்குறிப்பு அகராதியும் உள்ளது. திருப்புகழ் அமிர்தக் காரியாலயம் பதினான்கு தொகுதிகளாக வெளியிட்டுள்ளது. இதில் அறுபடைவீடுகள், பஞ்சபூதத்தலங்கள், பிற தலங்கள், பொதுத்திருப்புகழ் என்னும் முறையில் பகுக்கப்பட்டுள்ளன. வானதி பதிப்பகம் அறுபடைவீட்டுப் பாடல்களை ஆறு தொகுதியாக வெளியிட்டுள்ளது. .

1966இல் திருப்புகழ் குன்றுதோறாடல் என்னும் ஐந்தாம் தொகுதி வெளியிடப்பட்டுள்ளது. நூலின் முற்பகுதியில் தலவிளக்கம் என்பதில் ஸ்ரீசைலம், திருவேங்கடம், திருத்தணி ஆகிய மூன்று தலங்களுக்குச் செல்லும் வழியைக் கூறியுள்ளார். திருப்புகழ் அமிர்தத்தில் வெளிவராத நாற்பது பாடல்களுக்கு விரிவுரை எழுதிச் சேர்க்கப்பட்டுள்ளதாக முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார். 1967ஆம் ஆண்டு திருப்புகழ் ஆறாம் தொகுதியின் முதற்பதிப்பு வெளியாகியுள்ளது. ஐந்தாம் தொகுதியின் தொடர்ச்சியாக 107 பாடல்கள் உள்ளன. இதில் திருப்புகழ் அமிர்தத்தில் வெளிவராத எண்பத்தொரு பாடல்களுக்கு விரிவுரை எழுதிச் சேர்க்கப்பட்டுள்ளன. ஐந்தாவது பதிப்பைத் தொடர்ந்தே செய்யுள் எண் கொடுக்கப்பட்டுள்ளது.

கிருபானந்தவாரியார் பதிப்புகளில் பெரும்பாலும் ஒரே மாதிரியான உரையமைப்பு உள்ளது. கிருபானந்தவாரியார் எல்லாவற்றிற்கும் பதவுரை, பொழிப்புரை, விரிவுரை, கருத்துரை என்னும் முறையைப் பயன்படுத்தியுள்ளார்; விரிவுரையில் பாடலின் கருத்திற்கேற்ப மேற்கோள்களைக் கையாண்டுள்ளார். இதில் அருணகிரிநாதர் அருளிய பிற நூல்களில் இருந்தும் மற்றும் தேவாரம், திருக்கோவையார், திருவாசகம், பெரியபுராணம், திருமந்திரம், திருக்குறள், கம்பராமாயணம், திருச்சுழியற்புராணம் போன்ற பல நூல்களில் இருந்து சான்றுகளை எடுத்தாண்டுள்ளார்.

வலையப்பேட்டை இரா. கிருஷ்ணன் உரை

திருப்புகழ்த் தல ஆராய்ச்சித் திலகம் இரா. கிருஷ்ணன் முருகப்பெருமான்மீது மிகுந்த ஈடுபாடு கொண்டு அருணகிரிநாதர் இயற்றிய நூல்கள் முழுவதையும் பிழையறப் பதிப்பித்தும்,

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் அரையாண்டு பன்னாட்டு ஆய்விதழ்

International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

சில பாடல்களுக்குச் சிற்றுரையும் எழுதியுள்ளார். இவர் திருப்புகழ் 108, திருப்புகழ் 111 மூலமும் சிற்றுரையும் ஆகிய இரண்டு நூல்களுக்கு உரையெழுதி வெளியிட்டுள்ளார். இவ்விரண்டு நூல்களுள் திருப்புகழ் 108 என்னும் நூலை 1995 இல் திருப்புகழ்ப் பதிப்பகம் வெளியிட்டுள்ளது. இதில் அணிந்துரை, திருப்புகழ்ச் சிறப்பு, பாட்டு முதற்குறிப்பகராதி ஆகியன இருக்கின்றன.

இப்பதிப்பில் விலைமகளிர் பற்றிக் கூறப்படாதனவும், பெருவழக்காக உள்ளனவும், பக்தி ஞான மார்க்கங்களை வலியுறுத்துவனவும், முருகபக்தர்களாலும் இசைவாணர்களாலும் திருக்கோயில்கள், அரங்குகள் ஆகியவற்றில் பாடப்பெறுவனவும் ஆகிய 108 திருப்புகழ்ப் பாடல்களைத் தேர்ந்தெடுத்துச் சிறப்பான முறையில் பதிப்பித்துள்ளார். ஒவ்வொரு பாடலின் தலைப்பிலும் ஊர்ப்பெயர் இடம்பெற்றுள்ளது; சில பாடல்களின் அடியில் பாடலின் பயன் பற்றிக் கூறியுள்ளார். நூலின் கடைசிப் பகுதியில் பாட்டு முதற்குறிப்பகராதி பாட்டு, பக்க எண், இராகம், தாளம் என்னும் முறையில் சுட்டப்பட்டுள்ளது. இதற்கடுத்துச் சில நூல்கள் பற்றிய விளம்பரங்கள் உள்ளன.

திருப்புகழ் 111 மூலமும் சிற்றுரையும் என்னும் நூலினை 2004ஆம் ஆண்டு திருப்புகழ்ப் பதிப்பகத்தில் முதற்பதிப்பாகப் பதிப்பித்துள்ளார். இந்நூலின் அமைப்பு அணிந்துரை, வாழ்த்துரை, தல அகராதி, விநாயகர் துதி முதல் திருப்புகழ் அறுபடைவீடு, பஞ்சபூதத் தலங்கள், இதரத் தலங்கள், பொது என்னும் வரிசையில் பாடல்கள் தொகுத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. இந்நூலுக்குச் சிற்றுரையை எளிமையான உரையாக எழுதியுள்ளார்.

இவர்திருப்புகழைப் பல வகைகளில் உலக மக்களிடம் பரப்பி வருகின்றார். இவர் பல பாடல்களுக்கு இசையமைத்தும் பல மன்றங்களில் திருப்புகழ் உரையாற்றியும் வருகின்றார்.

செங்கல்வராய பிள்ளை உரை

1999ஆம் ஆண்டு சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார் திருப்புகழ் முதலான நூல்களை ஆறு தொகுதியாக வெளியிட்டுள்ளனர். இதற்கு வ. சு. செங்கல்வராய பிள்ளை உரையெழுதி உள்ளார்.இந்நூலுள் 1304 திருப்புகழ் பாடல்கள் உள்ளன. பாடலின் பொருள்கேற்ப பாடலின் மேற்பகுதியில் தலைப்பிடப்பட்டுள்ளது. பாடல்கள் இடப்பக்கத்திலும் உரை வலப்பக்கத்திலும் அச்சிடப்பட்டுள்ளன.

செய்யுள்களுக்குத் தொடர் எண்ணும் தலப்பாடல்களின் எண்ணும் கொடுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பாடல்களுக்கும் அடிக்குறிப்பில் சில அருஞ்சொற்களுக்கு விளக்கமும், பிற இலக்கியங்களிலிருந்து சான்றுகளும், பாடவேறுபாடுகளும் கொடுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு தலத்திற்கும் பெயர்க்காரணம், இருக்குமிடம், செல்லும்வழி முதலான குறிப்புகள் சுட்டப்பட்டுள்ளன. ஒவ்வொரு தொகுதியின் கடைசியில் பாட்டு முதற்குறிப்பு இடம்பெற்றிருக்கின்றது. ஆறாம் தொகுதியின் இறுதியில் அநுபந்தம் ஒன்று உள்ளது. ஆறாம் தொகுதியின் இறுதியில் 5 தொகுதியின் பாட்டுமுதற்குறிப்பு இடம்பெற்றுள்ளது. பக்க எண், பாட்டுஎண், பாடல் ஆகியனவும், புதியதாகச் சேர்க்கப்பட்ட பாடலின் முன் உடுக்குறியும் உள்ளன. வ. சு.செங்கல்வராய பிள்ளை திருப்புகழில் காணப்படும் செய்திகளைத் தொகுத்து அவற்றிற்கு ஏற்றாற்போல் தலையிட்டுத் தெளிவாகப் பின்பகுதியில் அளித்துள்ளார். இதுபோன்று திருப்புகழுக்குப் பலர்

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் அரையாண்டு பன்னாட்டு ஆய்விதழ்

International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

உரையெழுதியுள்ளனர். அவற்றுள் சில நூல்கள் பாடல்களுக்கு விளக்கம் என்னும் முறையிலும், சில பதிப்புகள் தெளிவுரை, விருத்தியுரை, மெய்ஞ்ஞான விருத்தியுரை, கருத்துரை, பதவுரை, பொழிப்புரை முதலானவற்றில் சிலவற்றைக் கொண்டு உள்ளன.

தொகுப்புப் பதிப்பு - உரை

அருணகிரிநாதர் எழுதிய நூல்களுக்குத் தனியாக மட்டுமின்றி அனைத்து நூல்களுக்கும் சேர்த்து உரையெழுதித் தொகுப்பாக வெளியிடப்பட்டுள்ளன. தொகுப்பு நூல்களில் உள்ள உரைப்பதிப்புகளில் சிலவற்றை இனிக் காண்போம். காஞ்சி-நாகலிங்க முனிவர் – பதிப்பு திருக்கைலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதினத்து மகாசந்நிதானம் வைத்தியலிங்க தேசிக மூர்த்திகள் திருவுளப்பாங்கின்படி அவ்வாதீனத்து மெய்கண்ட சாத்திரப் பிரசாரகர் வண்ணக்களஞ்சியம் காஞ்சி-நாகலிங்க முனிவர் 1933 இல் பதிப்பித்துள்ளார். முன்னுரையைக் கா. நமச்சிவாய முதலியாரும் பதிப்புரையை நாகலிங்க முனிவரும் எழுதியுள்ளனர்.

இந்நூலுள் திருப்புகழில் முதல் நான்கு திருமுறைகளுள் திருப்பரங்குன்றம் முதல் பொதுப்பாடல் ஈறாக உள்ள தலங்களின் 400 பாடல்களைக் கொண்டும், திருவகுப்பில் 18 வகுப்புகள் குறிப்புரையுடனும் ஆறாம் திருமுறையான கந்தரந்தாதி 50 பாடல்கள் கருத்துரையுடனும், கந்தரலங்காரம் 107 செய்யுள்கள் குறிப்புரையுடனும், கந்தரனுபூதி காப்பு முதலாக 51 செய்யுள்கள் குறிப்புரையுடனும் தரப்பட்டுள்ளன. இறுதியில் செய்யுள் முதற்குறிப்பு அகராதியில் செய்யுள் எண் கொடுக்கப்பட்டுள்ளது. இப்பதிப்பிற்குப் பயன்பட்டவையாகக் காஞ்சி ஞானப் பிரகாச முனிவரது ஆதினப் புத்தகசாலை ஏட்டுச்சுவடி 500 பாடல்கள், கூவம், பிள்ளையார் குப்பம் ஏட்டுச்சுவடி 300 ஆகிய இவை அனைத்தும் மாரியப்ப முதலியார் வழியில் கிடைத்தது என்றும், தக்கோலம், நாகமணி முதலியார் குமாரர்கள் முயன்று தேடி அனுப்பிய ஏட்டுச்சுவடியின் 400 பாடல்களும் சேர்ந்து இப்பதிப்புப் பணிக்குப் பெரும் உதவியாக இருந்துள்ளது என நாகலிங்க முனிவர் பதிப்புரையில் கூறியுள்ளார்.

செங்கல்வராய பிள்ளை உரை

1952 ஆம் ஆண்டு இவ்விரண்டாம் பதிப்பினை வ. சு. செங்கல்வராய பிள்ளை உரையெழுதி, தொகுத்து முருகவேள் பன்னிருதிருமுறை என்னும் தலைப்பில் வெளியிட்டுள்ளார். இப்பதிப்பு ஆறு தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டு அருணகிரிநாதர் எழுதிய முறைப்படி வரிசைப்படுத்தி உள்ளனர்.

சைவ சமயக் குரவர்களின் பன்னிருதிருமுறை போன்று அருணகிரிநாதர் நூல்கள் வகைப்படுத்தப்பட்டுள்ளன. அவை வருமாறு:

1-7 திருமுறை -	திருப்புகழ் பாடல்கள்
8ஆம் திருமுறை -	கந்தரந்தாதி
9ஆம் திருமுறை -	திருவகுப்பு
10ஆம் திருமுறை -	கந்தரநுபூதி
11 ஆம் திருமுறை -	முருக அடியார்கள் பலர் பாடிய பாடல்களின் திரட்டு
12 ஆம் திருமுறை -	வ. த. சுப்பிரமணியபிள்ளை சந்ததியரான வ. சு.

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

செங்கல்வராய பிள்ளை, வ. சு. மயிலேறும் பெருமாள் ஆகியோரின் பதிப்பைப் பற்றியும், அவர்களுடைய சில நூல்களும் பகுத்துக் கொடுக்கப்பட்டிருக்கின்றது.

- அருணகிரிநாதரின் நூல்கள் மூலப்பதிப்பாகவும் உரைப்பதிப்பாகவும் பதிக்கப்பட்டுள்ளன. மூலப்பதிப்பு முதன் முதலாக 1858ஆம் ஆண்டும், உரைப்பதிப்பு 1859 ஆம் ஆண்டும் வெளியாகி உள்ளன.
- வழக்கறிஞர் வ. த. சுப்பிரமணியபிள்ளை 1894 இல் வெளியிட்ட திருப்புகழ் பதிப்பு முதன் முதலில் மிகுதியான பாடல்களைக் கொண்டுள்ளது.
- உரைப்பதிப்பு தனிப்பதிப்பு, தொகுப்புப் பதிப்பு ஆகிய முறையில் வகைப்படுத்தப்பட்டுள்ளது.
- அருணகிரிநாதரின் நூலுக்குக் குறிப்புரை, அரும்பதவுரை, விளக்கவுரை, பொழிப்புரை, சுருக்கவுரை, கருத்துரை, தெளிவுரை, விரிவுரை, சிறப்புரை, மெய்ஞ்ஞான விருத்தியுரை ஆகிய பத்துவகையான உரைகள் இருக்கின்றன.
- அருணகிரிநாதர் நூல்களுக்கு உரையெழுதிய பெருமக்களுள் வில்லிபுத்தூரார், வடிவேலு முதலியார், மணிமங்கலம் திருநாவுக்கரசு முதலியார், வ. சு. செங்கல்வாராய பிள்ளை, வ. சு. சண்முகப் பிள்ளை, மு. திருவிளங்கம், ச. ரா. கச்சுபேசுவரன், காஞ்சி, நாகலிங்க முனிவர், கிருபானந்தவாரியார், வலையப்பேட்டை இரா. கிருஷ்ணன் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவர்.
- அருணகிரிநாதர் நூல்களில் பதிப்பு மற்றும் உரைப்பணிகளில் குறிப்பிடத்தக்க இடம் பெற்றவர்கள் வ. த. சுப்பிரமணிய பிள்ளை, வ. சு. செங்கல்வராய பிள்ளை, கிருபானந்தவாரியார் ஆகியோராவர்.கட்டுரையாளரின்தேடலில்மூலம்திருப்புகழுக்கு 150 மூலப்பதிப்புகளும் 45 உரைப்பதிப்புகளும்இருப்பதைஅறியமுடிகின்றது.

துணைநூல்கள்

[1] ஆறுமுகநாவலர்- ***நன்னூல்காண்டிகையுரை* , சென்னை: முல்லைப்பதிப்பகம், 1994.**

[2] கிருபானந்தவாரியார் சுவாமிகள்-***திருப்புகழ் விரிவுரை தொகுதி 1 முதல் 10 வரை***
சென்னை: திருப்புகழமிர்தம்காரியாலயம், 1965.

[3] மேற்படி-***திருப்புகழ் விரிவுரை தொகுதி 12, 13*** சென்னை: குகஸ்ரீ வாரியார் பதிப்பகம்,

[4] கிருஷ்ணன், ரா (உ.ஆ.),-***திருப்புகழ் 108*** , சென்னை: திருப்புகழ்ப்பதிப்பகம்,1995.

[5] மேற்படி. -***திருப்புகழ் 111 மூலமும்சிற்றுரையும்,*** சென்னை : திருப்புகழ்ப்பதிப்பகம், 2004.

[6] சுப்பிரமணியபிள்ளை, த. (ப.ஆ.),-***அருணகிரிநாதர் திருப்புகழ்முதற்பாகம்***
சென்னபட்டணம்:ஹிந்துதியலாஷிகல் அச்சுக்கூடம், இரண்டாம் பதிப்பு, 1909.

[9] மேற்படி-***திருப்புகழ் இரண்டாம் பாகம்,*** சென்னபட்டணம்:ஹிந்துதியலாஷிகல் அச்சுக்கூடம், 1901.

[10] செங்கல்வராயபிள்ளை (உ.ஆ)-***முருகவேள் பன்னிருதிருமுறை***, சென்னை: ஸ்ரீமதி மீனாஜிகலியாண சுந்தரம், 1951.

[11] நாகை சரவண முதலியார், (ப.ஆ.)- ***நவரத்தின திருப்புகழ்***, சென்னை: திருவொற்றியூர், இரண்டாம் பதிப்பு, 1924.

[12] வெள்ளைவாரணன் (உ.ஆ.),- ***தொல்காப்பியம் – மரபியல்உரைவளம்,*** மதுரை: மதுரை காமராசர் பல்கலைக்கழகம், 1994.

தமிழில் இக்கட்டுரையை இவ்வாறு மேற்கோளிடுங்கள்:

வனிதா. "அருணகிரிநாதரின் திருப்புகழ் – உரைப்பதிப்பு" *தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்*, தொகுதி 3, சிற.இதழ் 2, தொகுதி 2, *திசம்பர்* 2020, பக். 369-378. டிஓஐ: **10.38067/ijtlls.2020.spl.v03i02v2.054**

Cite this Article in English (*MLA 8 Style*) as:
Vanitha. "**Arunagirinathar's Thiruppukazhu - Text Edition**." *International Journal of Tamil Language and Literary Studies*, Vol. 3: Special Issue - 2, Vol. 2, December 2020, pp. 369-378. DOI: **10.38067/ijtlls.2020.spl.v03i02v2.054**

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி /Author Contribution Statement: இல்லை /NIL

கட்டுரையாளர் நன்றியுரை /Author Acknowledgement: இல்லை /Nil

கட்டுரையாளர் உறுதிமொழி/Author Declaration: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்./I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் அரையாண்டு பன்னாட்டு ஆய்விதழ்

International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

முத்தொள்ளாயிரத்தில் ந.சுப்புரெட்டியாரின் உரைமரபு

Explanatory Method of Na.Subbureddiyar's "Muthollayiram"

V. பூர்ணா, முனைவர் பட்ட ஆய்வாளர், பெரியார் பல்கலைக்கழகம், சேலம்.
V.Poorna, Research Scholar, Department of Tamil, Periyar University, Salem.
ORCiD: https://orcid.org/0000-0002-7678-9584
முனைவர் T.பெரியசாமி, பேராசிரியர், தமிழ்த்துறைத் தலைவர், பெரியார் பல்கலைக்கழகம், சேலம்.
Dr. T. Periasamy, Professor and Head**,** Department of Tamil**,** Periyar University**,** Salem.
ORCiD: https://orcid.org/0000-0002-1978-5114
DOI: 10.38067/ijtlls.2020.spl.v03i02v2.055

Abstract

Sangam (Ancient) literature is equally glorified when compared with classical literature "Muthollayiram". It is a rare treasure trove to praise the Chera, Chola, Pandiya kings commonly called as the Moovendars. It was composed in the 9th century by 'Venpa Yaapu'. Without naming any land by name, it has generalized only in the name of emperors. This book has disappeared over time. However, the scholars have found that "Muthollaiyaram" in 'Purathirattu' book. They believed that each Moovendars has three hundred verses; in total it consists of nine hundred songs as it leads "Muthollaiyaram" to a prominent literature. Over nine hundred songs, there are only 108 verses were available now. In addition to this, more than twenty verses have been found among the old texts, some of which have been added to the speculation that they may be the 30,000 verses and 130 songs have been identified by Sethuragunathan. One can see the detailed preface for the note of "Muthollaiyaram" given by Dr. Na. Subbureddiyar. He had classified "Muthollaiyaram" as an Agam literature like Aram, Porul and Inbam. Moreover, Subbureddiyar had heighted some news and words while explaining in notes.

Keywords: Explanatory Method, Na.Subbureddiyar, Muthollaiyarum, Purathirattu, Venba yaapu,

முன்னுரை

சங்க இலக்கியங்களோடு செவ்விலக்கியமாகப் போற்றுமளவுக்கு சிறப்புடையது முத்தொள்ளாயிரம். வெண்பா யாப்பில் இயற்றப்பட்ட இந்நூல் சேர, சோழ, பாண்டியர்களாகிய மூவேந்தர்களின் புகழ்பாடும் ஓர் அரிய புதையலாகும். மூவேந்தர்களைக் குறிப்பிட்டாலும் எந்த மன்னனையும் பெயர்சுட்டிப் பாடாமல் வேந்தர்களின் பொதுப் பெயராலேயே அமைந்துள்ளது. அகம், புறம் என்ற பாடுபொருளால் சிறப்பிக்கும் இந்நூலின் ஆசிரியர் யாரென்று அறியப்படவில்லை. இந்நூல் காலவெள்ளத்தில் காணாமல் போய்விட்டது. ஆயினும் `புறத்திரட்டு' என்னும் நூலின் வழியாக முத்தொள்ளாயிரச் செய்யுகள் இன்றைக்கு கிடைத்துள்ளன. இம்முத்தொள்ளாயிரம் மூவேந்தர்கள் ஒவ்வொருவர் மீதும் முந்நூறு முந்நூறு பாடல்களாக மொத்தம் தொள்ளாயிரம் பாடல்களைக் கொண்ட பேரிலக்கியமாகத் திகழ்ந்திருக்க வேண்டும் என்பது அறிஞர்களின் துணிபு. இப்பொழுது

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

முத்தொள்ளாயிரம் பாடல்கள் என கிடைத்திருப்பது 108 பாடல்களேயாகும். இத்துடன் இருபதுக்கும் மேற்பட்ட பாடல்கள் பழைய உரைகளினிடையே கண்டெடுக்கப்பட்டு முத்தொள்ளாயிரச் செய்யுளாக இருக்கக்கூடும் என்ற யூகத்தில் சில சேர்க்கப்பட்டு 130 பாடல்களை முத்தொள்ளாயிரப் பாடல்களாக சேதுரகுநாதன் என்பவரால் அடையாளங் காணப்பட்டுள்ளது.

பதிப்பு வரலாறு

முத்தொள்ளாயிர முதன்முதலில் தனிநூலாகப் பதிப்பித்தவர் இரா.இராகவய்யங்கார். 1905இல் இப்பதிப்பு வெளியானது. இதில் 110 பாடல்கள் இடம்பெற்றுள்ளன. இதனைப் பின்பற்றி 1938இல் வையாபுரிப்பிள்ளை அவர்கள் 110 பாடல்களைப் பதிப்பித்துள்ளார். முத்தொள்ளாயிரப் பாடல்களின் தொகுப்பில் உறுதியான தெளிவு இல்லாததால் 1943இல் ரசிகமணி டி.கே.சி. அவர்கள் தம் பதிப்பில் 99 பாடல்களை மட்டுமே பதிப்பித்தார். முன்னர் கூறியது போல் ந.சேதுரகுநாதன் அவர்கள் 130 பாடல்களுடன் 1946இல் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் வாயிலாகப் பதிப்பித்தார். கூடுதலாக அவர் பதிப்பித்தப் பாடல்கள் பற்றி அவருடைய முன்னுரையில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

``இற்றைக்கு ஐந்நூற்றாண்டுகட்கு புறத்திரட்டு என்னுத் தொகைநூல் தொகுத்த சான்றோர், அந்நூலின்கண் இடையிடையே மிளரவைத்துப் போந்த நூற்றெட்டு முத்தொள்ளாயிரச் செய்யுட்களைப் பெற்று அவற்றைப் பயின்று இன்பத் துய்ந்துத் தன்னை மறந்து உவகை எய்தும் பேறும் கிடைத்துள்ளது. கிடைக்கப் பெற்ற விழுமிய பாடல்களின் விழுமிய சுவையானது தூண்ட இனிமேலும் இத்தகைய பாடல்கள் கிடைக்கும் கொல்லோ என ஆராய்ந்து செவிவழிப் பழைய உரைகளினிடையே பயின்று கிடந்தனவாய் இருபத்திரண்டு பாடல்கள் இவற்றோடு ஒத்த இயல்பினவாய்க் காணப்பட்டமையின் அவையும் இவற்றோடு சேர்த்து உரையெழுதி வெளியிடப் பெறுவனவாயின்" (சேதுரகுநாதன், முன்னுரை, ப.6) இருப்பினும் இன்றைக்கு முத்தொள்ளாயிரம் எனும் நூல் பல அறிஞர்களின் துணிந்த முடிபாக கடவுள் வாழ்த்துப் பாடலோடு மொத்தம் 109 பாடல்களைக் உள்ளடக்கியது என்கின்றனர்.

முத்தொள்ளாயிர வரலாறு

முத்தொள்ளாயிரப் பாடல்களின் எண்ணிக்கை குறித்து இருவேறு கருத்துக்கள் நிலவுகின்றன. மூவேந்தர்கள் ஒவ்வொருவர் மீதும் பாடப்பட்ட மூன்று தொள்ளாயிரம் (3x900=2700) பாடல்கள் என்றும், மொத்தம் 900 பாடல்கள் என இருவேறு கருத்துக்கள் இருக்கின்றன. புதிதாகப் புனைந்து, பாடப்படும் இலக்கிய வகையைத் தொல்காப்பியர் விருந்து என்று குறிப்பிடுவார்.

விருந்தே தானும் புதுவது கிளந்த யாப்பின் மேற்றே (தொல்.செய்.551)

ஆகையால் முத்தொள்ளாயிர ஆசிரியர் இந்நூற்பா உரையில் விருந்து எனும் இலக்கிய வகையை பயன்படுத்தியுள்ளார். முத்தொள்ளாயிரம் நூல் முழுமையும் வெண்பா யாப்பில்

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

பாடப்பட்டிருப்பதனைக் கொண்டு இந்நூல் பதினெண் கீழ்க்கணக்கு காலத்தை ஒட்டியோ அல்லது அதன் பிறகோ பாடப்பட்டிருக்க வேண்டும் என கருத வாய்ப்புள்ளது. தொல்காப்பிய உரையாசிரியர் இளம்பூரணர் தம் பொருளதிகாரப் புறத்திணையியல் உரையில் முத்தொள்ளாயிர செய்யுள் ஒன்றினை மேற்கோள் காட்டுகிறார். அவரது காலம் கி.பி.12ஆம் நூற்றாண்டு என்பர். எனவே அவர் காலத்திற்கு முந்தைய நூல் முத்தொள்ளாயிரம் என்பது தெளிவாகின்றது. `முத்தொள்ளாயிரத்தின் காலம்' என்ற கட்டுரையில் இந்நூலின் காலம் குறித்து தனிப்பட்ட ஆய்வு செய்யும் வையாபுரிப்பிள்ளை அவர்கள் பல்வேறு அகப்புறச் சான்றுகளின் வழியாக கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் முத்தொள்ளாயிரம் இயற்றப்பட்டிருக்க வேண்டுமென நிறுவுகிறார். (இலக்கிய தீபம், பக்.183-188). இக்கருத்தே வலிமையுடையதென்றால் மூவேந்தர்களைப் புகழ்ந்து பாடும் இந்நூல் கி.பி.6 முதல் 8ஆம் நூற்றாண்டு வரை தமிழகத்தில் கோலோச்சிய பல்லவப் பேரரசு குறித்து ஏதும் குறிப்பிடாமல் மௌனம் சாதித்திருப்பதற்கான காரணங்கள் குறித்து ஆராயப்பட வேண்டியதாகிறது.

முழுநூல் நமக்குக் கிடைக்காத காரணத்தால் முத்தொள்ளாயிர நூலின் ஆசிரியர் பற்றி ஏதும் அறிய முடியவில்லை. உரையாசிரியர்கள் பலரும் முத்தொள்ளாயிரத்தை மேற்கோள் காட்டும் சமயங்களில் கூட நூலாசிரியரின் பெயரைக் குறிப்பிடாமல், நூற்பெயரை மட்டும் குறிப்பிட்டதை நோக்கும் பொழுது நூல் கிடைத்த காலத்திலேயே கூட நூலாசிரியர் பெயர் பற்றிய குறிப்பும் கிடைக்காமல் போயிருக்கும் என்று எண்ணத் தோன்றுகிறது. சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் வாயிலாக முத்தொள்ளாயிரத்தைப் பதிப்பித்த சேதுரகுநாதன் அவர்கள் தம் உரைநூலின் முன்னுரையில் முத்தொள்ளாயிரத்தின் யாராயிருக்கக் கூடும் என்று ஓர் ஒப்பியல் ஆய்வினை நிகழ்த்தி, முத்தொள்ளாயிர நூலுக்கும் கயிலைபாதி காளத்திபாதி அந்தாதி, திருஈங்கோய் மலை எழுபது ஆகிய இரு நூல்களுக்கும் இடையே உள்ள ஒற்றுமைக் கூறுகள் பலவற்றையும் எடுத்துக்காட்டி மேற்குறிப்பிட்ட இரு நூல்களின் ஆசிரியராகிய நக்கீரதேவ நாயனாரே முத்தொள்ளாயிரத்தின் ஆசிரியராயிருத்தல் கூடும் என்று எழுதுகின்றார். சேதுரகுநாதன் காட்டிய ஒப்புமைப் பகுதிகள் உண்மையில் மிகுந்த வியப்பளிக்கக் கூடிய விதத்தில் ஒத்து அமைகின்றன என்றாலும் இக்கருத்தினை முடிந்த முடிபாக ஏற்றுக் கொள்ளுதல் எளிதன்று.

முத்தொள்ளாயிரத்தின் தனிச்சிறப்புகள்

தமிழகத்தில் மூவேந்தர்களும் எந்த காலத்திலும் இணைந்து செயல்படாத ஒரு வரலாற்றுச் சூழலில் மூவேந்தர்களையும் ஒத்த நிலையில் இணைத்துப் பாட்டுடைத் தலைவர்களாக்கி ஓர் இலக்கியம் படைக்க வேண்டுமென்ற முத்தொள்ளாயிர ஆசிரியரின் பெருவிருப்பம் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாகும். சிலப்பதிகார ஆசிரியர் இளங்கோவடிகள் உருவாக்கிக் காட்டிய ஒன்றுபட்ட தமிழகம் என்ற பாதையில் புதுநடை போட்ட பெருமை இந்நூலாசிரியருக்கு உண்டு. மூவேந்தர்களைக் குறிப்பிடும் போது

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் அரையாண்டு பன்னாட்டு ஆய்விதழ்

International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

அவர்களின் வெற்றியைக் குறிப்பிடும்போதும் பகைவர்கள் மற்றும் சிற்றரசர்களைக் குறிப்பிடும்போதும் வரலாற்று அடையாளங்கள் தோன்றாமல் பொதுப் பெயர்களையே கையாண்டு நூலை அமைத்தள்ள நூலாசிரியரின் திறம் அவரின் தமிழ்நிலப்பொது நோக்கைப் புலப்படுத்துகின்றது. மூவேந்தர்களும் வலிமையிழந்து அந்நியர் ஆட்சியில் கீழ்நிலை உற்ற காலத்தில் தமிழ் வேந்தர்களின் ஒற்றுமையை வலியுறுத்தும் நோக்கத்தோடும் தமிழின எழுச்சியின் அடையாளமாகவும் முத்தொள்ளாயிரம் பாடப்பட்டிருக்க வேண்டும் என ஊகிக்க வாய்ப்பாகிறது. இவ்வாறாக பல சிறப்புகளுடன் விளங்கு முத்தொள்ளாயிரத்துக்கு உரை காண பலர் முன்வந்தனர். அதில் அகத்திணை ஆராய்ச்சி என்பன போன்ற பல அரிய நூல்களை எழுதிய பேராசிரியர் டாக்டர் ந.சுப்புரெட்டியார் அவர்கள் தமது நடையில் எளிமையும், இனிமையும், தெளிவும் உள்ளப்படி முத்தொள்ளாயிரத்துக்கு உரை வகுத்துள்ளார் அதை பின்வருமாறு அறியலாம்.

உரையாசிரியர் வாழ்க்கை வரலாறு

டாக்டர் ந.சுப்புரெட்டியார் 7.9.1927இல் பிறந்தவர். தமிழகத்தைச் சேர்ந்தவர். இவர் பி.எஸ்.டி., எல்.டி. வித்துவான் பி.ஏ., எம்.ஏ., பிஎச்.டி., பட்டங்கள் பெற்றவர். துறையூர் உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியராக ஒன்பதாண்டுகள் (1941-50) பணியாற்றினார். காரைக்குடி அழகப்பா ஆசிரியர் பயிற்சிக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியராக பத்தாண்டுகளும் (1950-60), பதினேழு ஆண்டுகள் (1960-77) திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவராகவும் பேராசிரியராகவும் பணியாற்றி ஓய்வு பெற்றவர். ஓய்வு பெற்றபின் பதினைந்து மாதங்கள் கலைக்களஞ்சிய தலைமைப் பதிப்பாசிரியராகப் பணியாற்றியவர். நாலாயிரத் திவ்விய பிரபந்தத்தின் நம்மாழ்வாரின் தத்துவத்தை ஆராய்ந்து டாக்டர் பி.எச்.டி பட்டம் பெற்றவர். தமிழிலும் ஆங்கிலத்திலும் பல ஆய்வுக்கட்டுரைகள் எழுதி வெளியிட்டவர். இவைத் தவிர ஆசிரியம், இலக்கியம், வாழ்க்கை வரலாறு, திறனாய்வு, அறிவியல் ஆராய்ச்சி என்று 96 அரிய நூல்களை இயற்றியுள்ளார். இவர் நூல்களில் இனிமை, எளிமை, தெளிவு போன்றவை தனிச்சிறப்பாகும்.

டாக்டர் ந.சுப்புரெட்டியாரின் உரைசிறப்பு

இவர் முத்தொள்ளாயிரத்துக்கு உரை வழங்குகையில் மிக விரிவான முகவுரையுடன் தொடங்கியிருப்பது காணமுடிகிறது. இவர் முத்தொள்ளாயிரத்தை பிற அற இலக்கிய வகைமைகளை போல் அறம், பொருள், இன்பம் என வகைப்படுத்தியுள்ளார். கடவுள் வாழ்த்துப் பாடலை அறம் எனவும், பொருட்பாலாக 43 பாடல்களையும், இன்பத்துப் பாடலாக 65 பாடல்களையும் குறிப்பிட்டுள்ளார். பொருட்பாலில் உள்ள 43 பாடல்களை நாடு, நகரம், பகைப்புலம் பழித்தல், திறை, எழில்கோட்டை, குதிரை மறம், யானை மறம், களம், வெற்றி, புகழ் என பாடல்களை பிரித்துக் காட்டியுள்ளார். அதேபோல் இன்பத்துப்பாலில் உள்ள 65 பாடல்களையும் இவ்வமைப்பை கொண்டே பகுத்துக்காட்டியுள்ளார்.

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

உரை விளக்கச் சிறப்புகள்

சுப்புரெட்டியார் பல இடங்களில் உரை விளக்கத்திற்காகப் பல அரிய செய்திகளையும், சொற்களையும் எடுத்துக்காட்டுகளையும் குறிப்பிட்டுள்ளதை காணமுடிகிறது. உலா நிகழ்வை விளக்கும் உரையாசிரியர் உலா வரும் அரசனைக் கண்டால், அரிவையர் காதல் கொள்வர் என ஐயுற்று அன்னையர் வீட்டுக் கதவுகளை அடைத்து வைக்கின்றனர். இதனால் பெண்களின் ஏக்கம் மிகுகிறது இதனை அறிந்த செவிலித்தாய். ``அடைபட்டிருக்கும் மகளிர் அவலக் கவலையால் சாக்காட்டு நிலையை எய்திவிட்டால், அதனால் வரும் ஏதம் பெரிது மிகப்பெரிது பெண்பழி பெரும்பழியாகி விடும். முதலில் கதவுகளைத் திறந்து விடுங்கள் உறைந்தையர்கோன் அவர்கள் கண்ணாரக் கண்டு களிக்கட்டும் அதனால் தீமைகள் விளையுமாயின் அவற்றைப் போக்கும் வழிகளைப் பின்னர் பார்த்துக் கொள்வோம்" (ப.159) எனும் ந.சுப்புரெட்டியாரின் உரைவிளக்கம் படிப்பவரையும் சொல்லின் இனிமையை அனைவரும் உணரச் செய்வதைக் காணமுடிகிறது.

மேலும் "உலாக் காட்சியைக் காணும் அம்மங்கையர் உள்ளத்தில் ஒருவித கொந்தளிப்பு ஏற்படுகின்றது. சிலர் காதல் நோக்குடன் அவனைக் காண்கின்றனர். சிலர் அவனை மயக்கத்துடன் வெரித்துப் பார்க்கின்றனர். சிலர் கடைக்கண்ணால் நோக்குகின்றனர். சிலர் அவனுடைய அழகில் ஈடுபட்டு இப்படியும் அப்படியுமாம் தத்தளித்துத் தடுமாறிப் பார்க்கின்றனர்" (ப.163). இவ்வாறு சோழன் உலா வருங்கால், பலர் பலவிதமாக அவனைக் கண்ணுறுவதைக் காணமுடிகிறது. குறிப்பாக பெண்கள் என்ன என்ன விதமான மனநிலைகளில் அரசனைப் பார்க்கின்றனர் என்பதை ந.சுப்புரெட்டியார் விளக்கியுள்ளார். மேலும் இதே போன்று மன்னனின் மீது காதல் கொண்ட பெண்ணைப் பற்றி அலர் தூற்றும் ஊராரின் செயல் இவளுக்கு ஒரு வகையில் மகிழ்ச்சியையே உண்டாக்குகிறது. எங்ஙனமெனில் "பட்டம் இல்லாதவர்க்கு உயர்ந்த பட்டங்களைப் போட்டமுகவரியுடன் கடிதங்கள் வருங்கால் ஒருவித மகிழ்ச்சி உண்டாகிறதில்லையோ" (ப.224) என்று மிக எளிய முறையில் எடுத்துக்கூறும் ந.சுப்புரெட்டியாரின் திறன் சிறப்பிற்குரியது.

உரை உத்திகள்

i) முத்தொள்ளாயிர மேற்கோளுக்குப் பிற நூல்களின் பாடல்கள்

உரையின் இடையே முத்தொள்ளாயிரப் பாடல்களுக்கு இணையான சங்கப்பாடல்கள், பக்திப்பாடல்கள் போன்ற நூல்களிலிருந்து பாடல்களை எடுத்துக்காட்டி உரையைச் சிறப்பித்துள்ளார். எடுத்துக்காட்டாக,

கூந்தன்மா கொன்று குடமாடிக் கோவலனாய்ப்
பூந்தொடியைப் புல்லிய ஞான்றுண்டால் - யாங்கொளித்தாய்
தென்னவனே தேர்வந்தே தேறுநீர்க் கூடலார்
மனீவைனே மார்பின் மறு (முத்.4)

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

என்ற பாண்டியனின் புகழ்பாடும் இப்பாடலுக்கு,

குறுந்த மொசித்தஞான் றூண்டா லதனைக்
கரந்த வடிவெமக்குக் காட்டாய் - மரம்பெறா
போரிற் குருகுறங்கும் பூம்புன னீர்நாட
மார்பிற் கிடந்த மறு (முத்.63)

என்ற தொல்காப்பியப் புறத்திணையியல் - நூற்பா.5, நச்சினார்க்கினியருரை மேற்கோளையும், **வாணன் பேரூர் மறகிடை நடந்து நீணிலம் அளந்தோன் ஆடிய இடமும் (545-546)** என்ற சிலப்பதிகார அடிகளையும் கடலாடுகாதை அடிகளையும், **கோலால் நிரைமேய்ந்து ஆயனாய்க் குடந்தைக் கிடந்த குடமாடி** என்ற ஆண்டாளின் திருவாக்காலும் நாச்சியார் திருமொழி (13, 2) அடிகளையும், இணைத்து உரை வகுத்துள்ளார். இவ்வாறு சுப்புரெட்டியார் விளக்கமாகப் பல நூல்களின் பாடல்களைக் கொண்டு விளக்கியுரைப்பது உரையைப் படிப்பவர்களுக்கு பல நூல்களிலிருந்து அமைந்துள்ள இணைப்பாடல்கள் பற்றிய தெளிவை உண்டாக்குகிறது.

மேலும், தொல்காப்பியம், கலித்தொகை, குறள், நாலடியார், பழமொழிநானூறு, சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி, நம்மாழ்வாரின் திருவாசிரியம், கம்பராமாயணம் திரு.வி.க. வின் முருகன் அல்லது அழகு போன்ற நூல்களின் பகுதிகளிலிருந்து தக்க சான்றுகளுடன் இருந்து அதனை முத்தொள்ளாயிர பாடலுடன் இணைத்துக்காட்டி தெளிவாக விளக்கியுள்ளார். இதன் மூலம் முத்தொள்ளாயிரம் பாடல்களின் அருமையை அறிமுகப்படுத்துகிறார்.

ii) பிற நூல்களின் மேற்கோள்களுக்கு முத்தொள்ளாயிரம் பாடல்கள்

முத்தொள்ளாயிரக் கடவுள் வாழ்த்தைத் திவாகர முனிவர் தன் நீலகேசரி தெருட்டு நூலில் மேற்கோளாகவும், நச்சினார்க்கினியர் தொல்காப்பியப் பொருளதிகாரத்திற்கு மேற்கோளாக 23, 67, 68, 94, 96 ஆகிய பாடல்களையும், தொல்காப்பியத்திற்கு உரை கண்ட பேராசிரியரும் 39, 69, 74 ஆகிய பாடல்களையும், அடியார்க்கு நல்லார் சிலப்பதிகாரத்திற்கு உரை வழங்குகையில் ஒரு குறிப்பிட்ட வரிக்கு விளக்கம் அளிக்க 39 வது பாடலை மேற்கோளாகவும், யாப்பருங்கல விருத்தியின் ஒழிபியலுக்கு விளைக்கமாக 34, 66 ஆகிய பாடல்களையும் மேற்கோளாகக் கூறுவதை டாக்டர் ந.சுப்புரெட்டியார் தன் உரையில் எடுத்துக்காட்டுகிறார்.

வாருயர் பெண்ணை வருகுரும்பை வாய்ந்தனபோல்
ஏரிய வாயினு மென்செய்யுங் - கூரிய
கோட்டானைத் தென்னவன் குளிர்சாந் தணியகலங்
கோட்டுமண் கொள்ளா முலை (முத்.29)

என்ற பாடல், சிலப்பதிகாரம் - நாடுகாண் காதை 129 ஆம் அடியின் அடியார்க்கு நல்லார் உரையிலும், தொல்-பொருள்-செய்யுளில் 74,105 ஆம் நூற்பாக்களின் பேராசிரியர் உரையிலும்

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

மேற்கோளாகக் காட்டப்பெற்றுள்ளது (ப.90) என மேற்கோள்கள் பற்றிய குறிப்புகளோடு உரை வரைவதைக் காணமுடிகிறது.

iii) முத்தொள்ளாயிரத்தில் பயன்படுத்திய பழமொழிகள்

உரை எழுதுபவரின் உத்திகளுள் பழமொழிகளைக் கையாள்வது சிறந்த ஒன்றாகும். உரையாசிரியர் சுப்புரெட்டியார் அவர்கள் முத்தொள்ளாயிரப் பாடல்களை விளக்கும் போது இடையில் பல இடங்களில் பழமொழிகள் பலவற்றைக் கையாண்டுள்ளார். அவற்றுள் சில,

கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையுறும் (ப.22)

தூங்குபவன் தொடையில் கயிறு திரிக்கும் காலம் (ப.32)

நீரொழுகப் பாலொழுகா வாறு (ப.77)

கிட்டாதாயின் வெட்டென மற (ப.86)

காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்க (ப.88)

தும்பைத் தெறித்துவிட்டுக் கன்றின் வாலைப்பிடிப்பதுபோல (ப.105)

யானைவரும் பின்னே மணியோசை வரும் முன்னே (ப.124)

புலிக்குப் பிறந்தது, பூனையாகுமா (ப.151)

இவ்வாறு பழமொழியை பயன்படுத்தியது இவர் உரையின் சிறப்பாகும்.

iv) அணிகள்

ஒவ்வொரு உரையின் சிறப்புக்கும் மற்றொரு காரணம் இப்பாடல் இவ்வணியைச் சேர்ந்தது என்று கூறுவதாகும். ஒரு பாடலை எளிதாக நுகர அணி போன்ற விளக்கங்கள் மிகவும் துணை செய்கின்றன. இன்ன அணி உள்ள பாடல் இது என்று படிப்பவருக்கு எடுத்துரைக்கும்போது, அப்பாடலின் சிறப்பும், அப்பாடலை படிக்கும்போது ஒரு விழைவும் உண்டாகும் எனலாம். அங்ஙனம் உரையாசிரியர் ந.சுப்புரெட்டியார் அவர்கள் விளக்கிய அணிகளாவன, 1.உருவக அணி (பா.8), 2. சொற்பொருட் பின்வரு நிலையணி (பா.44,42), 3.தற்குறிப்பேற்ற அணி (பா.11,35,62,88,90) என்பனவாகும்.

v) புராணக் குறிப்புகள்

ந.சுப்புரெட்டியார் அவர்கள் புராணச் செய்திகள் பலவற்றை உரையினூடே விளக்கியிருப்பதைக் காணலாம். இச்செய்திகளைப் பாடலின் நேரடி விளக்கத்திற்காகவும், சில இடங்களில் வரலாற்று செய்திக்காவும் பயன்படுத்தியிருக்கிறார். பாண்டியனிடம் பல சிற்றரசர்கள் வந்து தம் சிரம் தாழ்த்தி வணங்குகின்றனர். வணங்குகையில், அவ்வரசர்களின் முடிகளில் முடித்திருந்த தம் நாட்டுப்பூக்கள் பாண்டியனின் காலடிகளில் விழுந்து கிடக்கின்றன. இக்காட்சியை உரையாசிரியர் பாரத செய்தியோடு ஒப்பிடுகிறார். அருச்சுனனின் மகனாகிய அபிமன்யுவின் வீரத்தைக் கண்ட பகைவர்கள் அவனைச் சூட்சுமமாகப் போர்க்களத்தில் கொன்று விடுகின்றனர். இதை அறிந்த அருச்சுனன் மிக்கச் சினத்தவனாகி, மகனைக் கொன்ற அப்பகைவரை அழித்துப் பின்பே, தான் உணவுக் கொள்வதாகச் சூளுரைத்து, அவ்வண்ணமே

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

அவர்களை அழித்து மிகுந்த அயர்ச்சியுற்றிருக்கிறான் அப்பொழுது அவ்வயர்ச்சியைப் போக்குவதற் பொருட்டு, அவனுக்கு கண்ணன் ஒரு உபயம் கூறுகிறான். எனக்கு நீ மலர் தூவி வணங்கினால், அதுவே இறைவனுக்கு உரியதாக மாறும் என்றும், பின்னர் நீ உணவு உண்டு அயர்ச்சியைப் போக்கலாம் என்றும் கூறுகிறான் (ப.47) இது போன்ற சில நிகழ்வுகளையும் (ப.51) ஆசிரியர் தனக்கே உரித்தான நடையில் விளக்குவது போற்றதற்குரியது.

vi) நாடகப்பாங்கு உத்தி

முத்தொள்ளாயிர பாடல்களின் அமைப்பு, ஒருவர் வினவ, மற்றவர் விடையளிப்பது போல் அமையும். சில இடங்களில் நேரிடையாக இந்த பாங்கு அமையாது. மாறாக மறைமுகமாக அமைக்கப்படும் உறை வழங்குவோர் இதனை கூர்ந்து ஆய்ந்து, அங்ஙனமே விளக்க முற்படுகின்றனர் அவ்வகையில் அப்பாடல் சிறப்புபெறும். அவ்வகையில்,

வானிற்கு வையகம் வென்றது வானத்து
மீனிறி கனையர் மறமன்னர் - வானத்து
மீன்சேர் மதியனையன் விண்ணுயர் கொல்லியார்
கோன்சேரன் கோதையென் பான் (பா.95)

எனும் சேரனது புகழ்பாடும் இப்பாடலை ந.சுப்புரெட்டியார் விளக்கும் பாங்கு மனங்கொள்ளத்தக்கது.

மாணாக்கர்: கவிஞர் பெருமானே, கோதையின் ஆட்சியிலுள்ள நிலப்பரப்பு எவ்வளவு?

கவிஞர் : அதுவா அதற்கு அளவே இல்லை. இதோபார், வானத்தை அதன் அகற்சி எவ்வளவோ அவ்வளவு விரிவுடையது கோதையின் நிலப்பரப்பு

மாணாக்கர் : ஆகா! எவ்வளவு பெரிய நாடு, இந்தப் பெரிய நாட்டை ஆளும் வேந்தனின் கீழ் எத்தனைக் குறுநில மன்னர்கள் உள்ளனர்?

கவிஞர் : தம்பீ, வானத்தை உற்றுநோக்குவாயாக, வானவெளியில் எத்தனை விண்மீன்கள் மின்னுகின்றன விண்மீன்கள் எத்துணையோ அத்துணையர் சிற்றரசர்கள் வானத்து, மீனிற் கனையார் மறமன்னர்'

மாணாக்கர் : மிக நன்று பெரியீர், அந்த வேந்தன் எத்தகையவன்?

கவிஞர் : கீழ்வானத்தைப் பார் முழுமதியம் எத்துனை அழகாக விண்ணில் எழும்பிக் கொண்டிருக்கின்றது. அந்தச் சந்திரனைச் சுற்றியுள்ள தாரகைகளை நோக்குவாயாக நமது அரசன் அந்த வண்மதியை ஒத்தவன் வானத்து மீன்சேர் மதியனையன்' (ப.213, 214)

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

என இப்படி நாடகப் பாங்கில் பாடலின் விளக்கத்தை எடுத்துரைப்பர்.

முடிவுரை

முத்தொள்ளாயிரம் சங்ககால மக்களின் மாண்பையும், மரபையும் வேந்தனின் சிறப்பையும் எடுத்துரைக்கும் ஓர் அரிய நூலாகும். இந்நூலுக்கு டாக்டர் சுப்புரெட்டியார் அவர்கள் சிறந்த உரை ஒன்றை எழுதி முத்தொள்ளாயிரம் விளக்கம் என்பதாக அதை வெளியிட்டுள்ளார். சுப்புரெட்டியார் தம் உரையில் முத்தொள்ளாயிரப் பல இலக்கண இலக்கியங்களுக்கு உரை மேற்கோள்களாக அமைந்திருப்பதையும், முத்தொள்ளாயிரப் பாடல்களுக்கு பிற இலக்கண இலக்கிய குறிப்புகளை மேற்கோள்களாக அமைந்திருப்பதையும் காணமுடிகிறது. இவரின் உரையினூடே பல உத்திகள் கையாளப்பட்டுள்ளன. அவற்றுள் உரையாசிரியர் வரலாறு, உரை விளக்கச் சிறப்புகள், உரை உத்திகள், பழமொழிகள், அணிகள், நாடகப்பாங்கு, புராண குறிப்புகள் போன்றவை குறிப்பிடத்தக்கன. இதே போல் அரிய செய்திகள் பலவற்றையும், அறியாசொற்கள் பலவற்றையும் விளக்கியும், உரைவிளக்கம் கூறியிருப்பதையும் காணமுடிகிறது. மேலும் உரைசிறக்கப் புராணக் குறிப்புகள் உரையில் பயன்படுத்தியிருப்பதை அறியமுடிகிறது.

துணைநூற்பட்டியல்

[1] ந. சுப்புரெட்டியார், முத்தொள்ளாயிரம், பொதிகை மலைப்பதிப்பு, திருக்குற்றாலம்.
[2] சேது ரகுநாதன், முத்தொள்ளாயிரம், சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், திருநெல்வேலி, ஏப்ரல் – 1946.
[3] தொல்காப்பியம், இளம்பூரணர், சாரதா பதிப்பகம், சென்னை - 14, டிசம்பர் – 2005.
[4] எஸ்.வையாபுரிப்பிள்ளை, இலக்கிய தீபம், பாரிநிலையம் வெளியீடு, சென்னை – 01,

தமிழில் இக்கட்டுரையை இவ்வாறு மேற்கோளிடுங்கள்:

பூர்ணா & பெரியசாமி. "தொல்காப்பிய களவுக் கோட்பாட்டு உருவாக்கமும் உரை மரபும்." *தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்,* தொகுதி 3, சிற.இதழ் 2, தொகுதி 2, *திசம்பர்* 2020, பக். 379-387. டிஓஐ: **10.38067/ijtlls.2020.spl.v03i02v2.055**

Cite this Article in English (*MLA 8 Style*) as:
Poorna & Periasamy. "Love (Kalavu) Theoretical Development in "Tholkapiam" and Textual Convention." *International Journal of Tamil Language and Literary Studies*, Vol. 3: Special Issue - 2, Vol. 2, December 2020, pp. 379-387. DOI: **10.38067/ijtlls.2020.spl.v03i02v2.055**

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி /Author Contribution Statement: இல்லை /NIL

கட்டுரையாளர் நன்றியுரை /Author Acknowledgement: இல்லை /NIL

கட்டுரையாளர் உறுதிமொழி/Author Declaration: இல்லை /NIL

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

தொல்காப்பிய உரைகளில் பட்டப்பெயர் வழக்குகள்

Title Names in the Elucidation Texts of *Tholkappiam*

முனைவர் த.க.ஜாஸ்மின் சுதா, உதவிப்பேராசிரியர், தமிழியல் துறை, மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி.
Dr.T.K.Jasmin Sudha, Assistant Professor, Department of Tamil Studies, Manonmaniam Sundaranar University, Tirunelveli.
ORCiD: https://orcid.org/**0000-0002-6439-5940**
DOI: 10.38067/ijtlls.2020.spl.v03i02v2.056

Abstract

The texts of the Tolkappiya commentators not only express the grammatical principles but also record their ancient antiquity, literary personality, other disciplines, thoughts on Tamil culture and the jurisprudence of the Tamils. There are many sources that show the employment of Title names in the original sources and the commentators has used it in their works. It is possible that the adjectives related to the titles thus described reflect the linguistic personality and excellence of the orators. Hence, the article focuses on the utilization of Title names used in the secondary commentaries of "Tholkappiam'

Keywords: Title Names, Elucidation Texts, *Tholkappiam*

தமிழ் மொழியின் முதல் இலக்கண நூலான தொல்காப்பியத்தில் இலக்கண வரலாறு மட்டுமன்றி இலக்கிய வரலாறும் காணப்படுகிறது. தமிழில் எழுதப்பட்டுள்ள இலக்கண நூல்களும் இலக்கிய நூல்களும் தொல்காப்பியத்தை அடியொற்றியே உள்ளன. தொல்காப்பியத்தின் சிறப்பினை உலகிற்கு வெளிப்படுத்தியவர்கள் உரையாசிரியர்களே. அந்த வகையில் உரையாசிரியர் என்று அழைக்கப்பட்ட இளம்பூரணர், நச்சினார்க்கினியர், சேனாவரையர், பேராசிரியர், தெய்வச்சிலையார், கல்லாடர் ஆகியோர் மிகப் பழமையான உரையாசிரியர்களாகக் கருதப்பட்டனர். இவர்களுடைய உரைகள் இலக்கன கோட்பாடுகளை எடுத்துரைப்பதோடு மட்டுமன்றி அவர்களின் இலக்கிய ஆளுமை, பிற துறை சார்ந்த அறிவுகள், தமிழர் பண்பாடு குறித்த சிந்தனைகள், தமிழரின் வழக்காறுகள் ஆகியவற்றை பதிவு செய்கின்றன. இளம்பூரணர், நச்சினார்க்கினியர் உரைகளில் காணப்படும் 'பட்டப்பெயர்' வழக்குகளை தொகுத்து ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

வழக்கு, வழங்கியல் என்ற சொற்களை தொல்காப்பியர் நூல் முழுவதும் அதிகமாகப் பயன்படுத்தியுள்ளார். தொல்காப்பியர் வழக்கு என்பதற்கு, "வழக்கு எனப்படுவது உயர்ந்தோர் மேற்றே" (தொல்.மர.94,ப.238) என்று விளக்கம் தருகிறார். இலக்கணம் தோன்றுவதற்கு அடிப்படையாக அமைவன உலக வழக்கும், செய்யுள் வழக்கும் ஆகிய இரு வழக்குகளே என்றும் அவற்றைக் கொண்டே தொல்காப்பியர் இலக்கணம் இயற்றியுள்ளார் என்று தொல்காப்பியர் நூலியற்றிய பாங்கினை பனம்பாரனார் தாம் பாடிய சிறப்புப்பாயிரத்தில் கூறியிருப்பதை,

வடவேங்கம் தென்குமரி

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

ஆயிடைத்

தமிழ் கூறு நல்லுலகத்து

வழக்கும் செய்யுளும் ஆயிருமுதலின்

எழுத்தும் சொல்லும் பொருளும் நாடி (பனம்பாரனார் பாடிய சிறப்புப்பாயிரம்)

(இளம்பூரணர். ப.9) என்ற பாடலடிகளால் அறியலாம். தொல்காப்பியர்,

உயர்ந்தோர் கிளவி வழக்கொடு புணர்தலின்

வழக்கு வழிப்படுதல் செய்யுட்குக் கடனே (தொல்.பொரு.ப.115)

என்று கூறுவதற்கு உயர்ந்த மக்கள் கூறும் கூற்றும் வேத நெறியோடு கூறுதலின் அவ்வழக்கினது நெறியிலே நடத்தல் செய்யுட்கு முறைமை என்றவாறு என்று இளம்பூரணரும் 'உயர்ந்தோர் கூற்று வழக்கு வழிப்படுதலின் வழக்குப்படுதல் செய்யுட்குக் கடன் என்றவாறு எனவே வழக்கழிய வருவன செய்யுட்கண் வரப்பெறா என்றவாறு' என்று நச்சினார்க்கினியரும் 'வழக்கு' என்பதற்கு விளக்கம் கூறுகின்றனர்.

உலக வழக்கு, செய்யுள் வழக்கு, இயல்பு வழக்கு, தகுதி வழக்கு என்று நான்குவகையான வழக்குகள் கூறப்பட்டாலும் இயல்பு வழக்கு, தகுதி வழக்கு ஆகிய இரண்டும் தான் அனைவரும் அறிந்த ஒன்றாக காணப்படுகிறது எனலாம். எனவே 'வழக்கு' என்பதற்கு மக்களால் வழங்கப்படுவது எனக் கொள்ளலாம்.

தொல்காப்பிய உரைகளில் மரபு சார்ந்த வழக்குகள், மரபுத் தொடர்கள், புதிய வழக்குகள் அதிகமாகக் காணப்படுகின்றன. அவற்றுள் மரபுசார்ந்த வழக்குகளில் ஒன்றுதான் பட்டப்பெயர்கள் தொடர்பான வழக்குகள். மரபுசார்ந்த வழக்குகளில், பட்டப்பெயர்கள் சாதி, பண்பு, நிறம், இடம், கொற்றன், கூத்தன், சாத்தன், உறுப்புகள், அரசன், மருதி, பருவம், அளவு, குழுப்பெயர், நிலம், கானம், கோழி, சாதி, விலங்குகள், மரங்கள், வளவன், என்பவற்றை உணர்த்துவனவாக உள்ளன.

பேச்சுவழக்கில் பட்டப்பெயர்கள் என அழைக்கப்படும் இவற்றைப் 'பகடிப்பெயர்கள்' என்ற பெயரால் ஞா.தேவநேயன் குறிப்பிடுகிறார். (தமிழ் வரலாறு,1967: ப.140) ," தமிழ்ப் பேரகராதி, 'குல முறைப்பேர்', 'பட்டஞ் சூட்டற்பேர்', 'இரண்டாம்பேர்', 'செல்லப்பேர்', போன்ற பெயர்களால் வழங்குகிறது. இப்பெயர்கள் 'தற்கால நிலையில் தகுதி, கல்வி போன்றவற்றால் கிடைக்கப்பெறும் பட்டப்பெயர்களைக் குறிக்காமல் இயற்பெயர்கள் இருக்கும்போதே கூடுதலாக இரண்டாம் பெயர்களாக மனிதனின் பண்பாட்டு அடிப்படையில் அவனின் செய்கைகள், குணங்கள், தோற்றம் போன்ற இன்னொரென்ன காரணங்களால் பிறரிடம் இருந்து அவனை வேறுபடுத்தும் சிறப்புப் பெயர்களாக நகைப்புப் பெயர்களாகப் புனைந்து வழங்கப்படும் பெயர்களாக அமைகின்றன". (டாக்டர் சு.அழகேசன், ப.56)

பட்டப்பெயர்கள் தொடர்பான வழக்குகளில் 'சாதி' குறித்த வழக்குச் சொற்களை இளம்பூரணரும், நச்சினர்க்கினியரும் தங்களது உரைகளில் சில இடங்களில்

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

பயன்படுத்தியுள்ளனர். தொல்காப்பியம்" மொழி மரபில் உயிர் எழுத்துக்களில் ஒன்றான 'ஐ' காரத்திற்கு மாத்திரை அளவு கூறுமிடத்து 'ஐகாரம் ஆராயுங்காலத்து மொழிக்கண் ஓர் அளபாய் நிற்கும் இடமுண்டு என்பதை விளக்குவதற்காக இடையன், மடைவன் என்ற சாதி சார்ந்த பட்டப்பெயர்களை இளம்பூரணரும், நச்சினார்க்கினியரும் தங்களது உரைகளில் கையாள்கின்றனர்." (இளம்பூரணம்..நூற்பா.57, ப.31) தொல்காப்பியம் புள்ளி மயங்கியலில் னகர ஈற்று கிளைப்பெயர் எல்லாம் ணகர ஈற்றுக்கிளைப் பெயர் போல திரியாது இயல்பாய் முடியும் என்பதே "கிளை பெயரல்லாங் கிளைப் பெயரியல" (நச்.புள்ளி.மயநூற்பா.338) என்ற நூற்பாவிற்கு விளக்கம். இவ்விளக்கத்திற்கு சான்றாக இளம்பூரணரும், நச்சினார்க்கினியரும் தங்களது உரைகளில்"உமண்குடி, எயினக்கன்னி, பார்ப்பனக் கன்னி, எயின்குடி, எயின்சேரி போன்ற பட்டப்பெயர்களை எடுத்தாள்வதை காணலாம்.

'பார்பனக்கண்ணி குமரி சேரி பிள்ளை' என ஆகாரம் குறுகி அக்கும் வல்லெழுத்துங் கொடுத்தும், பார்ப்பன வாழ்க்கை என வல்லெழுத்துக் கொடாது முடிக்க இன்னும் இதனானே நான்கு கணத்துக்கணும் வெள்ளாளனென நின்றதனை அன் கெடுத்து பிரித்து ளகார வொற்றினை ணகார வொற்றாக்கி வெள்ளாண்குமரி பிள்ளை மாந்தர் வாழ்க்கை ஒழுக்கம் என நச்சினார்க்கினியர் சாதி பட்டப் பெயர்களைச்சான்றாகக் கையாள்கிறார்". (இளம்பூரணர். நூற்பா.308,ப.144) இது மட்டுமின்றி சொல். கிளவி.41, ப. 33, எச்சவியல் நூற்பா.416, பக்.260,261 நூற்பாக்களின் விளக்கவுரைகளில் அட்டான், பார்ப்பான், வண்ணான் போன்ற சாதிப் பெயர்கள் உள்ளன.

நச்சினார்க்கினியர், ஙஞணநமன என்றும் புள்ளிகளின் முன்னர் தமக்கினமான முன்னின்ற கசடதபறக்கள் பின்னிற்றற்குப் பொருந்தின என்று விளக்குவதற்கு சான்றாக தமது உரையில் 'கஞ்சன்' என வரும் என்று குறிப்பிடுகிறார்.(நச்சினார்க்கினியர்.நூற்பா.25) இளம்பூரணர் இந்த நூற்பாவிற்கு விளக்கம் கூறும் போது மஞ்சு என்று மஞ்சள் நிறத்தைக் குறிப்பிடுகிறார். (இளம்பூரணர்.நூற்பா.25,பக்.18,19) பதினெட்டு மெய்யும் தம்முன் தாம் வந்து மயங்குதலைக் குறியிடும் போது காக்கை, பச்சை, மஞ்சை ஆகிய பண்பு சார்ந்த பட்டப்பெயர் வழக்குகளை கையாள்கிறார் நச்சினார்க்கினியர்.

"பண்புகொள் பெயரும் அதனோரற்றே" (விளிமரபு. நச். நுற்பா.142,ப.103) என்ற நூற்பாவில் 'ஆன்' ஈற்று பண்பைக் கொண்டு நின்ற பெயரும் அவ்வீற்று அவ்வீற்று தொழிற்பெயர் போல ஆய், விளியேற்கும் சான்றாக கரியான், கரியாய் என்ற பண்பு சார்ந்த பட்டப் பெயர்களைப் பயன்படுத்துகிறார்.

தொல்காப்பியம் எழுத்ததிகாரம் குற்றுகரபுணரியலில் வரும்,

உயிரும் புள்ளியும் இறுதியாகிக்

குறிப்பினும்பண்பினும் இசையினும் தோன்றி (இளம்பூரணர்.நூற்பா.482,பக்.215,216)

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

எனத் தொடங்கும் நூற்பாவின் விளக்கவுரையில் 'கருஞ்சான்றான்' என்பது பண்புத்தொகை. இது கரும் எனப் பண்புணர நின்றது. கருஞ்சான்றானெனத் தொகையாயவழி கருமென்பது கரியானெனப் பால்காட்டி நிற்றலில் புணர்க்கப்படாதாயிற்று எனவும், 'பிறவும்' என்றதனான் முடியாதன உண்டான், கரியான் என்பனவற்றில் உண் எனவும் கருமை எனவும் பிரித்து நிறுத்தியவழி ஆறும், அன்றும் குறித்து வரு கிளவியன்மையான் வந்து புணராமையின் புணர்க்கப்படாவாயின என்று இளம்பூரணர் உரைக்கின்றார்.

இதே போன்று கரும்பார்ப்பான், கரும்பார்ப்பனி, கரும்பார்ப்பார், கருங்குதிரை, கருங்குதிரைகள் என ஐம்பாலினையும் உணர்த்தும் 'பண்பு கொள் பெயர் காண்க' என்று நச்சினார்க்கினியர் தமது உரையில் ஐம்பாலினை உணர்த்தும் பண்புகொள் பட்டப்பெயர்களை எடுத்தாளுகிறார்.**(நச்சினார்க்கினியர்.482)**

கிளவியாக்கம்- 38 - ஆவது நூற்பாவில் இயற்பெயர் என்பன இரண்டு திணைக்கும் உரிய பெயர் மூன்று சுட்டு முதலாக வரும் பெயர் அவ்விரண்டும் வினைக்கண் ஒருங்கு நடப்பதொரு காலம் தோன்றுமேயெனின் இயற்பெயர் முன் கூறிச் சுட்டுப் பெயரதனை வைத்துக் கூறுக என்பதில் சான்றாக இளம்பூரணர் 'கொற்றன் வந்தான்' என்று பட்டப்பெயர் வழக்கினைப் பயன்படுத்துகிறார்.

அடைசினை முதலெனமுறை மூன்று மயங்காமை

நடைபெற்றியலும் வண்ணச் சினைச்சொல் (கிள.26, இளம்.பக்.15,16.) (நச் சினார்க்கினியர்.ப.22)

இந்நூற்பாவில் இருகுணம் அடுக்கி முதலொடு வருதலும், இருகுணம் அடுக்கி சினையொடு வருதலும் கொள்க என்பதை விளக்கும் வகையில் "இளம் பெருங் கூத்தன்" என்ற வழக்கினைக் கையாண்டிருக்கிறார் இளம்பூரணர். இளம்பெருங் கூத்தன் என்ற கால இளமை பெருமையை நோக்கி நின்றதெனவுணர்க நடைபெற்றியலும் எனல் வேண்டா எனின் நடை என்பது வழக்கு, வழக்கினுள் மயங்காது வரும் என்பதாம். எனவே செய்யுளில் மயங்க வரும் என்பதாம் என்று 'கூத்தன்' என்ற வழக்கினை கையாண்டதற்கான காரணத்தையும் பதிவு செய்கிறார் இளம்பூணர். கிளவியாக்கம் - 26, 41, 61(இளம்.ப.16,23,35), (நச்சி.ப.22,க.33,ப50) ஆகிய நூற்பாக்களில் 'சாத்தன்' என்ற வழக்கு சொல்லை தமது உரைகளில் இளம்பூரணர் பதிவிட்டுட்டுள்ளார். மேற்கூறிய நூற்பாக்களில் மட்டுமன்றி நூல் முழுதும் பல இடங்களில் 'சாத்தன்' என்ற பட்டப்பெயரை இளம்பூரணாரும், நச்சினார்க்கினியரும் பதிவிட்டுள்ளனர். உரையாசிரியர் இளம்பூரணரும், நச்சினார்க்கினியரும் தங்களுடைய உரைகளில் உறுப்புக்கள் குறித்த வழக்குச் சொற்களைப் பதிவுசெய்துள்ளதை அறிய முடிகிறது.

குடிமை ஆண்மை இளமை மூப்பே
அடிமை வண்மை விருந்தே குழுவே
பெண்மை அரசே மகவே குழவி

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

தன்மை திரிபெயர் உறுப்பின் கிழவி (இளம்.சொல்.கிளவி.57 ப.32), (நச்சி.57,ப.43)

என்ற நூற்பாவின் உரையில் 'உறுப்பின் கிளவி' என்ற சொல்லிற்குச் சான்றாக, 'குருடு வந்தது. இஃது உறுப்பின் கிளவி', என்று கூறுவதாக அமைந்துள்ளது. மேலும் பத்துக்கும் மேற்பட்ட இடங்களில் உறுப்பு குறித்த பட்டப்பெயர் வழக்குகள் பயன்படுத்தியிருப்பதை அறிய முடிகிறது. மேலும் 'அரசன்' குறித்த பட்டப்பெயர் வழக்குகளை தொல்காப்பிய உரைகளில் ஆங்காங்கே காண முடிகிறது. சொல்லதிகார இளம்பூரணர் உரையில் இதை நாம் பார்க்கலாம். சான்றாக,

சிறப்பினாகிய பெயர் நிலைக்கிளவிக்கும்
இயற்பெயர்க் கிளவி முற்படக் கிளவர்"
இளம். சொல். கிளவி.41,ப.23),(நச்சி.ப.33)

என்ற நூற்பாவிற்கு உரை கூறுகையில் 'ஏனாதி நல்லுதடன்', 'சோழன் நலங்கிள்ளி' என்பதும் 'அன் என் இறுதி ஆவாகும்மே' (விளி.13, இளம்) என்ற நூற்பாவிற்கு உரை கூறுகையில் சோழன், சோழா என்பதும், அரசன் சார்ந்த பட்டப்பெயர் வழக்குகளை இளம்பூரணர் பயன்படுத்தியுள்ளார் என்பதை உறுதி செய்கிறது.

இயற்பெயர், சினைப்பெயர் சினைமுதற்பெயரே
முறைப்பெயர்க்கிளவி, (இளம்,சொல்.பெய.176,ப.88), (நச்சி.ப.123)

என்ற நூற்பாவின் உரையில் 'சினைமுதற்பெயர்' என்ற சொல்லிற்குச் சான்றாக 'கொடும்புறமருதி'என சினைப்பெயரோடு தொடர்ந்து வரும் முதற் பெயர் என்று பதிவிட்டுள்ளார். 'பருவம்' சார்ந்த வழக்குச் சொற்களை இளம்பூரணர் தமது உரையில் சில இடங்களில் பதிவு செய்துள்ளதை அறிய முடிகிறது. "திணையொடு பழகிய பெயரலங்கடையே" (இளம்.பெயரி.194) நூற்பாவிற்கு ;காளை;, 'விடலை'உயர்திணையினும் அஃறிணையிலும் வருமாதலின் விரவு பெயராயின என்று உரையதிலிருந்து காளை, விடலை என்ற பருவத்தைக்குறிக்கும் பெயர்கள் இருந்திருக்கலாம் என்பதை அறிய முடிகிறது. பட்டப்பெயர்கள் தொடர்பான வழக்குகளில் 'அளவு' குறித்த வழக்குச் சொற்களில் இளம்பூரணர் உரையில் காணப்படுகிறது.

உயிரீறாகிய உயர்திணைப் பெயரும்
புள்ளியிறுதி உயர்திணைப் பெயரும்
எல்லாவழியும் இயல்பென மொழிப (இளம். தொகை.மரபு.154,ப.73)

என்ற நூற்பாவின் உரையில் பெரியன், நீண்டான், வலியன் போன்ற அளவு வழக்குச் சொற்களைப் பயன்படுத்தியுள்ளார்.

ஏனோர் மருங்கினும் எண்ணுங்காலை
ஆனா வகைய திணைநிலைப் பெயரே (இளம்.அகத்.24,ப.13) (நச்சி.22,ப.64)

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

என்ற நூற்பாவின் உரையில் குறவன், குறத்தி, மலைநாடன், வெற்பன், எயினர், எயிற்றியர், மீளிவிடலை, உழவர், உழத்தியர், ஊரன், மகிழ்நன், நுளையர், நுளைச்சியர், சேர்ப்பன், துறைவன் கொண்கன் போன்ற குழு சார்ந்த வழக்குச் சொற்களைக் கையாண்டிருப்பதை அறிய முடிகிறது. மேலும் நிலம் சார்ந்த பட்டப்பெயர் சொற்களை விளிமரபில் சில இடங்களில் இளம்பூரணர் பதிவு செய்துள்ளார். அதே போன்று 'வளவன்' குறித்த வழக்குச் சொல்லை நச்சினார்க்கினியர் சொல்லதிகாரம் வேற்றுமையியல் 80- ஆவது நூற்பாவிற்கு உரைத்த உரையில் சான்றாக 'யானை வளவன்' என்று பதிவிடுகிறார். பொதுவாக தொல்காப்பிய உரையாசிரியர்களின் உரைகள் அவர்களின் வழக்கியல் சிந்தனைகளையும், உலகியல் நுட்பங்களையும் விளக்கி அக்கால மொழிநிலையை அறிவதற்கும் பயன்படுவதாய் அமைகின்றன எனலாம். இளம்பூரணரும், நச்சினார்க்கினியரும் தாங்கள் பயன்படுத்தியுள்ள வழக்குச் சொற்களைப் பார்க்கும்போது அவையெல்லாம் வெறும் பொருள் விளக்கத்திற்காக எடுத்துரைப்பதோடு, அவர்களது உரைநயத்திற்காகவும் எடுத்தாண்டுள்ளதை அறிய முடிகிறது. இக்கட்டுரையில் விவரிக்கப்பட்ட பட்டப்பெயர்கள் சார்ந்த வழக்கு சொற்கள் அனைத்தும் உரையாசிரியர்களின் மொழி ஆளுமையை எடுத்துரைக்கின்றன எனலாம். அது மட்டுமன்றி இளம்பூரணர் நச்சினார்க்கினியரின் உரைகள் இலக்கணக் கோட்பாடுகளோடு அக்கால வழக்காறுகளையும் வெளிப்படுத்துவதற்கு வழக்குச் சொற்களும் ஒரு காரணமாக அமைகின்றன எனலாம்.

துணைநின்ற நூல்கள்

[1] இளம்பூரணர் (உ.ஆ). தொல்காப்பியம் எழுத்ததிகாரம். தொல்காப்பியம் எழுத்ததிகாரம், சாரதா பதிப்பகம், சென்னை-600005

[2] இளம்பூரணர் (உ.ஆ). தொல்காப்பியம் சொல்லதிகாரம், சாரதா பதிப்பகம், சென்னை-600014.

[3] இளம்பூரணர் (உ.ஆ) தொல்காப்பியம் பொருளதிகாரம், திருநெல்வேலி

[4] நச்சினார்க்கினியர் (உ.ஆ), தொல்காப்பியம் எழுத்ததிகாரம், தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.

[5] நச்சினார்க்கினியர் (உ.ஆ), தொல்காப்பியம். சொல்லதிகாரம், சாரதா பதிப்பகம், சென்னை-600014

[6] டாக்டர்.அழகேசன். சு. இலக்கணப் பாதையில், சோபிதம் பதிப்பகம், நாகர்கோவில்.

[7] தேவநேயன்.ஞா. தமிழ் வரலாறு. நேசமணி பதிப்பகம், வடஆற்காடு.

தமிழில் இக்கட்டுரையை இவ்வாறு மேற்கோளிடுங்கள்:

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

ஜாஸ்மின் சுதா. "தொல்காப்பிய உரைகளில் பட்டப்பெயர் வழக்குகள்." *தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்*, தொகுதி 3, சிற.இதழ் 2, தொகுதி 2, *திசம்பர்* 2020, பக். 388-394. டிஒஐ: **10.38067/ijtlls.2020.spl.v03i02v2.056**

Cite this Article in English (*MLA 8 Style*) as:
Jasmin Sudha. "**Title Names in the Elucidation Texts of *Tholkappiam***." *International Journal of Tamil Language and Literary Studies*, Vol. 3: Special Issue - 2, Vol. 2, December 2020, pp. 388-394. DOI: **10.38067/ijtlls.2020.spl.v03i02v2.056**

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி /Author Contribution Statement: இல்லை /NIL

கட்டுரையாளர் நன்றியுரை /Author Acknowledgement: இல்லை /Nil

கட்டுரையாளர் உறுதிமொழி/Author Declaration: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்./I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் அரையாண்டு பன்னாட்டு ஆய்விதழ்

International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

உரை விளக்கங்களை முன் வைத்து ஆண்டாளின் பக்தி திறம்

The Devotion of Andal as per the Explanatory Sources

வெ. ஜெயந்தி, முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, ஸ்ரீசந்திரசேகரேந்திர சரஸ்வதி விஸ்வா மகாவித்யாலய, பல்கலைக்கழகம், காஞ்சிபுரம்.
V. Jayanthi, Research Scholar, Department of Tamil, Sri Chandrasekharendra Saraswathi Viswa Mahavidyalaya, Kanchipuram.
ORCiD: https://orcid.org/0000-0003–4682–1245
முனைவர். என். விஜயலட்சுமி, இணைப்பேராசிரியர் (தமிழ்த்துறை) ஸ்ரீ சந்திர சேகரேந்திர சரஸ்வதி, விஸ்வா மகாவித்யாலய பல்கலைக்கழகம், காஞ்சிபுரம்.
Dr. N. Vijayalakshmi Associate Professor of Tamil, Sri Chandrasekharendra Saraswathi Viswa Mahavidyalaya, Kanchipuram.
ORCiD: https://orcid.org/0000-0003–3043–3918
DOI: 10.38067/ijtlls.2020.spl.v03i02v2.057

Abstract

Among the twelve Alvars, the Vaishnava poets of devotional literature are admired for their devotion and dedication. One can learn about the Divine Doctrine, the Biological Principle and the Religious Policy through the commentaries of the later commentators who wrote the explanatory texts for the two books "Andal Thirupavai" and "Nachiyar Thirumozhi". It seems common that the divine principle works in a resurrecting manner. It compels that the sinful past should be recited to the Lord and should receive grace from HIM. It is the policy of the year to say that there are ways to surrender to the Lord. Andal's poems are such an inspiration to delve into the bliss of God. The original verve of Andal's sense and feeling cannot be understood without deep knowledge in it but the commentators has made the task easy to absorb the theme of the spiritual union. Editors like Chantillyan and others are able to know the taste of Andal rhymes and reflected in their texts.

Keywords: Devotional literature, Divinity, Andal, "Thirupavai", "Nachiyar Thirumozhi"

தமிழ்ப் பக்தி இலக்கியம் படைத்த வைணவக் கவிஞர்களான பன்னிரு ஆழ்வார்களுள் ஆண்டாள் நாச்சியார் ஒருவர். ஆழ்வார் பன்னிருவருள் இவர் ஒருவரே பெண். ஆண்டாள் பாடியவை திருப்பாவை 30 பாடல்கள், நாச்சியார் திருமொழி 143 பாடல்கள் ஆகும். திருமாலிடம் தான் கொண்ட காதலை ஆண்டாள் இயல்பாகப் பெண் மொழியில் வெளியிட்டுள்ளார். ஆண்டாள் பாடலின் சிறப்புகளை உரையாசிரியர்களின் விளக்கங்கள் வழியே நம்மால் தெளிவாக அறிந்து கொள்ள முடிகிறது.

படித்த பண்டிதனுக்கும் பாடலின் பொருளை முழுமையாக அறிந்து கொள்ள உரையாசிரியர் உரை தேவைப்படுகிறது. பள்ளத்தை நோக்கி நீர் ஓடுவது போல பாடலின் பொருளை அதன் போக்கில் அறிந்து கொள்வதற்கு உரையாசிரியர் விளக்கங்கள் தேவைப்படுகின்றன. இங்கு திருப்பாவை நூலுக்கு, சாண்டில்யன் விளக்கவுரையும், நாச்சியார் திருமொழிக்கு டி.வி.ராதாகிருஷ்ணனின் உரையும், இரு நூல்களுக்கும் பள்ளத்தூர்

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

பழ.பழனியப்பனின் உரையும் கொண்டு ஆண்டாளின் பக்தி *இறைக்கொள்கை, வாழ்வியல் கொள்கை, சமயக் கொள்கை* என்ற வகைமையில் திறனாய்வு செய்யப்படுகிறது.

இறைக் கொள்கை

திருப்பாவை நூலில் முதல் ஐந்து பாடல்களில் ஸ்ரீ ஆண்டாள் பாவை நோன்பின் சிறப்பையும் அதனால் கிடைக்கும் பலன்களையும் சொல்லுகிறாள். அடுத்த பத்துப் பாடல்களில் *"சீர் மல்கும் ஆயப்பாடியின் செல்வச் சிறுமியர்கள் விடியற்காலையில் எழுந்திருந்து, எழாத தங்கள் தோழியரை நீராடவும், நோன்பு நோற்கவும் எழுப்பும் கதையையும் ஸ்ரீ ஆண்டாள் கூறுவதாக உரையாசிரியர் சாண்டில்யன்"* (சாண்டில்யன் (உ. ஆ)., திருப்பாவை. ப. 33) விளக்கும் பாங்கு சிறப்பானது. கண்ணன் திருமாளிகைக்குச் சென்று பகவானுக்குத் திருப்பள்ளியெழுச்சி பாடி, அவன் அருள் பெற்று பாவை நோன்பு நோற்ற சிறப்பை அடுத்துள்ள பாடல்கள் சொல்கின்றன.

அம்பரமூடறுத் தோங்கி உலகளந்த
உம்பர் கோமானே உறங்கா தெழுந்திராய்" (சாண்டில்யன் (உ.ஆ)., திருப்பாவை., ப.எ.67.,பாடல் எ.17)

ஆகாயத்தைக் கிழித்து வளர்ந்த உலகளந்த பெருமாளே உறக்கத்தை விட்டு எழுந்திரு என்று இப்பாடலில் இறைஞ்சுகிறார்கள்.

கண்ணன் துயில் எழ வேண்டும். அவன் அருளை பெற வேண்டும் என்பதே ஆண்டாளின் இறை கொள்கையாகக் கொள்ளலாம். அடுத்து வரும் பாடல்களில் கண்ணன் துயில் எழுந்து வரும் கம்பீரம் வர்ணிக்கப்படுகிறது.

மாரி மலைமுழைஞ்சில் மன்னிக் கிடந்துறங்கும்
சீரிய சிங்கம் அறிவுற்றுத் தீ விழித்து
வேரிமயிர் பொங்க வெப்பாடும் பேர்ந்துதறி
மூரி நிமிர்ந்து முழங்கிப் புறப்பட்டு…
(சாண்டில்யன் (உ.ஆ)., திருப்பாவை., ப.எ.85.,பாடல் எ.23)

"பூப்போன்ற திருமேனியுடையவனே மழைக்காலத்தில் மலைக்குகையில் படுத்துறங்கும் சிங்கம் எப்படி எழுந்து ஜாஜ்வல்யமாக விழித்து பிடரிமயிர் எழுந்து நிற்க உடலை முறித்தும் நிமிர்ந்தும் புறப்பட்டு வருமோ, அது போல எழுந்து வந்து உன் சிங்காசனத்தில் அமர்ந்து நாங்கள் வந்த காரியத்துக்குச் சற்று செவிமடுப்பாயாக என்று சாண்டில்யன் அழகாக உரைவடித்துள்ளார்"4 (சாண்டில்யன் (உ.ஆ)., திருப்பாவை. ப.எ.86)

அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்பது போல ஸ்ரீ ஆண்டாளின் மன உணர்வுகளை நன்கு உணர்ந்து உரையாசிரியர்கள் உரை எழுதியுள்ளனர். உரைகளின் வழி திருப்பாவையில் நோன்பு நோற்க வேண்டும், இறைவனான கண்ணனை துயில் எழுப்ப வேண்டும், அவன் பாத கமலங்களில் சரணடைய வேண்டும் என்பதை அறிய முடிகிறது.

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

நாச்சியார் திருமொழியில் சக்கரத்தைக் கையில் கொண்ட வேங்கடவனுக்கு என்னை உரியவள் ஆக்கி விடு, அவன் இல்லாமல் என்னால் உயிர் வாழ முயலாது என்று, அவனுடன் திருமணம் நடைபெறுவதாக கனா காணுகிறாள் ஆண்டாள்.

வாரண மாயிரம் சூழவ லம்செய்து

நாரண நம்பி நடக்கின்றா னென்றெதிர்

...பூரண பொற்குடம் வைத்துப் புறமெங்கும்

தோரணம் நாட்டக் கனாக்கண்டேன் தோழி நான்

(டி.வி.ராதாகிருஷ்ணன் (உ.ஆ)., நாச்சியார் திருமொழி., ப.எ.52.,பாடல் எ.53)

இதற்கு உரை எழுதும் *“டி.வி. ராதாகிருஷ்ணன், ஆயிரம் யானைகள் புடை சூழ கம்பீரமாக சுற்றிவரும் நாராயணன், பின் இறங்கிக் கம்பீரமாக நடந்து வர, பொன்னாலான பூரண கும்ப மரியாதைகளுடன் எதிர்கொண்டு வரவேற்கிறார்கள்... அப்படிப்பட்ட கனவு ஒன்றினைக் கண்டேன் தோழி”6* (டி.வி.ராதாகிருஷ்ணன் (உ.ஆ)., நாச்சியார் திருமொழி. ப.எ.52) *என்றவாறு* ஸ்ரீ ஆண்டாளின் இறைக்கொள்கையை தம் உரையின்வழி அறிவிக்கிறார். இதன்மூலம் இறைவனான கண்ணனை காண வேண்டும், பக்தியில் திளைக்க வேண்டும், அவன் பாத கமலங்களை சரணடைய வேண்டும் என்பது போன்ற ஆண்டாளின் பக்தி திறங்கள் வெளிப்படுகின்றன.

வாழ்வியல் கொள்கை

ஸ்ரீ ஆண்டாளின் வாழ்வியல் கொள்கையை அவர் தம் பாடல்கள் வழி நாம் அறிவதற்கு உரையாசிரியர் டி.வி.ராதாகிருஷ்ணன் துணைநிற்கிறார். நாச்சியார் திருமொழியில்,

சலங்கொண்டு கிளர்ந்தெழுந்த தண்முகில்காள் மாவலியை

நிலங்கொண்டான் வேங்கடத்தே நிரந்தேறிய பொழிவீர்காள்

உலங்குண்ட விளங்கனிபோல் உன்மெலியப்புகுந்து என்னை

நலங்கொண்ட நாராணற்கென் நடலை நோய் செப்புமினே”

டி.வி.ராதாகிருஷ்ணன் (உ.ஆ)., நாச்சியார் திருமொழி. ப.எ.71., பாடல் எ.79.,)

இப்பாடலுக்கு உரை எழுதிய உரையாசிரியரின் விளக்கத்தின் வழி *“விளாம்பழத்தை கொசு மொய்த்து, அதன் உள்ளிருக்கும் சாற்றினை எடுத்து விட்டால், எப்படி கூடு மட்டும் இருக்குமோ அது போல நாராயணன் மீது நான் வைத்த காதலால் மெலிந்தேன்” (*டி.வி.ராதாகிருஷ்ணன் (உ.ஆ)., நாச்சியார் திருமொழி.,., ப.எ.71 -72.,) என்று விளக்குகிறார். இறைவனான நாராயணனை நினைத்து, தான் துன்பப்படும் செய்தியை ஆண்டாள் இதில் எடுத்துரைக்கின்றாள். அவனை நினைத்து, தான் படும் பல (துயில்) பாடல்களில் எடுத்துரைப்பதை உரைகளின் வழியே அறியமுடிகிறது. ஆண்டாளின் மனநிலை மாறும் விதத்தை ஒவ்வொரு உரையிலும் அழகாக உரையாசிரியர்கள் விளக்கியுள்ளனர்.

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

ஆண்டாளின், கோபம், இரக்கம், கருணை, கற்பனைத்திறன், அனைத்தையும் இவ்வுரையாசிரியர்களின் விளக்கங்கள் எடுத்துரைக்கின்றன.

நீர்காலத் தெருக்கிலம் பழவிலை போல் வீழ்வேனை
வார்காலத் தொரு நாள்தம் வாசம்தந் தருளாரே"
(டி.வி.ராதாகிருஷ்ணன் (உ.ஆ)., நாச்சியார் திருமொழி. ப.எ.73.,பாடல் எ.81)

"மழைகாலத்தில் பழுத்து விழுகின்ற எருக்க இலை போல ஒடிந்து கீழே விழுகின்ற எனக்கு, எதிர்வரும் காலத்தில் ஒரு நாளாவது என் உயிர் வாழ வேங்கடவன், என்னைச் சேர தான் வருவதாக உங்களிடம் சொன்னார் என்ற நல்ல சொல்லை தந்து அருளச் சொல்லுங்கள் என்று ஸ்ரீ ஆண்டாள் நயமாக கூறுவதாக உரைவிளக்கம் அமைந்துள்ளது" (டி.வி.ராதாகிருஷ்ணன் (உ.ஆ)., நாச்சியார் திருமொழி.,., ப.எ.73)

நூறுதடாவில் வெண்ணெய் வாய்நேர்ந்து பராவி வைத்தேன்
நூறுதடா நிறைந்த அக்கார வடிசல் சொன்னேன்"
(டி.வி.ராதாகிருஷ்ணன் (உ.ஆ)., நாச்சியார் திருமொழி. ப.எ.80., பாடல் எ.89.,)

என்ற பாடல் நூறு சிறிய பானையில் வெண்ணெயை உருக்கி அதில் நெய் சேர்த்து, நேர்த்திக்கடன் செலுத்தி வழிபட்டேன். நூறு பானை அக்காரவடிசல் படைத்தேன். திருமால் இன்று வந்து இவை அனைத்தும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று குறிப்பிடுகிறது.

ஸ்ரீ ஆண்டாளின் வாழ்வியல் கொள்கையை நாச்சியார் திருமொழி வாயிலாக நாம் அறிந்து கொள்வதற்கு உரையாசிரியரின் விளக்கமே காரணமாக அமைகிறது. இறைவனை தான் அடைய வேண்டும் அதற்கு என்னென்ன வழிகள் உண்டோ அனைத்தையும் மேற்கொள்கிறாள் ஆண்டாள்.

சமயக்கொள்கை

ஸ்ரீ ஆண்டாள் அவர்கள் நாச்சியார் திருமொழியில்,

வெங்கட வற்கென்னை விதிக்கிற்றியே (டி.வி.ராதாகிருஷ்ணன் (உ.ஆ)., நாச்சியார் திருமொழி.ப.எ.5., பாடல் எ.1.,)

கடல்வண்ண னென்பதோர் பேரெழுதி (டி.வி.ராதாகிருஷ்ணன் (உ.ஆ)., நாச்சியார் திருமொழி. ப.எ.6., பாடல் எ.2)

***மணிவண்ணற் கென்னை வகுத்திடென்று* (டி.வி.ராதாகிருஷ்ணன் (உ.ஆ)., நாச்சியார் திருமொழி. ப.எ.14., பாடல் எ.10)**

வேங்கடவன், நீலவண்ணன், மணிவண்ணன் என்று அனைத்து பெயர்களிலும் திருமாலை அழைகின்றார். இதனை உரையாசிரியர்களின் உரைவிளக்கங்கள் கூடுதலாக தெளிவுப்படுத்துகின்றன.

நாமமாயிர மேத்த நின்ற நாராயணா (டி.வி.ராதாகிருஷ்ணன் (உ.ஆ)., நாச்சியார் திருமொழி. ப.எ.15., பாடல் எ.11)

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

தெண்டிரைக் கடற்பள்ளியாய் (டி.வி.ராதாகிருஷ்ணன் (உ.ஆ)., நாச்சியார் திருமொழி.,ப.எ.17., பாடல் எ.13)

அறிதியே கடல் வண்ணனே (டி.வி.ராதாகிருஷ்ணன் (உ.ஆ)., நாச்சியார் திருமொழி.,., ப.எ.21., பாடல் எ.18.)

நாராயணனே, அலைபாயும் கடல் மீது பள்ளி கொண்டுள்ள பெருமாளே, கடல் வண்ணம் கொண்ட கண்ணனே என்று இறைவன் ஆயிரம் நாமம் கொண்டவன் அவனை, எப்படி அழைத்தாலும் அருள் புரிபவன் என்பதை ஸ்ரீ ஆண்டாளின் சமயக் கொள்கையாக அறியலாம். ஆண்டாள், இறைவனையே ஆட்சி கொண்டதால் "ஆண்டாள்" என்று அழைக்கப்பட்டாள். திருவரங்கப் பெருமான் மீது தீராத காதல் கொண்டதால் மார்கழி மாதத்தில் நோன்பு நோற்று திருப்பாவை பாடினாள். அதற்கு பின்னரும் ஆலிலைப் பெருமாள் தன்னை மணக்க வராததால் ஊன் உருக உள்ளம் நெகிழ உயிர் மெலிய நாச்சியார் திருமொழியை இவள் பாடினாள்.

"பக்தி" என்ற "கடலைக்" கடக்க துடுப்பாக இருப்பவர்கள் உரையாசிரியர்கள். உரையாசிரியர்கள் இல்லை என்றால் பல்வேறு பாடலுக்கு பொருள் விளங்காமல் போயிருக்கும். மெத்த படித்தவருக்கும் செய்யுள் வரிகளுக்கு பொருள் அறிவதற்கு உரை தேவையான ஒன்றாகும். ஆண்டாளின் பக்தி திறத்தில் நாம் இறைக்கொள்கை, வாழ்வியல் கொள்கை, சமயக்கொள்கை ஆகியவற்றை உரையாசிரியர்களின் உரைகளின் வழி அறிய ஏதுவாக இருந்தது. மனிதனின் மன உணர்வுகளை, எண்ணங்களைக் காட்டும் காலக் கண்ணாடியாகப் பக்திக்காலம் விளங்கியது என்றால் அது மிகையாகாது.

துணை நூற்பட்டியல்

[1] சாண்டில்யன். திருப்பாவை. வானதி பதிப்பகம், சென்னை 17, 2019.
[2] பழனியப்பன்.பழ. நாலாயிர திவ்யப் பிரபந்தம், திருவரசு புத்தக நிலையம், சென்னை 17
[3] பாலசுப்பிரமணியன்.சி. ஆண்டாள், நறுமலர் பதிப்பகம், சென்னை, முதல் பதிப்பு,1994.
[4] க.மீனாகுமாரி. ஆண்டாள் அருந்தமிழ், தேனருவி வெளியீடு, குற்றாலம், 2006.
[5] ராதாகிருஷ்ணன்.டி.வி. நாச்சியார் திருமொழி, திருவரசு புத்தக நிலையம், சென்னை 17.

தமிழில் இக்கட்டுரையை இவ்வாறு மேற்கோளிடுங்கள்:

ஜெயந்தி & விஜயலட்சுமி . "உரை விளக்கங்களை முன் வைத்து ஆண்டாளின் பக்தி திறம்." *தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்*, தொகுதி 3, சிற.இதழ் 2, தொகுதி 2, *திசம்பர்* 2020, பக். 395-400.
டிஓஐ: **10.38067/ijtlls.2020.spl.v03i02v2.057**

Cite this Article in English (*MLA 8 Style*) as:
Jayanthi & Vijayalakshmi . "The Devotion of Andal as per the Explanatory Sources." *International Journal of Tamil Language and Literary Studies*, Vol. 3: Special Issue - 2, Vol. 2, December 2020, pp. 395-400. DOI: **10.38067/ijtlls.2020.spl.v03i02v2.057**

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி /Author Contribution Statement: இல்லை /NIL

கட்டுரையாளர் நன்றியுரை /Author Acknowledgement: இல்லை /Nil

கட்டுரையாளர் உறுதிமொழி/Author Declaration: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்./I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் அரையாண்டு பன்னாட்டு ஆய்விதழ்

International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

பேராசிரியரின் உரைநெறிகள்

The Textual Methodology of Professor (Perasiriyar)

முனைவர் ந. ஜெய வசந்தி, உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறைத் தலைவர், கீதா ஜீவன் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, தூத்துக்குடி மாவட்டம்
Dr.N.Jeya Vasanthi, Assistant Professor, Head of Tamil Department, Geetha Jeevan Arts &Science College, Thoothukudi.
ORCiD: https://orcid.org/0000-0002-2070-7287
DOI: 10.38067/ijtlls.2020.spl.v03i02v2.058

Abstract

Peraisiyar who has given clear notes for 'Porul athigaram' has discussed 'Kalaviyal' in 'Meipaadu18'. In his 19th Prose, he has discussed about Agathinai, The '4th Latter part, Porul Athigaram being the 'Mei Pattial' 'Uvamaiyal' Seyuliyal' Marabiayl' has Perasiriyar explanatory notes. His notes stand for excellence in concern with the Tamil tradition and innovation. It encumbers good research reference, clear cut in order, while giving examples based on scientific and practical usage. This paper also highlights nicknames, grammatical references, difference in the editions.

Keywords: Munnam – Kuripo, Ubaharam – Sahayam, Muruvallithu – mahilthal, Koolai – mandham, Muraniya-Tharkkavatham, Marungudhal – Vaattamuresdhal

பேராசிரியர் பொருளதிகாரம் முழுமைக்கும் உரைகண்டவர், “மெய்பாட்டியல் (18) ஆம் நூற்பா உரையில் “களவியலும் கூறினாம்” என்கிறார். 19ம் நூற்பா உரையிலும்” அகத்தினையிலும் கூறினாம்” என்றும், அகத்திணையிலும் கூறிவந்தார் என்றும் கூறுகிறார்” (அரவிந்தன் மு.வை., உரையாசிரியர்கள் ப.120) இவற்றினைப் போன்று கற்பியல் புறத்திணையியல் ஆகியவற்றைச் சுட்டுகின்றார்.

பொருளதிகாரத்தின் பிற்பகுதியான மெய்ப்பாட்டியல், உவமவியல், செய்யுளியல், மரபியல் ஆகிய நான்கு இயல்களுக்கு மட்டுமே இவரது உரை கிடைத்துள்ளது. இவரது உரையில் உரைச்சிறப்பு, புதுமையும் பழமையும், ஆராய்ச்சிதிறன், சொற்பொருள் விளக்கம், முறைவைப்பு, வகைப்படுத்துதல், உவமைகளை எடுத்தாளுதல், வழக்குச் சொற்களை எடுத்தாளுதல், அறிவியல் செய்திகளை எடுத்தாளுதல், பட்டப்பெயர் சுட்டல், இலக்கணக் குறிப்புகள் சுட்டல், உரை வேறுபாடுகள் ஆகியவற்றினை சுட்டுவதாய் இக்கட்டுரை அமைகிறது. தொல்காப்பிய பொருளதிகார உரையாசிரியராகிய பேராசிரியரின் உரைநெறியினை ஆய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

பேராசிரியர்

பேராசிரியர் என்பதற்கு கல்வி, ஒழுக்கம் ஆகியவற்றால் சிறந்து விளங்கியவரைக் குறிக்க எழுந்த பெயர் ஆகும். இவரது இயற்பெயருக்கான பதிவுகள் கிடைக்கவில்லை. இவரது

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

காலம் கி.பி.13ம் நூற்றாண்டு, பேராசிரியர், இளம்பூரணர், இறையனார் களவியல் உரைக்காரர், யாப்பருங்கல விருத்தியார், தண்டியலங்காரர் ஆகியோருக்கு, இவர் பிற்பட்டவர். சான்றாக, (மெய்.25, உவம: 37) என்ற நூற்பாவில் நச்சினார்க்கினியர் இவரைச் சுட்டிக்காட்டுவதினாலும், பரிமேலழகர், பேராசிரியர் உரையை மறுத்து (திருக்.632) எழுவதுவதினாலும் அவர்களுக்கு இவர் காலத்தில் முந்தியவர் எனலாம்.

பேராசிரியர் சோழ நாட்டினைச் சார்ந்தவர் என்பதற்கு சான்றாக,

பொன்னி நன்னாட்டுப் பொருநன்

வென்வேற் சென்னி

காவிரி பரக்கும் தண்டலை மூதூரோனே பேரிசை வளவன்

நீ பல வாழிய வாய்வாய் சென்னி (தொல்.செய்.நூற்.422)

என்னும் தொடர்களைக் கொண்ட பாடல்களை இவர் எடுத்துக் காட்டியுள்ளார்.

மூலநூல் ஆசிரியரை மதித்தல்

நூலாசிரியன் இறைவனோடு ஒப்ப மதிப்பவன் என்னும் கருத்தில் இவர் ஆசிரியனை ஒருமையில் சுட்டிப் பேசுகின்றார். ஐயப்பாட்டிற்குரிய கருத்துக்களைக் கூறும்போது "ஆசிரியன் கூறியதே தக்கது" என்னும் கொள்கையுடையவர். சான்றாக,

நண்டிற்கு மூக்குண்டோவெனின், அஃது

ஆசிரியன் கூறலான் பொருள் உண்டென்பது பெற்றாம் (தொல். மரபியல்.31)

உலகியலறிவு

பேராசிரியர் கொண்டிருந்த உலகியலறிவு அவரது உரையில் பல இடங்களில் காணப்படுகிறது. சான்றாக, "காடு கெழு செல்வி " (காளி வழிபாட்டைப் பல இடங்களில் கூறுகிறது. (தொல். பொருள். மெய்.; 12) (தொல். பொருள். செய். 149) நான்கு வருணங்களை குறிப்பிடுகின்றார். (தொல்.மெய்.25) "புலவுத் துறந்த துறவோர் பொய் கூறார்" என்று கூறுவதால் அக்கால துறவோர் சிறப்பும் சுட்டப்படுகிறது. (தொல். மரபியல். 94)

சொற்பொருள் விளக்கம்

சொற்பொருள் விளக்கம் தருவதில் பேராசிரியர் தனிச்சிறப்புடையவர் அரிய சொற்களும், இலக்கணக் குறியீட்டுச் சொற்களுக்கு இவர் தரும் விளக்கம் வியந்து போற்றதற்குறிப்பதாக அமைகிறது. சான்றாக,

மெய்ப்பாடென்பது பொருட்பாடு"

உலகத்தார் உள்ள நிகழ்ச்சி ஆண்டு நிகழ்ந்தவாறே

புறந்தார்க்குப் புலப்படுவதோராற்றான் வெளிப்படுதல் (தொல். பொருள். மெய். 249)

அசைவென்பது பண்டைய நிலைமை கெட்டு வேறறொருவராகி வருந்துதல்" (தொல். மெய் 253)

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

"முனிதல் என்பது வெறுத்தல், அருளும் சிறைமின்றி இடைநிகர்த்தாதல்" (தொல்.பொருள். மெய்.260) என மெய்ப்பாட்டியலில் விளக்கம் தருகிறார்.

அதிகார முறை வைப்பு

பேராசிரியர் ஓர் இயலுக்கும், அடுத்து வரும் இயலுக்கும் உள்ள தொடர்பை விளக்குகிறார். ஒரு நூற்பாவுக்கும் அடுத்த வரும் நூற்பாவுக்கும் உள்ள தொடர்பைச் சுட்டகிறார். ஒரே நூற்பாவில் வரும் செய்திகளின் முறை வைப்பையும் எளிமையாக எழுதுகிறார். சான்றாக,

"நகையே அழுகை" (மெய்.251)

என்று தொடங்கும் மெய்ப்பாட்டியல் நூற்பா விளக்கத்தில் மேல் வரும் எட்டு வகை மெய்ப்பாடுகளும் முறைமுறையே வைக்கப்படுதலின் அமைதியை விரித்துரைக்கிறார்.

வகைப்படுத்துதல்

வகைப்படுத்திக் கூடுதலும் பேராசிரியர் மேற்கொண்ட நெறிகளின் ஒன்றாக உள்ளது. ("நகையென்பது சிரிப்பு") அது முறுவலித்து நகுதலும் அளவே சிரித்தலும் பெருகச் சிரித்தலுமென மூன்றென்ப" (தொல்.மெய். 251) என்ற நூற்பாவில் எடுத்துரைக்கிறார்.

"முன்னம் என்பது உயர்ந்தோரும் இழிந்தோரும் ஒத்தாகும் தத்தம் வகையான் ஓட்பச் சொல்லுதற்குக் கருத்துப்படச் செய்தல் (தொல்.செய்.1) என்ற நூற்பாவில் விளக்கத்தில் உரைநயத்தை பதிவு செய்கிறார்.

உவமைகளை எடுத்தாளுதல்

இவரது உரையில் மொத்தம் 181 இடங்களில் உவமைகள் எடுத்தாளப்படுகின்றது. சான்றாக, மெய் 245,251, 252, 253, 254, 267,263,270, செய் 314,316,390,428. **"உவமும் பொருளும் ஒத்தல் வேண்டும்" (பேரா.பொருள்.உவம.283)** இந்நூற்பாவிற்கு எடுத்துக்காட்டு தரும்போது,

"மயிற்றோகை போலுங் கூந்தல்

"காக்கைச் சிறகன்ன கருமயிர்"

"புலி போலப் பாய்ந்தான்

"பூசை போலப் பாய்ந்தான்" என பல உவமைகளை எடுத்தாளுகின்றார்.

வழக்குச் சொற்களை எடுத்தாளுதல்

இவரது உரையில் அக்கால மக்களின் வழக்குச் சொற்களை காணலாம். சான்றாக,

"உடுத்த உடையினை" (மெய். 262)

"குளிரும் குடுமி மறைத்தல்"; (மெய். 272)

"உபகாரம்" (உவம.276)

"தளிர் (உவம.277)

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

"புளியங்காய்" ((உவம.300)

"வல்லென்ற கல்லிற்கும்

மெல்லென்ற இதழிற்கும்" (உவம. 282)

"தெய்வத்தாமரை" (உவம.284)

உரைச்சிறப்பு

"பேராசிரியர் இளம்பூரணருடன் மாறுபட்டு உரை எழுதும் இடங்கள் சில உண்டு. பேராசிரியரின் உரை, மெய்ப்பாட்டியலிலும் உவம இயலிலும் பெரிதும் விளக்கம் பெறுகின்றன. மெய்ப்பாட்டியலை மிக நுட்பமாக ஆய்வு செய்துள்ளார். தலைவிக்கு உரிய மெய்ப்பாடுகளை வகைப்படுத்தி, புணருமுன் தோன்றும் மெய்ப்பாடு களவிற்குரிய மெய்ப்பாடு என்று தெளிவாக கூறுகிறார்" (மோகன், இரா உரைமரபுகள் ப.189)

மாறுபட்ட இடங்களை மிக நயமாக மறுத்தல்

அவர் அறியார் அவ்வாறு சூத்திரம் செய்வது

ஆசிரியர் கருத்து அன்று (செய்.101)

"செய்யுள் அறியாதார்" (செய்.130)

"தலை குலுக்கி வலியச் சொல்லினும்

தன்சீர் இளமையின் என மறுக்க" (தொல். செய். 108)

ஆராய்ச்சித்திறன்

உவம உருபுகளைப் பற்றி இவர் விரிவாக ஆராய்ந்துள்ளார். தொல்காப்பியர் கூறிய 36 உருபுகளே அன்றி வேறுசில உவம உருபுகள் வரும் என்று குறிப்பிடுகின்றார்.

"பிறவும் என்பதனான் எடுத்து ஓதினவே அதை நேர நோக்க துணைப்ப மலைய ஆர அமர அணையை வர ஏர்ப்ப செத்து அற்ற கெழுவ என்றல் தொடக்கத்தில் பலவும், ஐந்தாம் வேற்றுமைப் பொருள் பற்றி வருவனவும் என என்னும் எச்சங்களை பற்றி வருவனவும் பிறவும் எல்லாம் கொள்க" என்று தம் ஆராய்ச்சித் திறன் வெளிப்படும் வகையில் (உவம.11) கூறியுள்ளார்.

மொழிபெயர்ப்பு

பிற படைப்பில் செய்யப்பட்ட நூல்களைத் தமிழ் நூலாக் செய்வது (மரபியல்.97) என இவரது உரையில் காணலாம்.

வனப்பு

"பெரும் பான்மையும் பல உறுப்புத் திரண்ட வழிவப் பெறுவதோர் அழகு" (தொல்.செய்.235)

களவு

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

வாய்வெடுவுதல் அதனாலும் அவன் உள்ளத்து நிகழ்கின்றது ஒன்று, உண்டு என்று அறியப்படும் (மெய்.12) என்று உரை எழுதுகின்றார்.

அறிவியல் செய்திகளை எடுத்தாளுதல்

இவர் தமது உரையில் பல இடங்களில் அறிவியல் செய்திகளைக் கொண்டு இலக்கண நூற்பாக்களை விளக்கியிருக்கும் திறன் வியக்கத்தக்தாகவும் போற்றத்தக்காவும் அமைந்துள்ளன. சான்றாக ஐம்பூதங்கள் பற்றிக் குறிப்பிடும் போது,

“வஞ்சி மருங்கினும் இறுதி நில்லா” (தொல்.செய்.338)

என்ற நூற்பாவின் உரையில், எடுத்துக்காட்டுத் தரும் போது,

“மண்டிணிருந்த நிலனும்
நிலனேந்திய விசும்பும்
விசும்புமைதவரு விழியும்
வழித்தலை இயதீயுந்
தீ முரணிய நிரூம் எனவும்
“ஒத்தழிசை கலி கலிவெண்பாட்டே
கொச்சம் உறழொகு கலிநூல் வகைத்தே” (தொல். செய்-442)

என்ற நூற்பாவின் உரையில் எடுத்துக்காட்டுத் தரும்போது நிலம், நீர், தீ, வளி, விசும்பென்னும் ஐம்பெரும் பூதங்களும் அவற்ற தியைபாகிய பொருள்களும் அஃறிணையான் வழங்கினும் என்றும்,

நிலத்தீ நீர்வளி விசும்பொடு ஐந்துங்
கலந்த மயக்கம் உலகம் ஆதலின்
இருதிணை ஐம்பால் இயனெற வழா அமைத்
திரிவில் சொல்லோடு தழா அல் வேண்டும்” (தொல்,பொருள்.மரபியல்.644)

என்ற நூற்பாவின் உரையில்,பேராசிரியர் விளக்கம் தரும்போது நிலனுந் தீயும் நீருங் காற்றும் ஆகாயமென்றும் ஐம்பெரும் பூதமுங் கலந்த கலவையல்லது உலகமென்பது பிரிதில்லாமையின், என்றும், நிலம், நீர், தீ, வள், ஆகாயமென இவை ஒன்று ஒன்றனுள் மயங்கிவரும் என்றும் குறிப்பிடுகின்றார்.

பட்டப்பெயர் சுட்டல்

பேராசிரியர் உரையில் பட்டப்பெயர்கள் குறித்த செய்திகள் இடம்பெற்றுள்ளன.

குருடரும் முடவரும், பித்தரும் களியாரும் (மெய்-249)
காகை நாடன், நரிவெரூஉத் தலைவார் (மெய்-255,271)
புகையர் (செய்.407) காரனமாலையன் (செய்.421)
குடத்தலையர் (செய் 491) ஏணிச்சேரி முடமோசி (மா.629)

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

வெண்ணூலான், ஊணாரும் பிச்சையான் (செய்.461)

இலக்கணக் குறிப்புகள் சுட்டல்

பேராசிரியர் தொல்காப்பிய நூற்பாக்களுக்கு உரையெழுதும் போது இலக்கணக் குறிப்புகளைக் கொண்டு விளக்கம் தருகிறார். 'கூழை விரித்தல்' – அக்கூழை விரித்தற்கு ஏதுவாயானாள், இவனாகலின் அதனைச் சினை வினையானன்றி முதல் விளையாற் கூறினான் (மெய்.14) 'ஒரு போகு' – பண்புத்தொகை இடையீடு இல்லாத நிலத்தினை ஒருபோகு என்பவாகலின் (செய்.148)

"ஒரு போகும் இருவகைத் தாகும்" உம்மை இறந்தது

தழீஇய எச்சவும்மை (செய்.147)

என்று விளக்கம் அளிக்கிறார்."அங்கதச் செய்யுள்" – பண்புத்தொகை, உம்மைத்தொகை என்பார் செய்யுள் என்பதும் வேறென்ப (அங்கதம், செய்யுள். எனத் தனித்தனியே பிரித்து உம்மைத் தொகை, அங்கதச் செய்யுள் என ஒன்றெனவே பண்புத்தொகை என்பார் பேராசிரியர்.

தொகுப்புரை

பேராசிரியர் உரையில் வினாவிடை அமைப்பில் இல்லாமல், விளக்க முறையே உள்ளது. இவரது நடை இலக்கணமுடையது. தெளிவும், எளிமையும் வாய்ந்தது, செப்பமும் எளிமையும் உடைய உரைநடைக்கு எடுத்துக் காட்டாக இவரது நடையைக் குறிப்பிடலாம். சான்றாக, திருவென்பது கண்டாரால் விரும்பிப்படுந்தன்மை நோக்க மென்றது அழகு, இஃதென் சொல்லியவாறோவெனின், யாவனொருவன் யாதொரு பொருளைக் கண்டானோ அக்கண்டவற்கு, அப்பொருண்மேற் சென்ற விருப்பத்தோடே கூடியவழகு அதன் மேலவற்கு விருப்பஞ்சேறல் அதனிற் சிறந்த அருவும் நலனும் ஒளியுமெவ்வகையானம் பிறிதொன்றிற்கில்லாமையில் திருவென்று அழகுக்கே கலையாயிற்று. "பேராசிரியர் கடல்போல் பரந்த புலமையுடைவர், ஓர் இலக்கண உரையாசிரியர் என்று அல்லாமல், சிறந்த இலக்கிய உரையாசிரியருமாவார் என்பதைத் தொல்காப்பிய பொருள்கார உரையில் பல இடங்களில் புலப்படுத்துகிறார்." (பேராசிரியர் (உ.ஆ) தொல்காப்பியம் பொருளதிகாரம்) ப.58)

முடிவுரை

பேராசிரியரின் உரை விளக்கம், சிறந்த இலக்கியத் திறனாய்வு நெறிக்கறைக் கொண்டுள்ளது. முற்காலத்து இலக்கியக் கொள்கைகளையும் திறனாய்வு முறைகளையும் அறிந்து கொள்ளவும் இவர் பொருள் சொல்லும் முறையை அறிந்து கொள்ள இவர் உரை பயன்படுகின்றது. பல குறியீடுகட்கு வரம்பான நுண்ணிய பொருள் சொல்லும் திறத்தை இவரது உரையில் காணலாம், பிறர்தம் உரைநெறிகளிலும் இவர் தம் உரைநெறி

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

சாலச்சிறந்தது. இவர் தொல்காப்பிய முழுமைக்கும் உரை வகுத்திருப்பாரேல் அவ்வுரையே திருக்குறளுக்குப் பரிமேலழகர் உரைபோல் தலைமையெய்தி இருக்கும்.

துணைநூற்பட்டியல்

[1] அரவிந்தன்,மு.வை., உரையாசிரியர்கள், மணிவாசகம் பதிப்பகம்,சிங்கர் தெரு, பாரிமுனை, சென்னை, 1995.

[2] அழகேசன். சு. தொல்காப்பியம், சுதா பதிப்பகம், தூத்துக்குடி, 2008.

[3] அழகேசன்.சு. வ.உ.சி.யின் தொல்காப்பியம் எழுத்ததிகாரம் சுதா பதிப்பகம், தூத்துக்குடி, 2011.

[4] இளவழகன், கோ. தொல்காப்பியம் பொருளதிகாரம் I பேராசிரியம், தமிழ்மண் பதிப்பகம், சிங்காரவேலர் தெரு ,தியாகராயர் நகர், சென்னை, 2003.

[5] இளவழகன், கோ. தொல்காப்பியம் பொருளதிகாரம் II பேராசிரியம், தமிழ்மண் பதிப்பகம், சிங்காரவேலர் தெரு ,தியாகராயர் நகர், சென்னை, 2003.

[6] மோகன். இரா., உரைமரபுகள், மணிவாசகர் பதிப்பகம், சென்னை.

தமிழில் இக்கட்டுரையை இவ்வாறு மேற்கோளிடுங்கள்:

ஜெய வசந்தி . "பேராசிரியரின் உரைநெறிகள்." *தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்,* தொகுதி 3, சிற.இதழ் 2, தொகுதி 2, *திசம்பர்* 2020, பக். 401-407. டிஒஐ: **10.38067/ijtlls.2020.spl.v03i02v2.058**

Cite this Article in English (*MLA 8 Style*) as:
Jeya Vasanthi . "The Textual Methodology of Professor (Perasiriyar)." *International Journal of Tamil Language and Literary Studies,* Vol. 3: Special Issue - 2, Vol. 2, December 2020, pp. 401-407. DOI: **10.38067/ijtlls.2020.spl.v03i02v2.058**

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி /Author Contribution Statement: இல்லை /NIL

கட்டுரையாளர் நன்றியுரை /Author Acknowledgement: இல்லை /Nil

கட்டுரையாளர் உறுதிமொழி/Author Declaration: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்./I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

வை.மு. கோபாலகிருஷ்ணமாச்சாரியாரின் கம்பராமாயண உரைத்திறன்

Textual Ability of Vai.Mu. Gopala Krishnamachariyar in Kamba Ramayanam

முனைவர் ச.ஜெயஸ்ரீ, உதவிப் பேராசிரியர், மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி, மதுரை.
Dr.S.Jeyashree, Assistant Professor, Mannar Thirumalai Naicker College, Madurai.
ORCiD: https://orcid.org/0000-0001-7558-8070
DOI: 10.38067/ijtlls.2020.spl.v03i02v2.059

Abstract

The story of Ramayana has been in the forms of Myth, Puranas, and Oral literature over the years in India. First of all in Sanskrit the "Valmiki Ramayana" took the literary form In Tamil Kaman created" Kamba Ramayanam" based on Valmiki. Kamban completed theareas left untouched by Valmiki on his own. Without the explanatory text written by the literary experts it's hard to find the meanings of literary lyrics of Kamban. Vai.Mu .Gopala Krishnamachariyar is the one of the most important illustrative text editors for Kamba Ramayanam. Vai.Mu .Gopala Krishnamachariyar was Born in Triplicane in the erstwhile Madras Presidency for Sri Parthathasarathy Iyengar on 22.10.1882. He was a Scholar in Sanskrit also. In the beginning of early 19th century he has written more interpretive books for literary and grammar works. In 20th century he had written more expository notes than any other writers. Moreover, he has done his descriptions for Kamban's literary lines in an elucidative manner. In his text, the explanations are based from historical events, myths, grammar notes, quotes, proverbs and also his differences with the base writer were given.

Keywords: Textual Ability, Vai.Mu. Gopala Krishnamachariyar, Kamba Ramayanam

முன்னுரை

இராமாயணம் கதைத் தொகுதிகளாகத் தொன்மம், புராணம், வாய்மொழி இலக்கியம் எனப் பல வடிவங்களில் இந்தியாவில் வழங்கி வந்துள்ளது. முதன் முதலில் வடமொழியின் மூலம் வால்மீகி இராமாயணம் இலக்கிய வடிவம் பெற்றது. தமிழில் கம்பன் வால்மீகியை அடியொற்றியே இராமகாதையைப் படைத்துள்ளான். வால்மீகி சொல்லாமல் விட்டப் பகுதிகளை நிறைவு செய்தும் தமக்கு இணையான கருத்துக்களைப் பதிவு செய்தும் கம்பனின் படைப்பு அமைந்துள்ளது. இராமாயணப் பாடல்கள் உரைகளின்றி பொருள் அறிவது கடினமாகையால் உரையாசிரியர்களால் உரை எழுதப்பட்டது.

உரையாசிரியர்களின் காலம்

முக்காலத்தில் தோன்றிய இலக்கியங்கள் மக்களிடையே படித்து பயன் பெறக்கூடிய வகையில் இல்லாதிருந்தமையால், கிபி.10 –ம் நூற்றாண்டுக்குப் பின்னர் பழைய நூல்களுக்கு உரையாசிரியர்களால் உரைகள் எழுதப்பட்டன. “உரையின்றிச் சூத்திரத்தானே பொருள் நிகழ்ந்த காலமும் உண்டென்பதாம். (பொருள். 653) அக்காலத்தில் தமிழ் அறிஞர்களிடம் பாடல்களைக் கேட்டுணர்ந்து புலமை பெற்றமையை அறியமுடிகிறது. இங்ஙனம் வாய்மொழியாக இருந்த உரை ஏடுகளில் எழுதப்பட்டது. முதலில் தோன்றிய உரை இறையனார் களவியல் உரையே எனக்கொள்ள வாய்ப்பிருக்கிறது. (அ.மு.பரமசிவானந்தம்,

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

தமிழ் உரைநடை, ப. 79) உரையாசிரியர்கள் நூலாசிரியர் போன்று புலமை மிக்கவர்களாக இருந்தனர்.

புலம்மிக் கவரைப் புலமை தெரிதல்
புலம்மிக் கவர்கே புலனாம் (பழமொழி : 8)

என்ற பாடற் கருத்திற்கேற்ப பல நூல்களைக் கற்றுத் தேர்ந்து புலமைத் திறன் பெற்றவர்களாக விளங்கினர்.

வை.மு.கோவின் உரைகள்

கம்பராமாயண உரையாசிரியர்களுள் வை.மு.கோபாலகிருஷ்ணமாச்சாரியார் அவர்கள் முக்கியத்துவம் வாய்ந்தவர். சென்னை திருவல்லிக்கேணியில் ஸ்ரீ பார்த்தசாரதி ஐயங்காரின் மகனாக 22.10.1882 – ஆம் ஆண்டு பிறந்தவர். வடமொழிப் புலமைப் பெற்றவர். 19 – ம் நூற்றாண்டின் தொடக்கம் முதல் இலக்கிய இலக்கண நூல்களுக்கு உரை எழுதத் தொடங்கினார். இவர் இருபதாம் நூற்றாண்டு உரையாசிரியர்களில் அதிகமான நூல்களுக்கு உரை எழுதியுள்ளார். பாடலுக்கு விளக்கங்களை விரித்து எழுதும் வழக்கம் உடையவர்.

கம்பராமாயணம், வில்லிபாரதம், பத்துப்பாட்டில் தனித் தனிப் பாடல்களுக்கான உரைகள், சிலப்பதிகாரத்தில் அடைக்கலக்காதை, கடலாடு காதை, திருக்குறளுக்கு ஆராய்ச்சி முன்னுரையினை பரிமேலழகர் உரைக்கும் மற்றும் நாலடியார், நன்னூல் – காண்டிகை உரை , சடகோபர் அந்தாதி , சரஸ்வதி அந்தாதி, திருவேங்கடக் கலம்பகம், முதுமொழிக்காஞ்சி, அஷ்டப் பிரபந்தம், நாலாயிர திவ்யபிரபந்தம் முதலிய நூல்களுக்கும் உரை எழுதியுள்ளார். பாலகாண்டதிற்கு முதன் முதலில் இவர் உரை எழுதும் போது பல படலங்களுக்கு ஸ்ரீ.உ.வே.வை.மு.சடகோப ராமாநுஜாசாரிய சுவாமிகள் எழுதிய உரையும், அ.குமாரசாமிப்பிள்ளை அவர்களின் குறிப்புரையும் உதவியதாகக் குறிப்பிட்டுள்ளார். இவரது நான்காம் பதிப்பிற்கு உ.வே. சாமிநாதய்யர் அவர்கள் தொகுத்த குறிப்புரையினைப் பயன்படுத்தியதாக சுட்டியுள்ளார். பழைய உரைகள் இல்லாததால் கம்பராமாயணத்தில் இடைச் செருகல்களாக பல நூறு பாடல்கள் இடம் பெற்றன. பாடல்தோறும் கணக்கற்ற பாட வேறுபாடுகள் காணப்படுகின்றன.

இவரது உரையில் பாடல்களுக்கு விளக்க உரைகள், வரலாற்று நிகழ்வுகள், புராணக்கதைகள், இலக்கணக் குறிப்புகள், அணிகள், மேற்கோள்கள், முதல் நூலுடன் வேறுபட்ட இடங்கள், பழமொழிகள் போன்றவற்றின் அடிப்படையில் விளக்கங்கள் தரப்பட்டுள்ளன. ஆய்வின் சுருக்கம் கருதி பாலகாண்டம் மட்டும் இக்கட்டுரையில் எடுத்தாளப்பட்டுள்ளது.

இலக்கிய மேற்கொள்கள்

பாலகாண்டம் ஆற்றுப் படலத்தில் "கோசலம் புனையாற்றணி கூறுவோம்" என்று நாட்டிற்கு வளத்தினைத் தரும் சரயு நதியினைக் கூறும்போது "கந்தபுராணத்தும் இங்ஙனமே வந்துள்ளது". (வை.மு.கோ.பால.பா.13) என்றுரைத்துள்ளார்.

வெள்ளைப் பெருக்கானது அறத்தை மேற்கொண்டு மனுநெறி தவறாது ஆளும் செங்கோன்மையை உடைய மன்னனின் புகழைப்போன்றும் நான்கு வேதங்களையும் ஓதுகின்ற வேதியர்களிடம் சென்ற தானம் போன்றும் நான்கு திசைகளிலும் பரவியது என்று கம்பன் உவமையோடு விளக்கியுள்ளான். இப்பாடலில் உரையாசிரியர்

தானம் தான் சிறிதாயினுந் தக்கார்கைப் பட்டக்கால்
வான் சிறிதாப் போர்த்துவிடும்"(நாலடியார்)

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

நான் மறைகளில் வல்ல வேதியர்களின் கைகளில் வழங்கப்பட்ட தானம் சிறிதாக இருந்தாலும் பலவாக வானினும் பெரிதாக பெருகிவிடும் எனும் நாலடியார் பாடலைக் கூறி இருப்பது பொருத்தமாக உள்ளது.

மிதிலைப் படலத்தில் வான்மீகி கூறாத செய்தியாக ,இராமனும் சீதையும் திருமணத்திற்கு முன்னர் ஒருவருக்கு ஒருவர் தாங்கள் பார்த்த செய்தியை கம்பன் கூறியுள்ளான். உள்ளப் புணர்ச்சிக்குப் பின்னரே கற்பு மணம் என்ற தமிழ் முறையினைக் கூறியுள்ளான். சேக்கிழார் பெரியபுராணத்தில் "நோக்கிய" (அமர்நீதியார் புராணம்- 40) சுந்தரர் பரவையார் இவர்கள் இருவரும் உள்ளப் புணர்ச்சிக்குப் பின்னர் திருமணம் முடிக்கின்றனர். இச்செய்தியை கம்பன் தம் படைப்பிலும் கூறியிருக்கலாம்.

கம்பன் வால்மீகியை அடியொற்றி இருந்தாலும் தமிழ்மொழியில் அமைந்த இராமாயணங்களின் கதைகளையும் இலக்கியங்களையும் தழுவியுள்ளார் என்பது புலனாகும். இவ்வகையில் தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் " ஆள்வினை முடித்த வருந்தவ முனிவன், வேள்வி போற்றிய விராமனவனோடு, மிதிலை மூதூரெய்திய ஞான்றை, மதியுடம்பட்டமாக்கட் சீதை" என்று கைக்கிளைக்கு நட்சினார்க்கினியர் மேற்கோள் காட்டிய செய்யுள் கம்பர் காலத்திற்கு முற்பட்டது என்பதை உரையாசிரியர் விளக்கி கூறியிருப்பது ஏற்புடையதாகும்.

வரலாற்றுக் கதைகள்

சரயுநதியில் வெள்ளம் முல்லைநிலத்துச் சென்றமையைக் கம்பன் கூறும்போது, கண்ணன் பாலபருவத்தில் வெண்ணைய் உண்டதும் காளியனென்னும் பாம்பின் மீது நடனமாடியதும், ஆயர்பெண்களின் ஆடைகளைக் கவர்ந்ததும் குருந்தமரத்தையும், மருதமரத்தையும் முறித்துத் தள்ளியதையும் வெள்ளப்பெருக்கோடு ஒப்பிட்டிருக்கிறார். உரையாசிரியர் தம் உரையில் இப்பாடலுக்கு **"கிருஷ்ணன் ஆயமாராடையைக் கவர்ந்தவரலாறு சைனர்கூறும் வரலாறு,மரதொசித்தவரலாறு"(பால.ஆ.பா.15.பக்35)** போன்றபாகவதக் கதைகளை விளக்கமாகக் கூறிப்பாடலுக்கு அணிசேர்த்துள்ளார்.

திருவவதாரப்படலத்தில் வசிட்டன் தசரதனின் புத்திரப் பேற்றிற்கு கலைக்கோட்டுமுனிவனால் புத்திரகாமேட்டியாகம் செய்ததைப் பற்றியும் கூறுகிறார்.தசரதனும் மகிழ்வுடன் வசிட்டரிடம் தனக்குரிய நம்பிக்கையைத் தெரிவித்து தான் செய்யவேண்டியப் பணியினைக் கூறும்படி வசிட்டரிடம் கேட்கின்றான். இப்பாடலில் கம்பன் தசரதனின் மகிழ்வினை உணர்த்தியுள்ளான்.இதற்கு விளக்கம் தரும்வகையில் உரையாசிரிர் கலைக்கோட்டுமுனிவரது வரலாற்றினைக் கூறி விளக்கியுள்ளார்" (பால.ஆ.பா.210.பக்156).

பழமொழி

அயோத்தி நகரின் கல்விச் சிறப்பையும் செல்வச் செழிப்பையும் கம்பன் அழகுற எடுத்தியம்பியது உய்த்துரைக்கின்றது. இக்கருத்தினை உரையாசிரியர் "நிழலினருமை வெயிலில் அடிபட்டவருக்கே என்றபடி கல்வி, பொருள் என்ற இவை இல்லாதவர் இருந்தால் அந்தக் கல்விச் செல்வம் பெற்றவர்களின் அருமை தெரியும். (பா.நகர். பா. 167. ப.128) என்று பழமொழியின் மூலம் எடுத்துரைக்கின்றார்.

அணிகள்

பாலகாண்டம் ஆற்றுப்படலத்தில்

ஆனை மாமத வாற்றோ டளாவியும்

வான வில்லை நிகழ்த்ததல் வாரியே (பாடல்-8)

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

ஆற்றின் வெள்ளமானது மலர்கள், மகரந்தத் தாது, தேன், ஆணை மாமதம் போன்றவை கலந்து வந்ததால் பலநிறங்களைப் பெற்ற வானவில்லைப் போன்றிருப்பதாக தற்குறிப்பேற்ற உவமை அணி பயின்று வந்தமையை கூறியிருப்பது புலனாகிறது.

கம்பன், மருத நிலத்தின் சிறப்பினை சொல்லோவியமாகக் காட்சிப் படுத்தியுள்ளான். சோலையாகிய மண்டபத்தில் தாமரை ஒளிவிளக்கினைத் தாங்கி நிற்க, நீர்பரப்பில் அசையும் அலை திரைச்சீலை போன்றிருக்க அவ்விடத்தில் மயில் தோகை விரித்து ஆடுவது ஆடல்மகள் ஆடுவது போன்று உள்ளது. மேகத்தின் இடிமுழக்கம் மத்தளமாக ஒலிக்கின்றது. தேனுண்ட வண்டுகள் மகரயாழின் இசைபோன்று பாடுகின்றன. குவளை மலர்கள் கண்கள் விழித்து அந்த நடனத்தைப் பார்க்க மருத நிலமாகிய மன்னன் கொலுவீற்றிருக்கின்றான் என பாடல் அமைந்துள்ளது. இப்பாடலில் உரையாசிரியர் “விளக்கம் தாங்க கொண்டல்கள் முழவினேங்க குவளை கண்விழித்து நோக்க தென் டிரை யெழினிகாட்ட” முதலியவற்றில் உள்ள உவமை உருவகம் காட்சி என்னும் அணிகள் (பால.ந.பட.பா.36ப.43) வந்தமையை எடுத்துரைத் திருப்பது பொருத்தமாக உள்ளது.

நம்பிக்கை

நகரப் படலத்தில் அகழியைச் சூழ்ந்த வர்ணனையை கம்பன் கூறுமிடத்து அயோத்தி மாநகரைச் சுற்றி சக்கரவாள மலையையும் அதனைச் சுற்றியுள்ள அகழி பெரும் புறக்கடலையும் அதனைச் சுற்றியுள்ள சோலை இருளையும் ஒத்ததாக கூறுகிறார். இதனைப் பார்க்கும் பொழுது அயோத்தி மாநகர் மதிலுக்கு திருஷ்டி தோஷத்தை போக்கும் வகையில் “பொன்னின்மா மதிட்குடுத்த நீலவாடை போலுமே” (பால.நக.பட.பா.114.ப.96) என்ற பாடல் வரியானது அயோத்தி மதில் நீல ஆடையை உடுத்தியது போன்று காட்சியளிப்பதாக உரையாசிரியரின் நம்பிக்கை குறித்த கருத்து அக்கால மக்களின் மன நிலையினை காட்டுவதாக உள்ளது. மிதிலைக் காட்சிப் படலத்தில் விசுவாமித்திரர் ராம லக்குமனரை மிதிலைக்கு அழைத்து செல்லும் பொழுது கன்னி மாடத்திலிருந்து சீதையும் ராமனும் ஒருவரை ஒருவர் கண்டு ஒன்றுபட்டனர். ராமனைக் கண்ட சீதைக்கு காம நோய் ஏற்பட்டதை அறியாது தாதியர் திருஷ்டி கழிக்கின்றனர். “பலவகை மலர்களை நீரில் இட்ட ஆலத்திநீரை சுற்றி கண்ணெச்சில் கழித்தனர்.” (பால.மிதி.பட.பா.613.ப.440). என்று கம்பன் அக்கால மக்களிடையே வழக்கிலிருந்த நம்பிக்கையினை கூறி இருக்கின்றான். உரையாசிரியர் கண்ணூறு அச்சம் போன்றவற்றால் உண்டான துன்பத்திற்குப் பரிகாரமாக திருஷ்டி கழித்தல் வழக்கில் இருந்ததை சுட்டிக் காட்டியுள்ளார்.

பாடபேதம்

முக்காலத்தில் பாடல்கள் ஓலைச்சுவடிகளில் எழுதப்பட்டது. பின்னர் அப்பாடல்களை பெயர்த்து எழுதும்போது பெயர்ப்பாளனின் கவனக்குறைவால் பாட பேதங்கள் வருகின்றன. கம்பராமாயணத்தில் இப்பாடபேதங்கள் அதிகமாக உள்ளன. வை.மு.கோ. அவர்கள் தமது உரையில் பாடபேதங்களுக்கு சரியான சொற்களை பயன்படுத்தி உரைஎழுதியுள்ளார்.

ஆற்றுப் படலத்தில், பொன்மயமான இமயமலை மீது வெண்ணிற மழைத் தாரைகள் வீழ்ந்ததை வெளியாலான தோண்டும் கருவியை வானம் வீழ்த்தியது போல இருப்பதை இப்பாடலில் செய்தி அமைந்துள்ளது. உரையாசிரியர் புள்ளி-புள்ளின் பொன்னென – பொன்னென, பொம்மென, பொள்ளென, வீழிடை – வீழிட, வீழ்வன, வீழ்ந்தன, வீழ்த்தன (பால.ஆற்று.பட.பா.16 ப.29) போன்ற சொற்களே சிறப்பானவை எனக் கண்டறிந்து பயன்படுத்தியுள்ளார்.

வடமொழிப்புலமை

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

திருஅவதாரப் படலத்தில், உரோமபாத மன்னன் தன் மகள் சாந்தையை இருசிய சிருங்க முனிவனுக்கு மணம் முடித்து வைத்தான். இப்பாடலில் " முருக் கித ழின்முலை முக நலாடனை" என்ற வரியில் சாந்த எனும் வடமொழிப் பெயரை மொழிபெயர்த்து 'முகம் நலாலள்' என உரையாசிரியர் எடுத்துரைத்தமை அவரது வடமொழிப் புலமையைச் சுட்டி நிற்கிறது.

சொல்திறன்

நகரப் படலத்தின் அயோத்தி நகரைச் சூழ்ந்துள்ள காடுகள் விலை நிலங்கள் கடல் போன்ற அகழிகள் பெண்கள் நீராடும் குளங்கள் , மேல்நிலை மாடங்கள், வண்டினங்கள் இசைக்கும் சோலைகள் ஆகிய இடங்களில் மலர்களாலும், தளிர்களாலும் படுக்கைகள் அமைக்கப்பட்டுள்ளன என்று நகரின் சிறப்பு கூறப்பட்டுள்ளது. இப்பாடலில் "சுனை – நீரூற்றுள்ள மலைக்குளம், உம்பர் வீடு – செங்குன்றின் மீதுள்ள வீடு என்பர். அலநல்லறப்பள்ளி மன்னோ என்ற பாடத்திற்கு – காடு முதல் பொழிலிறுதியாக அந்நகரத்து உள்ளன" (பால.நக.பட.பா.165,ப.127). திருஅவதாரப் படலத்தில் உரோமபாத மன்னன் தம் நாட்டில் மழையின்றி கலைக் கோட்டு முனிவனின் வருகையால் மழை பொழிந்ததை அறிகிறான். " பெரும் புனல் நதிகளுங் குளனும் பெற்பறக்" என்ற முதலடிக்கு மிக்க நீரைக் கொள்ளும் இயல்புள்ள ஆறுகளும், குளங்களும் பெருமை யொழியும்படி என்றும் உரைக்கலாம். பெட்புற என்ற பாடத்திற்கு பெரும் புனலால் நதிகளும், குளங்களும் விரும்பும் தன்மையை உடையன என்பதாகும்.(பால.திரு.பட., பா. 226, ப167).

நிறைவுரை

வை. மு.கோபாலகிருஷ்ணமாச்சாரியாரின் உரைத்திறனில் பால காண்டம் மட்டும் இக்கட்டுரைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இலக்கிய மேற்கோள்கள் இவரது உரையில் பொருத்தமான இடங்களில் எடுத்தாளப்பட்டுள்ளது. வரலாற்றுக் கதைகள் விளக்கம் தரும் வகையில் அணி சேர்க்கப்பட்டுள்ளது. தொன்மம், புராணக்கதைகளை பாடலுக்கு செறிவூட்டும் வகையில் தெளிவுற தரப்பட்டுள்ளது. அக்கால மக்களிடையே வழக்கிலிருந்த நம்பிக்கைகள், பழமொழிகள் போன்ற பழக்கங்களை இவரது உரையில் காணமுடிகிறது. பாடல்களில் பயின்று வந்த அணிகளைப் பொருத்தமுற சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இலக்கிய மேற்கோள்கள் பொருத்தமான இடங்களில் எடுத்தாளப்பட்டது. பாடபேதம், சொல்திறன் முதல் நூலுடன் வேறுபட்ட இடங்கள் போன்றவற்றின் அடிப்படையில் விளக்கங்கள் தரப்பட்டுள்ளன.

துணைநூற்பட்டியல்

[1] அரவிந்தன் மு.வை., உரையாசிரியர்கள், மணிவாசகர்நூலகம், சிதம்பரம்-608001, 8ம் பதிப்பு.2018.

[2] அவ்வை நடராஜன், கம்பர்காட்சி,சேகர்பதிப்பகம், எம்.ஜி.ஆர்.நகர்,சென்னை.600078.

[3] வை.மு.கோபாலகிருஷ்ண மாச்சாரியார், வை.மு.கோபாலகிருஷ்ண மாச்சாரியார் கம்பெனி 19,தெளிசிங்கப்பெருமாள் கோயில்தெரு, சென்னை.05, ஏழாம் பதிப்பு1964.

[4] மூதறிஞர். வ.சு.ப.மாணிக்கம், மணிவாசகர்பதிப்பகம், சிதம்பரம், திருத்தியபதிப்பு -1982

[5] அ.ச.மணவாளன், இராமகாதையும்இராமாயணமும், தென்னகஆய்வுமையம், இராயப்பேட்டை, சென்னை,600014.முதற்பதிப்பு.2005.

E-ISSN: 2581-7140 **UGC CARE Listed Journal**
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 **Available at:** www.ijtlls.com

[6] அ.ச.ஞானசம்பந்தன், கம்பன்புதியபார்வை, கம்பன்கழகவெளியீடு,சென்னை.

[7] கே.எஸ்.ஸ்ரீனிவாசன், காவ்யராமாயணம், புதுடில்லி,1971.

தமிழில் இக்கட்டுரையை இவ்வாறு மேற்கோளிடுங்கள்:

ஜெயஸ்ரீ. "வை.மு. கோபாலகிருஷ்ணமாச்சாரியாரின் கம்பராமாயண உரைத்திறன்." *தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்*, தொகுதி 3, சிற.இதழ் 2, தொகுதி 2, *திசம்பர்* 2020, பக். 408-413. டிஓஐ: **10.38067/ijtlls.2020.spl.v03i02v2.059**

Cite this Article in English (*MLA 8 Style*) as:
Jeyashree. "**Textual Ability of Vai.Mu. Gopala Krishnamachariyar in Kamba Ramayanam**." *International Journal of Tamil Language and Literary Studies,* Vol. 3: Special Issue - 2, Vol. 2, December 2020, pp. 408-413. DOI: **10.38067/ijtlls.2020.spl.v03i02v2.059**

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி /Author Contribution Statement: இல்லை /NIL

கட்டுரையாளர் நன்றியுரை /Author Acknowledgement: இல்லை /Nil

கட்டுரையாளர் உறுதிமொழி/Author Declaration: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்./I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

திருக்குறள் - வ.உ.சிதம்பரனார் உரைநெறிகள்

The Eloquent Textual Methodology of Va.Vu.Chidambaranar on "Thirukkural"

முனைவர் மு. ஸ்ரீதேவி, உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, அக்சிலியம் கல்லூரி (தன்னாட்சி), காட்பாடி, வேலூர்.
Dr.M.Sridevi, Assistant Professor, Tamil Department, Auxilium College, Vellore.
ORCiD: https://orcid.org/0000-0001-2345-6789
DOI: 10.38067/ijtlls.2020.spl.v03i02v2.060

Abstract

The "Tirukkural" or shortly "the Kural" is a classic Tamil language didactic text consisting of 1330 short couplets of seven words. The text is divided into three books with aphoristic teaching on virtue (aram, dharma), wealth (porul, artha) and love (inbam, kama), respectively. It is considered one of the greatest works on ethics and morality, it is known for its universality and secular nature. Its authorship is traditionally attributed to Valluvar. The text has been dated variously from 300 BCE to 5th century CE. The traditional accounts describe it as the last work of the Third Sangam Period, but linguistic analysis suggests a later date of 450 to 500 CE and that it was composed after the Sangam Period. This article elicits on the eloquence of textual methodology of Va.Vu.Chidambaranar on "Thirukkural"

Keywords: Aram, Porul, Kaamam, Glory of Rain, Praise of love, Wisdom

உரைகளம்

விடுதலைப் போராட்ட வீரர், செக்கிழுத்த செம்மல், கப்பலோட்டிய தமிழர் என்று மட்டுமே தமிழுலகால் அறியப்பட்டுள்ள வ.உ.சிதம்பரனார் படைப்பாளராகவும், பதிப்பாசிரியராகவும், உரையாசிரியராகவும் விளங்கியுள்ளார். அவர்தம் தமிழ்ப்பணிகள் தமிழர்களால் உரிய அளவு போற்றப்படவில்லை என்பது உண்மை. வ.உ. சிதம்பரனாரின் தமிழ்ப்பணிகள் நினையப்பட வேண்டும். அவர் படைப்பாளர், பதிப்பாசிரியர், உரையாசிரியர் என்ற எண்ணம் தமிழ் மாணவர்கள், ஆய்வாளர்கள் இடையே நிலை பெற வேண்டும் என்ற நோக்கில் திருக்குறளுக்கு வ.உ. சிதம்பரனார் செய்துள்ள உரையின் நெறிகளையும், திறனையும் வெளிப்படுத்தும் வகையில் இவ்வுரை அமைகின்றது. வ.உ.சியின் திருக்குறளுரை இவ்வுரைக்கு முதன்மைத் தரவு மூலமாகும்.

திருக்குறள் - வ.உ. சிதம்பரனார் உரை பதிப்பு வரலாறு

திருக்குறள் உரை வரிசையில் 36 ஆம் உரையாக (மோகனராசு 2005:94) 1936 இல் வெளிவந்துள்ள வ.உ. சிதம்பரனாரின் உரை அறப்பால் மட்டுமே கொண்டதாகும். அப்பகுதி வெளிவந்த போதே திருக்குறள் முழுமைக்கும் வ.உ. சிதம்பரனார் உரை எழுதியிருந்தார் என்பதை அப்பதிப்பின் உரைப்பாயிரப் பகுதி உணர்த்துகின்றது.

"திருக்குறளுக்கு யான் இயற்றியுள்ள உரையில், அறப்பாலுரை மூலத்துடன் அச்சாகி முற்றுப் பெற்றது. அதனை அச்சிடத் தொடங்கிய காலையில் அறப்பால், பொருட்பால்,

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

இன்பத்துப்பால் ஆகிய மூன்று பால்களின் உரைகளையும் மூலத்துடன் அச்சிட்டு, அவற்றை ஒரே புத்தகமாக வெளியிட வேண்டுமென்று நினைத்தேன்" (குமரவேலன் 2008:15). குறளில் முதல் மூன்று அதிகாரங்கள் பிறர் பாடியன. வள்ளுவர் பாடியன 1300 குறட்பாக்களே என்ற கருத்துடைய வ.உ.சி முதற்பகுதிக்கு இடைப்பாயிரம் எனப் பெயரிட்டுள்ளார். அறத்துப்பால் என்பதை அறப்பால் என்று அவர் வழங்கியுள்ளார் என்பன குறிப்பிடத்தக்கவை.

திருக்குறளுக்கு வ.உ.சி எழுதிய முழுமையான உரை 2008 இல் சென்னை பாரி நிலையத்தால் இரா. குமரவேலனைப் பதிப்பாசிரியராகக் கொண்டு வெளிவந்துள்ளது. இப்பதிப்பில் தான் கையெழுத்துப் படியாக இருந்த பொருட்பாலும் இன்பப்பாலும் உரையோடு எழுதப்பட்ட 72 ஆண்டுகளுக்குப் பின்னர் முதன்முறையாக அச்சுருப் பெற்றுள்ளன. அவ்வுரையில் காணப்பெறும் குறிப்பிடத்தக்க உரைநெறிகளை மாதிரி அணுகுமுறையில் விளக்க முடியும்.

உரையமைதி

வ.உ.சியின் திருக்குறளுரை 1. அதிகார விளக்கம் (சான்று – கடவுள் வாழ்த்து, அஃதாவது கடவுளை வாழ்த்துதல், வாழ்த்து என்பது முதனிலைத் தொழிற்பெயர் (குமரவேலன் 2008:25), 2. யாப்புப் புணர்ச்சியுடன் கூடிய மூலப்பாடம் (சான்று – "வானின்றுலகம் வழங்கி வருதலாற் றானமிழ்த மென்றுணரற் பாற்று" (மேலது 32), 3. பதவுரை (சான்று – வான் நின்று உலகம் வழங்கி வருதலான் - மழையினின்று உலகம் நிலவி வருதலால், தான் அமிழ்தம் என்று உணரல்பாற்று – அஃது அமிழ்தம் என்று அறிதல் பான்மைத்து" (மேலது 32), 4. அகலவுரை (இப்பகுதி பின்னர் விளக்கப்படும்), 5. கருத்து (சான்று – மழை அமிழ்தத்தை ஒக்கும்" (மேலது 32), 6. பதிப்பாசிரியர் குறிப்பு (இப்பகுதி குமரவேலனால் வழங்கப்பட்டுள்ளது. வ.உ.சியின் கையெழுத்துப் படிகள் முந்தைய உரைகள் பற்றிய குறிப்புகள் இப்பகுதியில் தரப்பட்டுள்ளன.) அகலவுரையில் இடம் பெற்றுள்ள கூறுகளைச் சான்றுகளுடன் காணலாம்.

உரைநெறிகள்

ஓர் உரைக்கண், அவ்வுரைகாரரின் புலமையை அளவிட உதவிடும் பகுதியாகவும், உரைகாரரின் திறனையும், பன்முக ஆற்றலையும் சுவைஞனுக்கு உணர்த்தும் பகுதியாகவும் அமைவது அவ்வுரையின் விளக்கம், விளக்கவுரைப் பகுதியாகும். இப்பகுதி பெரும்பான்மையும் பதவுரை, பொழிப்புரையின் பின்னர் அமைந்திருக்கும். தனித்தலைப்பிட்டும், தலைப்பில்லாமலும் இப்பகுதி தரப்படுவதை முந்தைய உரைப்பதிப்புக்கள் வழி அறியலாம். வ.உ.சியின் பதிப்பில் இப்பகுதி அகலம் எனக் குறிக்கப்பட்டுள்ளது. இதன்கண் இடம் பெற்றுள்ள உரைக்கூறுகளைப் பின்வருமாறு பகுத்தறியலாம். அவை, 1. சொற்பொருள் விளக்கம், 2. இலக்கணக் கருத்துக்கள், 3. இலக்கியக் கருத்துக்கள், 4. பிறன்கோள் கூறல், 5. மறுப்புரை கூறல், 6. பாடவேறுபாட்டுச் சிந்தனைகள் ஆகியனவாகும்.

சொற்பொருள் விளக்கம்

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

சொற்பொருள் விளக்கம் தரும் உரைமரபை வ.உ.சி.யிடமும் காணலாம். "நொதுமலர் - அயலார்" (குமரவேலன் 2008;:103) என்னுமாப்போல அகராதிப்பொருள் தருதலும், யாழ்கோடு குறள்:249) என்ற தொடரிலுள்ள கோடு என்ற சொல்லுக்கு "கோடு-கொம்பு, அஃதாவது, யாழின் நரம்பின் குச்சுகள் செருகப்பட்டிருக்கும் தலைப்பாகம்" என அகராதிப் பொருளும் மேல் விளக்கமும் தருதலும்இ "உய்வாயில்-கழுவாய். உய்வாயில் என்பதனை வடநூலார் பிராயச்சித்தம் என்பர்" (மேலது: 102) என்பது போல அகராதிப் பொருளும் பிறமொழிச் சார்ந்து மேல் விளக்கமும் தருதலும், "பெண்மை - பெண்ணோடு கூடி நுகரும் இன்பம்" (மேலது:124) என்றவாறு புதுமை தோன்ற இடப்பொருள் தருதலும், "சிறிது நேரத்தில் கழியும் இன்பத்தைச் சிற்றின்பம் என்றார்" (மேலது:205) என்றவாறு காரணப் பொருளுரைத்தலும், "எமன் - மரணம்" (மேலது:229) எனப் புதுமை தோன்றப் பொருள் தருதலும் வ.உ.சி.யின் உரைக்கண் காணப்பெறும் சொற்பொருள் விளக்கம் கூறுகளில் சிலவாகும்.

இலக்கணக் கருத்துக்கள்

"அத்து இரண்டும் ஆனும் சாரியைகள். ஆல் அசை" (மேலது:91) "கொல்லி என்பது வினையாலணையும் பெயர்" (மேலது:217) என்னுமாப்போல இலக்கணக் குறிப்புக்கள் கூறுதல், "பண்பின் வேற்றுமை மயக்கம். அஃது ஈண்டு இனிமைப் பொருளில் வந்தது" (மேலது:93) என்று இலக்கணக் குறிப்புக்கு மேல் விளக்கம் தருதல், "தொழிற்பெயரல்லாந் தொழிற்பெயரியல என்னும் தொல்காப்பியச் சூத்திரப்படி நாண் என்பது உகரமும் வல்லெழுத்தும் பெற்று (நாணுத் தரும் என) நின்றது" (மேலது:620) என்றவாறு இலக்கண நூற்பாவைத் தந்து விளக்கம் தருதல் என்றினைய இலக்கணக் கருத்துக்கள் வ.உ.சியின் உரையில் இடம் பெற்றுள்ளன. 1140, 1141 ஆகிய குறட்பாக்களின் அகலவுரை இலக்கணக் குறிப்புக்களை மட்டும் சுட்டுவதாக சுருக்கமாக அமைந்திருப்பது குறிக்கத்தக்கது. "உலகமென்பது உயர்ந்தோர் மாட்டே என்ப வாகலான், உலகம் என்பதற்கு உயர்ந்தோர் எனப்பொருள் உரைக்கப்பட்டது" (மேலது:203) என இலக்கண நூற்பாக்களைத் தந்து பொருளுரைத்தலும் உண்டு.

இலக்கியக் கருத்துக்கள்

திருக்குறளில் இருந்தும் பிற நூல்களில் இருந்தும் பாடலடிகளையும் கருத்துக்களையும் எடுத்தாண்டுள்ளார். சிறுமை என்பதற்குப் பெருமிதத்தினின்று நீங்கிய என்று பொருள் கூறிய வ.உ.சி, "சிறுமை பெருமித மூர்ந்து விடல் திருக்குறள்" எனக் குறட்பாவடியை எடுத்துக்காட்டுகின்றார். இப்பகுதி திருக்குறள் ஆளுமைக்குச் சான்றாகும். "தகுதி நிறைந்த சொல்லாவது, தன் ஊரில் வாழ்வார் தன்னைக் கற்புடையவள் என்று சொல்லும் சொல். நாலாறு என்னும் தொடக்கத்துச் செய்யுளில் வாழுமூர் தற்புகழு மாண்கற்பின் இல்லாள் என்றார் நாலடியார்" (மேலது:63) என வரும் பகுதி பிறநூல் ஆளுமைக்குச் சான்றாகும்.

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

தமிழிலக்கியங்களை ஆளுமிடங்களில் பெரும்பாலும் நூற்பெயர் சுட்டுதலும், பாடற்றொடக்கத்தைச் சுட்டுதலும் வ.உ.சியின் மரபுகளாகும்.

பிறன்கோள் கூறல்

தாம் உரை செயப்புகுந்த நூலின் முன்னைய உரைகாரர் கருத்துக்களையும் பிறநூல் உரைக்காரர் கருத்துக்களையும் உரிய இடங்களில் எடுத்தாளும் உரை மரபை வ.உ.சியின் உரையிலும் காண முடிகின்றது. சான்றாக, “ஒருவன் இறந்தபின் எஞ்சி நிற்பது எச்சம். ஆகவே, எச்சம் என்பதற்குப் புகழ் அல்லது இகழ் எனப் பொருள் உரைக்கப்பட்டது. தகுதியுடையார் அல்லது தகுதி இல்லாரென்பது முறையே அவரவருடைய நல்ல மக்களாலும் தீய மக்களாலும் அறியப்படும் என்று உரைப்பாரும் உளர்” (மேலது:105). இங்கு குறிக்கப்படும் கருத்து பரிமேலழகரின் கருத்தாகும் (ச. சீனிவாசன் 1997:50).

மறுப்புரை கூறல்

ஓர் உரையை முந்தைய உரையிலிருந்து வேறுபடுத்திக் காட்டுவதும், ஓர் உரையுடைய ஒரு நூலுக்கு இரண்டாம் உரை தோன்றியதன் இன்றியமையாமையை எடுத்துக்காட்டுவதும் ஓர் உரைக்கண் இடம் பெற்றுள்ள மறுப்புரைப் பகுதியாகும். தமிழின் பழைய உரைகளில் பரக்கக் காணப் பெறும் இம்மரபினை வ.உ.சியின் திருக்குறள் உரையிலும் காணலாம். சான்றாக, “தோன்றிற் புகழொடு தோன்றுக”(குறள் - 206) என்ற குறட்பா உரையில் “தோன்றல் என்பதற்குப் பலர் முன் தோன்றுதல்” எனப் பதவுரை கூறிய பின்னர் அகலவுரையில். “தோன்றல் என்பதற்குப் பிறத்தல் என்று பொருள் உரைப்பாரும் உளர். பிறத்தலும் பிறவாதிருத்தலும் ஒருவன் விருப்பப்படி நிகழுவன அல்ல. அவன் முன் வினைப்படியே நிகழ்வன. ஆகலான் அவ்வுரை பொருந்தாது” (குமரவேலன் 2008:176) என மறுப்புரை எழுதுகின்றார். இங்கு மறுக்கப்படும் உரை பரிமேலழகர் உரையாகும் (சீனிவாசன் 1997:97).

முடிவுரை

1936க்கு முன்னரே எழுதப்பெற்ற வ.உ.சியின் திருக்குறள் உரை முழுமையாக 2008 இல் தான் வெளி வந்துள்ளது. பொருட்பாலும் இன்பப்பாலும் உரையெழுதப்பட்ட 72 ஆண்டுகளுக்குப் பின்னரே அச்சுருப் பெற்றுள்ளன. திருக்குறளில் திருவள்ளுவர் பாடியன 1300 குறட்பாக்களே. கடவுள் வாழ்த்து முதலான மூன்று அதிகாரங்களும் பின் வந்தோர் பாடியன என்பது வ.உ.சியின் கருத்து. வ.உ.சியின் உரை அதிகார விளக்கம், மூலப்பாடம், பதவுரை, அகலம், கருத்து, பதிப்பாசிரியர் குறிப்பு என்ற அமைப்பினையும், அகலவுரையானது, சொற்பொருள் விளக்கம் முதலாகப் பாடவேறுபாட்டுச் சிந்தனைகள் ஈறாகப் பல்வேறு உரைநெறிகளையும் கொண்டுள்ளது.

துணை நூற்பட்டியல்

[1] வ.உ.சிதம்பரனார், திருக்குறளுரை, பரிதி பதிப்பகம், சென்னை.

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.2, December 2020 Available at: www.ijtlls.com

[2] திருவள்ளுவர், திருக்குறள் மூலமும் உரையும், கழக வெளியீடு, சென்னை.

[3] முனைவர் இரா.குமரவேலன், திருக்குறள் வ.உ.சிதம்பரனார் உரை, பாரி நிலையம், சென்னை.

[4] ச.சீனிவாசன், திருக்குறள் வ.உ.சிதம்பரனார் உரை பதிப்பு வரலாறு, மணிவாசகர் பதிப்பகம், சென்னை.

[5] மோகனராசு, திருக்குறள் வ.உ.சிதம்பரனார் உரை, வானதி பதிப்பகம், சென்னை.

தமிழில் இக்கட்டுரையை இவ்வாறு மேற்கோளிடுங்கள்:

ஸ்ரீதேவி. "திருக்குறள் - வ.உ.சிதம்பரனார் உரைநெறிகள்." *தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்*, தொகுதி 3, சிற.இதழ் 2, தொகுதி 2, *திசம்பர்* 2020, பக். 414-418. டிஒஐ: **10.38067/ijtlls.2020.spl.v03i02v2.060**

Cite this Article in English (*MLA 8 Style*) as:
Sridevi. "The Eloquent Textual Methodology of Va.Vu.Chidambaranar on "Thirukkural"." *International Journal of Tamil Language and Literary Studies*, Vol. 3: Special Issue - 2, Vol. 2, December 2020, pp. 414-418. DOI: **10.38067/ijtlls.2020.spl.v03i02v2.060**

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி /Author Contribution Statement: இல்லை /NIL

கட்டுரையாளர் நன்றியுரை /Author Acknowledgement: இல்லை /Nil

கட்டுரையாளர் உறுதிமொழி/Author Declaration: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்./I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.